# பகுதி IV

# பகுதி IV

## 2022ஆம் ஆண்டின் இலங்கை மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் நிறுவனங்களினதும் செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான முக்கிய சட்டவாக்கங்கள்[அ]


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | 2022ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, மாகாண சபைகள் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்) (திருத்தச்) சட்டம் | 1 |
| 2. | 2022ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம் | 1 |
| 3. | 2022ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, வேலையாட்கள் நட்டஈடு (திருத்தம்) சட்டம் | 27 |
| 4. | 2022ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, மிகைக்கட்டண வரிச் சட்டம் | 31 |
| 5. | 2022ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க, கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தச்) சட்டம் | 34 |
| 6. | 2022ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் | 36 |
| 7. | 2022ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, அற்றோணித் தத்துவம் (திருத்தச்) சட்டம் | 37 |
| 8. | 2022ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டம் | 41 |
| 9. | அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தம் | 42 |
| 10. | 2022ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க, நொத்தாரிசு (திருத்தச்) சட்டம் | 57 |
| 11. | 2022ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க, ஆவணங்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டம் | 64 |
| 12. | 2022ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம் | 67 |
| 13. | 2022ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் | 77 |
| 14. | 2022ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் | 78 |


(அ) மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் பிரசுரிக்கப்பட்டுள்ள உரைக்கும் அரசாங்க அச்சுத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்பட்டுள்ள உரைக்குமிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் அரசாங்க அச்சுத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்பட்ட உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## மாகாண சபைகள்
## 2022ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்) (திருத்தச்) சட்டம்

[2022ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**மாகாண சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

**2011ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கம் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்)**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, மாகாணசபைகள் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இரண்டாயிரத்துப் பதினோராயமாண்டின் 13ஆம் இலக்க, மாகாணசபைகள் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்) சட்டத்தின் 2ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் 2ஆம் பிரிவை அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்

(2) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1)ஆம் உட்பிரிவில், "கைமாற்றப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும்:-

"கைமாற்றப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும்,-

(அ) எவரேனுமாளினால் தகுந்தமுறையில் செலுத்தப்படற்பாலதான தொகைக்கு விஞ்சுதலான ஏதேனும் முத்திரைத் தீர்வையை அவர் செலுத்தியுள்ளாரென அல்லது

(ஆ) அத்தகைய முத்திரைத் தீர்வை எந்தச் சாசனம் தொடர்பானதோ அந்தச் சாசனத்தின்மீது பிழையான முறையில் ஏதேனும் முத்திரைத் தீர்வையை எவரேனுமாள் செலுத்தியிருந்து அத்துடன், 2006ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய முத்திரைத் தீர்வையைச் செலுத்துவதற்கு அவர் ஆளாகவிருக்கவில்லையெனவும் காணப்பட்டுள்ளதென,

எழுத்தில் செய்யப்பட்டவோர் உரிமைக் கோரிக்கையின் மூலம் ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கின்ற அத்தகைய ஆளுக்கு அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை மாகாண சபைகளுக்குக் கைமாற்றப்படுவதற்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதியின்போது முத்திரைத் தீர்வையாகச் சேகரிக்கப்பட்ட ஏதேனும் தொகையிலிருந்து மீளளிக்கப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(3) மீள இலக்கமிடப்பட்ட (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2) இரண்டாயிரத்து ஆறாமாண்டின் 12ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 11ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இப்பிரிவின் கீழான மீளளிப்புக்கான எல்லா உரிமைக் கோரிக்கைகளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக, ஆணையாளர் தலைமையதிபதி என்பது, 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்.".

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2022ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம்

[2022ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

**தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்துவதனை ஒழுங்குபடுத்துவதற்காக ஏற்பாடு செய்வதற்கும்; தனிப்பட்ட தரவைப் பாதுகாத்தல் தொடர்பாகத் தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளை அடையாளங்காண்பதற்கும் பலப்படுத்துவதற்கும்; தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையை தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

தரவுடன் தொடர்புபட்டோரின் தனிப்பட்ட தரவு உரிமைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற அதேவேளையில் இலங்கையில் எண்ணிமைப் பொருளாதாரத்திலான வளர்ச்சியையும் புத்தாக்கத்தையும் வசதிப்படுத்துவது அவசியமாக வந்துள்ளதாதலாலும்:

அத்துடன் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புக் கட்டுக்கோப்புகளிடையே இடைத்தொழிற்படத்தகுநிலையைச் சீராக்குவதும் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு வலுவுறுத்தல் அதிகாரசபைகளிடையே எல்லைக்கப்பாலான ஒத்துழைப்பைப் பலப்படுத்துவதும் அவசியமாக வந்துள்ளதாதலாலும்:

அத்துடன் உள்நாட்டு எழுத்திலான சட்டங்களுக்கும் ஏற்புடையற்பாலனவான சர்வதேசச் சட்ட சாதனங்களுக்கும் மதிப்பளிக்கும் அதேவேளையில் பாவனையாளர் நம்பிக்கையை உறுதிப்படுத்தியும் பிரத்தியேகத்தன்மையைக் காத்தும் தரவுடன் தொடர்புபட்டோரின் தனிப்பட்ட தரவைப் பாதுகாப்பதற்கான பொறிமுறைகளை வழங்குவதற்கு சட்டக் கட்டுக்கோப்பொன்றுக்கான ஏற்பாட்டைச் செய்வது இலங்கை அரசாங்கத்துக்கு அவசியமாக வந்துள்ளதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. (1) இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இப்பிரிவின் ஏற்பாடுகள், அரசியலமைப்பின் 79ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றுரை எத்தேதியன்று புறக்குறிப்பிடப்படுகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் பாகம் IV மற்றும் பாகம் V என்பவற்றின் ஏற்பாடுகள்தவிர, இச்சட்டத்தின் மற்றெல்லா ஏற்பாடுகளும் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும் அத்தேதியானது, (2)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட சபாநாயகரின் சான்றுரைத் தேதியிலிருந்து பதினெட்டு மாதங்களுக்கு முந்தியதானதும் முப்பத்தாறு மாதங்களுக்குப் பிந்தியதானதுமானவொரு தேதியாகவிருத்தலாகாது.

(4) இச்சட்டத்தின் பாகம் IV இன் ஏற்பாடுகள் நடைமுறைக்குவரும் தேதியானது (2)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சான்றுரைத் தேதிக்கு இருப்பத்திநான்கு மாதங்களுக்கு முந்தியதாகவிராததும் நாற்பத்தெட்டு மாதங்களுக்குப் பிந்தியதாகவிராததுமானவொரு தேதியாகவிருத்தல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் பாகம் V இன் ஏற்பாடுகள் நடைமுறைக்குவரும் தேதியானது, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்பட்டவொரு தேதியாகவிருத்தல் வேண்டும்; அத்தேதியானது, (3)ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட தேதிக்குப் பிந்தாதவொரு தேதியாகவிருத்தல் வேண்டும்.

2. (1) (அ) தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலானது இலங்கையினுள் முழுமையாக அல்லது பகுதியளவில் நடைபெறுகின்றவிடத்து; அல்லது

(ஆ) தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலானது-

(i) இலங்கையில் வாழுரிமைகொண்ட அல்லது வழமையாக வதிகின்ற;

(ii) இலங்கையின் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்படுகின்ற அல்லது தாபிக்கப்படுகின்ற;

(iii) இலங்கையிலுள்ள தரவுடன் தொடர்புபட்டோரைக் குறிப்பாக இலக்காகக் கொண்டு பண்டங்களை அல்லது சேவைகளை முனைதலுட்பட இலங்கையிலுள்ள தரவுடன் தொடர்புபட்டோருக்குப் பண்டங்களை அல்லது சேவைகளை முனைகின்ற; அல்லது

(iv) தரவுடன் தொடர்புபட்டோரின் நடத்தை இலங்கையில் இடம்பெறும் அளவுவரை அத்தகைய நடத்தை தொடர்பாக முடிபுகளைச் செய்யும் உட்கருத்துடன் தோற்றுருவம்செய்தல் உட்பட இலங்கையிலுள்ள தரவுடன் தொடர்புபட்டோரின் நடத்தையைக் குறிப்பாகக் கண்காணிக்கின்ற,

கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் ஒருவரினால் நிறைவேற்றப்படுகின்றவிடத்து,

தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலுக்கு இச்சட்டம் ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் முறையே பந்திகள் (iii) மற்றும் (iv) என்பவற்றின் நோக்கங்களுக்காக, அதிகாரசபையானது

(அ) தரவுடன் தொடர்புபட்டோரைக் குறிப்பாக இலக்குக்குட்படுத்துதல் எச்சூழ்நிலைகளில் இடம்பெறலாமோ அச்சூழ்நிலைகளை; அல்லது

(ஆ) தரவுடன் தொடர்புபட்டோரைக் குறிப்பாகக் கண்காணித்தல் எச்சூழ்நிலைகளில் இடம்பெறலாமோ அச்சூழ்நிலைகளை,

இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் என்ற வகையாகத் தீர்மானிக்கலாம்.

(3) இச்சட்டம் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையதாதலாகாது:-

(அ) தனிப்பட்ட, வீட்டு அல்லது குடும்ப நோக்கங்களுக்காக மட்டுமே தனியாளொருவரினால் செய்முறைப்படுத்தப்பட்ட ஏதேனும் தனிப்பட்ட தரவு; அத்துடன்

(ஆ) தனிப்பட்ட தரவல்லாத ஏதேனும் தரவு.

3. (1) தரவுடன் தொடர்புபட்டோரின் தனிப்பட்ட தரவைப் பாதுகாத்தல் தொடர்பாக, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பயனுறுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், பகிரங்க அதிகாரசபையொன்று வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் ஆளப்படுகின்றவிடத்து, அத்தகைய எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலை நிறைவேற்றுவது, தரவுடன் தொடர்புபட்டோரின் தனிப்பட்ட தரவைப் பாதுகாத்தல் இச்சட்டத்துடன் ஒத்திருக்கின்ற அளவுவரை அத்தகைய அதிகாரசபைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## பாகம் I
## தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தல்

4. ஒவ்வொரு கட்டுப்பாட்டாளரும் இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தல் வேண்டும்.

5. கட்டுப்பாட்டாளர் ஒருவர் -

(அ) இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நிபந்தனைக்கு

(ஆ) தனிப்பட்ட தரவின் விசேட வகுதிகளைச் செய்முறைப்படுத்தலின் விடயத்தில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நிபந்தனைக்கு

(இ) இதற்கான அட்டவணை I இன் (அ) என்னும் விடயத்தின் கீழ் அல்லது அட்டவணை II இன் (அ) என்னும் விடயத்தின் கீழ் தரவுடன் தொடர்புபட்டவரினது சம்மதத்தின் அடிப்படையில் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தும் விடயத்தில் இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட எல்லா நிபந்தனைகளுக்கும்; அல்லது

(ஈ) குற்றவியற் புலனாய்வுகள் தொடர்பில் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தும் விடயத்தில் இதற்கான அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட எல்லா நிபந்தனைகளுக்கும்,

இணங்கியொழுகினால் தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலானது சட்டமுறையானதாகவிருத்தல் வேண்டும்.

6. (1) தனிப்பட்ட தரவானது -

(அ) குறித்துரைக்கப்பட்டதும்

(ஆ) தெளிவானதும்; அத்துடன்

(இ) சட்டமுறையானதும்,

ஆன நோக்கங்களுக்காகச் செய்முறைப்படுத்தப்படுவதனை ஒவ்வொரு கட்டுப்பாட்டாளரும் உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தனிப்பட்ட தரவு அத்தகைய நோக்கங்களுடன் ஒத்ததாகவிராதவொரு முறையில் மேற்கொண்டு செய்முறைப்படுத்தப்படுதலுமாகாது.

(2) இச்சட்டத்தின் 10ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பொதுமக்களின் அக்கறைகருதிய ஆவணக்காப்பு நோக்கங்களுக்காக, விஞ்ஞானரீதியிலான ஆராய்ச்சி, வரலாற்று முறையான ஆராய்ச்சி அல்லது புள்ளிவிபரஞ்சார் நோக்கங்களுக்காகக் கட்டுப்பாட்டாளர் ஒருவரினால் அத்தகைய தனிப்பட்ட தரவின் மேற்கொண்ட செய்முறைப்படுத்தலானது, (1).ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தொடக்க நோக்கங்களுடன் ஒவ்வாததாகவிருப்பதெனக் கருதப்படுதலாகாது.

7. செய்முறைப்படுத்தப்படுகின்ற தனிப்பட்ட தரவு, அத்தகைய தரவு எந்த நோக்கத்துக்காகச் சேகரிக்கப்படவேண்டுமோ அல்லது செய்முறைப்படுத்தப்படவேண்டுமோ அந்த நோக்கம் தொடர்பாக அவசியமாகவிருக்கின்றவாறான அளவுக்கு -

(அ) போதியதாகவும்;

(ஆ) இயைபானதாகவும்; அத்துடன்

(இ) விகிதாசாரப்படியானதாகவும்,

இருப்பதனை ஒவ்வொரு கட்டுப்பாட்டாளரும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

8. ஏதேனும் செம்மையற்ற அல்லது காலங்கடந்த தனிப்பட்ட தரவைத் தகாத தாமதமின்றி அழித்துவிடுவதற்கான அல்லது நிவர்த்திசெய்வதற்கான ஒவ்வொரு நியாயமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுவருவதுடன் செய்முறைப்படுத்தப்படுகின்ற தனிப்பட்ட தரவு -

(அ) செம்மையானதாகவும்; அத்துடன்

(ஆ) நாளதுவரையாக வைத்திருக்கப்பட்டதாகவும்,

இருத்தல் வேண்டுமென்பதனை ஒவ்வொரு கட்டுப்பாட்டாளரும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

9. செய்முறைப்படுத்தப்பட்டு வருகின்ற தனிப்பட்ட தரவு, அத்தகைய தனிப்பட்ட தரவு எந்த நோக்கங்களுக்காகச் செய்முறைப்படுத்தப்படுகின்றதோ அந்த நோக்கங்களுக்கு அவசியமாகக் கூடியவாறான அல்லது தேவைப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்காக மட்டுமே தரவுடன் தொடர்புபட்டோரை அடையாளங்காண்பதனை அனுமதிக்கின்றவொரு படிவத்தில் வைத்திருக்கப்படுவதனை ஒவ்வொரு கட்டுப்பாட்டாளரும் உறுதிப்படுத்துதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின் 10ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, தனிப்பட்ட தரவு பொதுமக்களின் அக்கறை கருதிய ஆவணக்காப்பு நோக்கங்களுக்காக, விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சி, வரலாற்றுமுறையான ஆராய்ச்சி அல்லது புள்ளிவிபரஞ்சார் நோக்கங்களுக்காக மேற்கொண்டு செய்முறைப்படுத்தப்பட வேண்டியவாறான அளவுவரை, நீட்டியகாலப் பகுதிகளுக்காகத் தனிப்பட்ட தரவைக் கட்டுப்பாட்டாளர் ஒருவர் களஞ்சியப்படுத்தலாம்.

10. (அ) தனிப்பட்ட தரவின் அதிகாரமளிக்கப்படாத அல்லது சட்டமுறையற்ற செய்முறைப்படுத்தலை; அல்லது

(ஆ) தனிப்பட்ட தரவின் இழப்பு, அழிவு அல்லது சேதத்தை,

தடுக்கும்வகையில் மறைமுகப்படுத்துதல், போலிமயமாக்குதல், அநாமதேயமாக்குதல் அல்லது அணுகுகைக் கட்டுப்பாடுகள் அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு வழிமுறைகள் உட்பட, தோதான தொழினுட்ப மற்றும் ஒழுங்கமைப்புச்சார் வழிமுறைகளைப் பயன்படுத்துவதன்மூலம், செய்முறைப்படுத்தப்பட்டுவருகின்ற தனிப்பட்ட தரவின் நேர்மையையும் அந்தரங்கத்தன்மையையும் ஒவ்வொரு கட்டுப்பாட்டாளரும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

11. கட்டுப்பாட்டாளர் ஒருவர் -

(அ) அட்டவணை V இல் குறிப்பீடுசெய்யப்பட்ட தகவல்களையும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் பாகம் II இன்கீழ் விடுக்கப்பட்டவொரு கோரிக்கையைப் பின்பற்றி எடுக்கப்பட்ட ஏதேனும் முடிபு தொடர்பான தகவல்களையும்,

எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள் மூலம் மற்றும் சுருக்கமான, வெளிப்படையான, விளங்கத்தக்க அத்துடன் இலகுவாக

அணுகத்தக்க படிவத்தில் தரவுடன் தொடர்புபட்டோருக்கு வழங்குதல் வேண்டும்.

12. (1) பிரிவுகள் 5, 6, 7, 8, 9, 10 மற்றும் 11 என்பவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்ட கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகும் நோக்கத்துக்காக-

(அ) பிரிவுகள் 5, 6, 7, 8, 9, 10 மற்றும் 11 என்பவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்ட தரவுப் பாதுகாப்புக் கடப்பாடுகளின் நடைமுறைப்படுத்துகை எம்முறையில் கட்டுப்பாட்டாளரினால் நிறைவேற்றப்படுகின்றதோ அம்முறையை எடுத்துக்காட்டுவதற்கு முறையாகப் பெயர்ப்பட்டியிலிடப்பட்ட பதிவேடுகளை நிலைநாட்டிப் பேணுகின்றவையும்;

(ஆ) கட்டுப்பாட்டாளரின் செய்முறைப்படுத்தற் செயற்பாடுகளின் கட்டமைப்பு, அளவு, தொகை மற்றும் உணர்ச்சிக் கூர்மையின் அடிப்படையில் வடிவமைக்கப்படுகின்றவையும்;

(இ) பிரிவு 24 இல் குறித்துரைக்கப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தாக்க மதிப்பீடுகளின் அடிப்படையின்மீது தோதான காப்புகளுக்காக ஏற்பாடுசெய்கின்றவையும்;

(ஈ) கட்டுப்பாட்டாளரின் ஆளுகைக் கட்டமைப்பினுள் ஒன்றிணைக்கப்படுகின்றவையும் ;

(உ) உள்ளக மேற்பார்வைப் பொறிமுறைகளைத் தாபிக்கின்றவையும்;

(ஊ) முறைப்பாடுகளையும் விசாரணைகளின் நடாத்துகையையும் பெறுவதற்கும் தனிப்பட்ட தரவின் மீறுகைகளை அடையாளங்காண்பதற்குமான பொறிமுறையொன்றைக் கொண்டிருக்கின்றவையும்;

(எ) காலாகாலக் கண்காணித்தலினதும் மதிப்பீடுகளினதும் அடிப்படையின்மீது நாளதுவரையாக்கப்படுகின்றவையும்; அத்துடன்

(ஏ) பிரிவுகள் 13, 14, 15, 16 மற்றும் 18 என்பவற்றின்கீழ் தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளினது பிரயோகத்தை வசதிப்படுத்துகின்றவையும்,

(இதனகத்துப்பின்னர் “தரவுப் பாதுகாப்பு முகாமை நிகழ்ச்சித் திட்டம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) உள்ளகக் கட்டுப்பாடுகளையும் நடவடிக்கைமுறைகளையும் நடைமுறைப்படுத்துவது ஒவ்வொரு கட்டுப்பாட்டாளரினதும் கடமையாதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, காலத்துக்குக்காலம், தரவுப்பாதுகாப்பு முகாமை நிகழ்ச்சித்திட்டம் தொடர்பிலான அத்தகைய வழிகாட்டு நெறிகளை வழங்குதல் வேண்டும்.

## பாகம் II
## தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகள்

13. (1) தரவுடன் தொடர்புபட்ட ஒவ்வொருவரும் கட்டுப்பாட்டாளருக்கு அத்தகைய தரவுடன் தொடர்புபட்டவரினால் செய்யப்பட்ட எழுத்திலான கோரிக்கையின்மேல், அத்தகைய தரவுடன் தொடர்புபட்டவரின் தனிப்பட்ட தரவுக்கான அணுக்கத்துக்கும், அத்தகைய தனிப்பட்ட தரவு செய்முறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பது பற்றிய உறுதிப்படுத்துகை மற்றும் அட்டவணை V இல் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய தகவல்கள் வழங்கப்படுவதற்குமான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கட்டுப்பாட்டாளர், (1)ஆம் உட்பிரிவின்கீழ் தரவுடன் தொடர்புபட்டவரினால் செய்யப்பட்ட எழுத்திலானவொரு கோரிக்கையைப் பெற்றதன்மேல், 17ஆம் பிரிவுக்கமைய, அட்டவணை V இன்கீழ் வழங்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய தகவல்களைத் தரவுடன் தொடர்புபட்டவருக்கு வழங்குதல் வேண்டும்.

14. (1) தரவுடன் தொடர்புபட்ட ஒவ்வொருவரும் அத்தகைய செய்முறைப்படுத்தலானது இச்சட்டத்தின் அட்டவணை I இன் விடயம் (அ) வில் அல்லது அட்டவணை II இன் விடயம் (அ) வில் குறித்துரைக்கப்பட்ட ஏதுக்களினது அடிப்படையின்மீது இருப்பின், அத்தகைய தரவுடன் தொடர்புபட்டவரினால் விடுக்கப்பட்ட எழுத்திலான கோரிக்கையொன்றின்மேல் அவரது சம்மதத்தை எந்நேரத்திலும் மீளப்பெறுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்:

ஆயின், அத்தகைய சம்மதத்தை மீளப்பெறுதலானது, அத்தகைய மீளப்பெறுதலுக்குமுன்னர் இடம்பெற்ற ஏதேனும் செய்முறைப்படுத்தலின் சட்டமுறையானதன்மையைப் பாதித்தலாகாது.

(2) தரவுடன் தொடர்புபட்ட ஒவ்வொருவரும், அத்தகைய செய்முறைப்படுத்தலானது அட்டவணை I இன் விடயம் (உ) அல்லது (ஊ) இல் அல்லது அட்டவணை II இன் விடயம் (ஊ) இல் குறித்துரைக்கப்பட்ட ஏதுக்களினது அடிப்படையின்மீது இருப்பின், அத்தகைய தரவுடன் தொடர்புபட்டவர் தொடர்பான தனிப்பட்ட தரவை மேற்கொண்டு செய்முறைப்படுத்தாது தவிர்க்கும்படி எழுத்தில் கட்டுப்பாட்டாளர் ஒருவருக்குக் கோரிக்கைவிடுப்பதற்கு உரிமைகொண்டிருத்தல் வேண்டும்.

15. ஒன்றில் செம்மையற்றதாக அல்லது பூரணமற்றதாக உள்ளதும் தரவுடன் தொடர்புபட்டவர் தொடர்பானதுமான தனிப்பட்ட தரவை நிவர்த்திசெய்யும்படி அல்லது பூரணப்படுத்தும்படி தரவுடன் தொடர்புபட்ட ஒவ்வொருவரும் எழுத்தில் கட்டுப்பாட்டாளருக்குக் கோரிக்கை விடுப்பதற்கு உரிமைகொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் கட்டுப்பாட்டாளர், தரவுடன் தொடர்புபட்டவரினால் விடுக்கப்பட்ட அத்தகையவோர் எழுத்திலான கோரிக்கையின்மேல், 17ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, தகாத தாமதமின்றித் தனிப்பட்ட தரவை நிவர்த்திசெய்தல் வேண்டும் அல்லது பூரணப்படுத்துதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின் ஏற்பாடுகள், செய்முறைப்படுத்தல் நோக்கத்துக்காகத் தேவைப்படாத ஏதேனும் மேலதிக தனிப்பட்ட தரவைச் சேகரிப்பதற்கும் செய்முறைப்படுத்துவதற்கும் கட்டுப்பாட்டாளர் ஒருவர் மீது ஏதேனும் கடப்பாட்டைச் சுமத்துதலாகாது:

ஆயின், மேலும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அல்லது ஒரு தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் கட்டளையொன்றின்மீது சான்றுரீதியிலான நோக்கங்களுக்காகத் தனிப்பட்ட தரவைப் பேணுவதற்குக் கட்டுப்பாட்டாளர் ஒருவர் தேவைப்படுத்தப்படுமிடத்து, கட்டுப்பாட்டாளர், நிவர்த்தி செய்யாமல் அத்தகைய தனிப்பட்ட தரவை மேற்கொண்டு செய்முறைப்படுத்தாது தவிர்த்தல் வேண்டும்.

16. தரவுடன் தொடர்புபட்ட ஒவ்வொருவரும், பின்வரும் சூழ்நிலைகளின்கீழ் அவரது தனிப்பட்ட தரவு அழித்துவிடப்படுவதற்காகக் கட்டுப்பாட்டாளருக்கு எழுத்திலான கோரிக்கையொன்றை விடுப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலானது பிரிவுகள் 5, 6, 7, 8, 9, 10 மற்றும் 11 என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட கடப்பாடுகளுக்கு முரணாக நிறைவேற்றப்படுமிடத்து

(ஆ) தரவுடன் தொடர்புபட்டவர் அட்டவணை I இன் விடயம் (அ) வுக்கு அல்லது அட்டவணை II இன் விடயம் (அ) வுக்கு இணங்க, செய்முறைப்படுத்தலானது எந்தச் சம்மதத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதோ அந்தச் சம்மதத்தை மீளப்பெறுமிடத்து

(இ) தனிப்பட்ட தரவை அழித்துவிடுவதற்கான தேவைப்பாடு, ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது தரவுடன் தொடர்புபட்டவர் அல்லது கட்டுப்பாட்டாளர் எந்தத் தகுதிவாய்ந்த நீதிமன்றத்துக்கு அமைந்தவராகவுள்ளாரோ அந்தத் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் கட்டளையொன்றின்மீது தேவைப்படுத்தப்படுமிடத்து.

17. (1) பிரிவுகள் 13, 14, 15 அல்லது 16 என்பவற்றின்கீழ் கட்டுப்பாட்டாளரொருவர் தரவுடன் தொடர்புபட்ட ஒருவரிடமிருந்து எழுத்திலான கோரிக்கையொன்றைப் பெறுமிடத்து, அத்தகைய கட்டுப்பாட்டாளர் அத்தகைய கோரிக்கைத் தேதியிலிருந்து இருபத்தொரு வேலை நாட்களினுள் -

(அ) அத்தகைய கோரிக்கை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

(ஆ) அத்தகைய வெளிவிடுகை ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் தடைசெய்யப்பட்டாலொழிய, அத்தகைய கோரிக்கை (2)ஆம் உட்பிரிவின்கீழ் மறுக்கப்பட்டுள்ளதா என்பதையும் அதற்கான காரணங்களையும் அல்லது

(இ) கட்டுப்பாட்டாளர், 14(2) அல்லது 15 ஆம் பிரிவுகளின்கீழ் அத்தகைய தனிப்பட்ட தரவை மேற்கொண்டு செய்முறைப்படுத்துவதனைத் தவிர்த்துள்ளாரா என்பதையும், அதற்கான காரணங்களையும்,

தரவுடன் தொடர்புபட்டவருக்கு எழுத்தில் தெரிவித்தல் வேண்டுமென்பதுடன் (ஆ) அல்லது (இ) என்னும் பந்திகளின்கீழ் கட்டுப்பாட்டாளரினால் செய்யப்பட்ட முடிவுகள் தொடர்பில் தரவுடன் தொடர்புபட்டவருக்கு மேன்முறையீட்டுரிமை கிடைக்கக் கூடியதாகவுள்ளமையைத் தெரிவித்தலும் வேண்டும்.

(2) கட்டுப்பாட்டாளர், பின்வருவனவற்றைக் கருத்திற்கொண்டு, தரவுடன் தொடர்புபட்டவர் ஒருவரினால் இச்சட்டத்தின் பிரிவுகள் 13, 14, 15 அல்லது 16 என்பவற்றின்கீழ் விடுக்கப்பட்டவொரு கோரிக்கையின்மீது செயலாற்றுவதற்கு மறுக்கலாம்:-

(அ) தேசிய பாதுகாப்பு;

(ஆ) பொதுமக்கள் ஒழுங்கமைதி;

(இ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட ஏதேனும் விசாரணை, புலனாய்வு அல்லது நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைமுறை;

(ஈ) குற்றவியல் தவறுகளைத் தடுத்தலும், கண்டுபிடித்தலும், புலனாய்வுசெய்தலும் அல்லது அவற்றுக்கெதிராகக் குற்றவழக்குகளைத் தொடுத்தலும்;

(உ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் ஏனைய ஆட்களின் உரிமைகளும் சுதந்திரங்களும்;

(ஊ) உட்பிரிவு (4)இன் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய கோரிக்கையின்மீது செயலாற்றுவதற்குக் கட்டுப்பாட்டாளரின் தொழில்நுட்ப மற்றும் தொழிற்பாடுசார் சாத்தியம்;

(எ) உட்பிரிவு (4)இன் ஏற்பாடுகளுக்கமைய, தரவுடன் தொடர்புபட்டவரின் ஆளடையாளத்தை நிலைநாட்டுவதற்குக் கட்டுப்பாட்டாளரின் இயலாமை; அல்லது

(ஏ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்துவதற்கான தேவைப்பாடு.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான ஏதேனும் மறுப்புக்கான காரணங்களைக் கட்டுப்பாட்டாளரொருவர் பதிதல் வேண்டுமென்பதுடன் அதிகாரசபையின் எழுத்திலான கோரிக்கையொன்றின் மேல் அத்தகைய பதிவேடுகளை அதிகாரசபைக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(4) பிரிவுகள் 13, 14, 15 அல்லது 16 என்பவற்றின்கீழ் கோரிக்கையொன்றை விடுக்கின்ற தரவுடன் தொடர்புபட்டவர் ஒருவரின் ஆளடையாளத்தை நிலைநாட்டுவதற்குக் கட்டுப்பாட்டாளர் ஒருவர் இயலாதவராகவுள்ளவிடத்து, அத்தகைய கட்டுப்பாட்டாளர், அத்தகைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குக் கட்டுப்பாட்டாளரை இயலச்செய்வதற்கு மேலதிகத் தகவலை வழங்கும்படி தரவுடன் தொடர்புபட்டவருக்குக் கோரிக்கை விடுக்கலாம்.

(5) இப்பாகத்தின் கீழ் தரவுடன் தொடர்புபட்ட ஒருவருக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் உரிமை-

(அ) தரவுடன் தொடர்புபட்டவர் பராயமடையாத ஒருவராகவிருக்குமிடத்து, பெற்றோரினால் அல்லது பராயமடையாதவர்மீது பெற்றோருக்குள்ள அதிகாரத்தைக் கொண்டுள்ள அல்லது அவரது சட்டப் பாதுகாவலராக நியமிக்கப்பட்டுள்ள ஆளொருவரினால்; அல்லது

(ஆ) தரவுடன் தொடர்புபட்டவர் உடல்ரீதியில் அல்லது உளரீதியில் தகுதியற்றவராகவிருக்குமிடத்து, நீதிமன்றமொன்றினால் அவரது பாதுகாவலராக அல்லது நிருவாகியாக நியமிக்கப்பட்டுள்ள ஆளொருவரினால்; அல்லது

(இ) பந்திகள் (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயங்களிற்றவிர, இப்பாகத்தின்கீழ் கோரிக்கையொன்றை விடுப்பதற்குத் தரவுடன் தொடர்புபட்டவரினால் எழுத்தில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால்; அல்லது

(ஈ) இறந்தவராகவுள்ள தரவுடன் தொடர்புபட்டவர் ஒருவர் இறந்த தேதியிலிருந்து பத்தாண்டுக் காலப்பகுதியொன்றினுள் அத்தகைய தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைகளைப் பிரயோகிப்பதற்கான மரபுரிமையாளரொருவரினால், ஒழுங்குவிதிகளின் மூலம் விதித்துரைக்கப்பட்ட முறையில் பிரயோகிக்கப்படலாம்.

(6) பிரிவுகள் 13, 14, 15 அல்லது 16 என்பவற்றின்கீழ் தரவுடன் தொடர்புபட்டவர் ஒருவரினால் விடுக்கப்பட்ட கோரிக்கையொன்று இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்மூலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணங்களுடன் சேர்த்து அனுப்பப்படலாம்.

(7) உட்பிரிவு (6)இன் கீழ் கட்டணமொன்று விதிக்கப்படுமிடத்து, கட்டுப்பாட்டாளர், அத்தகைய கட்டணங்கள் பற்றிய விபரங்களையும் அவற்றைவிதிப்பதற்கான காரணங்களையும் தரவுடன் தொடர்புபட்டவருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

18. (1) பத்தொன்பதாம் பிரிவுக்கமைய, தரவுடன் தொடர்புபட்டவர் ஒவ்வொருவரும், தன்னியக்கமாக்கப்பட்ட செய்முறைப்படுத்தலின் அடிப்படையின் மீது மட்டுமேயானதும், எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழ் தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் மீது எதிர்மாறாக்கப்பட முடியாத, தொடர்ச்சியான தாக்கத்தை உருவாக்கியுள்ளதும் அல்லது உருவாக்கும் சாத்தியங்கொண்டதுமான அத்தகைய கட்டுப்பாட்டாளரொருவரின் முடிபொன்றைப் பரிசீலனைசெய்யும்படி அக்கட்டுப்பாட்டாளருக்குக் கோரிக்கைவிடுப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) தன்னியக்கமாக்கப்பட்ட செய்முறைப்படுத்தலின் அடிப்படையின்மீது கட்டுப்பாட்டாளர் ஒருவரின் முடிபொன்று-

(அ) கட்டுப்பாட்டாளர் ஒருவர் எந்த எழுத்திலான சட்டத்துக்கு அமைந்தவராகவுள்ளாரோ அந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றவிடத்து;

(ஆ) அதிகாரசபையினால் தீர்மானிக்கப்பட்டவொரு முறையில் அதிகாரமளிக்கப்படுகின்றவிடத்து;

(இ) தரவுடன் தொடர்புபட்டவரினதும் சம்மதத்தின் அடிப்படையிலுள்ளவிடத்து; அல்லது

(ஈ) தரவுடன் தொடர்புபட்டவருக்கும் கட்டுப்பாட்டாளருக்கும் இடையேயான ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்வதற்காக அல்லது புரிவதற்காக அவசியமாகவுள்ளவிடத்து,

(1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது என்பதுடன் கட்டுப்பாட்டாளர், தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் காப்பதற்கு அதற்கென ஆக்கப்பட்ட விதிகளின் மூலம் அதிகாரசபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வழிமுறைகளுக்கும் ஏற்புடையற்பாலனவான கட்டளைக்கற்களுக்கும் இணங்கியொழுகுதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், (ஈ) என்னும் பந்தியின் கீழான தேவைப்பாடு, தனிப்பட்ட தரவின் விசேட வகுதிகளுக்கு ஏற்புடையதாதலாகாது.

19. (1) கட்டுப்பாட்டாளர் ஒருவர்

(அ) பிரிவு 14இன் கீழ் தனிப்பட்ட தரவை மேற்கொண்டு செய்முறைப்படுத்துவதனைத் தவிர்க்காதுள்ளவிடத்து; அல்லது

(ஆ) பிரிவு 15இன் கீழ் தனிப்பட்ட தரவை நிவர்த்தி செய்வதற்கு அல்லது பூரணப்படுத்துவதற்கு மறுத்துள்ளவிடத்து; அல்லது

(இ) பிரிவு 16இன் கீழ் தனிப்பட்ட தரவை அழித்துவிடுவதற்கு மறுத்துள்ளவிடத்து; அல்லது

(ஈ) பிரிவு 17(2)இன் கீழ் தனிப்பட்ட தரவுடன் தொடர்புபட்டவரின் கோரிக்கையை மறுத்துள்ளவிடத்து; அல்லது

(உ) பிரிவு 18(1)இன் கீழ் தன்னியக்கமாக்கப்பட்ட செய்முறைப்படுத்தலின் அடிப்படையின்மீது மட்டுமேயுள்ள முடிபொன்றைப் பரிசீலனை செய்வதற்கான கோரிக்கையை மறுத்துள்ளவிடத்து,

தரவுடன் தொடர்புபட்டவர் விதித்துரைக்கப்படக்கூடியவாறான படிவத்திலும், முறையிலும் அத்தகைய காலப்பகுதியினுள்ளும் அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(2) (அ) பிரிவு 14இன் கீழ் தனிப்பட்ட தரவை மேற்கொண்டு செய்முறைப்படுத்துவதிலிருந்து தவிர்க்காதுதிருப்பதற்குக் கட்டுப்பாட்டாளரின் முடிபு சட்டமுறையானதாக இருந்ததாவென்பதையும்;

(ஆ) பிரிவு 15இன் கீழ் தனிப்பட்ட தரவை நிவர்த்தி செய்வதற்கு அல்லது பூரணப்படுத்துவதற்குக் கட்டுப்பாட்டாளரின் முடிபு சட்டமுறையானதாக இருந்ததாவென்பதையும்;

(இ) பிரிவு 16 இன் கீழ் தனிப்பட்ட தரவை அழித்துவிடுவதற்குக் கட்டுப்பாட்டாளரின் முடிபு சட்டமுறையானதாக இருந்ததாவென்பதையும்;

(ஈ) பிரிவு 17(2)இன் கீழ் கட்டுப்பாட்டாளரினாலான மறுப்பு சட்டமுறையானதாக இருந்ததாவென்பதையும்;

(உ) பிரிவு 18(1)இன் கீழ் தன்னியக்கமாக்கப்பட்ட செய்முறைப்படுத்தலின் அடிப்படையின்மீது மட்டுமேயுள்ள முடிபொன்றைப் பரிசீலனை செய்வதற்கான மறுப்பு சட்டமுறையானதாக இருந்ததாவென்பதையும், அதிகாரசபை தீர்மானிக்கலாம்.

(3) அவசியமான புலனாய்வுகளை நிறைவுசெய்த பின்னர், அதிகாரசபையானது, மேன்முறையீடு அனுமதிக்கப்படுகின்றதா அல்லது அதற்கு அனுமதிமறுக்கப்படுகின்றதா என்பதை விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன் அதிகாரசபையானது, அத்தீர்மானத்தை, அதற்கான காரணங்களுடன் தரவுடன் தொடர்புபட்டவருக்கும் கட்டுப்பாட்டாளருக்கும் தெரிவித்தலும் வேண்டும்.

(4) அதிகாரசபையானது (2)ஆம் உட்பிரிவின் கீழ் மேன்முறையீட்டை அனுமதிக்குமிடத்து, அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அதிகாரசபையின் முடிபுக்குப் பயன்கொடுப்பதற்குக் கட்டுப்பாட்டாளர் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டுமென்பதுடன் அதிகாரசபையின் முடிபுக்குப் பயன்கொடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைத் தரவுடன் தொடர்புபட்டவருக்கும் அதிகாரசபைக்கும் கட்டுப்பாட்டாளர் தெரிவித்தலும் வேண்டும்.

(5) அதிகாரசபையின் முடிபினால் இன்னலுறும் எவரேனும் தரவுடன் தொடர்புபட்டவர் அல்லது கட்டுப்பாட்டாளர், அத்தகைய முடிபுத்தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குப் பிந்தாமல் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

## பாகம் III

### கட்டுப்பாட்டாளர்களும் செய்முறைப்படுத்துநர்களும்

20. (1) ஒவ்வொரு கட்டுப்பாட்டாளரும் செய்முறைப்படுத்துநரும், பின்வரும் சூழ்நிலைகளில், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்குத் தரவுப் பாதுகாப்பு அலுவலரொருவரைப் பெயர்குறித்தல் வேண்டும் அல்லது நியமித்தல் வேண்டும்:-

(அ) அவர்களின் நீதிமுறைப் பதவியில் செயலாற்றுகின்ற நீதித்துறை தவிர, செய்முறைப்படுத்தலானது ஓர் அமைச்சினால், அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் நிறைவேற்றப்படுகின்றவிடத்து அல்லது

(ஆ) கட்டுப்பாட்டாளரினாலான அல்லது செய்முறைப்படுத்துநரினாலான நிறைவேற்றப்பட்ட செய்முறைப்படுத்தலின்மையச் செயற்பாடுகள் பின்வருவனவற்றைக் கொண்டிருக்குமிடத்து:-

(i) அவற்றின் தன்மையின், அவற்றின் நோக்கெல்லையின் அல்லது அவற்றின் நோக்கங்களின் பயனைக்கொண்டு விதித்துரைக்கப்படுகின்றவாறானவோ் அளவிலும் முக்கியத்துவத்திலும் தரவுடன் தொடர்புபட்டோரின் கிரமமான மற்றும் முறையான கண்காணிப்பைத் தேவைப்படுத்துகின்ற தொழிற்பாடுகள்; அல்லது

(ii) விதித்துரைக்கப்படுகின்றவாறானவோ் அளவிலும் முக்கியத்துவத்திலும் தனிப்பட்ட தரவின் விசேட வகுதிகளைச் செய்முறைப்படுத்தல்; அல்லது

(iii) செய்முறைப்படுத்தலின் தன்மையினதும் தரவுடன் தொடர்புபட்டோரின் மீதான அதன் தாக்கத்தினதும் அடிப்படையில் இச்சட்டத்தின்கீழ் பாதுகாக்கப்பட்ட தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளைப் பாதிக்கின்றதும் தீங்கேற்படும் ஆபத்தை விளைவிக்கின்றதுமான செய்முறைப்படுத்தல்.

(2) தரவுப் பாதுகாப்பு அலுவலர் ஒருவர், விதித்துரைக்கப்படக் கூடியவாறான இயைபான கல்விசார் மற்றும் உயர்தொழில்சார் தகைமைகளை உடையவராகவிருத்தல் வேண்டும்; இது, தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தலுடன் தொடர்புபட்ட விசாரணைகளுக்கும் சம்பவங்களுக்கும் பதிலிறுப்பதற்கு மூலோபாயங்களையும் பொறிமுறைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கான தகுதியையும் ஆற்றலையும் கொண்டிருக்கின்ற தரவுப் பாதுகாப்புத் தொடர்பான கருமங்களில் கல்விசார் பின்னணி, அறிவு மற்றும் தொழில்நுட்பத் தேர்ச்சிகளையும் உள்ளடக்கலாம்.

(3) கட்டுப்பாட்டாளர் உருவகங்களைக் கொண்ட ஒரு தொகுதியாக இருக்குமிடத்து, அத்தகைய கட்டுப்பாட்டாளர், ஒவ்வோர் உருவகத்தினாலும் இலகுவானமுறையில் அணுகத்தக்கவராகவுள்ள தனியொரு தரவுப் பாதுகாப்பு அலுவலரொருவரை நியமிக்கலாம். கட்டுப்பாட்டாளர் ஒருவர் அல்லது செய்முறைப்படுத்துநர் ஒருவர் ஒரு பகிரங்க அதிகாரசபையாக இருக்குமிடத்து, அத்தகைய பல்வேறு பகிரங்க அதிகாரசபைகளின் ஒழுங்கமைப்புச்சார் கட்டமைப்புகளைக் கணக்கிற்கெடுத்து, அவற்றுக்கான தனியொரு தரவுப் பாதுகாப்பு அலுவலர் பெயர்குறிக்கப்படலாம்.

(4) ஒரு கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் தரவுப் பாதுகாப்பு அலுவலரின் தொடர்பு விபரங்களை வெளியிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விபரங்களை அதிகாரசபைக்கு அறிவித்தலும் வேண்டும்.

(5) தரவுப் பாதுகாப்பு அலுவலரின் பொறுப்புடைமை பின்வருமாறாக இருத்தல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தரவுச் செய்முறைப்படுத்தல் தேவைப்பாடுகள் பற்றிக் கட்டுப்பாட்டாளருக்கு அல்லது செய்முறைப்படுத்துநருக்கு மற்றும் அவர்களின் ஊழியர்களுக்கு மதியுரையளித்தல்;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவெனக் கட்டுப்பாட்டாளரின் அல்லது செய்முறைப்படுத்துநரின் சார்பில் உறுதிப்படுத்துதல்;

(இ) தரவுச் செய்முறைப்படுத்தல் தொழிற்பாடுகளில் சம்பந்தப்பட்ட பணியாட்தொகுதியினரின் ஆற்றலைக் கட்டியெழுப்புவதனை வசதிப்படுத்துதல்;

(ஈ) தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தாக்க மதிப்பீடுகள் பற்றி மதியுரை வழங்குதல்; அத்துடன்

(உ) தரவுப் பாதுகாப்புத் தொடர்பான கருமங்கள் மீது அதிகாரசபையினால் வழங்கப்பட்ட எல்லாப் பணிப்புரைகளுடனும் அறிவுறுத்தல்களுடனும் ஒத்துழைத்தல் மற்றும் அவற்றுக்கு இணங்கியொழுகுதல்.

21. (1) ஒரு கட்டுப்பாட்டாளர் சார்பில் செய்முறைப்படுத்துநர் ஒருவரினால் செய்முறைப்படுத்தல் நிறைவேற்றப்படவுள்ளவிடத்து, கட்டுப்பாட்டாளர்-

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்குத்தோதான தொழில்நுட்ப மற்றும் ஒழுங்கமைப்புச்சார் வழிமுறைகள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துகின்றவர்களும் இச்சட்டத்தின் கீழ் தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளினது பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றவர்களுமான செய்முறைப்படுத்துநர்களை மட்டுமே பயன்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) செய்முறைப்படுத்தலின் விடயப்பொருளும் காலநீட்சியும், செய்முறைப்படுத்தலின் தன்மையும் நோக்கமும், தனிப்பட்ட தரவின் வகையும் தரவுடன் தொடர்புபட்டோரின் வகுதிகளும் மற்றும் கட்டுப்பாட்டாளரின் கடப்பாடுகளும் என்பவற்றை எடுத்துக்கூறுகின்ற ஓர் ஒப்பந்தத்தினால் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளினால் அத்தகைய செய்முறைப்படுத்துநர் பிணிக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட கட்டுப்பாட்டாளர்கள் செய்முறைப்படுத்தலின் நோக்கங்களையும் வழிவகைகளையும் கூட்டாகத் தீர்மானிக்குமிடத்து, அத்தகைய கட்டுப்பாட்டாளர்கள் “கூட்டுக் கட்டுப்பாட்டாளர்கள்” எனக் குறிப்பீடுசெய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர்கள் இச்சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குக் கூட்டாகப் பொறுப்பாதலும் வேண்டும்.

22. (1) செய்முறைப்படுத்துநர் ஒருவர் கட்டுப்பாட்டாளரின் சார்பில் செய்முறைப்படுத்தற் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவிடத்து, அச்செய்முறைப்படுத்துநர்-

(அ) செய்முறைப்படுத்தற் செயற்பாடுகள் கட்டுப்பாட்டாளரின் எழுத்திலான அறிவுறுத்தல்களின் மீது மட்டுமே நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ஆ) தோதான தொழில்நுட்ப மற்றும் ஒழுங்கமைப்புச்சார் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அந்தரங்கத்தன்மை மற்றும் இரகசியத்தன்மை பற்றிய ஒப்பந்தமுறையான கடப்பாடுகளினால் அதன் ஆளணியினர் பிணிக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(இ) செய்முறைப்படுத்தலின் தன்மையையும் செய்முறைப்படுத்துநருக்குக் கிடைக்கக்கூடிய தகவல்களையும் கணக்குக்கெடுத்து, கட்டுப்பாட்டாளரின் எழுத்திலான கோரிக்கையின்மேலான சோதனைகளுட்பட, இணங்கியொழுகுகைக் கணக்காய்வுகளைக் கட்டுப்பாட்டாளர் நிறைவேற்றுவதனை வசதிப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) கட்டுப்பாட்டாளரின் எழுத்திலான அறிவுறுத்தல்களின் மேல், செய்முறைப்படுத்தல் தொடர்பான சேவைகளின் வழங்குகை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் தனிப்பட்ட தரவு பற்றி ஏலவேயுள்ள பிரதிகளை அழித்துவிடுதல் வேண்டும் அல்லது எல்லாத் தனிப்பட்ட தரவுகளையும் திருப்பிக்கொடுத்தல் வேண்டும்.

(2) செய்முறைப்படுத்துநர் ஒருவர், (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து அல்லது செய்முறைப்படுத்தலின் நோக்கங்களையும் வழிவகைகளையும் தானாகவே தீர்மானிக்குமிடத்து, அத்தகைய செய்முறைப்படுத்துநர், அத்தகைய செய்முறைப்படுத்தல் தொடர்பில், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒரு கட்டுப்பாட்டாளராக இருக்கின்றவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) குறித்த செய்முறைப்படுத்தற் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக (இதனகத்துப் பின்னர், "உப செய்முறைப்படுத்துநர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வேறொரு செய்முறைப்படுத்துநரைச் செய்முறைப்படுத்துநர் ஒருவர் ஈடுபடுத்துமிடத்து, இப்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய உப செய்முறைப்படுத்துநருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) உபசெய்முறைப்படுத்துநரொருவர் (3)ஆம் உட்பிரிவின் கீழ் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறுமிடத்து, அத்தகைய உபசெய்முறைப்படுத்துநரின் கடப்பாடுகளைப் புரிவதற்காக அல்லது நிறைவேற்றுவதற்காகச் செய்முறைப்படுத்துநர் கட்டுப்பாட்டாளருக்குப் பொறுப்பாதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "ஆளணியினர்" என்பது, எவரேனும் ஊழியர், ஆலோசகர், முகவர், இணையாளர் அல்லது தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்துவதற்குச் செய்முறைப்படுத்துநரினால் ஒப்பந்தத்தின் மூலம் ஈடுபடுத்தப்பட்ட எவரேனுமாள் என்று பொருளாகும்.

23. (1) தனிப்பட்ட தரவு மீறுகையொன்று ஏற்படும் பட்சத்தில், கட்டுப்பாட்டாளர் ஒருவர், இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும், படிவத்திலும், அத்தகைய காலப்பகுதியினுள்ளும் அத்தகைய தனிப்பட்ட தரவு மீறுகை தொடர்பாக அதிகாரசபைக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள் என்ற வகையாகப் பின்வருவனவற்றுக்காக ஏற்பாடு செய்தல் வேண்டும்:-

(அ) அத்தகைய தரவுமீறுகை பற்றி அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட வேண்டிய சூழ்நிலைகள்;

(ஆ) பாதிக்கப்பட்ட தரவுடன் தொடர்புபட்டவருக்கு அறிவிக்கப்பட வேண்டிய சூழ்நிலைகள்; அத்துடன்

(இ) அத்தகைய அறிவிப்பின் படிவமும், அதனைச் செய்யும் முறையும், தரவுமீறுகை தொடர்பாக அத்தகைய அறிவிப்பில் வழங்கப்படவேண்டிய தகவல்களும்.

24. (1) (அ) தோற்றுருவம் செய்தல் உட்பட, தனிப்பட்ட தரவின் அல்லது தரவின் விசேட வகுதிகளின் முறைமையான மற்றும் பரந்தளவிலான மதிப்பீடொன்றை;

(ஆ) பகிரங்க ரீதியில் அணுகத்தக்க இடப் பிரதேசங்களின் அல்லது தொலைத்தொடர்பு வலையமைப்புகளின் முறைமையான கண்காணிப்பொன்றை; அல்லது

(இ) ஒரு செய்முறைப்படுத்தற் செயற்பாட்டின் நோக்கெல்லையையும் இணைந்த ஆபத்துக்களையும் கவனத்துட்கொண்டு விதிகள் என்றவகையாகத் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அந்தச் செய்முறைப்படுத்தலொன்றை,

உட்படுத்துகின்ற ஏதேனும் செய்முறைப்படுத்தலைக் கட்டுப்பாட்டாளர் ஒருவர் நிறைவேற்றுவதற்கு உட்கருதுமிடத்து, அத்தகைய கட்டுப்பாட்டாளர், அத்தகைய செய்முறைப்படுத்தலுக்கு முன்னர், இச்சட்டத்தின் பாகம் Iஇன் கீழ் கட்டுப்பாட்டாளருக்குச் சுமத்தப்பட்ட கடப்பாடுகள்மீது உட்கருதப்பட்ட செய்முறைப்படுத்தலின் தாக்கத்தையும் இச்சட்டத்தின் பாகம் IIஇன் கீழ் தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளையும் நிச்சயிப்பதற்கு, விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஒரு படிவத்திலும் முறையிலும் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தாக்க மதிப்பீடொன்றை நிறைவேற்றுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட செய்முறைப்படுத்தலின் மூலம் தரவுடன் தொடர்புபட்டவருக்கு விளைவிக்கப்பட்ட ஏதேனும் தீங்குக்கான ஆபத்தைத் தணிப்பதற்குத் கட்டுப்பாட்டாளரினால் எடுக்கப்பட்ட எவையேனும் வழிமுறைகளும் காப்புகளும் உட்பட்ட அத்தகைய தகவல்களையும் விபரங்களையும் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தாக்க மதிப்பீடு கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத்தாக்க மதிப்பீடொன்றை நிறைவேற்றும்போது, கட்டுப்பாட்டாளர், பெயர்குறிக்கப்பட்டவிடத்து, தரவுப் பாதுகாப்பு அலுவலரின் உதவியை நாடுதல் வேண்டும்.

(4) எந்தச் செய்முறைப்படுத்தலுக்காகத் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தாக்க மதிப்பீடு ஏலவே நிறைவேற்றப்பட்டுள்ளதோ அந்தச் செய்முறைப்படுத்தலில் கடைப்பிடிக்கப்பட்ட முறைமையியல், தொழில்நுட்பவியல் அல்லது நடைமுறையில் ஏதேனும் மாற்றம் இருக்கும்போதெல்லாம் கட்டுப்பாட்டாளர், இப்பிரிவுக்கிணங்கப் புதிய தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தாக்க மதிப்பீட்டை நடாத்துதல் வேண்டும்.

(5) கட்டுப்பாட்டாளர் இப்பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்படும் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தாக்க மதிப்பீட்டை அதிகாரசபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் அதிகாரசபையினால் செய்யப்பட்ட எழுத்திலான கோரிக்கையின் மீது, செய்முறைப்படுத்தலின் இணங்கியொழுகுகை

மீது மற்றும் தரவுடன் தொடர்புபட்டவரின் தனிப்பட்ட தரவைப் பாதுகாத்தலுடன் இணைந்த தீங்கின் எவையேனும் ஆபத்துக்கள் மற்றும் அதிகாரசபையினால் விதந்துரைக்கப்பட்ட தொடர்புபட்ட காப்புகள் தொடர்பில் மதிப்பீடொன்றைச் செய்யும் நோக்கத்துக்காக வேறெவையேனும் தகவல்களை வழங்குதலும் வேண்டும்.

25. (1) செய்முறைப்படுத்தலானது இச்சட்டத்தின் கீழ் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளுக்குத் தீங்கேற்படுத்தும் ஆபத்தொன்றை விளைவிக்கக்கூடுமென 24ஆம் பிரிவின்கீழ் நிறைவேற்றப்பட்ட தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தாக்க மதிப்பீடொன்று சுட்டிக்காட்டுமிடத்து, கட்டுப்பாட்டாளர் ஒருவர், தனிப்பட்ட தரவின் ஏதேனும் செய்முறைப்படுத்தலுக்குமுன்னர் அத்தகைய தீங்கேற்படுத்தும் ஆபத்தைத் தணிப்பதற்கு அத்தகைய வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

(2) கட்டுப்பாட்டாளர் ஒருவர், (1)ஆம் உட்பிரிவின் கீழான வழிமுறைகளை எடுத்துள்ளமையைப் பொருட்படுத்தாது, தரவுடன் தொடர்புபட்டவருக்கு அத்தகைய தீங்கேற்படுத்தும் ஆபத்துக்களைத் தணிப்பதற்கு இயலாதவராக உள்ளவிடத்து, அத்தகைய கட்டுப்பாட்டாளர் அத்தகைய செய்முறைப்படுத்தலுக்குமுன்னர் அதிகாரசபையைக் கலந்தாலோசிக்கலாம்.

(3) அத்தகைய கலந்தாலோசனையின்மேல், அதிகாரசபையானது, தரவுடன் தொடர்புபட்டவருக்குத் தீங்கேற்படுத்தும் ஏதேனும் ஆபத்தைத் தணிப்பதற்கு மேலதிக வழிமுறைகளை எடுக்கும்படி அல்லது அத்தகைய செய்முறைப்படுத்தலிலிருந்து இல்லாதொழியும்படி கட்டுப்பாட்டாளரைத் தேவைப்படுத்தி அவருக்கு எழுத்திலான அறிவுறுத்தல்களை வழங்கலாம்.

(4) கட்டுப்பாட்டாளர் (2)ஆம் உட்பிரிவின் கீழ் அதிகாரசபையைக் கலந்தாலோசிக்குமிடத்து, கட்டுப்பாட்டாளர், அதிகாரசபையினால் கோரப்படக்கூடியவாறாக எவையேனும் மேலதிகத் தகவல்களை வழங்குதல் வேண்டும்.

(5) கட்டுப்பாட்டாளர் ஏதேனும் நியாயமான காரணமின்றி அதிகாரசபையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, அத்தகைய கட்டுப்பாட்டாளர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுபவராதல் வேண்டும்.

(6) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, அட்டவணை II இன் (ஆ), (ஊ), (எ) மற்றும் (ஏ) என்னும் விடயங்களில் குறிப்பீடுசெய்யப்பட்ட தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தும்போது அத்தகைய செய்முறைப்படுத்தலானது, அட்டவணை II இன்கீழ் தேவைப்படுத்தப்பட்ட தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அத்தகைய வழிமுறைகளையும் தோதான காப்புகளையும் வழங்கியுள்ளதெனக் கருதப்படுவதாக வெளிப்படுத்தப்படுகின்றது.

(7) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பிரிவு 24(1)இல் குறிப்பீடுசெய்யப்படும் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்துவதில் கட்டுப்பாட்டாளர் ஈடுபடும் போதெல்லாம் அத்துடன் அத்தகைய செய்முறைப்படுத்தலானது, தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கமைதி மற்றும் பொதுச் சுகாதாரம் தொடர்பாக ஒரு கட்டுப்பாட்டாளரினால் நிறைவேற்றப்படுமிடத்து, கட்டுப்பாட்டாளர் அதிகாரசபையைக் கலந்தாலோசித்தல் வேண்டும்.

26. (1) பகிரங்க அதிகாரசபையொன்று ஒரு கட்டுப்பாட்டாளராக அல்லது செய்முறைப்படுத்துநராகத் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்துமிடத்து, அத்தகைய தனிப்பட்ட தரவு, அதிகாரசபையானது, விடயத்துக்கேற்ப, அக்கட்டுப்பாட்டாளருடனான அல்லது செய்முறைப்படுத்துநருடனான மற்றும் இயைபான ஒழுங்குபடுத்தும் அல்லது நியதிச்சட்டமுறையான குழுவுடனான கலந்தாலோசனையுடன் ஒரு மூன்றாம் நாட்டில் செய்முறைப்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடியனவும், (2)ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட போதுமாந்தன்மை முடிபொன்றைப் பின்பற்றி அமைச்சரினால் விதித்துரைக்கப்பட்டனவுமான தனிப்பட்ட தரவின் வகுதிகளை வகுப்பாக்கஞ் செய்தாலொழிய, இலங்கையில் மட்டுமே செய்முறைப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் ஒரு மூன்றாம் நாட்டில் செய்முறைப்படுத்தப்படுதலுமாகாது.

(2) (அ) "போதுமாந்தன்மை முடிபு" ஒன்றைச் செய்யும் நோக்கத்துக்காக, அமைச்சர், அதிகாரசபையுடனான கலந்தாலோசனையுடன், ஒரு மூன்றாம் நாட்டில் தனிப்பட்ட தரவைப் பாதுகாத்தல் தொடர்பாக இயைபான எழுத்திலான சட்டத்தையும் வலுவுறுத்தற் பொறிமுறைகளையும் மற்றும் இச்சட்டத்தின் பாகம் I, பாகம் II என்பவற்றினதும் பாகம் III இன் பிரிவுகள் 20, 21, 22, 23, 24 மற்றும் 25 என்பவற்றினதும் ஏற்பாடுகளின் ஏற்புடைமையையும் எல்லைக்கப்பாலான தரவோட்டத்தின் நோக்கத்துக்காக ஒரு மூன்றாம் நாட்டில் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தல் தொடர்பான அத்தகைய வேறு விதித்துரைக்கப்பட்ட கட்டளைக்கற்களையும் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) இவ்வுட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் போதுமாந்தன்மை முடிபு

(i) அத்தகைய முடிபுகளைப் பாதிக்கக் கூடியவையும் ஒரு மூன்றாம் நாட்டிலுள்ளவையுமான அபிவிருத்திகளின் காலாகாலக் கண்காணிப்புக்கு அமையவிருத்தல் வேண்டுமென்பதுடன் அமைச்சர் அத்தகைய முடிபை ஆகக்குறைந்தது இரண்டாண்டுகளுக்கு ஒருதடவையேனும் பரிசீலனைசெய்யலாம்; அத்துடன்

(ii) அதிகாரசபையுடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் திருத்தப்படும்வரை அல்லது இல்லாதொழிக்கப்படும்வரை வலுவில் இருத்தல் வேண்டும்.

(3) ஒரு பகிரங்க அதிகாரசபையல்லாத கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் ஒருவர், தனிப்பட்ட தரவை

(அ) ஒரு போதுமாந்தன்மை முடிபைப் பின்பற்றி விதித்துரைக்கப்பட்ட ஒரு மூன்றாம் நாட்டில்; அல்லது

(ஆ) ஒரு போதுமாந்தன்மை முடிபைப் பின்பற்றி விதித்துரைக்கப்பட்ட ஒரு மூன்றாம் நாடாகவிராத நாடொன்றில், இச்சட்டத்தின் பாகம் I, பாகம் II மற்றும் பாகம் III இன் பிரிவுகள் 20, 21, 22, 23, 24 மற்றும் 25 என்பவற்றின் கீழ் விதிக்கப்பட்ட முறையான கடப்பாடுகளுக்கான இணங்கியொழுகுகையை, விடயத்துக்கேற்ப, அத்தகைய கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் உறுதிப்படுத்துமிடத்து மட்டுமே, செய்முறைப்படுத்தலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் இணங்கியொழுகுகையை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக, ஒரு கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர், இச்சட்டத்தினால் பாதுகாக்கப்பட்ட தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளுக்குத் தோதான காப்புகளையும் பரிகரிப்புகளையும் உறுதிப்படுத்துவதற்கு மூன்றாம் நாட்டில் பெறுநருக்குள்ள பிணிக்கின்றவையும் வலுவுறுத்தப்படற்பாலவையுமான ஈடுபாடுகளை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரசபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய சாதனங்களைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவைப் பின்பற்றி ஏதேனும் போதுமாந்தன்மை முடிபு அல்லது (4)ஆம் உட்பிரிவைப் பின்பற்றி தோதான பாதுகாப்புகள் இல்லாதவிடத்து, ஒரு பகிரங்க அதிகாரசபை தவிர்ந்த கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் ஒருவர், பின்வருமாறிருப்பின் இலங்கைக்கு வெளியே தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தலாம்:-

(அ) போதுமாந்தன்மை முடிபும் தோதான பாதுகாப்புகளும் இல்லாமை காரணமாகத் தரவுடன் தொடர்புபட்டவருக்கு ஏற்படக்கூடிய அத்தகைய செய்முறைப்படுத்தலின் நிகழ்தகு ஆபத்துக்கள் பற்றி அறிவிக்கப்பட்டபின்னர், தரவுடன் தொடர்புபட்டவர் இலங்கைக்கு வெளியே தனிப்பட்ட தரவின் உத்தேசிக்கப்பட்ட செய்முறைப்படுத்தலுக்குத் தெளிவான முறையில் சம்மதித்திருப்பின்; அல்லது

(ஆ) தரவுடன் தொடர்புபட்டவருக்கும் கட்டுப்பாட்டாளருக்கும் இடையேயான ஒப்பந்தமொன்றைச் செயல்நிறைவேற்றுவதற்காக அல்லது தரவுடன் தொடர்புபட்டவரின் கோரிக்கையின் பேரில் கட்டுப்பாட்டாளரினால் எடுக்கப்பட்ட எவையேனும் ஒப்பந்தத்துக்குமுன்னரான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்காகக் கைமாற்றமானது அவசியமாகவிருப்பின்; அல்லது

(இ) தரவுடன் தொடர்புபட்டவர் தொடர்பான சட்ட உரிமைக்கோரிக்கைகளை நிலைநாட்டுவதற்காக, பிரயோகிப்பதற்காக அல்லது எதிர்வாதிடுவதற்காகக் கைமாற்றமானது அவசியமாகவிருப்பின்; அல்லது

(ஈ) இச்சட்டத்தின் அட்டவணை Iஇன் (எ) என்னும் விடயத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு பொதுமக்களின் அக்கறை காரணங்களுக்காகக் கைமாற்றமானது அவசியமாகவிருப்பின்; அல்லது

(உ) தரவுடன் தொடர்புபட்டவரின் அல்லது வேறோராளின் உயிருக்கு, உடனலத்துக்கு அல்லது காப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ள அவசரநிலைமைக்குப் பதிலிறுப்பதற்கும் மற்றும் தரவுடன் தொடர்புபட்டவர் அல்லது அவரது சட்டப்பாதுகாவலர் சம்மதமளிப்பதற்கும் உடல்ரீதியில் அல்லது சட்டப்படி இயலாதவராகவுள்ளவிடத்து கைமாற்றமானது அவசியமாகவிருப்பின்; அல்லது

(ஊ) இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறெவையேனும் நிபந்தனைகளின் கீழ் அத்தகைய செய்முறைப்படுத்தல் அனுமதிக்கப்படின்.

## பாகம் IV

### பரிந்துகேட்கப்படாத செய்திகளைப் பரப்புவதற்குத் தனிப்பட்ட தரவைப் பயன்படுத்துதல்

27\. (1) பதினான்காம் பிரிவுக்கமைய, (இதனகத்துப்பின்னர், "பரிந்துகேட்கப்பட்ட செய்திகள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அத்தகைய செய்திகளைப் பெறுவதற்குத் தரவுடன் தொடர்புபட்டவர் ஒருவர் சம்மதம் அளித்திருப்பின் மட்டுமே ஒரு கட்டுப்பாட்டாளர் செய்திகளைப் பரப்பும் நோக்கங்களுக்காக அஞ்சற் சேவைகளை, தொலைத்தொடர்புச் சேவைகளை, இலத்திரனியல் வழிவகைகளை அல்லது வேறெவையேனும் ஒத்த வழிவகைகளைப் பயன்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, இச்சட்டத்தின் அட்டவணை IIIஇன் நிபந்தனைகளுக்கிணங்கக் கட்டுப்பாட்டாளரொருவரினால் சம்மதம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான சம்மதமொன்றைப் பெற்றுக்கொள்ளும் போது, கட்டுப்பாட்டாளர், தொடர்புத் தகவல்களைச் சேகரிக்கின்ற நேரத்திலும் ஒரு செய்தி அனுப்பப்படுமிடத்து, ஒவ்வொரு தடவையும் கட்டணமின்றிப் பரிந்துகேட்கப்பட்ட செய்திகளைப் பெறுவது தொடர்பில் எவ்வாறு விருப்புத்தெரிவிப்பது என்பது பற்றிய விபரங்களைத் தரவுடன் தொடர்புபட்டவருக்கு வழங்குதல் வேண்டும்.

(4) ஏதேனும் பரிந்துகேட்கப்பட்ட செய்தியைப் பரப்புவதற்கு அஞ்சல், இலத்திரனியல், தொலைத்தொடர்பு அல்லது வேறெவையேனும் ஒத்த வழிவகைகளைப் பயன்படுத்துகின்ற கட்டுப்பாட்டாளர் ஒருவர், செய்தியின் தன்மையையும் கட்டுப்பாட்டாளரின் அல்லது எந்த மூன்றாந்திறத்தவர் சார்பில் கட்டுப்பாட்டாளரினால் செய்தியானது பரப்பப்படுகின்றதோ அந்த மூன்றாந்திறத்தவரின் பரிந்துகேட்கப்பட்ட செய்திகளைப் பரப்புவதற்குத் தனிப்பட்ட தரவைப் பயன்படுத்துதல் அந்தத் தரவுடன் தொடர்புபட்டோருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(5) அதிகாரசபையானது, இயைபான ஒழுங்குபடுத்தும் அல்லது நியதிச்சட்டமுறையான குழுவின் கலந்தாலோசனையுடன், வெவ்வேறு வகுதியினவான பரிந்து கேட்கப்பட்ட செய்திகளை அடையாளங்காண்பதற்கெனக் கட்டுப்பாட்டாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஏதேனும் குறியீட்டை அல்லது முற்கூறை, இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள் என்ற வகையாகத் தீர்மானிக்கலாம்.

(6) மனித இடையீட்டுடனோ அல்லது அதுவின்றியோ, தரவுடன் தொடர்புபட்டவர் ஒருவர் எந்த இணையத்தள அடிப்படையிலான விளம்பரங்களுக்குக் கட்டுப்பாட்டாளரிடமிருந்து கட்டணமின்றிச் சேவையொன்றைப் பெற்றுக்கொள்வதற்குச் சம்மதித்துள்ளாரோ அந்த எவையேனும் இணையத்தள அடிப்படையிலான விளம்பரங்கள் தவிர, தன்னியக்கமாக்கப்பட்ட இடையீட்டுடனோ அல்லது அதுவின்றியோ தன்னியக்கமாக்கப்பட்ட அழைப்பு மற்றும் தொடர்பாடல் முறைமைகளைப் பயன்படுத்துதலுட்பட, அஞ்சல், இலத்திரனியல் அல்லது தொலைத்தொடர்புச் சேவைகளை அல்லது வேறெவையேனும் ஒத்த முறைகளைப் பயன்படுத்தி-

(அ) கட்டுப்பாட்டாளரின் அல்லது எவரேனும் மூன்றாந்திறத்தவரின் பண்டங்களை அல்லது சேவைகளை; அல்லது

(ஆ) கட்டுப்பாட்டாளர் உட்பட எவரேனுமாளை, உருவகத்தை அல்லது ஒழுங்கமைப்பை,

மேம்படுத்துவதற்கு உட்கருதப்படுகின்ற ஏதேனும் எழுத்திலான, இலத்திரனியல், வாய்மொழிமூலமான, படவகையான அல்லது காணொளிச் "செய்தியை" உள்ளடக்கும்.

## பாகம் V

### தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை

28\. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, (இச்சட்டத்தில் "அதிகாரசபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கைத் தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை எனவழைக்கப்படவேண்டிய அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, (1)ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும் படலாம்.

29. (1) அதிகாரசபையின் அலுவல்களினது நிருவாகமும், முகாமையும், கட்டுப்பாடும், (இச்சட்டத்தில் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணிப்பாளர் சபையொன்றுக்குரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையானது, அதிகாரசபையின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தினால் அதிகாரசபைக்கு அளிக்கப்பட்ட, அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அல்லது அதன் மீது சுமத்தப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) பொறியியல், மருத்துவ, வங்கித்தொழில் மற்றும் நிதி, தொலைத்தொடர்புகள் அத்துடன் சட்டம் என்ற துறைகளில் திறமையையும் எண்பிக்கப்பட்ட உயர்தொழிற்சார் நிபுணத்துவத்தையும் எய்தியுள்ள ஆட்களிடையேயிருந்து சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஐந்துக்குக் குறையாதவர்களும் ஏழுக்கு மேற்படாதவர்களுமான உறுப்பினர்களையும் பொதுப் பயன்பாடுகள், தொழிற்செய்முறைப் புறவொப்படைப்பு (தொசெபு), ஏற்பாட்டியல், காப்புறுதி, வங்கித்தொழில் மற்றும் நிதிசார்துறைகள் என்ற வெவ்வேறு துறைகளில் அனுபவம் கொண்டுள்ளவர்களும் அவர்களுள் ஆகக்குறைந்தது இரு உறுப்பினர்களேனும் பகிரங்கத் துறை உருவகங்களில் முன்னனுபவம் கொண்டிருப்பவர்களுமான ஆட்களையும் சபையானது கொண்டிருத்தல் வேண்டும்.

(4) சபைக்கு நியமிக்கப்பட்ட ஆட்கள், ஒழுங்குபடுத்தும் கருமங்கள், அந்தரங்கத்தன்மை மற்றும் தரவுப் பாதுகாப்பு, தகவற்காப்பு, தரவு விஞ்ஞானம், தரவுப் பகுப்பாய்வியல், பொருளியல், நிதி, தகவல், தொழிநுட்பவியல் அல்லது தொடர்புபட்ட துறைகள் என்பவற்றில் அனுபவத்தையும் அறிவையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

(5) இச்சட்டத்துக்கான அட்டவணை VIஇன் ஏற்பாடுகள், சபையுறுப்பினர்களின் தகைமையீனங்கள் மற்றும் அகற்றுகைக்கான ஏதுக்கள், அவர்கள் பதவிவிலகுதல், அவர்களின் லீவு அல்லது அவர்கள் வராமை, பதவிக்காலம் மற்றும் அதிகாரசபையின் கூட்டங்களும் இலச்சினையும் என்பன தொடர்பாகப் பயனுறுதல் வேண்டும்.

30. (1) சனாதிபதியினாவர், சபையின் தவிசாளராகவிருப்பதற்கு பகிரங்க அல்லது தனியார்துறை உருவகங்களில் பயனுள்ள தலைமைத்துவத்தை வெளிக்காட்டியுள்ள உறுப்பினர்களுள் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளரானவர், சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின் மூலம் தனது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை, அது எத்தேதியன்று சனாதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(3) சனாதிபதி, அதற்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காகத் தவிசாளர் பதவியிலிருந்து தவிசாளரை அகற்றலாம்.

(4) இரண்டாம் மற்றும் (3)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலம், அவர் சபையின் உறுப்பாண்மையைக் கொண்டிருக்கும் காலப்பகுதியாதல் வேண்டும்.

(5) தவிசாளரானவர், சுகவீனம் காரணமாக, வேறு உடற்றகுதியீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தனது பதவிக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுதற்கும் தற்காலிகமாக இயலாதவராகவுள்ளவிடத்து, சனாதிபதி, நியமிக்கப்பட்ட உறுப்பினராக அவரது வழமையான கடமைகளுடன் சேர்த்து மேலதிகமாகத் தவிசாளராகச் செயலாற்றுவதற்கு வேறெவரேனும் உறுப்பினரை நியமிக்கலாம்.

31. அதிகாரசபையின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலை ஒழுங்குபடுத்துதல்;

(ஆ) பகிரங்க மற்றும் தனியார் துறைகளிலுள்ள நடவடிக்கை முறைகளையும் சேவைகளையும் எண்ணிமைமயப்படுத்தலிலிருந்து எழுகின்ற ஏதேனும் பாதகமான தாக்கத்திலிருந்து தரவுடன் தொடர்புபட்டோரின் பிரத்தியேகத்தன்மையைக் காத்தல்;

(இ) எண்ணிமைக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் தொடர்பாடல்களில் ஈடுபட்டுள்ள தரவுடன் தொடர்புபட்டோரின் தனிப்பட்ட தரவு பாதுகாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கான பொறிமுறைகளுக்காக ஏற்பாடு செய்தல்;

(ஈ) எண்ணிமைப் பொருளாதாரத்திலான வளர்ச்சியையும் புத்தாக்கத்தையும் வசதிப்படுத்துவதற்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒழுங்குபடுத்தும் இணங்கியொழுகுகையை உறுதிப்படுத்தல்.

32. இச்சட்டத்தின் கீழான கடமைகளைப் புரியும் மற்றும் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, அதிகாரசபையானது பின்வரும் தத்துவங்களைப் பிரயோகிக்கலாம்:-

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லாக் கருமங்களையும் நேரடியாகவாயினுஞ்சரி அல்லது அதிகாரசபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், முகவர், ஏதேனும் உருவகம் அல்லது நிறுவனத்தினூடாகவாயினுஞ்சரி நிறைவேற்றுதல்;

(ஆ) கட்டுப்பாட்டாளர்களும் செய்முறைப்படுத்துநர்களும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அவரது கடமைகளையும் கடப்பாடுகளையும் நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துவதற்கு அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் மற்றும் அவரது கடமைகளினதும் கடப்பாடுகளினதும் செயல்நிறைவேற்றுகையை உறுதிப்படுத்துவதற்கென ஒரு கட்டுப்பாட்டாளரினால் அல்லது செய்முறைப்படுத்துநரினால் வைத்திருக்கப்பட்ட எவையேனும் தகவல்களைச் சோதனையிடுதல்;

(இ) செய்முறைப்படுத்தற் செயற்பாடுகள் எந்த நியதி நிபந்தனைகளுக்கமையவும் எந்த முறையிலும் நிறைவேற்றப்படுகின்றனவோ அந்த நியதிநிபந்தனைகளையும் அந்த முறையையும் வெளியிடுவதற்கான தேவைப்பாடு உட்பட, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி ஒரு கட்டுப்பாட்டாளரை அல்லது செய்முறைப்படுத்துநரைப் பணித்தல்;

(ச) உரிய நேரத்திலான முறையில் தேவைப்பட்ட தகவல்களை வழங்குவதற்குத் தவறியமைக்காகத் தரவுடன் தொடர்புபட்டவர் ஒருவரிடமிருந்து விதிக்கப்பட்ட கட்டணங்களை மீளளிக்கும்படி ஒரு கட்டுப்பாட்டாளரை அல்லது எவரேனும் இயைபான தரவுப் பாதுகாப்பு அலுவலரைப் பணித்தல்;

(உ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க விசாரணைகளை நடாத்துதல், முறைப்பாடுகளைப் பெறுதல், அதன் முன்னர் தோன்றும்படி எவரேனுமாளைத் தேவைப்படுத்துதல், பணிப்புரைகளை விடுத்தல் மற்றும் குற்றப்பணங்களை விதித்தல்;

(ஊ) இச்சட்டத்தின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, சத்தியத்தின் கீழ் அல்லது உறுதியுரையின் கீழ் ஆளொருவரை விசாரணை செய்தல் மற்றும் விதித்துரைக்கப்பட்ட முறையில் கட்டுப்பாட்டாளரின் அல்லது செய்முறைப்படுத்துநரின் பணிகளைச் செய்முறைப்படுத்தல் தொடர்பான எவையேனும் தகவல்களைக் காண்பிக்கும்படி அவசியமானவிடத்து அத்தகைய ஆளைத் தேவைப்படுத்துதல்;

(எ) செய்முறைப்படுத்தலானது தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளுக்கு உடனடி ஆபத்தொன்றை விளைவிக்குமென நம்புவதற்கு அதிகாரசபைக்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, எவரேனும் கட்டுப்பாட்டாளரின் அல்லது செய்முறைப்படுத்துநரின் வளவுகளினுட் பிரவேசித்தல் மற்றும் பதிவேடுகளைச் சோதனையிடுதல் அல்லது கைப்பற்றுதல் அத்துடன் புலனாய்வுகளை நிறைவேற்றுதல்;

(ஏ) தரவுப் பாதுகாப்பு முகாமை நிகழ்ச்சித்திட்டம் உட்பட, ஒரு கட்டுப்பாட்டாளரினால் அல்லது செய்முறைப்படுத்துநரினால் நிறைவேற்றப்பட்ட எவையேனும் செய்முறைப்படுத்தற் செயற்பாடுகளுக்கான முறை பற்றியும் பயன்படுத்தப்பட்ட நடவடிக்கை முறைகள் பற்றியும் காலாகால மதிப்பீடுகளை நிறைவேற்றுதல்;

(ஐ) எந்த உறுப்பினர்களின் தகைமைகள், அனுபவம் மற்றும் தத்துவங்கள் அத்துடன் கடமைகள் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டுமோ அந்த உறுப்பினர்களைக் கொண்டுள்ள மதியுரைக் குழுக்களை நியமித்தல்;

(ஒ) தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தொடர்பாகச் சான்றுப்படுத்துகையையும் சான்றுப்படுத்துகின்ற குழுக்களையும் ஏற்றங்கீகரித்தல்;

(ஓ) ஒன்றில் தனியாக அல்லது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இலங்கைக்கு வெளியே தரவுப் பாதுகாப்புக்குப் பொறுப்பாகவுள்ள வேறு தலைமை அரசாங்க அல்லது ஒழுங்குபடுத்தும் நிறுவனங்களுடன் அல்லது சர்வதேச முகவராண்மைகளுடன் அல்லது ஒழுங்கமைப்புகளுடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதல் அல்லது அவற்றுடன் இணைந்து ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபடுதல்;

(ஔ) ஏதேனும் கொள்வனவு, எவையேனும் மானியக்கொடைகள், கொடைகளின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்குரித்தாக வரக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளுதல், எடுத்தல் மற்றும் வைத்திருத்தல் அத்துடன் அத்தகைய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை விற்பனைசெய்தல், ஈடுவைத்தல், குத்தகைக்குக்கொடுத்தல், மானியக்கொடையாக அளித்தல், மாற்றளித்தல், விருப்புறுதியளித்தல், குறித்தளித்தல், கொடுத்து மாற்றுதல் அல்லது கையுதிர்த்தல்;

(க) அதிகாரசபை அதன் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தோதானவர்களென அதிகாரசபை கருதக்கூடியவாறாக நிபுணர்களாகச் சேவையாற்றுவதற்கான ஆலோசகர்களும் மதியுரைநர்களும் உட்பட்ட அத்தகைய அலுவலர்களையும் பணியாட்டொகுதியினரையும் அத்தகைய தொழில் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய, தொழிலுக்கமர்த்துதல்;

(ங) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன், விடயத்துக்கேற்ப, அதிகாரசபையினால் அதன் எந்தப் பணியாட்டொகுதியினர் மற்றும் அலுவலர்கள், ஆலோசகர்கள் அல்லது மதியுரைநர்கள் என்போருடன் தொழில் அல்லது சேவை ஒப்பந்தமொன்று செய்துகொள்ளப்படுகின்றதோ அந்தப் பணியாட்டொகுதியினர் மற்றும் அலுவலர்கள், ஆலோசகர்கள் அல்லது மதியுரைநர்களுக்கு அத்தகைய ஊதியத்தையும் வேறு நன்மைகளையும் செலுத்துதல் மற்றும் அவர்களின் நன்மைக்காக அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான சகாய நிதியங்களை அல்லது ஓய்வூதியத் திட்டங்களைத் தாபித்தல்;

(ச) அவசியமென அதிகாரசபையானது கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் அதன் நிதிகளை முதலீடுசெய்தல்;

(ஞ) வங்கிக் கணக்குகளைத் திறத்தல், தொழிற்படுத்துதல் மற்றும் மூடிவிடுதல்;

(ட) தரவுப் பாதுகாப்பு அத்துடன் தரவுக் களஞ்சியப்படுத்துகை, தரவு செய்முறைப்படுத்தல், சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு கருமங்கள் தொடர்பான நியமங்களை நிலைநாட்டுதல்;

(ண) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்தாயினுஞ்சரி மானியக்கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுதல்:

ஆயின், எவ்வாறாயினும், அதிகாரசபையானது, எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகளும், கொடைகளும் அல்லது நன்கொடைகளும் தொடர்பில் நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்

(த) இச்சட்டத்தின்கீழ் எந்தக் கருமங்கள் தொடர்பில் விதிகள், வழிகாட்டுநெறிகள் மற்றும் பணிப்புரைகள் ஆக்கப்படுவதற்கு அல்லது வழங்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்தக் கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்குதல் மற்றும் வழிகாட்டுநெறிகளையும் பணிப்புரைகளையும் வழங்குதல்; அத்துடன்

(ந) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது உகந்தனவாகக்கூடியவாறான வேறெவையேனும் செயல்களைச் செய்தல்.

33. அதிகாரசபையானது, அதன் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்காகப் பின்வரும் எல்லா அல்லது எவையேனும் கடமைகளையும் பணிகளையும் புரிதல் வேண்டும் மற்றும் நிறைவேற்றுதல் வேண்டும்:-

(அ) இதற்கான அட்டவணை Vஇல் தரப்பட்டுள்ள தகவல்களுக்கிணங்க 11ஆம் மற்றும் 13ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகும்படி கட்டுப்பாட்டாளர்களைப் பணித்தல் வேண்டும்

(ஆ) ஒன்றில் அதன் சொந்தப் பிரேரணையின்பேரில் அல்லது தரவுடன் தொடர்புபட்டவர் ஒருவரின் கோரிக்கையின் பேரில், இச்சட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டாளர்களின்மீது அல்லது செய்முறைப்படுத்துநர்களின் மீது சுமத்தப்பட்ட கடப்பாடுகள் அத்தகைய கட்டுப்பாட்டாளர்களினாலும் அல்லது செய்முறைப்படுத்துநர்களினாலும் முறையாக இணங்கியொழுகப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு எல்லாத் தரவுச் செய்முறைப்படுத்தல் தொழிற்பாடுகளையும் கண்காணித்துப் பரிசோதனைசெய்தல் வேண்டும் ;

(இ) குறிப்பிட்ட எவரேனும் கட்டுப்பாட்டாளரினால் அல்லது செய்முறைப்படுத்துநரினால் புரியப்பட்ட ஏதேனும் செய்முறைப்படுத்தற் செயற்பாடு தொடர்பாக அத்தகைய கட்டுப்பாட்டாளருக்கு அல்லது செய்முறைப்படுத்துநருக்குப் பணிப்புரைகளை வழங்குதல் வேண்டும்;

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பயனுற நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்குக் கட்டுப்பாட்டாளர்களுக்காகவும் செய்முறைப்படுத்துநர்களுக்காகவும் மிகச்சிறந்த சர்வதேசச் செயல்முறைகளின் அடிப்படையில் பயிற்சியை வசதிப்படுத்துதல் வேண்டும் அல்லது பொறுப்பேற்றல் வேண்டும்

(உ) கட்டுப்பாட்டாளர்களினால் தரவுப் பாதுகாப்பு முகாமை நிகழ்ச்சித்திட்டங்களின் பயனுள்ள நடைமுறைப்படுத்துகையை உறுதிப்படுத்துவதற்குப் பணிப்புரைகளை வழங்குதல் வேண்டும்

(ஊ) கட்டுப்பாட்டாளர்களுக்கும் செய்முறைப்படுத்துநர்களுக்கும் இடையே வெளிப்படையான தன்மையையும் சுயஒழுங்குபடுத்துகையையும் மேம்படுத்துதல் வேண்டும்

(எ) சர்வதேசச் சமவாயங்களின் கீழ் தரவுப் பாதுகாப்புக் கடப்பாடுகளுக்கு உள்நாட்டில் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்

(ஏ) தரவுப் பாதுகாப்புத் தொடர்பான எல்லாக் கருமங்கள் மீதும் அரசாங்கத்துக்கு விதந்துரைத்தல் வேண்டும்

(ஐ) அமைச்சரின் அங்கீகாரத்துடன் தரவுப் பாதுகாப்புத் தொடர்பான கருமங்கள் பற்றிச் சர்வதேச ரீதியில் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துதல் வேண்டும்

(ஒ) கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் அவை தொடர்பான கருத்தவைகளை ஒழுங்குபடுத்துதலும் நடாத்துதலும், அத்தகைய செயற்பாடுகளை நடாத்துகின்ற வேறு ஒழுங்கமைப்புகளுக்கு ஆதரவளித்தலும் உட்பட, தரவுப் பாதுகாப்புத் தொடர்பான கற்கைகளையும் கல்விசார் செயற்பாடுகளையும் மேம்படுத்துதல் வேண்டும்

(ஓ) அதன் சொந்தச் சார்பில் அல்லது அரசாங்கத்தின் சார்பில், வெளிநாட்டுத் தரவுப் பாதுகாப்பு அதிகாரசபைகளும் சர்வதேச அல்லது அரசாங்கங்களுக்கிடையேயான ஒழுங்கமைப்புகளுமுட்பட, ஏனைய ஒழுங்கமைப்புகளுடன் தரவுப் பாதுகாப்பு என்ற துறையில் தொழில்நுட்ப ஒத்துழைப்பையும் பரிமாற்றத்தையும் முகாமை செய்தல் வேண்டும்

(ஔ) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அதிகாரசபைக்கு அளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்

(க) தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலின்மீது புதிய தொழினுட்பவியல்களின் பயன்பாடும் தாக்கமும்பற்றி ஆராய்ச்சியைப் பொறுப்பேற்றல் வேண்டும்

(ங) வேறொரு கட்டுப்பாட்டாளரிடம் ஏலவே கிடைக்கக்கூடியதாகவுள்ள தரவின் சேகரிப்பினதும் களஞ்சியப்படுத்துகையினதும் இரட்டிப்பை அதன்மூலம் மட்டுப்படுத்தி, கட்டுப்பாட்டாளர்களுக்கிடையே தனிப்பட்ட தரவைப் பகிர்வதற்குப் பணிப்பாணைவிடுக்கும் கட்டளைக்கற்களை நிலை நாட்டலுட்பட, ஓர் உறுதியான இடைத்தொழிற்படத் தகுநிலைத் தளத்தினூடாகப் பகிரங்க அதிகாரசபைகளாகவுள்ள கட்டுப்பாட்டாளர்களுக்கிடையே தனிப்பட்ட தரவைப் பகிரமுடியுமாக உள்ளவிடத்து கட்டுப்பாட்டாளர்களுக்கிடையே அத்தகைய தரவின் பகிர்வை ஆளுகின்ற விதிகளை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆக்குதல் வேண்டும்

(ச) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தரவுடன் தொடர்புபட்டோருக்கு வழங்கப்பட்ட அடையாளங்காண் முகாமையை மற்றும் தொடர்புபட்ட சேவைகளை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துக்காக துறைசார் வழிகாட்டு நெறிகளையும் விதிகளையும் வகுத்தமைப்பதற்கும் உரிமம் தேவைப்படுகின்ற கட்டுப்பாட்டாளர்களினாலான அல்லது செய்முறைப்படுத்துநர்களினாலான செய்முறைப்படுத்தலின் கட்டளைக்கற்களை அடையாளங்காண்பதற்கும் வரைவிலக்கணங்கூறுவதற்குமான மதியுரைக் குழுக்களை நியமித்தல்

(ஞ) விசேட வகுதியினவான தனிப்பட்ட தரவுகளைப் பயன்படுத்துதல், பரிந்துகேட்கப்பட்ட செய்திகளைப் பரப்புவதற்காகத் தனிப்பட்ட தரவைப் பயன்படுத்துதல், பிரிவு 27 இற்கிணங்க தனியாட்களைத் தோற்றுருவம் செய்வதற்காகத் தனிப்பட்ட தரவைப் பயன்படுத்துதல், மற்றும் தன்னியக்கமாக்கப்பட்ட முடிபாக்கலுக்காகத் தனிப்பட்ட தரவைப் பயன்படுத்துதல் தொடர்பாக விதிகளை ஆக்குதல் வேண்டும்; அத்துடன்

(ட) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு அவசியமானவாறாக இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அத்தகைய வேறு செயல்களைப் புரிதல் வேண்டும்.

34. (1) அதிகாரசபையானது, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தரவுடன் தொடர்புபட்டோருக்கு வழங்கப்பட்ட அடையாளங்காண் முகாமையை மற்றும் தொடர்புபட்ட சேவைகளை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துக்காக மதியுரைக் குழுவினது விதப்புரைகளின் அடிப்படையின்மீது, உரிமமொன்று தேவைப்படுகின்ற கட்டுப்பாட்டாளர்களுக்கு அல்லது செய்முறைப்படுத்துநர்களுக்கு உரிமங்களை வழங்கலாம்.

(2) மதியுரைக் குழுவின் விதப்புரைகள், உரிமமொன்று தேவைப்படுகின்ற கட்டுப்பாட்டாளர்களினால் அல்லது செய்முறைப்படுத்துநர்களினால் செய்முறைப்படுத்தலின் கட்டளைக் கற்களை அடையாளங்கண்டு வகுதிகளை வரையறுத்துக்கூறுதல் வேண்டும்.

(3) அத்தகைய உரிமங்கள் தொடர்பான வகுதிகள், கட்டளைக் கற்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள், படிவமும் காலஎல்லையும், விண்ணப்பத்துக்கான நடவடிக்கைமுறை, புதுப்பித்தல், இடைநிறுத்துகை, இல்லாதாக்குகை, உரிமத்தை மறுத்தல், இடைநிறுத்துதல் அல்லது இல்லாதாக்குதலுக்கெதிரான மேன்முறையீடு மற்றும் விதிக்கப்படவேண்டிய கட்டணங்கள் என்பன விதித்துரைக்கப்படலாம்.

(4) அத்தகைய உரிமங்களின் ஏற்புடையற்பாலனவான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அத்தகைய கட்டுப்பாட்டாளர்கள் அல்லது செய்முறைப்படுத்துநர்கள் இணங்கியொழுகுவதனை அதிகாரசபையானது பரிசீலனைசெய்து கண்காணிக்கலாம்.

35. (1) ஒரு முறைப்பாடு பெறப்பட்டதன்மீது அல்லது வேறு வகையாக, எவரேனும் கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர்-

(அ) இச்சட்டத்திற்கு முரணாக ஏதேனும் செய்முறைப்படுத்தற் செயற்பாட்டில் ஈடுபடுகின்றார் அல்லது ஈடுபடும் தறுவாயிலுள்ளார் என அல்லது

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது 52 ஆம் பிரிவின் பந்திகள் (ஈ), (உ) அல்லது (ஊ) என்பவற்றின்கீழான ஏதேனும் விதியை, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை, வழிகாட்டுநெறியை அல்லது கட்டளையை அல்லது தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தல் தொடர்பான வேறேதேனும் எழுத்திலான சட்டத்தை மீறியுள்ளார் அல்லது அவற்றுக்கிணங்கியொழுகத் தவறியுள்ளார் அல்லது அவற்றை மீறும் அல்லது அவற்றுக்கிணங்கியொழுகத் தவறும் சாத்தியங் கொண்டுள்ளார் என, நம்புவதற்கு அதிகாரசபைக்குக் காரணமுள்ளவிடத்து, அதிகாரசபையானது, விதித்துரைக்கப்படக்கூடியவாறான நடவடிக்கை முறைக்கிணங்க விசாரணையொன்றை நடாத்தலாம்.

(2) அதிகாரசபையானது, (1)ஆம் உட்பிரிவின்கீழான ஏதேனும் விசாரணையில் கட்டுப்பாட்டாளருக்கு அல்லது செய்முறைப்படுத்துநருக்குக் கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றை அளித்த பின்னர், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள்-

(அ) செய்முறைப்படுத்தல் தொடர்பான செயலில், செய்யாமையில் அல்லது நடத்தைநெறியில் ஈடுபடாதொழியும்படியும் ஈடுபடுவதனைத் தவிர்க்கும்படியும் அல்லது

(ஆ) அதிகாரசபையின் அபிப்பிராயத்தில் நிலைமையை நிவர்த்திசெய்வதற்கு அவசியமாகவுள்ள அத்தகைய செயல்களைப் புரியும்படியும் அல்லது

(இ) (1)ஆம் உட்பிரிவின்கீழ் கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் ஒருவரினாலான ஏதேனும் மீறுகையின் விளைவாகத் தீங்கை, இழப்பை அல்லது சேதத்தை உற்றுள்ள இன்னலுற்ற ஆளொருவருக்கு அதிகாரசபையினால் தீர்மானிக்கப்பட்டவாறாக நட்டஈடாக அத்தகைய பணத்தொகையைக் கொடுப்பனவு செய்யும்படியும்,

அத்தகைய கட்டுப்பாட்டாளரை அல்லது செய்முறைப்படுத்துநரைத் தேவைப்படுத்தி அக்கட்டுப்பாட்டாளருக்கு அல்லது செய்முறைப்படுத்துநருக்குப் பணிப்புரையொன்றை வழங்கலாம்.

(3) இப்பிரிவின்கீழ் அத்தகைய கட்டுப்பாட்டாளருக்கு அல்லது செய்முறைப்படுத்துநருக்கு வழங்கப்பட்ட ஒவ்வொரு பணிப்புரையும் எழுத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன் அது அத்தகைய எந்தக் கட்டுப்பாட்டாளருக்கு அல்லது செய்முறைப்படுத்துநருக்கு நெறிப்படுத்தப்படுகின்றதோ அந்தக் கட்டுப்பாட்டாளருக்கு அல்லது செய்முறைப்படுத்துநருக்குப் பதிவஞ்சல் மூலம், இலத்திரனியல் தொடர்பாடல் மூலம் அல்லது அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படும் வேறு ஒத்த வழிவகைகள் மூலம் அறிவிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பணிப்புரை அத்தகைய கட்டுப்பாட்டாளரை அல்லது செய்முறைப்படுத்துநரைப் பிணிப்பாதல் வேண்டுமென்பதுடன் அவர் அத்தகைய தொடர்பாடல் தேதியிலிருந்து அத்தகைய பணிப்புரைக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

## பாகம் VI

### அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியும் பணியாட்டொகுதியினரும்

36. (1) சபையானது, பகிரங்கத்துறைக்கு அல்லது தனியார் துறைக்குத் தலைமைத்துவத்தை வழங்குவதில் திறமையையும் எண்பிக்கப்பட்ட உயர்தொழிற்சார் நிபுணத்துவத்தையும் எய்தியுள்ள பணிப்பாளர் தலைமையதிபதியொருவரை அதிகாரசபைக்கு நியமித்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதியின் ஊதியமுட்பட அவரது தொழில் நிபந்தனைகள் விதிகள் என்ற வழியாக சபையினால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

(3) எவரேனும் ஆள் பின்வருமாறிருப்பின், சபையானது அத்தகைய ஆளை அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமித்தலாகாது:-

(அ) ஒரு நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் பாரதூரமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாக முன்னர் காணப்பட்டிருப்பின் அல்லது ஓர் ஒழுங்குபடுத்தும் குழுவினால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்டிருப்பின்;

(ஆ) பதவியிலிருந்து முன்னர் நீக்கப்பட்டிருப்பின்; அல்லது

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் மீறுகையைப் புரிந்திருப்பின்;

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, அதிகாரசபையின் அலுவல்களினதும் கொடுக்கல்வாங்கல்களினதும் பணிப்பும், அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் பிரயோகமும், புரிகையும், நிறைவேற்றுகையும் அத்துடன் அதிகாரசபையின் அலுவலர்களினதும் ஊழியர்களினதும் நிருவாகமும் கட்டுப்பாடும் பொறுப்பிக்கப்பட்டவராதல் வேண்டும்.

(5) சபையானது, பின்வரும் காரணங்களுள் ஏதேனுமொன்றைக் கருத்திற்கொண்டு, (1)ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியைப் பதவியிலிருந்து அகற்றலாம்:-

(அ) அதிகாரசபைக்காக அவரது கடமைகளை அல்லது பணிகளை நிறைவேற்றுகையில் ஏதேனும் அக்கறை முரண்பாடு ஏற்படக்கூடிய சாத்தியம்;

(ஆ) அவ்வாள் சித்தசுவாதீனமற்றவராக அல்லது அவரது கடமைகளை அல்லது பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலதவராக வந்தால்;

(இ) அவ்வாள் அவரது கடமைகள் அல்லது பணிகள் தொடர்பாகப் பாரதூரமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாக இருந்தல்; அல்லது

(ஈ) அவ்வாள் அவரது கடமைகளை அல்லது பணிகளை நிறைவேற்றுகையில் அவரது சுதந்திரத்துடன் தலையிடக் கூடிய ஏதேனும்

செயற்பாட்டில் சம்பந்தப்பட்டிருந்தால் அல்லது சபையின் பொதுவான பணிப்புகளுடன் இணங்கியொழுகாதிருந்தால்:

ஆயின், சபையானது, அத்தகைய அகற்றுகைக்குமுன்னர், கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அளித்தல் வேண்டும்.

37. (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அதிகாரசபையானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அதன் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றும் நோக்கங்களுக்காக, அதன் பணிகளின் வினைத்திறனான நிறைவேற்றுகைக்கு அவசியமென அது கருதுகின்றவாறான ஊழியர் கோப்புப் பதவிகளை உருவாக்கலாம் மற்றும் அலுவலர்களையும் ஊழியர்களையும் தொழிலுக்கமர்த்தலாம் என்பதுடன் அத்தகைய அலுவலர்களினதும் ஊழியர்களினதும் சம்பளங்களையும் வேதனங்களையும் அல்லது வேறு ஊதியத்தையும், நன்மைகளையும் மற்றும் ஓய்வூதியங்களையும் நிர்ணயிக்கலாம்.

(2) அதிகாரசபையானது, தகவற்காப்பு, தரவு விஞ்ஞானம், தரவுப் பகுப்பாய்வியல், தகவல் தொழில்நுட்பவியல், நிதி, சட்டம் என்ற விடயங்களின் மீதும் மற்றும் வேறு தொடர்புபட்ட விடயங்களின் மீதும் தொழில்நுட்ப ஆளணியினரின் பயிற்சியை மேம்படுத்துதலும் அதற்கு அனுசரணையளித்தலும் வேண்டுமென்பதுடன் இந்நோக்கத்துக்காக, அதிகாரசபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு எண்பிக்கப்பட்ட திறனுடைய அதிகாரசபையின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் இலங்கையிலான அல்லது வெளிநாட்டிலான கற்கைச் செலவு தொகைகளைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு அதிகாரமளிக்கப்படுதலும் வேண்டும்.

(3) அதிகாரசபையின் அலுவலர்களுக்கு ஊழியர்களுக்கும் ஏற்புடையற்பாலதாகவிருக்க வேண்டிய நடவடிக்கைக் கோவையொன்றை அதிகாரசபை தயாரித்தல் வேண்டும்.

(4) அத்தகைய நடவடிக்கைக் கோவையை காலத்துக்குக்காலம் திரிபுபடுத்துகின்றதன் மூலம், ஒழிக்கின்றதன் மூலம் அல்லது திருத்துகின்றதன் மூலம் அதிகாரசபை அதனை மீளாய்வு செய்யலாம்.

(5) எவரேனுமாள் பின்வருமாறிருக்குமிடத்து, அதிகாரசபையானது அத்தகைய ஆளை அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நியமித்தலாகாது:-

(அ) ஒரு நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் பாரதூரமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாக முன்னர் காணப்பட்டிருப்பின் அல்லது ஓர் ஒழுங்குபடுத்தும் குழுவினால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்டிருப்பின்;

(ஆ) பதவியிலிருந்து முன்னர் நீக்கப்பட்டிருப்பின்; அல்லது

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் மீறுகையைப் புரிந்திருப்பின்.

(6) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் அரசியலமைப்பினால் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்காக அதிகாரசபைக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(7) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(8) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(9) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்காக அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ள எவரேனுமாளை அதிகாரசபை தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் அதிகாரசபைக்கான ஏதேனும் சேவைக் காலப்பகுதி, அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(10) அதிகாரசபையானது, அத்தகைய அலுவலரின் அல்லது ஊழியரின் சம்மதத்துடன், இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள வேறு அரச நிறுவனங்களுக்கு அல்லது ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைகளுக்கு, அத்தயை நிறுவனத்துக்கும் அதிகாரசபைக்குமிடையே உடன்பட்டுக்கொள்ளப்பட்ட ஒரு வேலைக்கமர்த்துகையின் மீது அதன் அலுவலர்களை அல்லது ஊழியர்களை மாற்றுச்சேவைக்கு விடுவதற்கு முன்மொழியலாம். மாற்றுச் சேவைக் காலப்பகுதியானது அதிகாரசபைக்கான சேவையாகக் கொள்ளப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் VII

## தண்டங்கள்

38. (1) கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் ஒருவர் 35ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரையொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, அதிகாரசபையானது, தரவுடன் தொடர்புபட்டோரின் மீதான தாக்கம், இயைபான இணங்கியொழுகாமைகளின் தன்மையும் அளவும் மற்றும் இச்சட்டத்தின் 39ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கருமங்கள் என்பவற்றைக் கவனத்துட்கொண்ட பின்னர், ஒவ்வோர் இணங்கியொழுகாமைக்கும் பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாதிருக்க வேண்டிய ஒரு தண்டத்தை செலுத்தும்படி அத்தகைய கட்டுப்பாட்டாளரை அல்லது செய்முறைப்படுத்துநரை அறிவித்தல் மூலம் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(2) முன்னையவொரு சந்தர்ப்பத்தில் தண்டமொன்றுக்கு அமைந்தவராக்கப்பட்ட கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் ஒருவர், மேற்கொண்ட ஏதேனும் சந்தர்ப்பத்தில் ஒரு பணிப்புரைக்கு இசைந்தொழுக அடுத்துப்பின்னர் தவறுமிடத்து, அத்தகைய ஆள், (1)ஆம் உட்பிரிவின்கீழ் அவர்மீது விதிக்கப்படக்கூடிய தண்டத்துடன் சேர்த்து மேலதிகமாக, இரண்டாவது மற்றும் ஒவ்வோர் அடுத்துப்பின்னரான இணங்கியொழுகாமைக்கும் தண்டமொன்றாக விதிக்கப்பட்ட தொகையின் இருமடங்குகளைக் கொண்டுள்ள மேலதிகத் தண்டமொன்றைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தண்டமொன்றைச் சேகரிப்பதற்கு அதிகாரசபை பொறுப்பாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு சேகரிக்கப்பட்ட பணம், 35ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை காரணமாகப் பாதிக்கப்பட்ட இன்னலுற்ற ஆளுக்குச் செலுத்தப்படற்பாலதான நட்டஈடாக தீர்மானிக்கப்பட்ட ஏதேனுமிருப்பின் அத்தகைய பணத்தொகையைக் கழித்தபின்னர் திரட்டு நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(4) ஓராம் அல்லது (2)ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி தண்டமொன்றுக்கு ஆளாகவருகின்ற கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் ஒருவர், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய தண்டத்தைச் செலுத்தத் தவறுமிடத்து, அத்தகைய பணத்தொகை அந்நீதிமன்றம் அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் அது விதிக்கக்கூடிய குற்றப்பணத் தொகையை விஞ்சக்கூடுமென்பது எவ்வாறிருப்பினும், அத்தகைய நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட ஒரு குற்றப்பணம் என்றாற் போன்று அதேமுறையில் அறவிடப்படும் அத்தண்டத்தைச் செலுத்தும்படி தேவைப்படுத்துகின்ற கட்டளையொன்றுக்காக அதிகாரசபையானது கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு மறுதிறத்தவரில்லா விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(5) இப்பிரிவின்கீழான தண்டமொன்றை விதித்தலானது, அத்தகைய கட்டுப்பாட்டாளரை அல்லது செய்முறைப்படுத்துநரை ஒழுங்குபடுத்துவதற்காக அல்லது மேற்பார்வை செய்வதற்காக ஏதேனும் ஏற்புடையதான எழுத்திலான சட்டத்தின் அல்லது விதிகளின் நியதிகளின்படி அனுமதிக்கப்படக்கூடியவாறாக, ஒரு தொழிலை அல்லது உயர்தொழிலைக் கொண்டுநடாத்துவதிலிருந்து அத்தகைய கட்டுப்பாட்டாளரை அல்லது செய்முறைப்படுத்துநரை இடைநிறுத்துதல் அல்லது ஒரு தொழிலை அல்லது உயர்தொழிலைக் கொண்டுநடாத்துவதற்காக அளிக்கப்பட்ட உரிமத்தை அல்லது அதிகாரத்தை இல்லாதாக்குதல் உட்பட, ஆனால் அதற்கு வரையறுக்கப்படாமல், வேறெவையேனும் ஒழுங்குபடுத்தும் வழிமுறைகளை எடுப்பதிலிருந்து இயைபான ஒழுங்குபடுத்தும் குழுவை அல்லது நியதிச்சட்டமுறையான குழுவைத் தடை செய்தலாகாது.

(6) இப்பிரிவின்கீழ் ஆட்கள் குழுவொன்றின் மீது தண்டமொன்று விதிக்கப்படுமிடத்து, அப்போது-

(அ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், (1)ஆம் உட்பிரிவின்கீழான இணங்கியொழுகாமை புரியப்பட்ட நேரத்தில் பணிப்பாளரொருவராக மற்றும் அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முகாமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பான வேறு அலுவலராக இருந்த ஆள் ஒவ்வொருவரும்;

(ஆ) அவ்வாட்கள் குழு ஒரு குழுமமாகவிருப்பின், அக்குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும்; அல்லது

(இ) அக்குழு ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாக இராதிருப்பின், (1)ஆம் உட்பிரிவின்கீழான தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்படாத நேரத்தில் அக்குழுவின் முகாமை மற்றும் கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பான அலுவலராகவிருந்த ஆள் ஒவ்வொருவரும்,

(1)ஆம் உட்பிரிவின்கீழான தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறியமைபற்றி அவர் அறிந்திருக்கவில்லையென்று அல்லது அதனோடு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கு உரிய எல்லாக் கவனத்தையும் விழிப்புக்கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென்று அவர் எண்பித்தாலொழிய, அத்தகைய தண்டத்தைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(7) இப்பிரிவின்கீழான நிருவாகத் தண்டமொன்று விதிக்கப்பட்டமையினால் இன்னலுறுகின்ற கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் ஒருவர், அத்தகைய ஆளுக்கு அத்தகைய நிருவாகத் தண்டம் விதிக்கப்பட்டமை பற்றி அறிவிக்கப்பட்ட அறிவித்தல் தேதியிலிருந்து இருபத்தொரு வேலைநாட்களினுள் அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(8) இப்பிரிவின்கீழான மேன்முறையீடுகள் தொடர்பில் அரசியலமைப்பின் 136ஆம் உறுப்புரையின் கீழ் விதிகள் ஆக்கப்படும்வரை, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான மீளாய்வு என்றவகையான விண்ணப்பமொன்று தொடர்பில் அந்த உறுப்புரையின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள், இப்பிரிவின் (7)ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஒவ்வொரு மேன்முறையீடு தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(9) ஏழாம் உட்பிரிவின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்றைச் செய்கின்ற எவரேனும் கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர், மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் முன்னிலையில், (1)ஆம் அல்லது (2)ஆம் உட்பிரிவுகளின் கீழ் விதிக்கப்பட்ட தண்டத்துக்குச் சமமான அத்தகைய பணத் தொகையைப் பிணைப்பொறுப்பொன்றாகக் காசாக வைப்பிலிடுதல் வேண்டும்.

(10) ஏழாம் உட்பிரிவின்கீழ் மேன்முறையீடொன்று செய்யப்படுமிடத்து, எண்பிப்பதற்கான பொறுப்பு, விடயத்துக்கேற்ப, கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகச் செயலாற்றியுள்ளாரென்பதை எண்பிப்பதற்கு அவர்மீதாதல் வேண்டும்.

39. முப்பத்தியெட்டாம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான தொகையுட்பட ஒரு நிருவாகத் தண்டத்தை விதிப்பதற்குத் தீர்மானமொன்றைச் செய்வதில், அதிகாரசபை பின்வரும் கருமங்களுக்கு உரிய கவனஞ்செலுத்தியிருத்தல் வேண்டும்:-

(அ) சம்பந்தப்பட்ட செய்முறைப்படுத்தலின் தன்மை, நோக்கெல்லை அல்லது நோக்கம், பாதிக்கப்பட்ட தரவுடன் தொடர்புபட்டோரின் எண்ணிக்கை மற்றும் அவர்களினால் அடையப்பட்ட சேதத்தின் மட்டம் என்பவற்றைக் கணக்கிற்கெடுத்து முரண்பாட்டின் தன்மை, பாரதூரமான தன்மை மற்றும் காலநீட்சி;

(ஆ) தரவுடன் தொடர்புபட்டோரினால் அடையப்பட்ட சேதத்தைத் தணிப்பதற்குக் கட்டுப்பாட்டாளரினால் அல்லது செய்முறைப்படுத்துநரினால் எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கை;

(இ) 12ஆம் பிரிவின் கீழ் கட்டுப்பாட்டாளரிடமிருந்து தேவைப்படுத்தப்பட்ட தரவுப் பாதுகாப்பு முகாமை நிகழ்ச்சித்திட்டத்தின் பயனுறுதன்மை;

(ஈ) முரண்பாட்டைப் பரிகரிப்பதற்கும், அத்தகைய முரண்பாட்டின் நிகழ்தகு பாதகமான விளைவுகளைத் தணிப்பதற்குமென, அதிகாரசபையுடனான ஒத்துழைப்பின் மட்டம்;

(உ) ஏதேனும் முரண்பாட்டினால் பாதிக்கப்படும் தனிப்பட்ட தரவின் வகுதிகள்;

(ஊ) முரண்பாடொன்றை அதிகாரசபை அறியவந்த முறையும், குறிப்பாக, கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் முரண்பாட்டை அறிவித்தாரா மற்றும் அவ்வாறாயின், எந்த அளவுக்கு முரண்பாட்டை அதிகாரசபைக்கு அறிவித்தார் என்பதுவும்;

(எ) அத்தகைய கட்டுப்பாட்டாளரினால் அல்லது செய்முறைப்படுத்துநரினால் இச்சட்டத்தின்கீழ் முன்னைய இணங்கியொழுகாமைகள்;

(ஏ) விடயத்துக்கேற்ப, கட்டுப்பாட்டாளரினால் அல்லது செய்முறைப்படுத்துநரினால் இச்சட்டத்தின் மீறுகையிலிருந்து அல்லது அது தொடர்பாக, நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல், ஈட்டப்பட்ட நிதிசார் நன்மைகள் அல்லது தவிர்க்கப்பட்ட இழப்புக்கள் போன்ற, விடயத்தின் சூழ்நிலைகளுக்கு ஏற்புடையனவான வேறெவையேனும் தீங்குபெருக்கும் அல்லது தணிக்கும் காரணிகள்.

40. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கான ஏதேனும் விலக்களிப்பு, மட்டுப்பாடு அல்லது மதிப்புக்குறைப்பு, அத்தகைய விலக்களிப்புக்கு, மட்டுப்பாட்டுக்கு அல்லது மதிப்புக்குறைப்புக்கு ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு, அடிப்படை உரிமைகளினதும் சுதந்திரங்களினதும் சாராம்சத்துக்கு மதிப்புக் கொடுப்பதுடன் பின்வருவனவற்றுக்காகச் சனநாயக சமூகமொன்றில் அவசியமான மற்றும் விகிதாசாரப்படியான வழிமுறையொன்றை அமைத்துருவாக்குமிடத்துத் தவிர, அனுமதிக்கப்படுதலாகாது:-

(அ) இலங்கைக் குடியரசின் தேசியப் பந்தோபஸ்து, பாதுகாப்பு, பொதுமக்கள் காப்பு, பொதுச் சுகாதாரம், பொருளாதார மற்றும் நிதிசார் முறைமைகளின் நிலையுறுதி என்பவற்றைப் பாதுகாத்தல்;

(ஆ) நீதித்துறையின் பாரபட்சமின்மையும் சுதந்திரமும்;

(இ) குற்றவியல் தவறுகளைத் தடுத்தல், புலனாய்வுசெய்தல் மற்றும் அவற்றுக்கெதிராகக் குற்றவழக்குகளைத் தொடுத்தல்;

(ஈ) குற்றவியல் தண்டங்களை நிறைவேற்றுதல்; அத்துடன்

(உ) ஆட்களின் உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும், குறிப்பாகப் பேச்சுச் சுதந்திரத்தையும் தகவலுக்கான உரிமையையும் பாதுகாத்தல்.

## பாகம் VIII

### அதிகாரசபையின் நிதியம்

41. (1) அதிகாரசபையானது (இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) பின்வருவன நிதியத்தினுட் செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) அதிகாரசபையின் பயன்பாட்டுக்காகப் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) அதிகாரசபையனாது இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கட்டணங்களாகச் செலுத்தப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஈ) திரட்டு நிதியத்திலிருந்து, அரசாங்கத்திடமிருந்து அல்லது ஒரு வெளிநாட்டு அரசாங்கத்திடமிருந்து, அரச முகவராண்மைகளிடமிருந்து மற்றும் இலங்கையினுள்ளான அல்லது இலங்கைக்கு வெளியேயான பல்புடை அத்துடன் இருபுடை முகவராண்மைகளிடமிருந்து கொடைகள், மானியக்கொடைகள், நன்கொடைகள் என்ற வகையாக அதிகாரசபையினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) அதிகாரசபையானது இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் மற்றும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) அதிகாரசபையின் நிதியத்துக்குச் சொந்தமான பணங்கள், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அதிகாரசபையினால் முதலீடு செய்யப்படுதல் வேண்டும்.

42. (1) அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் அதிகாரசபையின் கணக்குகளினது கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் IX

### நானாவிதமானவை

43. நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அளிக்கப்பட்ட அமைச்சரின் சம்மதத்துடன், அதிகாரசபையானது, இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதில், புரிவதில் மற்றும் நிறைவேற்றுவதில் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு அதிகாரசபைக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை மேலதிகப்பற்று என்ற வகையாக அல்லது வேறுவகையாகத் தற்காலிகமாகக் கடனாகப்பெறலாம்:

ஆயின், இப்பிரிவின் கீழ் அதிகாரசபையினால் திரட்டப்பட்ட எவையேனும் கடன்கள் தொடர்பில் நிலுவையாகவுள்ள தொகைகளின் கூட்டுமொத்தம், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை விஞ்சுதலாகாது.

44. (1) சபையானது, எழுத்திற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, இச்சட்டத்தின்கீழான அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுள் எவற்றையும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்குக்

கையளிக்கலாம் என்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அத்தகைய அலுவலர், சபையினால் வழங்கப்பட்ட எவையேனும் விசேடமான அல்லது பொதுவான பணிப்புகளுக்கமைய அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், சபையானது, அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம், புரியலாம் மற்றும் நிறைவேற்றலாம்.

45. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின்கீழான அவரது தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளுள் எவற்றையும் அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் எவ்வலுவலருக்கு ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி கையளிக்கப்படுகின்றதோ அவ்வலுவலரொருவர், பணிப்பாளர் தலைமையதிபதியினால் விடுவிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கமைய அத்தகைய தத்துவத்தை, கடமையை மற்றும் பணியைப் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, (1)ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், அவ்வாறு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

46. (1) அதிகாரசபையினால் அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்திற் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபையினால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட செலவுதொகைகள் மட்டுமே அதிகாரசபையின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(2) சபையின் ஓர் உறுப்பினரினால், அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது அதன் எவரேனும் அலுவலரினால் அல்லது வேறு ஊழியரினால் அல்லது அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில், இச்சட்டத்தின் கீழ் அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் உறப்பட்ட ஏதேனும் செலவு, அச்செயலானது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அறவிடப்பட்டாலொழிய, அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

47. அமைச்சர் காலத்துக்குக் காலம், அதிகாரசபையின் செயல் நிறைவேற்றத்தைப் பரிசீலனை செய்தல் வேண்டுமென்பதுடன் அமைச்சரினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அதன் அலுவல்களும் செயற்பாடுகளும் தொடர்பான அத்தகைய அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்படி அதிகாரசபையைத் தேவைப்படுத்துதலும் வேண்டும்.

48. (1) அதிகாரசபையானது, ஒவ்வொரு நிதியாண்டினதும் முடிவிலிருந்து ஆறுமாதங்களினுள், அதிகாரசபையின் செயல் நிறைவேற்றத்தை மதிப்பீடு செய்வதற்காக அமைச்சர் காலத்துக்குக் காலம் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய ஆதாரப்படுத்துகின்ற ஆவணங்களுடன் அந்நிதியாண்டின்போது அதிகாரசபையினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் பற்றிய வருடாந்த அறிக்கையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) அமைச்சர், (1)ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையினதும் ஆவணங்களினதும் பிரதிகளை, அத்தகைய அறிக்கையும் ஆவணங்களும் பெறப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களினுள் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல் வேண்டும்.

49. இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபை மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்கு அளிக்கப்பட்ட ஏதேனும் பணியை அல்லது தத்துவத்தைப் புரிவதில் அல்லது பிரயோகிப்பதில் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட எதற்காகவும் குடியியல் அல்லது குற்றவியல் பொறுப்பொன்றாக விருப்பினுஞ்சரி, அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்கு அல்லது அத்தகைய அலுவலரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு இணைதலாகாது.

50. அதிகாரசபையின் எல்லா அலுவலர்களும் ஊழியர்களும் (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

51. அதிகாரசபையானது, (26ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

52. (1) அதிகாரசபை பின்வருவன தொடர்பிலான விதிகளை ஆக்குதல் வேண்டும்:-

(அ) பல்வேறு அலுவலர்களின் மற்றும் ஊழியர்களின் ஆட்சேர்ப்புத் திட்டங்களும், நியமனநியதிகளும், அவர்களைத் தொழிலுக்கமர்த்துதலும் பதவிநீக்குதலும் மற்றும் பணிப்பாளர் தலைமையதிபதியின் தத்துவங்களும் பணிகளுமுட்பட அவர்களின் தத்துவங்களும் பணிகளும் அவர்களுக்கு ஊதியமளித்தலும்;

(ஆ) அதிகாரசபையின் கூட்டங்களை அழைப்பதிலும் நடாத்துவதிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை;

(இ) அதிகாரசபையின் அலுவல்களை முகாமைசெய்தல்;

(ஈ) பாகம் IIஇன் கீழ் தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளைப் பிரயோகிக்கும் மாதிரியும் முறையும்;

(உ) 17ஆம் பிரிவின் கீழ் தரவுடன் தொடர்புபட்டோரின் கோரிக்கையை மறுப்பதற்கான கட்டளைக்கற்கள்;

(ஊ) எந்தக் கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழான விதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்த எல்லாக் கருமங்களும்.

(2) இச்சட்டத்தின் பாகம் Vஇன் ஏற்பாடுகளின் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து இருபத்திநான்கு மாதங்களினுள் அதிகாரசபையானது (1) ஆம் உட்பிரிவின் கீழான விதிகளை ஆக்குதல் வேண்டும்.

(3) அதிகாரசபையானது, (1)ஆம் உட்பிரிவின் பந்திகள் (ஈ), (உ) அல்லது (ஊ) என்பவற்றின்கீழான விதிகளை ஆக்குமுன்னர் இரண்டு வாரங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்குப் பகிரங்கக் கலந்தாலோசனையை நடாத்துதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பகிரங்கக் கலந்தாலோசனைக் காலப்பகுதி, அதிகாரசபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான மேலதிகக் காலப்பகுதியொன்றுக்கு நீடிக்கப்படலாம்.

(5) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்று அமைச்சரினால் அங்கீகரிக்கப்படும்வரையும் அங்கீகரிக்கப்பட்ட விதிகளும் அத்தகைய அங்கீகாரம்பற்றிய அறிவிப்பும் வர்த்தமானியில் வெளியிடப்படும்வரையும் பயனுறுதலாகாது.

(6) ஓராம் உட்பிரிவின் பந்திகள் (ஈ), (உ) அல்லது (ஊ) என்பவற்றின்கீழ் ஆக்கப்பட்டவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் விதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(7) அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி எத்தேதியன்று ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

53. (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது எக்கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமம் தொடர்பில் அமைச்சர் அதிகாரசபையின் ஒருப்பாட்டுடன் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் (1)ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அமைச்சர் அதிகாரசபையின் ஒருப்பாட்டுடன் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) அட்டவணைகள் I, II, III மற்றும் IVஇன் நிபந்தனைகளைத் திருத்துதல், அவற்றுக்கு எதனையும் சேர்த்தல் அல்லது அவற்றை வேறுபடுத்துதல்;

(ஆ) இயைபான சட்டவாக்கங்கள், தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் வலுவுறுத்தக்கூடியதன்மை, சர்வதேச ஈடுபாடுகள் மற்றும் எந்தத் தரவுடன் தொடர்புபட்டோரின் தனிப்பட்ட தரவு கைமாற்றப்படுகின்றதோ அந்தத் தரவுடன் தொடர்புபட்டோருக்கான பயனுள்ள நிருவாக மற்றும் நீதிமுறை நிவர்த்தி என்பவற்றைக் கவனத்துட்கொண்டு, 26ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட போதிய பாதுகாப்பு மட்டத்தை உறுதிப்படுத்துகின்ற மூன்றாம் நாடுகளை அடையாளங்காணுதல்;

(இ) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் சேவைக்காக அறவிடப்பட்ட கட்டணங்களையும் விதிப்பனவுகளையும் குறித்துரைத்தல்;

(ஈ) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படவேண்டிய உரிமங்களின் வகுதிகளைக் குறித்துரைத்தல்;

(உ) உரிமங்களின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள், படிவம் மற்றும் கால எல்லையும், விண்ணப்பத்துக்கான நடவடிக்கைமுறை, அத்தகைய உரிமங்களைப் புதுப்பித்தல், இடைநிறுத்துதல், இல்லாதாக்குதல் மற்றும் அத்தகைய உரிமங்களை மறுத்தல், இடைநிறுத்துதல் அல்லது இல்லாதாக்குதலுக்கெதிரான மேன்முறையீடு;

(ஊ) உரிமங்களை வழங்குவதற்காகக் கட்டணங்களை விதித்தல்;

(எ) தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு தொடர்பில் தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் தோதான காப்பை வழங்குவதற்கான நிபந்தனைகளைக் குறித்துரைத்தல்;

(ஏ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எப்படிவத்திலும் முறையிலும் அதிகாரசபைக்கு மேன்முறையீடுகள் செய்யப்படலாமோ அப்படிவத்தையும் முறையையும் குறித்துரைத்தல்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(5) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

54. இச்சட்டத்தின் அதிகாரத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வோராளும், அவரது கடமைகளை ஏற்குமுன்னர், இச்சட்டத்தின் கீழ் அவரது தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அவரது அறிவுக்கெட்டக்கூடிய எவையேனும் தகவல்கள் தொடர்பில் கண்டிப்பாக இரகசியத்தைத் தாம் கடைப்பிடிப்பாரென வாக்குறுதியளித்து வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் பின்வரும் சூழ்நிலைகளில் தவிர அத்தகைய ஏதேனும் தகவலை வெளிவிடமாட்டாரென அத்தகைய வெளிப்படுத்துகையின் மூலம் அவர் வாக்குறுதியளித்தலும் வேண்டும்:-

(அ) ஒரு சட்டநீதிமன்றத்தினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போதும்; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றுக்கும் இணங்கியொழுகுவதற்கெனவும்.

55. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள், ஒழுங்குவிதிகள் அல்லது கட்டளைகளுக்குப் பயன்கொடுப்பதில் ஏதேனும் சிரமம் எழுந்தால், அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அச்சிரமத்தை அகற்றுவதற்கு

அவசியமென அல்லது உசிதமென அமைச்சருக்குத் தோன்றுகின்றவாறு, இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத அத்தகைய ஏற்பாட்டைச் செய்யலாம்:

ஆயின், அத்தகைய கட்டளையெதுவும், இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்து ஐந்தாண்டுக்காலப்பகுதியொன்று முடிவுற்றபின்னர் ஆக்கப்படுதல் ஆகாது.

(2) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும், அது ஆக்கப்பட்ட பின்னர் மூன்றுமாதங்களினுள் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும்.

## பாகம் X

### பொருள்கோடல்

56. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய

“அநாமதேயப்படுத்தல்” என்பது, தனிப்பட்ட தரவு தொடர்பாக, தனிப்பட்ட தரவு அடையாளம் காணப்பட்ட அல்லது அடையாளம் காணத்தக்க இயற்கையாளுடன் தொடர்புபடாதிருப்பதனைச் செய்வதற்கு அத்தகைய ஏதேனும் தனிப்பட்ட தரவிலிருந்து எவையேனும் தனிப்பட்ட அடையாளங் காட்டிகளை நிரந்தரமாக அகற்றுதல் என்று பொருளாகும்;

“தன்னியக்கமாக்கப்பட்ட செய்முறைப்படுத்தல்” என்பது, கையினாலான ஏதேனும் செய்முறைப்படுத்தலை உட்படுத்தாத செய்முறைப்படுத்தல் என்று பொருளாகும்;

“உயிரியற் செய்திகளின் ஆயளவைமுறைத்தரவு” என்பது, முகஞ்சார் உருவங்கள், விரல் வரிவறிவு ஆய்வுத்தரவு அல்லது விழித்திரைப்படலத்துடன் தொடர்புபட்ட தரவு போன்ற இயற்கை ஆளொருவரின் தனித்துவமான அடையாளங்காணலை அனுமதிக்கும் அல்லது உறுதிப்படுத்தும் அந்த இயற்கை ஆளின் உடல்சார், உடல்நூல்சார் அல்லது நடத்தைசார் பண்பியல்புகள் தொடர்பாகக் குறித்த தொழில்நுட்பச் செய்முறைப்படுத்தலிலிருந்து விளைகின்ற தனிப்பட்ட தரவு என்று பொருளாகும்;

“சான்றுப்படுத்துகின்ற குழுக்கள்” என்பது, தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தல் அல்லது தரவுப் பாதுகாப்பு அலுவலர்களின் தகைமைகள் தொடர்பான சான்றுப்படுத்துகைச் சேவைகளை வழங்கும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டுக் குழுக்கள் என்று பொருளாகும்;

“சிறுவர்” என்பது, 16 வயதுக்குக் குறைந்த இயற்கை ஆளொருவர் என்று பொருளாகும்;

“சம்மதம்” என்பது, தரவுடன் தொடர்புபட்டவரின் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்துவதற்கு அவரின் உடன்பாட்டைக் குறிப்பிட்டு எழுத்திலானவொரு வெளிப்படுத்துகை அல்லது ஓர் உறுதிப்படுத்துகின்ற நடவடிக்கை என்றவகையாகச் சுதந்திரமாகக் கொடுக்கப்பட்ட, குறிப்பிட்ட, தகவலறிந்த மற்றும் ஐயப்பாடற்ற சுட்டிக்காட்டுகை என்று பொருளாகும்;

“கட்டுப்பாட்டாளர்” என்பது, தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலுக்கான நோக்கங்களையும் வழிவகைகளையும் தனியாக அல்லது ஏனையோருடன் கூட்டாகத் தீர்மானிக்கின்ற எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆள், பகிரங்க அதிகாரசபை, பகிரங்கக் கூட்டுத்தாபனம், அரசசார்பற்ற ஒழுங்கமைப்பு, முகவராண்மை அல்லது வேறேதேனும் குழு அல்லது உருவகம் என்று பொருளாகும்;

“எல்லைக்கப்பாலான தரவோட்டம்” என்பது, ஒரு மூன்றாம் நாட்டில் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தும் நோக்கத்துக்காக இலங்கையின் ஆள்புலத்திலிருந்து வெளியே செல்லும் தனிப்பட்ட தரவின் நகர்வு என்று பொருளாகும்;

“விரல் வரிவறிவு ஆய்வுத்தரவு” என்பது, விரலடையாளங்கள் தொடர்பான தரவு என்று பொருளாகும்;

“உடல் நலம் சம்பந்தமான தரவு” என்பது, ஓர் இயற்கையாளின் உடல் ரீதியிலான அல்லது உள ரீதியிலான சுகாதாரம் தொடர்பான தனிப்பட்ட தரவு என்று பொருளாகும் என்பதுடன் இது அவரது உடல் நல நிலையை அல்லது நிலைமையைச் சுட்டிக்காட்டுகின்ற எவையேனும் தகவல்களையும் உள்ளடக்கும்;

“தரவுப்பாதுகாப்பு அதிகாரசபை” என்பது, இச்சட்டத்தின் 28ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்படும் அதிகாரசபை என்று பொருளாகும்;

“தரவுப் பாதுகாப்பு அலுவலர்” என்பது, இச்சட்டத்தின் 20ஆம் பிரிவின்கீழ் பெயர்குறிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள் என்று பொருளாகும்;

“தரவுடன் தொடர்புபட்டவர்” என்பது, தனிப்பட்ட தரவு எந்தவோர் உயிரோடுள்ள அல்லது இறந்துள்ள அடையாளங்காணப்பட்ட அல்லது அடையாளங் காணத்தக்க இயற்கை ஆள் தொடர்பானதோ அந்த ஓர் இயற்கையாள் என்று பொருளாகும்;

“அடையாங்காணத்தக்க இயற்கையாள்” என்பது, ஏதேனும் தனிப்பட்ட தரவைக் குறிப்பீடுசெய்வதன் மூலம் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் அடையாளங் காணப்படமுடியுமான ஓர் இயற்கையாளாகவுள்ளார்;

“மறைமுகப்படுத்தல்” என்பது, அதிகாரமளிக்கப்படாத பாவனையாளர்களுக்குத் தரவை விளங்கமுடியாத தாக்குவதற்குக் கணக்கியல் சார்ந்த பதின்முறை இலக்கமானத்தைப் பயன்படுத்தி அத்தகைய தரவை மறைகுறிப்பாக எழுதுகின்ற அல்லது மாற்றுகின்ற செயல் என்று பொருளாகும்;

“நிதிசார் தரவு” என்பது, தரவுடன் தொடர்புபட்ட ஒருவரினால் திறக்கப்பட்ட கணக்கொன்றையும், அல்லது தரவுடன் தொடர்புபட்ட ஒருவருக்கு நிதிநிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட அட்டையையும் அல்லது கொடுப்பனவுச் சாதனத்தையும் அல்லது நிதிநிலைமையும் கடன் வரலாறும் ஊதியமும் உட்பட ஒரு நிதிநிறுவனத்துக்கும் தரவுடன் தொடர்புபட்ட ஒருவருக்கும் இடையேயான தொடர்புமுறை தொடர்பான ஏதேனும் தனிப்பட்ட தரவையும் அடையாளங்காணமுடியுமான ஏதேனும் அகர எண் அடையாளங்காட்டி அல்லது வேறு தனிப்பட்ட தரவு என்று பொருளாகும்;

“மரபுவழித் தரவு” என்பது, இயற்கையாள் ஒருவரின் உயிரியல்சார் மாதிரியின் அல்லது உடல்திரவத்தின் பகுப்பாய்வொன்றிலிருந்து விளைகின்றதும் அந்த இயற்கையாளின் உடலியங்கியல் அல்லது உடனலம் பற்றித் தனித்துவமான தகவல்களைக் கொடுக்கின்றதும் அந்த இயற்கையாளின் மரபுவழிப் பண்பியல்புகள் தொடர்பானதுமான தனிப்பட்ட தரவு என்று பொருளாகும்;

“உள்ளூரதிகாரசபை” என்பது, ஒரு மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேசசபை என்று பொருளாகுமென்பதுடன் அத்தகைய ஏதேனும்

சபையினால் பிரயோகிக்கப்பட்ட, புரியப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு நேரொத்ததாக உள்ள அல்லது அவற்றை ஒத்த தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும்;

“அமைச்சர்” என்பது, அரசியலமைப்பின் 44ஆம் அல்லது 45ஆம் உறுப்புரையின் கீழ் தரவுப் பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;

“தனிப்பட்ட தரவு” என்பது, பின்வருவனவற்றைக் குறிப்பீடு செய்வதன் மூலம் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் தரவுடன் தொடர்புபட்ட ஒருவரை அடையாளங்காண முடியுமான எவையேனும் தகவல்கள் என்று பொருளாகும்:-

(அ) ஒரு பெயர், அடையாளங்காண் இலக்கம், நிதிசார் தரவு, அமைவிடத்தரவு அல்லது ஓர் இயங்கலை அடையாளங்காட்டி போன்றவோர் அடையாளங்காட்டி; அல்லது

(ஆ) அந்தத் தனியாளின் அல்லது இயற்கையாளின் உடல்சார், உடல்நூல்சார், மரபுவழி, உளஞ்சார், பொருளாதார, கலாசார அல்லது சமூக ஆளடையாளத்துக்குக் குறிப்பான ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட காரணிகள்;

“தனிப்பட்ட தரவு மீறுகை” என்பது, கடத்தப்பட்ட, களஞ்சியப்படுத்தப்பட்ட அல்லது வேறுவகையில் செய்முறைப்படுத்தப்பட்ட தனிப்பட்ட தரவின் தற்செயலான அல்லது சட்டமுறையற்ற அழிவு, இழப்பு, மாற்றம், அதிகாரமளிக்கப்படாத வெளிக்காட்டுகை அல்லது அதற்கான அணுக்கம் என்பவற்றை விளைவிக்கின்ற ஏதேனும் செயல் அல்லது செய்யாமை என்று பொருளாகும்;

“இனஞ்சார்ந்த அல்லது இனத்துக்குரிய தோற்றுவாயை வெளிக்காட்டுகின்ற தனிப்பட்ட தரவு” என்பது, ஓர் இயற்கையாளின் இனத்தை அல்லது இனப்பிரிவைச் சுட்டிக்காட்டக்கூடிய அல்லது அது தொடர்பான நிழற்படங்கள் உட்பட்ட ஏதேனும் தனிப்பட்ட தரவு என்று பொருளாகும்;

“விதித்துரைக்கப்பட்ட” என்பது, இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட என்று பொருளாகும்;

“செய்முறைப்படுத்தல்” என்பது, தனிப்பட்ட தரவைச் சேகரித்தல், களஞ்சியப்படுத்துதல், பேணிக்காத்தல், மாற்றுதல், மீட்டுப்பெறுதல், வெளிக்காட்டுதல், கடத்துதல், கிடைக்கக் கூடியதாக்குதல், அழித்துவிடுதல், அழித்தல், அதன் மீதான கலந்தாலோசனை, வரிசைப்படுத்துகை, இணைப்பு அல்லது தர்க்கரீதியிலான அல்லது கணக்குச்சார் தொழிற்பாடுகள் என்பனவுட்பட ஆனால் அவற்றிற்கு வரையறுக்கப்படாமல் தனிப்பட்ட தரவின்மீது மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் தொழிற்பாடு என்று பொருளாகும்;

“செய்முறைப்படுத்துநர்” என்பது, கட்டுப்பாட்டாளரின் சார்பில் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்துகின்றதும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதுமான ஓர் இயற்கை அல்லது சட்ட ஆள், பகிரங்க அதிகாரசபை அல்லது வேறு உருவகம் என்று பொருளாகும்:

ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, செய்முறைப்படுத்துநர் ஒருவர், கட்டுப்பாட்டாளரிலிருந்து தனிவேறான உருவகமொன்றாக அல்லது ஆளொருவராக மற்றும் கட்டுப்பாட்டாளரின் ஏதேனும் படிநிலைசார் கட்டுப்பாட்டுக்கு அமையாதுள்ள ஆளொருவராக இருத்தல் வேண்டுமென்பதுடன் ஒரு பகுதி இன்னொரு பகுதிக்காகச் செய்முறைப்படுத்தல் அல்லது ஊழியர் ஒருவர் அவரின் தொழில்தருநரினது சார்பில் தரவைச் செய்முறைப்படுத்தல் போன்ற உள்ளகரீதியில் செய்யப்படுகின்ற செய்முறைப்படுத்தலைத் தவிர்க்கின்றது;

எடுத்துக்காட்டுகை: வைத்தியசாலை ஒன்று அதன் நோயாளிகளின் பதிவேடுகளினது பகுப்பாய்வை முகாமை செய்வதற்கு ஊழியர் ஒருவராகத் தரவுவிஞ்ஞானி ஒருவரைத் தொழிலுக்கமர்த்துகின்றது. கம்பெனி B இனால் ஆதரிக்கப்பட்ட மூன்றாந்திறத்தவரின் உள்நாட்டுக் கிளவுட் தளத்தில் அதன் நோயாளிகளின் பதிவேடுகளைக் களஞ்சியப்படுத்துவதற்கு வைத்தியசாலை முடிபுசெய்துள்ளது. நோயாளிகளின் பதிவேடுகளினது முகாமையைப் பொறுத்தவரை வைத்தியசாலை கட்டுப்பாட்டாளராகவும் கம்பெனி B செய்முறைப்படுத்துநராகவும் உள்ளன. வைத்தியசாலையின் தரவு விஞ்ஞானி, கட்டுப்பாட்டாளரின் ஊழியர் ஒருவராக மட்டுமே உள்ளார்; செய்முறைப்படுத்துநர் ஒருவர் அல்லர்;

“தோற்றுருவம்செய்தல்” என்பது, வேலைத்தலத்தில் தரவுடன் தொடர்புபட்டவரின் செயல்நிறைவேற்றம், பொருளாதார நிலைமை, உடனலம், தனிப்பட்ட முந்துரிமைகள், அக்கறைகள், நம்பகமானதன்மை, நடத்தை, பழக்கவழக்கங்கள், அமைவிடம் அல்லது நடமாட்டங்கள் சம்பந்தமான அம்சங்களை மதிப்பிடுவதற்கு, பகுப்பாய்வு செய்வதற்கு அல்லது எதிர்வுகூறுவதற்குத் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தல் என்று பொருளாகும்;

“போலிமயமாக்குதல்” என்பது, மேலதிகத் தகவல்களைப் பயன்படுத்தாமல் தரவுடன் தொடர்புபட்ட ஒருவரை அடையாளங்காண்பதற்குத் தனிப்பட்டதரவைப் பயன்படுத்த முடியாதுள்ள அத்தகையவொரு முறையில் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தல் என்றும் அத்தகைய மேலதிகத் தகவல்கள் தனிவேறாக வைத்திருக்கப்பட்டு அத்தனிப்பட்ட தரவானது தரவுடன் தொடர்புபட்ட ஒருவருக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதாக இராதமையை உறுதிப்படுத்துவதற்குத் தொழில்நுட்ப மற்றும் ஒழுங்கமைப்புச்சார் வழிமுறைகளுக்கு அமைந்ததாகவுள்ளது என்றும் பொருளாகும்

“பகிரங்க அதிகாரசபை” என்பது, ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஓர் அமைச்சு, ஏதேனும் திணைக்களம் அல்லது மாகாணசபை, உள்ளூரதிகார சபை, நியதிச்சட்ட முறையான குழு அல்லது ஏதேனும் நிறுவனம் அல்லது ஒரு மாகாண சபையினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஓர் அமைச்சு, ஏதேனும் திணைக்களம் அல்லது வேறு அதிகாரசபை அல்லது நிறுவனம் என்று பொருளாகும்;

“இயைபான ஒழுங்குபடுத்தும் அல்லது நியதிச்சட்டமுறையான குழு” என்பது, கட்டுப்பாட்டாளரை ஒழுங்குபடுத்துகின்றதும், அவருக்கு அதிகாரமளிக்கின்றதும் அல்லது அவரை மேற்பார்வை செய்கின்றதும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதுமான ஒழுங்குபடுத்தும் அல்லது நியதிச்சட்டமுறையான குழு என்று பொருளாகும் என்பதுடன் இச்சட்டத்தின் 26ஆம், 27ஆம் மற்றும் 38ஆம் பிரிவுகளின் நோக்கத்துக்காக மேற்பார்வைப் பணிகளை நிறைவேற்றுகின்ற ஓர் அமைச்சையும் உள்ளடக்கும்;

“பெறுநர்” என்பது, தனிப்பட்ட தரவு எந்த இயற்கை அல்லது சட்ட ஆளுக்கு வெளிப்படுத்தப்படுகின்றதோ அந்த ஆள் அல்லது ஒரு பகிரங்க அதிகாரசபை அல்லது தனிப்பட்ட தரவு எந்தக் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவுக்கு வெளிப்படுத்தப்படுகின்றதோ அந்த ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழு என்று பொருளாகும்

"தனிப்பட்ட தரவின் விசேடவகுதிகள்" என்பது, இனஞ்சார்ந்த அல்லது இனத்துக்குரிய தோற்றுவாய், அரசியல் அபிப்பிராயங்கள், மத அல்லது தத்துவவியற்சார் நம்பிக்கைகள், மரபுவழித்தரவைச் செய்முறைப்படுத்தல், இயற்கையாள் ஒருவரைத் தனித்துவமான முறையில் அடையாளங்காணும் நோக்கத்துக்காக உயிரியற் செய்திகளின் ஆயளவை முறைத்தரவு, உடல் நலம் சம்பந்தமான தரவு அல்லது ஓர் இயற்கையாளின் பாலியல் வாழ்க்கை அல்லது பாலியற் போக்குச் சம்பந்தமான தரவு, தவறுகள், குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் மற்றும் குற்றத்தீர்ப்புகள் தொடர்பான தனிப்பட்ட தரவு அல்லது ஒரு சிறுவர் தொடர்பான தனிப்பட்ட தரவு என்று பொருளாகும்;

"இலங்கை" என்பது, அரசியலமைப்பின் 5ஆம் உறுப்புரையினால் விதிக்கப்பட்டவாறு இலங்கையின் ஆள்புல எல்லைகள் என்று பொருளாகும் என்பதுடன் இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளை அல்லது வான்வெளியை, இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கப்பலை அல்லது வானூர்தியை, ஓர் இலங்கைத் தூதரகத்தின் வளவுகளினுள்ளான ஏதேனும் அமைவிடத்தை அல்லது இலங்கைக்கு வெளியே அல்லது இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அல்லது இலங்கையில் தாபிக்கப்பட்டு இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள ஏதேனும் சட்டமுறையான குழுவின்சார்பில் இருப்பாட்சி கொள்ளப்பட்ட அல்லது அதன் கட்டுப்பாட்டின்கீழுள்ள எவையேனும் வளவுகளினுள் அமைந்துள்ள அத்தகைய தூதரகத்தலைவரின், தூதுவ முகவரின் அல்லது அத்தகைய தூதரகத்தின் வேறெவரேனும் உறுப்பினரின் வதிவிடத்தை உள்ளடக்கும்;

"மூன்றாம் நாடு" என்பது, எல்லைக்கப்பாலான ஓட்டத்தின் நோக்கத்துக்காக 26ஆம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட ஒரு நாடு என்று பொருளாகும்;

"மூன்றாந்திறத்தவர்" என்பது, தரவுடன் தொடர்புபட்டவர், கட்டுப்பாட்டாளர், செய்முறைப்படுத்துநர் மற்றும் கட்டுப்பாட்டாளரின் அல்லது செய்முறைப்படுத்துநரின் நேரடி அதிகாரத்தின் கீழ் உள்ளவர்களும் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டவர்களுமான ஆட்கள் அல்லாத ஓர் இயற்கை அல்லது சட்ட ஆள், பகிரங்க அதிகாரசபை, முகவராண்மை அல்லது வேறு குழு என்று பொருளாகும்;

"எழுத்திலான" என்பது, கையினால் அல்லது இலத்திரனியல் முறையில் எழுதப்பட்ட ஓர் ஆவணத்தை உள்ளடக்கும்.

57. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

(பிரிவு 5(அ)

## அட்டவணை I

### சட்டமுறையான செய்முறைப்படுத்தலுக்கான நிபந்தனைகள்

(அ) தரவுடன் தொடர்புபட்டவர் தனது தனிப்பட்ட தரவின் செய்முறைப் படுத்தலுக்குச் சம்மதம் அளித்துள்ளார்; அல்லது

(ஆ) தரவுடன் தொடர்புபட்டவர் எந்த ஒப்பந்தத்துக்குத் திறத்தவரொருவராகவுள்ளாரோ அந்த ஒப்பந்தமொன்றைப்புரிவதற்காக அல்லது ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்ளுமுன்னர் தரவுடன் தொடர்புபட்டவரின் கோரிக்கையின்பேரில் நடவடிக்கைகளை எடுப்பதற்கெனச் செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது; அல்லது

(இ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர் எந்தச் சட்டப்படியான கடப்பாட்டுக்கு அமைந்தவராகவுள்ளாரோ அந்தச் சட்டப்படியான கடப்பாட்டுக்கு இணங்கியொழுகுவதற்காகச் செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது; அல்லது

(ஈ) தரவுடன் தொடர்புபட்டவரின் அல்லது வேறோர் இயற்கை ஆளின் உயிருக்கு, உடல் நலத்துக்கு அல்லது காப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ளவோர் அவசரநிலைமைக்குப் பதிலிறுப்பதற்குச் செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது; அல்லது

(உ) பொதுமக்களின் அக்கறைகருதி அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் சுற்றறிக்கை, பணிப்பு அல்லது சட்டக்கோவை உள்ளடங்கலாகக் கட்டுப்பாட்டாளருக்கு அல்லது செய்முறைப்படுத்துநருக்கு அளிக்கப்பட்ட, அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களை, பணிகளை அல்லது கடமைகளைப் பிரயோகிப்பதில் நிறைவேற்றப்பட்ட ஒரு பணியைப் புரிவதற்காகச் செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது; அல்லது

(ஊ) கட்டுப்பாட்டாளரினால் அல்லது ஒரு மூன்றாந்திறத்தவரினால் பின்பற்றப்பட்ட சட்டமுறையான அக்கறைகளின் நோக்கங்களுக்காக, அத்தகைய அக்கறைகள், குறிப்பாகத் தரவுடன் தொடர்புபட்டவர் ஒரு சிறுவராக இருக்குமிடத்து, தனிப்பட்ட தரவின் பாதுகாப்பைத் தேவைப்படுத்துகின்ற தரவுடன் தொடர்புபட்டவரின் அக்கறைகளினால் மேலோங்கப்படுமிடத்துத் தவிர, செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது;

(எ) இவ்வட்டவணையின் (உ) என்னும் விடயத்தின் நோக்கத்துக்காக, "பொதுமக்களின் அக்கறை" என்பது, -

(i) பொதுச்சுகாதாரம் மற்றும் சமூகப்பாதுகாப்புப் போன்ற சுகாதார நோக்கங்களுக்காகவும் அத்துடன் சுகாதாரக் கவனிப்புச் சேவைகளை முகாமைசெய்வதற்காகவும் அவசியமாகவுள்ள தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலையும்;

(ii) தொற்றக்கூடிய நோய்களையும் சுகாதாரத்துக்கான மற்றும் வேறு பாரதூரமான அச்சுறுத்தல்களையும் கட்டுப்படுத்துவதற்காக அவசியமாகவுள்ள தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலையும்;

(iii) சட்டத்தினால் விதிக்கப்பட்ட நோக்கங்களையும் குறிக்கோள்களையும் எய்துவதற்காக அலுவலகமுறையான அதிகாரிகளினால் அவசியமாகவுள்ள தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலையும்,

உள்ளடக்கும்;

(ஏ) இவ்வட்டவணையின் (ஊ) என்னும் விடயத்தின் நோக்கத்துக்காகச் "சட்டமுறையான அக்கறை" என்பது, -

(i) தரவுடன் தொடர்புபட்டவர் கட்டுப்பாட்டாளரொருவரின் ஒரு வாடிக்கையாளராக அல்லது அவரின் சேவையில் உள்ளவராக இருக்கும் நிலைமைகளிலான செய்முறைப்படுத்தலையும்;

(ii) தனிப்பட்ட தரவு சேகரிக்கப்படும் நேரத்திலும் சந்தர்ப்பத்திலும் அந்நோக்கத்துக்கான செய்முறைப்படுத்தல் இடம்பெறலாமாவென்பதைத் தரவுடன் தொடர்புபட்ட ஒருவர் நியாயமான முறையில் எதிர்பார்க்கின்றாராவென்பதையும்;

(iiii) மோசடியைத் தடுக்கும் நோக்கங்களுக்காகக் கண்டிப்பாக அவசியமாகவுள்ள தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தலையும்;

(iv) வலையமைப்பு மற்றும் தகவற் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கங்களுக்காகக் கண்டிப்பாக அவசியமாகவுள்ள மற்றும் விகிதாசாரப்படியுள்ள அளவுக்குத் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தலையும்,

உள்ளடக்கும்.

(பிரிவு 5(ஆ)

## அட்டவணை II

### தனிப்பட்ட தரவின் விசேட வகுதிகளைச் செய்முறைப்படுத்தலுக்கான நிபந்தனைகள்

(அ) சம்பந்தப்பட்ட தரவுடன் தொடர்புபட்டவரின் சம்மதத்தைப் பொருட்படுத்தாது செய்முறைப்படுத்தல் புரியப்பட்ட நேரத்தில் கட்டுப்பாட்டாளரினால் குறித்துரைக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நோக்கங்களுக்காகத் தனிப்பட்ட தரவின் விசேட வகுதிகளைச் செய்முறைப்படுத்தலை வேறேதேனும் எழுத்திலான சட்டம் தடைசெய்தாலொழிய, அத்தகைய தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்துவதற்குத் தரவுடன் தொடர்புபட்டவர் தமது சம்மதத்தை அளித்துள்ளார். ஒரு சிறுவரின் விடயத்தில், “சம்மதம்” என்பது, அத்தகைய சிறுவரின் பெற்றோரினது அல்லது சட்டப்படியான பாதுகாவலரினது சம்மதம் என்று பொருளாதல் வேண்டும்; அல்லது

(ஆ) தொழில், ஓய்வூதியமுட்படச் சமூகப் பாதுகாப்பு என்ற துறையில் கட்டுப்பாட்டாளரின் கடப்பாடுகளை நிறைவேற்றும் மற்றும் தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைகளைப் பிரயோகிக்கும் நோக்கங்களுக்காகவும், தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைகளுக்கான தோதான பாதுகாப்புகளை வழங்குகின்ற ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட அளவுவரை நிகழவுள்ள சுகாதார அல்லது வேறு அவசரகாலநிலைமைகள் தொடர்பாகப் பொதுமக்களின் காப்பை உறுதிப்படுத்துகின்ற பொதுச் சுகாதார நோக்கங்களுக்காகவும், கண்காணிப்பு மற்றும் பொதுமக்களுக்கான எச்சரிக்கை முறைமைகள், தொற்றக்கூடிய நோய்களையும் பொதுச்சுகாதாரத்துக்கான வேறு பாரதூரமான அச்சுறுத்தல்களையும் தடுத்தல் அல்லது கட்டுப்படுத்துதல் மற்றும் பொதுச் சுகாதாரக் கவனிப்புச் சேவைகளை முகாமைசெய்தலுக்குச் செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது; அல்லது

(இ) தரவுடன் தொடர்புபட்டவர் உடல்ரீதியாக அல்லது சட்டரீதியாகச் சம்மதமளிக்க இயலாதுள்ளவிடத்து தரவுடன் தொடர்புபட்டவரின் அல்லது வேறோர் இயற்கையான ஆளின் உயிருக்கு, உடனலத்துக்கு அல்லது காப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ள அவசரகாலநிலைமையொன்றுக்குப் பதிலிறுப்பதற்குச் செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது; அல்லது

(ஈ) தரவுடன் தொடர்புபட்டவரினால் வெளிப்படையாகப் பகிரங்கப்படுத்தப்படுகின்ற தனிப்பட்ட தரவுடன் செய்முறைப்படுத்தல் தொடர்புபட்டுள்ளது; அல்லது

(உ) ஒரு நீதிமன்றம் அல்லது நியாயசபை அல்லது அத்தகைய ஒத்த அரங்கின் முன்னர் அல்லது நீதிமன்றங்கள் அவற்றின் நீதிமுறைத் தன்மையில் செயலாற்றும்போதெல்லாம் சட்டப்படியான உரிமைக் கோரிக்கைகளை நிலைநாட்டுவதற்காகவும், பிரயோகிப்பதற்காகவும் அல்லது எதிர்வாதிடுவதற்காகவும் செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது; அல்லது

(ஊ) தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்குப் பொருத்தமான மற்றும் குறிப்பிட்ட வழிமுறைகளை வழங்கும் அதேவேளையில், பின்பற்றப்பட்ட இலக்குக்கு அவசியமானதாகவும் விகிதாசாரப்படியானதாகவும் இருக்க வேண்டிய அட்டவணை Iஇன் (எ) என்னும் விடயத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்டவாறான ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது பொதுமக்களின் அக்கறையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான ஏதேனும் நோக்கத்துக்காகச் செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது; அல்லது

(எ) தடுப்புச்சார் அல்லது தான்புரிதொழில்சார் மருத்துவ நோக்கங்களுக்காக, மருத்துவ நோய்நாட்டத்துக்காக, கவனிப்பை அல்லது சிகிச்சையை வழங்குவதற்காக அல்லது சுகாதாரக் கவனிப்புச் சேவைகளை முகாமை செய்வதற்காக மற்றும் அத்தகைய தரவு, இலங்கையில் நிலவுகின்ற ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட அல்லது அச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு சுகாதார உயர்தொழிலரினால் செய்முறைப்படுத்தப்படுமிடத்து செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது; அல்லது

(ஏ) இச்சட்டத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எடுத்துக்கூறப்பட்ட தரவுப் பாதுகாப்பு உரிமைகளைப் பாதுகாக்கின்றதும் பின்பற்றப்பட்ட இலக்குக்கு விகிதாசாரப்படியானதாக இருக்கவேண்டியதுமான சட்டத்துக்கிணங்கப் பொதுமக்களின் அக்கறைகருதி ஆவணக்காப்பு நோக்கங்களுக்காக, அறிவியல் ஆராய்ச்சி அல்லது வரலாற்றுமுறை ஆராய்ச்சி நோக்கங்களுக்காக அல்லது புள்ளிவிபரஞ்சார் நோக்கங்களுக்காக மற்றும் தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்குப் பொருத்தமான மற்றும் குறிப்பிட்ட வழிமுறைகளை வழங்குவதற்குச் செய்முறைப்படுத்தல் அவசியமாகவுள்ளது.

(பிரிவு 5(இ)

## அட்டவணை III

### தரவுடன் தொடர்புபட்டவரின் சம்மதத்துக்கான நிபந்தனைகள்

(அ) தரவுடன் தொடர்புபட்டவர் தொடர்பான அவரது தனிப்பட்ட தரவைத் தரவுடன் தொடர்புபட்டவர் செய்முறைப்படுத்துவதற்குச் சம்மதித்துள்ளாரெனக் கட்டுப்பாட்டாளர் எடுத்துக்காட்டுதல் வேண்டும்;

(ஆ) வேறு கருமங்களுடனும் சம்பந்தப்பட்ட எழுத்திலான வெளிப்படுத்துகையொன்றின் சந்தர்ப்பத்தில் தரவுடன்தொடர்புபட்டவரின் சம்மதம் அளிக்கப்படின், சம்மதத்துக்கான கோரிக்கையானது, தெளிவான, சாதாரண மொழியைப் பயன்படுத்தி, விளங்கத்தக்க மற்றும் இலகுவாக அணுகக்கூடிய படிவத்தில், ஏனைய கருமங்களிலிருந்து தெளிவான முறையில் வேறுபிரித்துக்காட்டப்படத்தக்கவொரு முறையில் முகாமைப்படுத்தப்படுதல் வேண்டும்:

ஆயின், அத்தகையவொரு வெளிப்படுத்துகை இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளின் மீறுகையொன்றாக அமைதலாகாது;

(இ) சம்மதமானது சுதந்திரமாக அளிக்கப்படுகின்றதாவென்பதனை மதிப்பீடுசெய்யும்போது, சேவையொன்றின் வழங்குகையுட்பட, மற்றவற்றுக்கிடையில், ஓர் ஒப்பந்தத்தின் புரிகைக்காக அவசியமாகவிராத தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தலுக்கான சம்மதத்தின் மீதான நிபந்தனையின்

மீதுள்ளாதாவென்பதுபற்றி விசேடமாக கவனத்திற்கொள்ளப்படுதல் வேண்டும் அத்துடன்

(ஈ) சம்மதத்தை அளிக்குமுன்னர், தரவுடன் தொடர்புபட்டவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எந்நேரத்திலும் சம்மதத்தை மீளப்பெறமுடியுமென்பது அவருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(பிரிவு 5(ஈ)

**அட்டவணை IV**

**குற்றவியற் புலனாய்வுகள் தொடர்பாகத் தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தல்**

(அ) தவறுகளின் சட்டமுறையான புலனாய்வுகள் அல்லது தொடர்புபட்ட பாதுகாப்பு வழிமுறைகள் தொடர்பான தனிப்பட்ட தரவைச் செய்முறைப்படுத்தலானது, தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளுக்கான மற்றும் சுதந்திரங்களுக்கானதோதான பாதுகாப்புகளை வழங்கும் அதேவேளையில், ஏற்புடையற்பாலனவான எழுத்திலான சட்டங்களுக்கிணங்க மட்டுமே நிறைவேற்றப்படுதல் வேண்டும்;

(ஆ) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழான ஏற்பாடுகளைப் பின்பற்றிப் புலனாய்வுகள் நிறைவேற்றப்படின், தனிப்பட்ட தரவின் செய்முறைப்படுத்தல் இவ்வட்டவணையின் கீழ் சட்டமுறையானதாகக் கருதப்படலாம்; அத்துடன்

(இ) இவ்வட்டவணையின்கீழ் தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளுக்காகவும் சுதந்திரங்களுக்காகவும் தோதான பாதுகாப்புகளை வழங்குவதற்கான நிபந்தனைகள் விதித்துரைக்கப்படக்கூடியறானதாகும்.

(பிரிவுகள் 11 மற்றும் 13)

**அட்டவணை V**

**தனிப்பட்ட தரவைச் சேகரித்தல்**

1. தரவுடன் தொடர்புபட்ட ஒருவர் தொடர்பான தனிப்பட்ட தரவானது தரவுடன் தொடர்புபட்டவரிடமிருந்து சேகரிக்கப்படுமிடத்து, கட்டுப்பாட்டாளர், அத்தகைய தனிப்பட்ட தரவைச் சேகரிக்கும் நேரத்தில், தரவுடன் தொடர்புபட்டவருக்குப் பின்வரும் தகவல்களை வழங்குதல் வேண்டும்:

(அ) கட்டுப்பாட்டாளரின் மற்றும் ஏற்புடையற்பாலவிடத்து கட்டுப்பாட்டாளரினது பிரதிநிதியின் ஆளடையாளமும் தொடர்பு விபரங்களும்;

(ஆ) ஏற்புடையற்பாலவிடத்து, தரவுப் பாதுகாப்பு அலுவலரின் தொடர்பு விபரங்கள்;

(இ) தனிப்பட்ட தரவு எந்த உட்கருதப்பட்ட நோக்கங்களுக்காகச் செய்முறைப்படுத்தப்படுகின்றதோ அந்த உட்கருதப்பட்ட நோக்கங்களும் செய்முறைப்படுத்தலுக்கான சட்ட அடிப்படையும்;

(ஈ) செய்முறைப்படுத்தலானது அட்டவணை I இன் (ஊ) என்னும் விடயத்தின் அடிப்படையின் மீதானதாக இருக்குமிடத்து, கட்டுப்பாட்டாளரினால் அல்லது ஒரு மூன்றாந்திறத்தவரினால் பின்பற்றப்பட்ட சட்டமுறையான அக்கறை;

(உ) சேகரிக்கப்படுகின்ற தனிப்பட்ட தரவின் வகுதிகள்;

(ஊ) அட்டவணை I இன் (அ) என்னும் விடயத்தையும் அட்டவணை II இன் (அ) என்னும் விடயத்தையும் பின்பற்றிய சம்மதத்தை அடிப்படையாகக் கொள்வதற்குச் செய்முறைப்படுத்தலானது உட்கருதப்படுமிடத்து, சம்மதம் மீளப்பெறப்படுமுன்னர் அதன் அடிப்படையின்மீதான செய்முறைப்படுத்தலின் சட்டத்தன்மையைப் பாதிக்காமல் தரவுடன் தொடர்புபட்டவருக்கு அவரது சம்மதத்தை மீளப்பெறுவதற்கு உரிமை உள்ளமை மற்றும் அத்தகைய மீளப்பெறுகைக்கான நடவடிக்கைமுறை;

(எ) ஏற்புடையதாயின், அத்தகைய தனிப்பட்ட தரவு எந்தப் பெறுநர்களுடன் அல்லது மூன்றாந்திறத்தவர்களுடன் பகிரப்படலாமோ அந்தப் பெறுநர்கள் அல்லது மூன்றாந் திறத்தவர்கள்;

(ஏ) ஏற்புடையதாயின், கட்டுப்பாட்டாளர் நிறைவேற்றுவதற்கு உட்கருதுகின்ற தனிப்பட்ட தரவின் ஏதேனும் எல்லைக்கப்பாலான கைமாற்றம் தொடர்பான தகவல்;

(ஐ) ஒன்பதாம் பிரிவின் நியதிகளின்படி தனிப்பட்ட தரவு வைத்திருக்கப்படவேண்டிய காலப்பகுதி அல்லது அத்தகைய காலப்பகுதி பற்றி அறியப்படாதிருக்குமிடத்து, அத்தகைய காலப்பகுதியைத் தீர்மானிப்பதற்கான கட்டளைக்கற்கள்;

(ஒ) பாகம் IIஇல் குறிப்பீடுசெய்யப்பட்ட தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைகள் உள்ளமையும் அவற்றைப் பிரயோகிப்பதற்கான நடவடிக்கைமுறையும்;

(ஓ) அதிகாரசபைக்கு முறைப்பாடுகளைக் கோப்பிடுவதற்கான உரிமையொன்று உள்ளமை;

(ஔ) தரவுடன் தொடர்புபட்டவரினால் தனிப்பட்ட தரவின் வழங்குகை ஒரு நியதிச்சட்டமுறையான அல்லது ஒப்பந்தஞ்சார் தேவைப்பாடா அல்லது ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதற்கு அவசியமான ஒரு தேவைப்பாடா என்பதுவும், தரவுடன் தொடர்புபட்டவர் தனிப்பட்ட தரவை வழங்குவதற்குக் கடப்பாடுள்ளவரா என்பதுவும், அத்தகைய தரவை வழங்கத்தவறியமையின் நிகழ்தகு விளைவுகளும்; அத்துடன்

(க) பிரிவு 18இல் குறிப்பீடுசெய்யப்பட்ட தோற்றுருவம்செய்தல் உட்பட, தனியாளினால் தன்னியக்கமாக்கப்பட்ட முடிபுசெய்தல் உள்ளமை மற்றும் ஆகக்குறைந்தது அவ்விடயங்களிலேனும், உட்படுத்தப்பட்ட தர்க்கம் பற்றி நியாயமான முறையில் அர்த்தமுள்ள தகவல்களும், தரவுடன் தொடர்புபட்டவருக்கு அத்தகைய செய்முறைப்படுத்தலின் குறிப்பிடத்தக்கதன்மையும் எதிர்நோக்கப்பட்ட விளைவுகளும்.

2. தனிப்பட்ட தரவானது தொடக்கத்தில் எந்த நோக்கத்துக்காகச் சேகரிக்கப்பட்டதோ அந்த நோக்கமொன்றல்லாதவொரு நோக்கத்துக்காக அத்தனிப்பட்ட தரவை மேற்கொண்டு செய்முறைப்படுத்துவதற்குக் கட்டுப்பாட்டாளர் உட்கருதுமிடத்து, கட்டுப்பாட்டாளர், இவ்வட்டவணையின் 1ஆம் விடயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் மேற்கொண்ட செய்முறைப்படுத்தல்மீதான விபரமான தகவல்களையும் அதன் நோக்கத்தையும் தரவுடன் தொடர்புபட்டவருக்கு வழங்குதல் வேண்டும்.

3. இவ்வட்டவணையின் 1ஆம் மற்றும் 2ஆம் விடயங்கள், தரவுடன் தொடர்புபட்டவர் அத்தகவல்களை ஏலவே பெற்றுக்கொண்டுள்ளவிடத்து அல்லது அத்தகவல்கள்பற்றி அவருக்கு அறியத்தரப்பட்டுள்ளவிடத்து ஏற்புடையனவாதலாகாது.

4. தரவுடன் தொடர்புபட்டவரின் தனிப்பட்ட தரவு, தரவுடன் தொடர்புபட்டவருடனான நேரடி இடைச்செயலாற்றுகையினூடாகவல்லாது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளவிடத்து, கட்டுப்பாட்டாளர், தனிப்பட்ட தரவு பெறப்பட்ட மூலத்தையும், இவ்வட்டவணையின் 1ஆம் விடயத்தின் கீழ் தேவைப்பட்ட தகவல்களுடன் சேர்த்து, ஏற்புடையற்பாலவிடத்து, அது பகிரங்கமானமுறையில் அணுகத்தக்க மூலத்திலிருந்து வந்ததா அல்லதாவென்பதையும் தரவுடன் தொடர்புபட்டவருக்கு வழங்குதல் வேண்டும்.

5. தரவுடன்தொடர்புபட்டவரின் தனிப்பட்ட தரவு, தரவுடன் தொடர்புபட்டவருடனான நேரடி இடைச்செயலாற்றுகையினூடாகவல்லாது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளவிடத்து, கட்டுப்பாட்டாளர், இவ்வட்டவணையின் 1ஆம், 4ஆம் விடயங்களின்கீழான தகவல்களைப் பின்வருமாறு வழங்குதல் வேண்டும்:

(அ) தனிப்பட்ட தரவு செய்முறைப்படுத்தப்படும் குறிப்பிட்ட சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, தனிப்பட்ட தரவைப் பெற்றுக்கொண்டபின்னர் நியாயமானவொரு காலப்பகுதியினுள், ஆனால் ஆகக்குறைந்தது ஒருமாதத்தினுள்;

(ஆ) தனிப்பட்ட தரவு, தரவுடன் தொடர்புபட்டவருடன் தொடர்பாடுவதற்காகப் பயன்படுத்தப்படவுள்ளதெனின், ஆகக் குறைந்தது அத்தரவுடன் தொடர்புபட்டவருக்கு முதலாவது தொடர்பாடல் செய்யப்பட்ட நேரத்தில்; அல்லது

(இ) வேறொரு பெறுநருக்கு வெளிக்காட்டுகையொன்று எதிர்நோக்கப்படின், ஆகக்குறைந்தது தனிப்பட்ட தரவு முதன்முதலாக வெளிக்காட்டப்படும்போது.

6. இவ்வட்டவணையின் 1 முதல் 4 வரையிலான விடயங்கள் பின்வருமிடத்து ஏற்புடையனவாதலாகாது:

(அ) தரவுடன் தொடர்புபட்டவருக்குத் தகவல்கள் ஏலவே வழங்கப்பட்டுள்ளன அல்லது அவை பற்றி அவர் அறிவிக்கப்பட்டுள்ளாரென்ற நிகழ்வைக் கட்டுப்பாட்டாளர் நிலைநாட்டியுள்ளவிடத்து; அல்லது

(ஆ) இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிபந்தனைகளுக்கும் காப்புகளுக்கும் அமைய அல்லது இவ்வட்டவணையின் 1ஆம் விடயத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட கடப்பாடு அச்செய்முறைப்படுத்தலின் குறிக்கோள்களை எய்துவதனை இயலாததாக்கும் அல்லது பாரதூரமான முறையில் அதற்குக் கேடுவிளைவிக்கும் சாத்தியங்கொண்டதாக இருக்குமளவுக்கு, ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால், அறிவியல் ஆராய்ச்சி, வரலாற்றுமுறைசார் ஆராய்ச்சி அல்லது புள்ளிவிபரஞ்சார் ஆராய்ச்சிக்காக ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் பொதுமக்களின் அக்கறைகருதி ஆவணக்காப்பு நோக்கங்களுக்காகக் குறிப்பாகச் செய்முறைப்படுத்துவதற்காக அத்தகைய தகவலை வழங்குதல் இயலாததாக எண்பிக்கப்படுமிடத்து அல்லது அளவொவ்வாத முயற்சியொன்றை உட்படுத்துமிடத்து. அத்தகைய விடயங்களில் கட்டுப்பாட்டாளர், இயைபான தகவல்களைப் பகிரங்கமான முறையில் கிடைக்கக்கூடியதாக்குதலுட்பட, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் பாதுகாக்கப்பட்ட தரவுடன் தொடர்புபட்டவரின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்குத் தோதானவழிமுறைகளை எடுத்தல் வேண்டும்; அல்லது

(இ) கட்டுப்பாட்டாளர் எந்த எழுத்திலான சட்டத்துக்கு அமைந்தவராக்கப்பட்டுள்ளாரோ மற்றும் இச்சட்டத்தின் கீழும் அத்தகைய எழுத்திலான சட்டத்தின் கீழும் பாதுகாக்கப்பட்ட தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்குத் தோதான வழிமுறைகளை அது வழங்குகின்றதோ அந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் பெற்றுக்கொள்கை அல்லது வெளிக்காட்டுகை வெளிப்படையாக விதிக்கப்பட்டவிடத்து; அல்லது

(ஈ) உயர்தொழில்சார் சிறப்புரிமைக் கடப்பாடுகளின் விளைவாகத் தனிப்பட்ட தரவு அந்தரங்கமானதாக வைத்திருக்கப்பட வேண்டியவிடத்து அல்லது இரகசியம் பற்றிய நியதிச்சட்ட முறையான கடப்பாடொன்றுட்பட, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் வெளிகாட்டப்படுவதற்கு அனுமதிக்கப்படாதவிடத்து.

(பிரிவு 29(5)

## அட்டவணை VI

1. தவிசாளர் தவிர்ந்த சபையின் ஒவ்வோர் உறுப்பினரும், அவர் இறப்பின் மூலம், பதவிவிலகுவதன் மூலம் அல்லது அகற்றப்படுவதன் மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத்தேதியிலிருந்து மூன்றாண்டுகாலமொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலொழிய, மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்:

ஆயின், இறப்பின்மூலம், பதவிவிலகுவதன்மூலம் அல்லது அகற்றப்படுவதன் மூலம் பதவியை வறிதாக்கியுள்ள உறுப்பினரொருவரின் இடத்தில் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

2. (1) சபையின் எவரேனும் உறுப்பினர் எந்நேரத்திலும் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் தனது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை, அது சனாதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(2) இறப்பு, பதவிவிலகுகை, அகற்றுகை காரணமாக எவரேனும் உறுப்பினர் பதவியை வறிதாக்கும் பட்சத்தில், சனாதிபதியானவர், 29ஆம் பிரிவின் (3)ஆம் மற்றும் (4)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, வேறோராள் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகிப்பதற்கு அவரை நியமிக்கலாம்.

(3) தவிசாளர் தவிர்ந்த அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினர் சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக மூன்று மாதங்களை விஞ்சுகின்றவொரு காலப்பகுதிக்குத் தனது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருப்பின், சனாதிபதியானவர் 29ஆம் பிரிவின் (3)ஆம், (4)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய காலப்பகுதியின் போது அவரது இடத்திற் செயலாற்றுவதற்கு வேறோராளை நியமிக்கலாம்.

(4) அதிகாரசபையின் அனுமதியை முதலில் பெற்றுக்கொள்ளாமல் அதிகாரசபையின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகைதராத சபையின் உறுப்பினரொருவர் தனது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

3. (1) ஆளொருவர் பின்வருமாறிருப்பின் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்:-

(அ) அவர் பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராக அல்லது ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) சித்தசுவாதீனமற்றவராக அல்லது தனது கடமைகளை நிறைவேற்ற இயலாதவராக இருந்தால் அல்லது வந்தால்;

(இ) பொறுப்பு விடுவிக்கப்படாத வங்கிமுறிந்தவராக இருந்தால் அல்லது வந்திருந்தால்;

(ஈ) ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால் அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால்;

(உ) பதவியிலிருந்து முன்னர் அகற்றப்பட்டிருந்தால்.

(2) சனாதிபதியானவர், அதிகாரசபையின் உறுப்பினரொருவர் பின்வருமாறிருப்பின், அவரை ஓர் உறுப்பினராகத் தொடர்ந்திருப்பதிலிருந்து அகற்றுதல் வேண்டும்:-

(அ) அவரது கடமைகள் தொடர்பாகப் பாரதூரமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாகவிருந்தால்;

(ஆ) அவரைத் தொடர்ந்தும் பதவியில் வைத்திருப்பதனால் அதிகாரசபையின் நலனுக்குத் தீங்குவிளைவிக்கும் வகையில் தனது பதவியைத் துர்ப்பிரயோகம் செய்தால்;

(இ) விடயம் 3இன் (1)ஆம் பந்தியின் கீழ் தகைமையற்றவராகவிருந்தால்; அல்லது

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறினால்.

4. சபையினால் ஏதேனும் கருமத்தின்மீது எடுக்கப்படவேண்டிய ஏதேனும் முடிபில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ அக்கறை கொண்டுள்ள ஓர் உறுப்பினர், அத்தகைய முடிபு எடுக்கப்படும் சபையின் கூட்டத்தில் அத்தகைய அக்கறையின் தன்மையை வெளிக்காட்டுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளிக்காட்டுகை, சபையின் கூட்ட நிகழ்ச்சிக்குறிப்புகளில் பதியப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய உறுப்பினர், அக்கருமம் தொடர்பாக சபையின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிபில் பங்குபற்றுதலாகாதென்பதுடன் அத்தகைய கலந்தாராய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கையில் அல்லது அத்தகைய முடிபு செய்யப்படுகையில் அத்தகைய கூட்டத்திலிருந்து வெளியேறுதலும் வேண்டும்.

5. சபையின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் சனாதிபதியினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் ஊதியமளிக்கப்படலாமென்பதுடன் அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய அவர்களின் பணிகளை அவர்கள் நிறைவேற்றுதலும் வேண்டும்.

6. (1) அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண், தவிசாளருட்பட மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியானவர் சபையின் எல்லாக் கூட்டங்களையும் அழைத்தல் வேண்டும்.

(3) சபையின் கூட்டமொன்று பின்வருமாறு நடாத்தப்படலாம், ஒன்றில்-

(அ) ஒரு கூட்டநடப்பெண்ணாகவமைகின்ற எண்ணிக்கையினரான உறுப்பினர்கள், கூட்டத்துக்காக நியமிக்கப்பட்ட இடத்திலும், தேதியிலும், நேரத்திலும் ஒன்றுகூடியிருப்பதன் மூலம்; அல்லது

(ஆ) கட்புல-செவிப்புலத் தொடர்பாடல்மூலம்; இதனூடாக, பங்கு பற்றுகின்றவர்களும் ஒரு கூட்டநடப்பெண்ணாகவமைகின்றவர்களுமான எல்லா உறுப்பினர்களும் கூட்டம் நடைபெறும்வரை ஒவ்வொரு பங்குபற்றும் உறுப்பினரையும் சமகாலத்தில் பார்க்கவும் கேட்கவும் முடியுமானவர்களாக இருப்பர்.

(4) சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லாக் கேள்விகளும் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரினால் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில் தவிசாளர் தனது சொந்த வாக்குடன் சேர்த்து, அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராதல் வேண்டும்.

(5) தவிசாளர், சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தவிசாளர் வராதிருப்பின், சமுகமளித்துள்ள உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் சபையின் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(6) சபையின் கூட்டங்கள், அதனால் காலத்துக்குக்காலம் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் நிலைநாட்டப்பட்ட நடவடிக்கைமுறைக்கும் இசைந்தொழுக நடாத்தப்படுதல் வேண்டும்.

7. சபையின் வழக்கு நடவடிக்கை, செயல் அல்லது முடிபு எதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

8. (1) அதிகாரசபையின் இலச்சினை சபையின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் இலச்சினை சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) அதிகாரசபையின் இலச்சினை சபையின் ஓர் உறுப்பினரினதும் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினதும் முன்னிலையிலும் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி வராதிருப்பின் சபையின் எவரேனும் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலும் தவிர, ஏதேனும் சாசனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கு அத்தாட்சியாக அச்சாசனத்தில் அல்லது ஆவணத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) சபையானது, இலச்சினை எந்தச் சாசனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாசனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

## 2022ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, வேலையாட்கள் நட்டஈடு (திருத்தம்) சட்டம்

(2022ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

**வேலையாட்கள் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**
**(139ஆம் அத்தியாயமான)**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, வேலையாட்கள் நட்டஈடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இச்சட்டத்தில் இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (139ஆம் அத்தியாயமான) வேலையாட்கள் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டத்துக்கான விரிவுப் பெயர், "வேலையாட்களின் தொழிலின் போது ஊறுக்குட்படுகின்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வேலையாட்களின் தொழிலின் போது அல்லது அவர்களது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்திற்கு வருகையில் அல்லது வேலைத்தளத்திலிருந்து அவர்களது வதிவிடத்துக்கு திரும்பிச் செல்லுகையில் ஊறுக்குட்படுகின்ற" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவானது, "பகுதியளவிலான இயலாமை" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"வதிவிடம்" என்பது, வேலையாள் ஒருவரின் ஏதேனும் நிரந்தமான வதிவிடம் அல்லது வேலையாள் ஒருவர் அவரது வேலைத்தளத்துக்கு வரும் நோக்கத்துக்காக தற்காலிகமாக வசிக்கும் தங்குமனையொன்றை அல்லது வேறு ஏதேனும் இடத்தை உள்ளடக்கும்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவானது, "தொழிலின் போதுமான விபத்தொன்றின் மூலம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொழிலின் போதுமான விபத்தொன்றின் மூலம் அல்லது அவரது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்திற்கு வருகையில் அல்லது வேலைத்தளத்திலிருந்து அவரது வதிவிடத்துக்கு திரும்பிச் செல்லுகையில் இடம்பெற்ற விபத்தொன்றின் மூலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவானது, "தொழிலின் போதும் எழுந்துள்ளதாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொழிலின் போதும் எழுந்துள்ளதாக அல்லது அவரது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்துக்கு வருகையில் அல்லது வேலைத் தளத்திலிருந்து அவரது வதிவிடத்துக்குத் திரும்பிச் செல்லுகையில் இடம்பெற்றுள்ளதாக" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவானது, "தொழிலின் போது எழுகின்றதுமான விபத்தொன்றின் மூலம் குறிப்பிட்ட ஊறொன்றுக்கு நேரடியாக ஏற்றிக்கூறப்படற்பாலதானதாக இருந்தாலொழிய அல்லது அந்நோயானது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொழிலின் போது எழுகின்றதுமான விபத்தொன்றின் மூலம் அல்லது அவரது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்திற்கு வருகையில் அல்லது வேலைத்தளத்திலிருந்து அவரது வதிவிடத்துக்கு செல்லுகையில் இடம்பெற்ற விபத்தொன்றின் மூலம் குறிப்பிட்ட ஊறொன்றுக்கு நேரடியாக ஏற்றிக்கூறப்படற்பாலதானதாக இருந்தாலொழிய அல்லது அந்நோயானது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

7. பின்வரும் புதிய பிரிவானது, முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அச்சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும் :-

6 அ. ஆறாம் பிரிவில் அடங்கியுள்ளவை எது எவ்வாறிருப்பினும், நிரந்தர அல்லது பகுதியளவிலான இயலாமையின் விடத்தில், ஏதேனும் ஊறு தொடர்பான வேலையாள் ஒருவரின் தொழிலின் தன்மை, நட்டஈட்டுத் தொகையைக் கணக்கிடுவதில் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். அத்தகைய நட்டஈடு, இயைபான வைத்தியரொருவரினால் வழங்கப்பட்ட மருத்துவ அறிக்கையை அடிப்படையாகக் கொண்டதாக விருத்தல் வேண்டும்.".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் அதன் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது:-

"(ஈ) நாட்சம்பளம் பெறுகின்ற அல்லது துண்டுவீத அடிப்படையிலான வேலையாள் ஒருவரின் விடயத்தில், அத்தகைய வேலையாளின் மாதாந்த வேதனங்கள், பன்னிரெண்டால் பிரிக்கப்பட்டு மீண்டும் இருபத்தைந்தால் பிரிக்கப்பட்ட, எந்த கடைசியான பன்னிரெண்டு மாத காலப்பகுதியின் போது அத்தகைய வேலையாள் விபத்துக்கு நேர் முன்னர் சேவையில் இருந்துள்ளாரோ அந்த கடைசியான பன்னிரெண்டு மாத காலப்பகுதிக்கான நாளாந்த கொடுப்பனவுகள் அல்லது துண்டுவீதங்களின் ஈட்டுகைகளின் கூட்டுமொத்தமாகவிருத்தல் வேண்டும்.".

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11ஆம் பிரிவு அதன் (1)ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில், "கூட்டுமொத்தமாக பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கூட்டு மொத்தமாக இருபதாயிரம் ரூபாவுக்கு மேற்படாத" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு பின்வரும் உட்பிரிவுகளினால் மாற்றீடுசெய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1) இறந்த வேலையாள் ஒருவர் தொடர்பில் நட்டஈடாக 11ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் பணத்தை வைப்பிலிட்டதன் மீது, ஆணையாளர், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத தொகையொன்றிற்கு வேலையாளின் மரணச்சடங்கு செலவுகளின் உள்ளபடியான ஆகுசெலவை அதிலிருந்து கழித்தல் வேண்டும் என்பதுடன் அதனை எந்த ஆளினால் அத்தகைய செலவுகள் உறப்பட்டதோ அந்த ஆளுக்கு செலுத்துதலும் வேண்டும்.

(1அ) ஆணையாளர், நட்டஈட்டின் பகிர்ந்தளித்தலை தீர்மானிப்பதற்கு அவர் நிர்ணயிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று அவரின் முன்னர் தோன்றுமாறு இலங்கையிலுள்ள இறந்த வதிவாளரின் ஒவ்வொரு தங்கிவாழுநரையும் கோரி அத்தகைய தங்கிவாழுநர்களின் மீது

அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப்படுவதனை செய்வித்தல் வேண்டும். ஆணையாளர், அவர் அவசியமென கருதக்கூடியவாறான ஏதேனும் விசாரணையின் பின்னர், தங்கிவாழுநர் எவரும் இல்லையென திருப்திப்படின், அவர் எந்த தொழில்தருநரினால் பணம் செலுத்தப்பட்டதோ அந்த தொழில்தருநருக்கு அதன் மீதியை மீளச்செலுத்துதல் வேண்டும். ஆனால் அத்தகைய மீள்கொடுப்பனவு எதுவும், 11 ஆம் பிரிவின்கீழ் எந்தத் தேதியன்று பணம் வைப்பிலிடப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து கணக்கிடப்படும் பன்னிரெண்டு மாத காலப்பகுதியொன்று முடிவுறுவதன் பின்னர் வரை செய்யப்படுதலாகாது. ஆணையாளர் தொழில்தருநரினாலான விண்ணப்பத்தின்மீது, செய்யப்பட்ட எல்லா செலுத்தீடுகளையும் விபரமாகக் காட்டுகின்ற கொடுத்துத் தீர்த்தலொன்றை கொடுத்துதவுதல் வேண்டும்.".

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவில், "விபத்து இடம்பெற்ற இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விபத்து இடம்பெற்றதிலிருந்து இரண்டு ஆண்டுகளினுள் அல்லது இறப்பின் விடயத்தில், இறந்த தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளினுள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (2)ஆம் உட்பிரிவில், "ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) இரண்டாம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(3) தொழில்தருநர் ஒவ்வொருவரும், (1)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட அறிவித்தற் புத்தகத்துக்கு மேலதிகமாக, பதிவேட்டுப் புத்தகமொன்றைப் பேணுதல் வேண்டும்; அதில் ஏதேனும் தொழிற்சாலை அல்லது வேலைத்தளத்திலான ஏதேனும் விபத்து பற்றிய தகவல்களும் விபரங்களும் இருத்தல் வேண்டும். தொழில்தருநர் அத்தகைய பதிவேட்டுப் புத்தகத்துக்குப் பொறுப்பாகவிருப்பதற்கு பொறுப்பான ஆளொருவரையும் நியமித்தல் வேண்டும். ஆணையாளர் அத்தகைய பதிவேட்டுப் புத்தகத்துக்கு அணுக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் சோதனைக்காக அதன் பிரித்தெடுகைகளை அல்லது பிரதிகளைக் கோருதலும் வேண்டும்.".

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1)ஆம் உட்பிரிவில், "தொழிலின் போது எழுகின்றதுமான விபத்தொன்றின் விளைவாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொழிலின் போது எழுகின்றதுமான அல்லது அவரது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்துக்கு வருகையில் அல்லது வேலைத்தளத்திலிருந்து அவரது வதிவிடத்திற்கு திரும்பிச் செல்லுகையில் இடம்பெற்ற விபத்தொன்றின் விளைவாக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(5) ஆணையாளர், இறந்த வேலையாளின் மரணச் சடங்குச் செலவினமாக தொழில்தருநரினால் செலுத்தப்படற்பாலதான ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்படாத பணத்தொகையொன்றை தீர்மானிக்கலாம். அத்தகைய பணத்தொகை தொழில்தருநரினால் செலுத்தப்படற்பாலதான நட்டஈட்டுக்கு மேலதிகமாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், இயைபான தொழில்தருநரினால் ஆணையாளருக்கு அல்லது அத்தகைய வேலையாளின் கிட்டிய உறவினருக்கு வைப்பிலிடப்படுதலும் வேண்டும்.".

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:-

"23அ. இச்சட்டத்தின்கீழ், விடயத்துக்கேற்ப வேலையாள் ஒருவருக்கு அல்லது அவரது மரபுரிமையாளர்களுக்கு நட்டஈடாக வருமதியாகவுள்ள ஏதேனும் பணத் தொகையைச் செலுத்துவதற்கு ஆளாகவிருந்து அப்பணத்தொகையை உரிய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துவதற்கு தவறுகின்ற அல்லது தவணை தவறுகின்ற எவரேனும் தொழில்தருநர் விடயத்துக்கேற்ப, அவ்வேலையாளுக்கு அல்லது அவரது மரபுரிமையாளர்களுக்கு நட்டஈடாக வருமதியாகவுள்ள பணத்தொகைக்கு மேலதிகமாக பின்வரும் முறையில் கணக்கிடப்பட்ட அப்பணத்தொகையின் மீது மிகைக்கட்டணமொன்றைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்:-

(அ) நட்டஈட்டுக் கொடுப்பனவானது உரிய தேதியிலிருந்து ஒரு மாதத்தை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கு நிலுவையாகவுள்ள விடத்து, நட்டஈடாக வருமதியாகவுள்ள பணத்தொகையின் பத்து சதவீத மிகைக்கட்டணமொன்று;

(ஆ) நட்டஈட்டுக் கொடுப்பனவானது ஒரு மாதத்தை விஞ்சிய ஆனால், உரிய தேதியிலிருந்து மூன்று மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கு நிலுவையாகவுள்ளவிடத்து, நட்டஈடாக வருமதியாகவுள்ள பணத்தொகையின் பதினைந்து சதவீத மிகைக்கட்டணமொன்று;

(இ) நட்டஈட்டுக் கொடுப்பனவானது மூன்று மாதங்களை விஞ்சிய ஆனால், உரிய தேதியிலிருந்து ஆறு மாதங்களை விஞ்சாத காலப் பகுதியொன்றிற்கு நிலுவையாகவுள்ளவிடத்து, நட்டஈடாக வருமதியாகவுள்ள பணத்தொகையின் இருபது சதவீத மிகைக்கட்டணமொன்று;

(ஈ) நட்டஈட்டுக் கொடுப்பனவானது ஆறு மாதங்களை விஞ்சிய ஆனால், உரிய தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கு நிலுவையாகவுள்ளவிடத்து, நட்டஈடாக வருமதியாகவுள்ள பணத்தொகையின் இருபத்தைந்து சதவீத மிகைக் கட்டணமொன்று; அல்லது

(உ) நட்டஈட்டுக் கொடுப்பனவானது உரிய தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களை விஞ்சிய காலப்பகுதியொன்றிற்கு நிலுவையாகவுள்ளவிடத்து, நட்டஈடாக வருமதியாகவுள்ள பணத்தொகையின் முப்பது சதவீத மிகைக் கட்டணமொன்று.".

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அச்சட்டவாக்கத்தின் 27அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்:-

27அ. இச்சட்டத்தின் நோக்கத்துக்காக வேலையாட்கள் நட்டஈட்டுப் பதிவாளர் ஒருவர் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.".

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 41ஆம் பிரிவு, (2)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகை அவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறையில் அறவிடப்பட முடியாவிடின், ஆணையாளர் தவணைதவறுபவரின் அசையா ஆதனத்தை கைப்பற்றுவதன் மூலம் அல்லது விற்பனை செய்வதன் மூலம் அத்தகைய பணத்தொகையை அறவிடுவதற்கான கட்டளையொன்றை ஆக்கலாம். 27அ என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட வேலையாட்கள் நட்டஈட்டுப் பதிவாளர், எந்த இயைபான மாவட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அத்தகைய தவணைதவறுபவர் வசிக்கிறாரோ அந்த இயைபான மாவட்ட நீதிமன்றத்தின் பதிவாளரினூடாக அத்தகைய கட்டளையை நிறைவேற்றுதல் வேண்டும். நீதிமன்றமொன்றினால் வழங்கப்படும் எழுத்தாணையொன்றை நிறைவேற்றுகையில் பிசுக்காலினாலான அசைவற்ற ஆதனத்தின் கைப்பற்றுகை மற்றும் விற்பனை அத்துடன் பிசுக்காலினால் கைப்பற்றப்பட்ட அசைவற்ற ஆதனம் தொடர்பில் உரிமைக் கோரிக்கைகளைச் செய்தலும் அவை மீது தீர்ப்பளித்தலும் தொடர்பான (101ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள், ஆணையாளரின் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையை அறவிடுவதற்கான அசைவற்ற ஆதனத்தின் கைப்பற்றுகை மற்றும் விற்பனைக்கும் அத்தகைய பணத்தொகையை அறவிடுவதற்காக கைப்பற்றப்பட்ட அசைவற்ற ஆதனம் தொடர்பில் உரிமைக் கோரிக்கைகளைச் செய்தலுக்கும் அவை மீது தீர்ப்பளித்தலுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும். அத்தகைய ஏற்பாடுகளின் ஏற்புடைமை நோக்கத்துக்காக, அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட பணத்தொகை நீதிமன்றத்தினால் பதியப்பட்ட தீர்வையொன்றின் மீது வருமதியாகவுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் ஆணையாளர் தீர்ப்புக் கடன்கொடுநராகவும் அத்தகைய பணத்தொகையைச் செலுத்துவதற்கு ஆளான ஆள் தீர்ப்புக் கடனாளி ஒருவராகவும் கருதப்படுதலும் வேண்டும்.".

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44ஆம் பிரிவு, "உடன்படிக்கையானது மோசடி மூலம் அல்லது தகாத செல்வாக்கு மூலம் அல்லது வேறு முறையீனமான வழிவகைகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டதென அவர் திருப்திப்படும் வகையில் எண்பிக்கப்படின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உடன்படிக்கையானது மோசடி மூலம் அல்லது தகாத செல்வாக்கு மூலம் அல்லது வேறு முறையீனமான வழிவகைகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டதென அவர் திருப்திப்படும் வகையில் எண்பிக்கப்படின் அல்லது உடன்படிக்கை அமைப்புப் புறவிதிகளின் கீழ் வேலையாளுக்கு செலுத்தப்படற்பாலதான நட்டஈட்டுத் தொகையின் பிறழ் கணக்கிடுகை அல்லது குறைமதிப்பீடு காரணமாக" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 45ஆம் பிரிவு, அதன் (2)ஆம் உட்பிரிவில், "ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" எனும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46ஆம் பிரிவு, "நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவில், "நூறு ரூபா பெறுமதிக்கான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டாயிரம் ரூபா பெறுமதிக்கான" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 52ஆம் பிரிவு, "மேன்முறையீட்டு நீதிமன்றமானது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அரசியலமைப்பின் 154ஔ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றமானது" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 53ஆம் பிரிவு, "மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அரசியலமைப்பின் 154ஔ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றத்தினால்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 57ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவில், "தொழிலிலிருந்தும் தொழிலின் போதும் எழுகின்ற விபத்தொன்றின் விளைவாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொழிலிலிருந்தும் தொழிலின் போதும் எழுகின்ற விபத்தொன்றின் விளைவாக அல்லது அவரது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்துக்கு வருகையில் அல்லது வேலைத்தளத்திலிருந்து அவரது வதிவிடத்துக்கு திரும்பிச் செல்லுகையில் இடம்பெற்ற விபத்தொன்றின் மூலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஆம் பிரிவு, "தொழிலிலிருந்து அல்லது தொழிலின்போது எழுகின்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொழிலிலிருந்து அல்லது தொழிலின் போது அல்லது அவரது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்துக்கு வருகையில் அல்லது வேலைத்தளத்திலிருந்து அவரது வதிவிடத்துக்கு திரும்பிச் செல்லுகையில் இடம்பெற்ற விபத்தொன்றின் மூலம் எழுகின்ற" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 60அ ஆம் பிரிவு, "தொழிலிலிருந்து அல்லது தொழிலின்போது எழுகின்ற விபத்தொன்றின் மூலம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொழிலிலிருந்து அல்லது தொழிலின் போது எழுகின்ற விபத்தொன்றின் மூலம் அல்லது அவரது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்துக்கு வருகையில் அல்லது வேலைத்தளத்திலிருந்து அவரது வதிவிடத்துக்கு திரும்பிச் செல்லுகையில் இடம்பெற்ற விபத்தொன்றின் மூலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை I இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:-

[பிரிவு2]

**அட்டவணை I**

**நிரந்தர/பகுதியளவிலான இயலாமையை விளைவிப்பதாகக் கருதப்படும் ஊறுகள் பற்றி நிரல்**

| *ஊறுகள்* | *சம்பாதிக்கும் ஆற்றல் இழப்பின் சதவீதம்* |
|---|---|
| நிரந்தரமானதும் குணப்படுத்த முடியாததுமான அவயங்களின் பாரிசம் அல்லது நிரந்தரமாக படுக்கையில் இருப்பதனை விளைவாக்குகின்ற ஊறுகள் | 100 |
| நிரந்தரமாகவே வேலை செய்ய முடியாத நிலையில் முடிந்ததான நிரந்தரமான குணப்படுத்த முடியாததான உளத்திறன் இழப்பு அல்லது நிரந்தரமாகவே வேலை செய்யமுடியாத நிலையினை ஏற்படுத்தும் வேறு ஏதேனும் ஊறு | 100 |
| கண் ஊறுகள் | |
| (i) இரண்டு கண்களினதும் கண் பார்வையினை முழுமையாக இழத்தல் | 100 |
| (ii) ஒரு கண்ணின் கண் பார்வையினை முழுமையாக இழத்தல் | 80 |
| கேள்விப்புலன் ஊறுகள் | |
| (i) கேள்விப்புலன் முழுமையாக இழத்தல் | 80 |
| (ii) ஒரு காதில் கோள்விப்புலனை முழுமையாக இழத்தல் | 50 |
| பேச்சை இழத்தல் | |
| (i) பேச்சை முழுமையாக இழத்தல் | 100 |
| உணர்திறன் இழப்பு | |
| (i) மணமும் சுவையும் அறியும் புலன்கள் முழுமையாக இழத்தல் | 60 |
| (ii) மணம் அறியும் புலனை முழுமையாக இழத்தல் | 60 |
| (iii) சுவை அறியும் புலனை முழுமையாக இழத்தல | 60 |
| முன்னங்கை ஊறுகள் | |
| (i) முழங்கையோடு அல்லது முழங்கைக்கு மேலேயிருந்து முன்னங்கையினை இழத்தல் | 85 |
| (ii) முழங்கையோடு அல்லது முழங்கைக்குக் கீழேயிருந்து முன்னங்கையினை இழத்தல் | 80 |
| கை ஊறுகள் | |
| (i) இரண்டு கைகளையும் இழத்தல் | 100 |
| (ii) கையினை இழத்தல் அல்லது பெருவிரலையும் நாலு விரல்களையும் இழத்தல் | 80 |
| (iii) பெருவிரல் (இருமொழிகளும்) | 50 |
| (iv) பெருவிரல் (ஒரு மொழி) | 40 |
| (v) நாலு விரல்களையும் இழத்தல் | 80 |
| சுட்டு விரல் இழத்தல் | |
| (i) மூன்று மொழிகள் | 50 |
| (ii) இரண்டு மொழிகள் | 40 |
| (iii) ஒரு மொழி | 20 |
| நடு, மோதிர மற்றும் சின்ன விரல்களை இழத்தல் | |
| (i) மூன்று மொழிகள் | 30 |
| (ii) இரண்டு மொழிகள் | 20 |
| (iii) ஒரு மொழி | 15 |
| காலை இழத்தல் | |
| (i) முழங்காலில் அல்லது முழங்காலுக்கு மேலே | 90 |
| (ii) முழங்காலில் அல்லது முழங்காலுக்கு கீழே | 80 |
| பாதத்தின் ஊறுகள் | |
| (i) இரண்டு பாதங்களையும் இழத்தல் | 100 |
| (ii) ஒரு பாதத்தினை இழத்தல் | 90 |
| கால் விரல்களை இழத்தல் | |
| (i) கால் பெருவிரல்-இரு மொழிகளும் | 40 |

(ii) கால் பெருவிரல்-ஒரு மொழி 20

(iii) கால் பெருவிரல் தவிர்ந்த விரல்களில் ஒன்றுக்கு அதிகமானதை இழந்தால், ஒவ்வொன்றும் 20

நானாவிதமானவை

(i) பாலுறுப்புக்களை முழுமையாக இழத்தல் 75

(ii) பாலுறுப்பினை பகுதியளவில் இழத்தல் 60

(iii) முகத்தினை மோசமாக வடுப்படுத்தல் அல்லது உருவழித்தல் 90

(iv) அதிகபட்ச அளவொன்றுக்கு, முகத்தினை வடுப்படுத்தல் அல்லது உருவழித்தல் தவிர்ந்த மோசமான உடல்சார்ந்த உருவழித்தல் 60

(v) ஒரு பல்லை இழத்தல் 10

(vi) மேலே குறிப்பிடப்படாததான (உதாரணம் மூக்கு, மார்பு, காது முதலியன) ஏதேனும் உறுப்பின் அல்லது அதன் பாகத்தின் இழப்பு, மருத்துவ அலுவலர்ஒருவரால் மதிப்பீடு செய்யப்படவேண்டிய அதிகபட்சமானது.". 60

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை IV இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய அட்டவணை இடப்படுகின்றது:-

[பிரிவு 6]

**அட்டவணை IV**

**செலுத்தப்படற்பாலதான நட்டஈட்டுத்தொகை**

| ஊறுற்ற வேலையாளின் மாதாந்த வேதனங்கள் | | வேலையாளின் இறப்பு | வேலையாளின் நிரந்தர இயலாமை | வேலையாளின் தற்காலிக இயலாமைக்கு அரை மாத நட்டஈடு |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 0 | 10,000 | 1,140,000 | 1,200,000 | 5,000 |
| 10,001 | 12,500 | 1,180,000 | 1,240,000 | 5,625 |
| 12,501 | 15,000 | 1,220,000 | 1,280,000 | 6,875 |
| 15,001 | 17,500 | 1,260,000 | 1,320,000 | 8,125 |
| 17,501 | 20,000 | 1,300,000 | 1,360,000 | 9,375 |
| 20,001 | 22,500 | 1,340,000 | 1,400,000 | 10,625 |
| 22,501 | 25,000 | 1,380,000 | 1,440,000 | 11,875 |
| 25,001 | 27,500 | 1,420,000 | 1,480,000 | 13,125 |
| 27,501 | 30,000 | 1,460,000 | 1,520,000 | 14,375 |
| 30,001 | 35,000 | 1,510,000 | 1,570,000 | 16,250 |
| 35,001 | 40,000 | 1,560,000 | 1,630,000 | 18,750 |
| 40,001 | 45,000 | 1,610,000 | 1,680,000 | 21,250 |
| 45,001 | 50,000 | 1,660,000 | 1,730,000 | 23,750 |
| 50,001 | 55,000 | 1,710,000 | 1,780,000 | 26,250 |
| 55,001 | 60,000 | 1,760,000 | 1,830,000 | 28,750 |
| 60,001 | 70,000 | 1,820,000 | 1,890,000 | 32,500 |
| 70,001 | 80,000 | 1,880,000 | 1,960,000 | 37,500 |
| 80,001 | 90,000 | 1,940,000 | 2,000,000 | 42,500 |
| 90,001 | 100,000 | 2,000,000 | 2,000,000 | 47,500 |
| 100,000 | அத்துடன் அதற்கு மேல் | 2,000,000 | 2,000,000 | 47,500 |

28. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

## 2022ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, மிகைக்கட்டண வரிச் சட்டம்

[2022ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

### மிகைக்கட்டண வரியினை விதிப்பதற்கும் அதனோடு தொடர்புபட்ட அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, மிகைக்கட்டண வரிச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) இச்சட்டத்தின் அடுத்துறும் ஏற்பாடுகளிற்கு அமைய, (இதனகத்துபின்னர் “வரி” எனக் குறிப்பீடு செய்யப்படும்) மிகைக் கட்டண வரி என அழைக்கப்படவேண்டிய வரி ஒன்று:-

*(அ)* 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க கணிப்பிடப்படும் எந்த எவரேனும் தனியாளின், ஏதேனும் பங்குடைமையின் அல்லது கம்பெனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், 2020, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டுக்காக, இரண்டாயிரம் மில்லியன் ரூபாவை விஞ்சுகின்றதோ அந்த தனியாளின், பங்குடைமையின் அல்லது கம்பெனியின் அத்தகைய வரிமதிப்பீட்டாண்டுக்காக வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மீது இருபத்தைந்து சதவீதத்தில் அத்தகைய தனியாளிடமிருந்து பங்குடமையிடமிருந்து அல்லது கம்பெனியிடமிருந்து அறவிடப்படுதல் வேண்டும்:

ஆயினும் எவ்வாறாயினும், பங்குடைமை ஒன்றிலிருந்து பெறப்பட்ட பங்காளர் ஒருவரின் வருமானம் இப்பந்தியின் கீழ் தனியாள் ஒருவராக அத்தகைய பங்காளரின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தை கணிப்பீடு செய்யும்போது அந்த வரி அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மீது பங்குடைமையால் செலுத்தப்பட்டிருந்திருப்பின், கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படலாகாது; அத்துடன்

*(ஆ)* எந்தக் கம்பெனிகளினது குழுவொன்றின் ஒவ்வொரு கம்பெனியும் அந்தக் கம்பெனிகளின் குழுவிலுள்ள எல்லாத் துணைநிலைக் கம்பெனிகளினதும் கொளிக் கம்பெனிகளினதும் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் கூட்டுமொத்தம் 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க கணிக்கப்படுகையில், அத்தகைய கம்பெனிகளின் ஏதேனும் ஒன்றின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் இரண்டாயிரம் மில்லியன் ரூபாவை விஞ்சாது இருப்பது எவ்வாறிருப்பினும், அத்தகைய வரிமதிப்பீட்டாண்டுக்கான அத்தகைய ஒவ்வொரு கம்பெனியினதும் அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் பாகமாகவுள்ள துணைநிலைக் கம்பெனி ஒன்றிடமிருந்து பெறப்பட்ட பங்குலாபங்களிலிருந்து ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களை கழித்த பின்னர், அத்தகைய ஒவ்வொரு கம்பெனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மீது இருபத்தைந்து சதவீதத்திற்கு 2020, ஏப்பிறல் 1ஆந் தேதி தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டுக்கு இரண்டாயிரம் மில்லியன் ரூபாவை விஞ்சுகின்றதோ அந்த கம்பெனியிடமிருந்து அறிவிடப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், *(ஆ)* என்னும் பந்தியின் நியதிகளின்படி வரியைச் செலுத்துவதற்குக் கம்பெனியொன்று பொறுப்பானதாகவிருப்பின், அத்தகைய கம்பெனியானது *(அ)* என்னும் பந்தியின் நியதிகளின்படி வரியைச் செலுத்துவதற்கு பொறுப்பானதாதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் *(ஆ)* என்னும் பந்தியின் கீழ் வரிவிதிக் கப்படற்பாலதான வருமானத்தின் கூட்டுமொத்தத்தை கணக்கிடு கையில், இழப்புகள் அல்லது நிவர்த்தி செய்யப்படாத இழப்புகள் காரணமாக வரிவிதிக்கப்படற்பாலனதான பூச்சிய தொகையைக் கொண்டுள்ள கம்பெனிகளின் அத்தகைய குழுவின் ஏதேனும் துணைநிலைக் கம்பெனி அல்லது ஏதேனும் கொளிக் கம்பெனியை கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படலாகாது.

(3) இச்சட்டத்தின் கீழ் வரிச்செலுத்துகைக்கு பொறுப்பான ஏதேனும் கம்பெனியின் கணக்குகளைப் பேணுகின்ற நோக்கத்திற்காக, 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பன்னிரெண்டு மாதங்கள் கொண்ட மாற்றுக் காலப்பகுதியொன்றை ஆணையாளர் தலைமையதிபதி அங்கீகரித்துள்ளவிடத்து, அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட காலப்பகுதி இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக 2020, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டாக இருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் கீழ் வரி செலுத்துவதற்கு பொறுப்பாகவுள்ள ஒவ்வொரு தனியாள், பங்குடைமை, கம்பெனி மற்றும் கம்பெனியின் ஒவ்வொரு குழுவானது துணை நிலைக் கம்பெனிகள் மற்றும் கொளிக் கம்பெனிகள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு 2022ஆம் ஆண்டு ஏப்பிறல் இருபதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னரும் மற்றும் யூலை இருபதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னரும் இரண்டு சமமான தவணைக் கட்டணங்களில் வரியை செலுத்துதல் வேண்டும்.

(5) வரியானது ஆணையாளர் தலைமையதிபதியினால் சேகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் சேகரிப்புத் தேதியிலிருந்து பதினைந்து நாட்களினுள் திரட்டு நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்படுதலும் வேண்டும்.

(6) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும்,-

*(அ)* இச்சட்டத்தின் கீழ் அறிவிடப்படும் வரியானது 2020, ஏப்பிறல் 1ஆந் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பான நிதிக்கூற்றில் செலவினமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

*(ஆ)* இச்சட்டத்தின் கீழான வரிக்கொடுப்பனவுக்கு ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் வரிவிதிக்கப்படற்பாலதான வருமான கணிப்பீட்டில் கழிப்பனவு எதுவும் வழங்கப்படலாகாது;

*(இ)* இச்சட்டத்தின் கீழான வரிக்கொடுப்பனவுக்கு 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச்சட்டத்தின் கீழ் நிதிச்சேவைகளை வழங்குவதன் மீது சேர்பெறுமதி வரிக் கணிப்பீட்டில் கழிப்பனவு எதுவும் வழங்கப்படலாகாது.

(7) இப்பிரிவின் நோக்கத்திற்காக, “வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம்”,-

*(அ)* 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச்சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளதும் அத்தகைய உடன்படிக்கைக்கிணங்க தீர்மானிக்கப்பட்ட வருமான வரிக்குப் பொறுப்பாக வந்துள்ளதும் அத்தகைய உடன்படிக்கையில் தரப்பட்டுள்ள அதன் வரிவிலக்களிப்பு காலப்பகுதி முடிவடைந்த பின்னர், ஒரு கம்பெனி தொடர்பில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றின்படி அத்தகைய கம்பெனியின் வருமான வரிக்கு முன்னரான இலாபம் என்று பொருள்படும்.

*(ஆ)* பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனிகள் தவிர்ந்த, தனியாள் ஒருவர் அல்லது பங்குடைமை ஒன்று, கம்பெனி ஒன்று மற்றும் கம்பெனிகள் குழுவொன்றினது துணைநிலைக் கம்பெனிகள் மற்றும் கொளிக் கம்பெனி என்பன தொடர்பில் 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 3ஆம் பிரிவின்கீழ் அத்தகைய சொல்லமைப்புக்கு குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. (1) இச்சட்டத்தின் கீழ் வரிவிதிக்கப்படற்பாலதான ஒவ்வொரு தனியாளும், பங்குடமையும், கம்பெனியும் மற்றும் கம்பெனியின் ஒவ்வொரு குழுவினது துணைநிலைக் கம்பெனிகளும் மற்றும் கொளிக் கம்பெனியும் 2022ஆம் ஆண்டு ஏப்பிறல் இருபதாம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விபரங்களை கொண்டுள்ள குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் விபரத்திரட்டொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி-

*(அ)* வரி விபரத்திரட்டுகளுக்கான படிவத்தை;

*(ஆ)* வரி விபரத்திரட்டுடன் கோப்பிடப்படுவதற்கு தேவைப்படுத்தப்படும் வரி விபரத்திரட்டு மற்றும் இணைப்புகள் ஏதேனும் இருப்பின், அவை பற்றி கொடுத்துதவப்பட வேண்டிய தகவல் ஏதேனும் இருப்பின் அதனையும்; அத்துடன்

*(இ)* கோப்பிடும் முறையினையும்,

குறித்துரைத்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் நோக்கத்திற்காக, (1)ஆம் உட்பிரிவின் கீழ் கொடுத்துதவப்படும் வரி விபரத்திரட்டொன்று 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் “வரி விபரத்திரட்டு” ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் சுயவரிமதிப்பீடு ஒன்றை விளைவித்தலும் வேண்டும்.

4. (1) இச்சட்டத்தின் கீழ் வரியை செலுத்துவதற்கு பொறுப்பாகவுள்ள எவரேனும் தனியாள், பங்குடமை, கம்பெனி அல்லது கம்பெனிகளின் ஏதேனும் குழுவொன்றினது துணைநிலைக் கம்பெனிகள் மற்றும் கொளிக் கம்பெனி இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அத்தகைய வரியைச் செலுத்துவதற்கு தவறியுள்ளவிடத்து, அத்தகைய தனியாள், பங்குடமை, கம்பெனி அல்லது கம்பெனிகள் குழுவொன்றினது துணைநிலைக் கம்பெனிகள் மற்றும் கொளிக் கம்பெனி என்பன இச்சட்டத்தின் கீழ் வரிசெலுத்தத் தவறியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) பங்குடமையின் பெயரில் வரிமதிப்பீடொன்று செய்யப்பட வேண்டியது சட்டமுறையானதாதல் வேண்டும் என்பதுடன் அதன் மீதான தொகைகள் பங்குடமையின் சொத்துக்களிலிருந்து அல்லது எவரேனும் பங்காளரிடமிருந்து அல்லது பங்குடைமையின் எவரேனும் முகவரிடமிருந்து அறவிடப்படற்பாலதாதல் வேண்டும்.

5. (1) உட்பிரிவுகள் (2) மற்றும் (3) இற்கு அமைய, 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தியாயம் IX அத்தியாயம் X அத்தியாயம் XI அத்தியாயம் XII அத்தியாயம் XIII அத்தியாயம் XIV அத்தியாயம் XV அத்தியாயம் XVI அத்தியாயம் XVII அத்தியாயம் XVIII என்பனவற்றின் எற்பாடுகள் இச்சட்டத்திற்கான நிருவாகம், பதிவேட்டை பேணுதல் மற்றும் தகவல் சேகரிப்பு, வரி விபரத்திரட்டுகள், மதிப்பீடுகள், ஆட்சேபனைகள் மற்றும் மேன்முறையீடுகள் என்பவற்றுக்கும் அத்துடன் இச்சட்டத்தின் கீழான வரிக்கொடுப்பனவு, வட்டி, வரி அறவீடு, தண்டங்கள் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் என்பவற்றுக்கும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தகைய எவையேனும் ஏற்பாடுகளில் வருமான வரிக்கான குறிப்பீடு ஒவ்வொன்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அறவிடப்பட்டு விதிக்கப்படும் வரிக்கான குறிப்பீடு ஒன்றாக இருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் தவறுகை மதிப்பீடு, திருத்தப்பட்ட மதிப்பீடு அல்லது மேலதிக மதிப்பீடு என்பன 2024, திசெம்பர் 31ஆம் நாளின் பின்னர் தனியாளின், பங்குடமை ஒன்றின், கம்பெனி ஒன்றின் அல்லது கம்பெனிகளின் குழுவொன்றினது துணைநிலைக் கம்பெனிகளின் மற்றும் கொளிக் கம்பெனிகளின் தொடர்பில் செய்யப்படுதலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், மேலேயுள்ள காலவரையறையானது ஆட்சேபனை அல்லது மேன்முறையீடு பற்றியவொரு முடிபின் அடிப்படையின் மீது ஏதேனும் திருத்தப்பட்ட வரிமதிப்பீட்டைச் செய்வதற்கு ஏற்புடையதாதலாகாது.

6. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி-

“ஆணையாளர் தலைமையதிபதி” என்பது 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் அத்தகைய சொல்லமைப்புக்கு குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்

“கம்பெனி” என்பது, 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழான அத்தகைய சொல்லமைப்புக்கு குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ஆனால் பின்வருவன உட்பட ஏதேனும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை, சகாய நிதியத்தை, ஓய்வூதிய நிதியத்தை, ஓய்வூதிய நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தை, பணிக்கொடை அல்லது முடிவுறுத்துகை நிதியத்தை உள்ளடக்குவதில்லை:-

*(அ)* 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியம்;

*(ஆ)* 1980ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்;

*(இ)* 1969ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 12ஆம் பிரிவின் (ஓ) என்னும் பந்தியின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மின்சார சபைச் சகாய நிதியம் மற்றும் இலங்கை மின்சார சபை ஓய்வூதிய நிதியம்;

*(ஈ)* 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 90ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் சகாய நிதியம்;

*(உ)* (289ஆம் அத்தியாயமான) வர்த்தகப் பணிமனைக் கட்டளைச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட வணிகச் சேவைச் சகாயச் சங்கம்;

*(ஊ)* (397ஆம் அத்தியாயமான) இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை வங்கியினால் தாபிக்கப்பட்ட இலங்கை வங்கிச் சகாய நிதியம்;

*(எ)* 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப் பட்ட ஹற்றன் நஷனல் வங்கி வரையறுக்கப்பட்ட பகிரங்கக் கம்பெனியினால் தாபிக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி ஊழியர் சகாய நிதியம்;

*(ஏ)* 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஔ) என்னும் பந்தியின்கீழ் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கி ஓய்வூதிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்;

*(ஐ)* (422ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் 10ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி ஊழியர் ஓய்வூதிய நிதியம்;

*(ஒ)* 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஸ்ரீ லங்கா ரெலிகொம் வரையறுக்கப்பட்ட பகிரங்கக் கம்பெனியினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ லங்கா ரெலிகொம் சகாய நிதியம்;

*(ஓ)* 2006ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்;

*(ஔ)* (87ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை வங்கி ஓய்வூதிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் 2014 (போஸ்ட் 1996); அத்துடன்

*(க)* 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் பாகம் IV இன் நியதிகளின்படி தொழில் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சகாய நிதியம் அல்லது உதவுதொகை செலுத்தும் ஓய்வூதியத் திட்டம்.

“கம்பெனிகளின் குழு” என்பது, கொளிக் கம்பெனி ஒன்று மற்றும் அதனது துணைநிலைக் கம்பெனிகள் எனப் பொருள்படும்.

“கொளிக் கம்பெனி” என்பது, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் XVIIIஆம் அத்தியாயத்தின் கீழ் பதிவுசெய்யப்படாததுமான கொளிக் கம்பெனி ஒன்று தவிர்ந்த வேறு நேரடியாக அல்லது மறைமுகமாக வேறொரு கம்பெனியில் வாக்களிக்கும் உரிமையுடன் 2021, மாச்சு முப்பத்தோராம் நாளன்றுள்ளவாறு ஐம்பது சதவீதத்திற்கு மேற்பட்ட பங்குகளைச் சொந்தமாக வைத்திருக்கின்ற ஒரு கம்பெனி எனப் பொருள்படும்

“பங்குடமை” என்பது, 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழான அத்தகைய சொல்லமைப்புக்கு குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்

“வரி விபரத்திரட்டு” என்பது 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழான அத்தகைய சொல்லமைப்புக்கு குறித்தொதுக்கப்பட்ட அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்

“துணைநிலைக் கம்பெனி” என்பது, எந்தக் கம்பெனி ஒன்றில் வாக்களிக்கும் உரிமைகளுடன் 2021, மாச்சு முப்பத்தோராம் நாளன்றுள்ளவாறு அதனது பங்குகளின் ஐம்பது சதவீதத்திற்கு மேற்பட்டவை இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் XVIIIஆம் அத்தியாயத்தின் கீழ் பதிவுசெய்யப்படாதுமான கொளிக் கம்பெனி ஒன்றின் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதும் கம்பெனிகள் சட்டத்தின் XVIII அத்தியாயத்தின் கீழ் பதிவு செய்யப்படாததுமான துணைநிலைக் கம்பெனி ஒன்று தவிர நேரடியாக அல்லது நேரடியாகவல்லாது இன்னொரு கம்பெனியினால் சொந்தமாக வைத்திருக்கப்படுகின்றதோ அந்தக் கம்பெனி எனப் பொருள்படும்

“வரிமதிப்பீட்டாண்டு” என்பது, 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 20ஆம் பிரிவின் கீழான அத்தகைய சொல்லமைப்புக்கு குறித்தொதுக்கப்பட்ட அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2022ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க, கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தச்) சட்டம்

[2022ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

### கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம் (131ஆம் அத்தியாயமான)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க, கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) (131ஆம் அத்தியாயமான) கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 31ஈஈ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகளை உட்புகுத்தப்படுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

“(1அ) நியாயசபையொன்றின் ஏதேனும் கட்டளைக்கெதிராக வேலையாள் ஒருவரினால் செய்யப்பட்ட மேன்முறையீடு ஒன்றின் மீது அத்தகைய வேலையாளுக்குச் சார்பாக அரசியலமைப்பின் 154ஞ எனும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றின் இறுதிக் கட்டளை யொன்றுடன் திருப்தியுறாத தொழில்தருநரொருவர் அத்தகைய கட்டளைக்கெதிராக உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன றைச் செய்கின்றவிடத்து, அத்தகைய மேன்முறையீட்டின் விடயமாகவுள்ள கட்டளையானது-

*(அ)* வேலையாளுக்கு அத்தகைய பணத்தொகைக்குச் சமமான தொகையொன்றிலான பணத்தொகையின் செலுத்துகையை மாத்திரம் பணிக்கின்றவிடத்து;

*(ஆ)* வேலையாளுக்கு அத்தகைய பணத்தொகைக்குச் சமமான தொகையொன்றிலான பணத்தொகையின் செலுத்துகையையும் அத்தகைய

வேலையாளை பணியில் மீளவமர்த்துலையும் அத்துடன் அவரது சேவைகள் முடிவுறுத்தப்பட்ட நேரத்தில் அத்தகைய வேலையாளின் மாதச் சம்பளத்தின் அல்லது வேதனத்தின் பன்னிரெண்டு மடங்குகளின் செலுத்துகையையும் பணிக்கின்றவிடத்து,

அவர், பணத்திலான பிணைப்பொறுப்பொன்றை அத்தகைய நியாயசபையின் தலைவருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(1ஆ) உட்பிரிவு (1அ)இன் கீழ் செய்யப்பட்ட மேன்முறையீடு ஒவ்வொன்றும், (1அ) எனும் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான பிணைப்பொறுப்பொன்று தொழில்தருநரினால் உரிய முறையில் கொடுத்துதவப்பட்டுள்ளதெனப் பொருள்பட நியாயசபையின் தலைவரின் கைப்பட்ட சான்றிதழ் ஒன்றின் மூலம் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(1இ) நியாயசபை ஒவ்வொன்றினதும் தலைவர், (1அ) என்னும் உட்பிரிவின்கீழ் பிணைப்பொறுப்பாகக் கொடுத்துதவப்பட்ட எல்லாப் பணங்களையும் இலங்கையிலுள்ள ஏதேனும் அங்கீகரிக் கப்பட்ட வங்கியில் வட்டியை ஈட்டுகின்ற கணக்கொன்றில் வைப்பிலிடச் செய்தல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஈஈஈஈ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஈஈஈஈஈ எனும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

31 ஈஈஈஈ (1) பிரிவு 17(1)இன் கீழ் நடுத்தீர்ப்பாளர் ஒருவரினால் அல்லது 24ஆம் பிரிவின் கீழ் கைத்தொழில் நீதிமன்றமொன்றினால் செய்யப்பட்ட அளிப்பொன்றுக்கெதிராக ஓர் எழுத்தாணை என்ற தன்மையிலான கட்டளையொன்றை வழங்குவதற்கான விண்ணப்பமொன்று தொழில்தருநர் ஒருவரினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்டுள்ளவிடத்து, மேன்முறையீட்டு நீதிமன்றமானது, அத்தகைய விண்ணப்பத்தின் விடயமாகவுள்ள அத்தகைய அளிப்பானது வேலையாளுக்கு அத்தகைய பணத்தொகைக்குச் சமமான தொகையொன்றிலான பணத்தொகையைச் செலுத்தும்படி பணிக்கின்ற விடத்து, தொழில்தருநரினால் ஆணையாளர் தலைமையதிபதிக்கு பணத்திலான பிணைப் பொறுப்பொன்று கொடுத்துதவப்படுவதன் மேல் அத்தகைய விண்ணப்பத்தை ஏற்றுக்கவனித்தல் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி (1)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான தொகையை இலங்கையிலுள்ள ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் அவரினால் பேணப்படும் வட்டியை ஈட்டுகின்ற கணக்கொன்றில் வைப்பிலிடச் செய்தல் வேண்டும்.

(3) இவ்வுட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட விண்ணப் பம் ஒவ்வொன்றும், (1)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான பிணைப்பொறுப்பொன்று அத்தகைய தொழில்தருநரினால் உரியமுறையில் கொடுத்துதவப்பட்டுள்ளதெனப் பொருள்பட ஆணையாளர் தலைமையதிபதியின் கைப்பட்ட சான்றிதழ் ஒன்றின் மூலம் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 33அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

33அ. (1) வேலையாள் ஒருவருக்குச் சார்பாக ஆக்கப்பட்டுள்ள நியாயசபையின் கட்டளை யொன்றுக்கு, கைத்தொழில் நீதிமன்றமொன்றின் அல்லது நடுத்தீர்ப்பாளர் ஒருவரின் அளிப்பொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்றமை காரணமாக தொழில்தருநரொருவருக்கு எதிராக 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 136ஆ என்னும் பிரிவின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட ஏதேனும் எழுத்திலான முறைப்பாட்டின் மீதான நீதிவான் நீதிமன்றமொன்றின் கட்டளையொன்றுடன் திருப்தியுறாத அத்தகைய தொழில்தருநரொருவர், அத்தகைய கட்டளை தொடர்பில் அரசியலமைப் பின் 154ஞ எனும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்தின் மீளாய்வுசார் நியாயாதிக்கத்தை வேண்டி விண்ணப்பமொன்றைச் செய்கின்றவிடத்து, அத்தகைய விண்ணப்பத்தின் போது, அத்தகைய விண்ணப்பத்தின் விடயமாகவுள்ள கட்டளையானது வேலையாளுக்கு பணத்தொகை ஒன்றைச் செலுத்தும்படி பணிக்கின்றவிடத்து, அத்தகைய பணத்தொகைக்குச் சமமான தொகையில் பணத்திலான பிணைப் பொறுப்பொன்றை இயைபான நீதிவான் நீதிமன்றத்துக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளர், (1)ஆம் உட்பிரிவின் கீழ் பிணைப்பொறுப்பாகக் கொடுத்துவப்பட்ட எல்லாப் பணங்களையும் இலங்கையிலுள்ள ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் ஆணையாளர் தலைமையதிபதியினால் பேணப்படும் வட்டியை ஈட்டுகின்ற கணக்கொன்றில் வைப்பிலிடப்படுவதற்கென ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பச் செய்தல் வேண்டும்.

(3) இவ்வுட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றும் (1)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான பிணைப்பொறுப்பொன்று அத்தகைய தொழில்தருநரினால் உரியமுறையில் கொடுத்துதவப்பட்டுள்ளதெனப் பொருள்பட இயைபான நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளரின் கைப்பட்ட சான்றிதழ் ஒன்றின்மூலம் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) ஆணையாளர் தலைமையதிபதி, விடயத்துக்கேற்ப, 154ஞ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இறுதிக் கட்டளைக்கு இணங்கியொழுகி, அப்பணத்தொகை மீதான வட்டியுடன் சேர்த்து (1)ஆம் உட்பிரிவின் கீழ் கொடுத்துதவப்பட்ட பணத்தொகையை இயைபான திறத்தவருக்கு மீளளித்தல் வேண்டும்.".

5. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2022ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

[2022ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

### 1971ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னா் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1971ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 2ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (3)ஆம் உட்பிரிவில், “ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “இருபதாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (3)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரு வதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(3அ) (1) தொழில்தருநரொருவருக்கு (3)ஆம் உட்பிரிவின் கீழான தவறொன்றுக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அத்தகைய தொழில்தருநா், (2)ஆம் உட்பிரிவின் கீழ் ஆணையாளா் தலைமை யதிபதியினால் செய்யப்பட்ட முடிபுக்கு இணங்கியொழுகுவதற்கு அவா் தொடா்ச்சியாகத் தவறினால், (3)ஆம் உட்பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் குற்றப்பணத்துக்கு மேலதிகமாக, குற்றத்தீா்ப்பின் பின்னா் இணங்கியொழுகாமை தொடரப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபாவான மேலதிகக் குற்றப் பணமொன்றை வேலையாளுக்குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) இரண்டாம் உட்பிரிவின் *(உ)* என்னும் பந்தியின் கீழ் வேலையாளொருவருக்குச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகையை எவரேனும் தொழில்தருநா் செலுத்தத் தவறுகின்றவிடத்து, அத்தகைய தொகையானது, தொழில்தருநா் எந்த நீதிவான் நீதிமன்றத்தினால் குற்றத்தீா்ப்பளிக்கப்பட்டாரோ அந்த நீதிவான் நீதிமன்றத்தின் கட்டளையொன்றின் மூலம், அது அந்நீதிமன்றத்தினால் அவா் மீது விதிக்கப்பட்டவொரு குற்றப்பணம் என்றாற் போன்று, அறவிடப்படலாம் என்பதுடன் அறவிடப்பட்ட தொகை வேலையாளுக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.”.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், “ஐம்பது ரூபாவான குற்றப்பணமொன்றை” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஐந்நூறு ரூபாவான குற்றப்பணமொன்றை” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இவை அச்சட்டவாக்கத்தின் 10அ மற்றும் 10ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

10அ. (1) நீதிவான் நீதிமன்றத்தின் கட்டளையொன்றுடன் தொழில்தருநரொருவா் அதிருப்தியடையுமிடத்து, அத்தகைய தொழில்தருநா், எழுத்திலான மனுவொன்றின்மூலம் அக்கட்டளைக்கெதிராக மீளாய்விலான விண்ணப்பமொன்றை, அத்தகைய நீதிவான் நீதிமன்றம் எந்த மாகாணத்தினுள் அமைந்துள்ளதோ அந்த மாகாணத்துக்காக அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்துக்குச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பமொன்றைச் செய்கின்ற தொழில்தருநா் ஒவ்வொருவரும், அத்தகைய விண்ணப்பத்தின் விடயமாகவுள்ள கட்டளையானது ஒரு பணத்தொகையை வேலையாளுக்குச் செலுத்தும்படி பணிக்குமிடத்து, அத்தகைய பணத்தொகைக்குச் சமமானவொரு தொகையிலான காசுப் பிணைப் பொறுப்பொன்றை அத்தகைய நீதிவான் நீதிமன்றத்துக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றும், (2)ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறான பிணைப்பொறுப்பு அத்தகைய தொழில்தருநரினால் முறையாகக் கொடுத்துதவப்பட்டுள்ளதென்ற பயன்பட இயைபான நீதிவான் நீதிமன்றப் பதிவாளரின் கைப்பட்ட சான்றிதழொன்றினால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) நீதிவான் நீதிமன்றப் பதிவாளா், (2)ஆம் உட்பிரிவின் கீழ் பிணைப்பொறுப்பாகக் கொடுத்துதவப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும், இலங்கையிலுள்ள ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில், ஆணையாளா் தலைமையதிபதியினாற் பேணப்படும் வட்டி ஈட்டுவதுமான கணக்கொன்றில் வைப்பிலிடப்படுவதற்கு ஆணையாளா் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

10ஆ. (1) பிரிவு 6 அல்லது 6அ இன் கீழ் ஆணையாளா் தலைமையதிபதியினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுடன் தொழில்தருநா் ஒருவா் அதிருப்தியடைகின்றவிடத்து, அத்தகைய தொழில்தருநா் எழுத்தாணை என்ற தன்மையிலான கட்டளையொன்றின் வழங்குகைக்காக அத்தகைய கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்யலாம்.

(2) எழுத்தாணை என்ற தன்மையிலான கட்டளையொன்றின் வழங்குகைக்காக (1)ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பமொன்றைச் செய்கின்ற ஒவ்வொரு தொழில்தருநரும், அத்தகைய விண்ணப்பத்தின் விடயமாகவுள்ள கட்டளை பின்வருமாறு பணிக்குமிடத்து, காசுப் பிணைப் பொறுப்பொன்றை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்:-

*(அ)* நட்டஈடாக ஒரு பணத்தொகையைச் செலுத்துதலையும் மீளத்தொழிலுக்கமா்த்துதலையும், அத்தகைய கட்டளைத் தேதியிலிருந்து அத்தகைய வேலையாள் மீளத் தொழிலுக்கமா்த்தப்பட வேண்டிய தேதி வரை கணக்கிடப்படவுள்ள சம்பளமாக அல்லது வேதனங்களாக ஒரு பணத் தொகையைச் செலுத்துதலையும் மற்றும் மீளத் தொழிலுக்கமா்த்துவதற்காக அத்தகைய வேலையாளின் மாதாந்தச் சம்பளத்தின் அல்லது வேதனங்களின் பன்னிரெண்டு மடங்குகளினதானவொரு தொகையைச் செலுத்துதலையும்; அத்துடன்

*(ஆ)* நட்டஈடாக வேலையாளுக்குச் செலுத்தப்பட வேண்டியவொரு பணத்தொகைக்குச் சமமான தொகையிலான அத்தகைய பணத்தொகையை மட்டுமே செலுத்துதலையும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட எழுத்தாணை என்ற தன்மையிலான கட்டளையொன்றின் வழங்குகைக்கான ஒவ்வொரு விண்ணப்பமும், (2)ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறான பிணைப்பொறுப்பு அத்தகைய தொழில்தருநரினால் முறையாகக் கொடுத்துதவப்பட்டுள்ளதென்ற பயன்பட ஆணையாளர் தலைமையதிபதியின் கைப்பட்ட சான்றிதழொன்றினால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) ஆணையாளர் தலைமையதிபதி, (2)ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறான பணத்தொகையானது, இலங்கையிலுள்ள ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில், ஆணையாளர் தலைமையதிபதியினாற் பேணப்படும் வட்டி ஈட்டுவதுமான கணக்கொன்றில் வைப்பிலிடப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(5) ஆணையாளர் தலைமையதிபதி, (2)ஆம் உட்பிரிவின் கீழ் கொடுத்துதவப்பட்ட பணத்தொகையை, விடயத்துக்கேற்ப, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அல்லது உயர் நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் இறுதித் தீர்மானத்தின் நியதிகளின்படி இயைபான திறத்தவருக்கு அத்தகைய பணத்தொகையின் மீதான வட்டியுடன் சேர்த்து மீளளித்தல் வேண்டும்."

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவு, "ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருபதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

6. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2022ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, அற்றோணித் தத்துவம் (திருத்தச்) சட்டம்

[2022ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

### அற்றோணித் தத்துவக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம் (அத்தியாயம் 122)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, அற்றோணித் தத்துவம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (122ஆம் அத்தியாயமான) அற்றோணித் தத்துவக் கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "அற்றோணித் தத்துவம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

"அற்றோணித் தத்துவம்" என்பது ஆளொருவரின் சார்பாக சட்டத்தரணியொருவராகத் தோன்றுகின்ற நோக்கத்திற்கென சட்டத்தரணியொருவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் எழுத்திலான தத்துவம் அல்லது அதிகாரம் தவிர்ந்த, ஆளொருவரினால் ஏதேனும் வேலையைப் புரிவதற்கு, ஏதேனும் செயலைச் செய்வதற்கு அல்லது ஏதேனும் வியாபாரத்தை அல்லது தொழிலைக் கொண்டு நடாத்துவதற்குத் தன்னைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக இன்னோர் ஆளுக்கு வழங்கப்பட்டதும்; அத்துடன்-

*(அ)* அது இலங்கையில் நிறைவேற்றப்பட்டிருப்பின், இரண்டு சாட்சிகளுக்கு முன்னிலையில் நிறைவேற்றப்பட்டதும் அத்துடன் பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் அல்லது

*(ஆ)* அது இலங்கைக்கு வெளியே நிறைவேற்றப்பட்டிருப்பின் இரண்டு சாட்சிகளினதும் மற்றும் 1981ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, காவற்தூதுப் பணிகள் சட்டத்தின் கருத்திற்குட்பட்ட தூதுவரின், உயர்ஸ்தானிகரின் அல்லது தூதாண்மை அலுவலரின் காவற்தூதுவரின் அல்லது அந்நாட்டின் சட்டத்திற்கிணங்க அத்தகைய அற்றோணித் தத்துவத்தை அத்தாட்சிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றவரான ஆளொருவரின் முன்னிலையில் நிறைவேற்றப்பட்டதுமான;

ஏதேனும் எழுத்திலான தத்துவம் அல்லது அதிகாரம் எனப் பொருள்படும்.

(2) "பதிவாளர் தலைமையதிபதி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

"பதிவாளர் தலைமையதிபதி" என்பது உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி, சிரேஷ்ட பிரதிப் பதிவாளர் தலைமையதிபதி, பிரதிப் பதிவாளர் தலைமையதிபதி, உதவிப் பதிவாளர் தலைமையதிபதி மற்றும் பதிவாளர் தலைமையதிபதி, உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி, சிரேஷ்ட பிரதிப் பதிவாளர் தலைமையதிபதி, பிரதிப் பதிவாளர் தலைமையதிபதி அல்லது உதவிப் பதிவாளர் தலைமையதிபதியின் கடமைகளை அப்போதைக்கு சட்டரீதியாக நிறைவேற்றுகின்ற எவரேனும் ஆளையும் உள்ளடக்குதல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

(1) *(அ)* இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் நிறைவேற்றப்படும் அற்றோணித் தத்துவம் ஒவ்வொன்றும் பதிவாளர் தலைமையதிபதியினால் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

*(ஆ)* (இதனகத்துப்பின்னர் "அற்றோணி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அற்றோணித் தத்துவத்தை வைத்திருப்பவர் ஒவ்வொருவரும்-

(i) உண்மைப் பிரதியொன்றாகவிருப்பதென பிரசித்த நொத்தாரிசினால் சான்றுப்படுத்தப்பட்ட அதன் பிரதியொன்றுடனும்; அத்துடன்

(ii) இதற்கான Iஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு ஆக்கப்பட்ட சத்தியக் கடதாசி ஒன்றுடனும்

சேர்த்தும் அற்றோணித் தத்துவம் நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து அது இலங்கையில் நிறைவேற்றப்பட்டிருப்பின் ஒரு மாதத்தினுள்ளும் மற்றும் இலங்கைக்கு வெளியே நிறைவேற்றப்பட்டிருப்பின் மூன்று மாதங்களினுள்ளும் பதிவு செய்வதற்கான தனது அற்றோணித் தத்துவத்தைப் பதிவாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) பதிவாளர் தலைமையதிபதி, (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அற்றோணித் தத்துவம் சரியானது எனத் திருப்திப்பட்டதன் மேல், அற்றோணித் தத்துவத்தை பதிவுசெய்து அத்தகைய சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை கோப்பிடுதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய பதிவு எந்தத் தொகுதியிலும் இருமடித்தாளிலும் பதியப்பட்டுள்ளதோ அந்தத் தொகுதிக்கும் இரு மடித்தாளுக்குமான குறிப்பீடு ஒன்றுடன் சேர்த்து, அதன் பதிவிலக்கத்தையும் திகதியையும் அத்தகைய சான்றுப்படுத்தப்பட்ட பிரதி மற்றும் மூல அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் மேல் புறக்குறிப்பிடுதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய மூல அற்றோணித் தத்துவத்தைச் சமர்ப்பிக்கின்ற ஆளுக்கு அதனை திருப்பிக்கொடுத்தலும் வேண்டும்.

(3) அத்தகைய பதிவு இதற்கான IIஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் வைத்திருக்கப்படுவதும் பதிவாளர் தலைமையதிபதியால் பேணப்பட வேண்டியதுமான புத்தகமொன்றில் பதியப்படுதல் வேண்டும்.”.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவினை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 3அ, 3ஆ, 3இ மற்றும் 3ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

3அ. (1) (70ஆம் அத்தியாயமான) மோசடிகள் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் நோக்கெல்லைக்குள் வருகின்ற கொடுக்கல்வாங்கல் ஒன்றின் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுவதற்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் ஒன்று, விடயத்திற்கேற்ப (2)ஆம் அல்லது (3)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இல் குறித்துரைக்கப்பட்ட அற்றோணித் தத்துவம் ஒன்று இலங்கையில் நிறைவேற்றப்பட்டிருப்பின், அது-

*(அ)* (107ஆம் அத்தியாயமான) நொத்தாரிசுமார் கட்டளைச் சட்டத்திற்கும் மற்றும் மோசடிகள் தடுப்புக் கட்டளைச் சட்டத்திற்கும் இணங்க பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால் முறையாக அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்;

*(ஆ)* காணியின் அல்லது காணிச் சிறுகூறின் விடயத்தில் எல்லைகள் மற்றும் வரையறைகளுடன் விஸ்தீரத்துடன், விடயத்திற்கேற்ப காணியின் அல்லது காணிச் சிறுகூறின் விபரணம் ஒன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்;

*(இ)* கூட்டாட்சி ஆதனமொன்றின் விடயத்தில் கூட்டாட்சியாதன சிறுகூறு அதன் எந்த வேறு அம்சங்களினால் அடையாளங் காணப்பட முடியுமாக இருக்குமோ அந்த வேறு அம்சங்களினால் கூட்டாட்சியாதன சிறுகூறின் விபரணம் ஒன்றையும் கூட்டாசியாதன சிறுகூறு இணங்காணப்பட முடியாதுள்ளவிடத்து முழுக்காணி பற்றிய விபரணமொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்;

*(ஈ)* காணியொன்றின் முன்பதிவுடன் அல்லது காணி சிறுகூறின் அல்லது கூட்டாட்சியாதன சிறுகூறின் விடயத்தில், கொடுக்கல்வாங்கல் தொடர்பான காணி அல்லது காணிச் சிறுகூறு அல்லது கூட்டாட்சியாதன சிறுகூறு எந்தத் தொகுதியில் அல்லது இருமடித்தாளில் பதிவு செய்யப்பட்டிருக்கிறதோ அந்த தொகுதி மற்றும் இருமடித்தாளின் முற்பதிவுக்கான குறிப்பீடு ஒன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்;

*(உ)* அளிப்பவரின் கையொப்பத்திற்கு மேலதிகமாக, அளிப்பவரின் இடது அல்லது வலது பெருவிரல் அடையாளத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவரின் இரு பெருவிரல்களும் இல்லாதவிடத்து, ஒன்றில் அளிப்பவரின் இடது அல்லது வலது கையின் வேறு ஏதேனும் விரல் அடை யாளத்தையும், அத்துடன் அவரின் இரு கைகளும் இல்லாதவிடத்து, அவர் பிரசித்த நொத்தாரிசு மற்றும் சாட்சிகளின் முன்னிலையில் அவரது கால்விரல் அடையாளத்தை இடுதல் வேண்டும்;

*(ஊ)* அத்தகைய அற்றோணித் தத்துவத்தை அளிப்பவரினதும், அதன் அற்றோணியினதும் கடவுச் சீட்டின், தேசிய அடையாள அட்டையின் அல்லது சாரதி உரிமத்தின் சுயவிபரப்பக்கத்தினது பிரதியும், அத்துடன் நொத்தாரிசினால் சான்றுப்படுத்தப்பட்ட அத்தகைய அற்றோணித் தத்துவத்தினது பிரதியும் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1)இல் குறித்துரைக்கப்பட்ட அற்றோணித் தத்துவம் ஒன்று இலங்கைக்கு வெளியே நிறைவேற்றப்பட்டிருப்பின், அது-

*(அ)* இச்சட்டத்தின் 2ஆம் உட்பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் முன்னர் உரியமுறையில் நிறைவேற்றப்படல் வேண்டும்

*(ஆ)* காணி ஒன்றினது அல்லது காணிச் சிறுகூறின் விடயத்தில் எல்லைகள் மற்றும் வரையறைகள் மற்றும் விஸ்தீரணம் என்பவற்றுடன் விடயத்திற்கேற்ப அக் காணியின் அல்லது காணிச் சிறுகூறின் விபரணம் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்

*(இ)* கூட்டாட்சியாதனம் அதன் எந்த வேறு அம்சங்களினால் அடையாளங் காணப்பட முடியுமோ அந்த வேறு அம்சங்களுடன் சேர்த்து கூட்டாட்சியாதன சிறுகூறின் விபரணம் ஒன்றையும் மற்றும் கூட்டாட்சியாதனம் ஒன்றின் விடயத்தில் கூட்டாட்சியாதன சிறுகூறு அடையாளங்காணப்பட முடியாதுள்ளவிடத்து முழுக்காணி பற்றிய விபரணம் ஒன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்

*(ஈ)* காணி ஒன்றின் அல்லது காணிச் சிறுகூறொன்றை அல்லது கூட்டாட்சியாதன சிறுகூறொன்றின் விடயத்தில், கொடுக்கல்வாங்கல் தொடர்பான காணி அல்லது காணிச் சிறுகூறு அல்லது கூட்டாட்சியாதனம் எந்தத் தொகுதி மற்றும் இருமடித்தாளில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றதோ அந்தத் தொகுதி மற்றும் இரு மடித்தாளின் முன்பதிவுக்கான குறிப்பீடொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்

*(உ)* அளிப்பவரினால் கையொப்பமிடப்பட்ட அத்தகைய அளிப்பவரின் கடவுச்சீட்டின் சுயவிபரப்பக்கத்தின் பிரதியொன்றுடனும் மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட்ட அத்தகைய அற்றோணித் தத்துவப்பத்திரத்தின், அற்றோணியின் கடவுச் சீட்டின், தேசிய அடையாள அட்டையின் அல்லது சாரதி உரிமத்தின் சுயவிபரப்பக்கத்தின் பிரதி ஒன்றுடனும் சேர்த்து

அனுப்பப்படுதல் வேண்டும்.

3ஆ. (1) இச்சட்டத்தின் 3அ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல் தொடர்பில், நொத்தாரிசுமார் கட்டளைச் சட்டத்தின் நிதியதிகளின்படி உறுதி அல்லது சாதனம் ஒன்றை அத்தாட்சிப்படுகின்ற பிரசித்த நொத்தாரிசு ஒவ்வொருவரும்-

*(அ)* பதிவாளர் தலைமையதிபதி திணைக்களத்திலுள்ள இயைபான தொகுதிகளையும் இருமடித்தாள்களையும் பரிசோதித்தல் வேண்டும்;

*(ஆ)* அற்றோணித் தத்துவப்பத்திரம் கைமீட்கப்படவில்லை அல்லது இல்லாதொழிக்கப்படவில்லை எனத் திருப்திப்படுதல் வேண்டும் என்பதுடன், அவரது அத்தாட்சிப்படுத்தலில் அத்தகைய நிகழ்வைக் குறிப்பிடுதலும் வேண்டும்; அத்துடன்

*(இ)* விடயத்திற்கேற்ப அளிப்பவரின் மற்றும் அற்றோணியின் தேசிய அடையாள அட்டடையின் அல்லது சாரதி உரிமத்தின் அல்லது கடவுச்சீட்டின் சுயவிபரப்பக்கத்தின் பிரதிகளையும் அத்துடன் அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் பிரதி ஒன்றையும் வைத்திருத்தல் வேண்டும்.

(2) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, அத்தகைய அற்றோணித்தத்துவப் பத்திரம் கைமீட்கப்பட்டுள்ளதா அல்லது இல்லாதொழிக்கப்பட்டுள்ளதா என்பதைத் தீர்மானிப்பதற்காக, பதிவாளர் தலைமையதிபதி திணைக்களத்தின் இயைபான தொகுதிகள் மற்றும் இருமடித்தாள்களை பரிசோதிப்பது அத்தகைய உறுதி அல்லது சாசனத்தை அத்தாட்சிப்படுத்துகின்ற பிரசித்த நொத்தாரிசுக்குப் போதுமானதாக இருத்தல் வேண்டும் என வெளிப்படுத்தப்படுகின்றது.

3இ. அரச நிறுவனம் ஒன்றினால் எழுதி நிறைவேற்றப்படும் அற்றோணித் தத்துவம் தவிர, வேறு ஒரு அற்றோணித்தத்துவம் அத்தகைய அற்றோணித் தத்துவத்தில் செல்லுபடியாகும் காலப்பகுதி அதில் குறித்துரைக்கப்பட்டிருந்தாலொழிய அல்லது 4ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய அற்றோணித் தத்துவம் கைமீட்கப்பட்டாலொழிய அல்லது இல்லாதாக்கப்பட்டாலொழிய அதன் எழுதி நிறைவேற்றல் தேதியிலிருந்து ஐந்து வருடகாலப்பகுதி ஒன்றிற்கு மட்டும் செல்லுபடியாதல் வேண்டும்.

3ஈ. அரச நிறுவனம் ஒன்று தவிர வேறு ஆளொருவர் கைமீட்கப்படமுடியாத அற்றோணித் தத்துவம் ஒன்றை நிறைவேற்றலாகாது.".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

4. (1) ஏதேனும் அற்றோணித் தத்துவத்தை அளிப்பவர் அற்றோணித் தத்துவத்தை கைமீட்பதற்கு அல்லது இல்லாதொழிப்பதற்கு விரும்புகின்றவிடத்து அல்லது ஏதேனும் அற்றோணித் தத்துவத்தின் அற்றோணி அத்தகைய அற்றோணித் தத்துவத்தின் கீழ் செயற்படவிரும்பாதவிடத்து, விடயத்திற்கேற்ப, அத்தகைய அளிப்பவர் அல்லது அற்றோணி-

(*அ*) அத்தகைய உட்கருத்தை மற்றைய திறத்தவருக்கு அறிவித்தல் வேண்டும்;

(*ஆ*) விடயத்திற்கேற்ப அற்றோணித் தத்துவத்தினைக் கைமீட்கின்ற அல்லது இல்லாதொழிக்கின்ற அவரது உட்கருத்தை வெளிப்படுத்துகின்றதும் அல்லது அந்த அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் கீழ் தொழிற்படவிரும்பவில்லை என்ற அவரது உட்கருத்தை வெளிப்படுத்துகின்றதும் நொத்தாரிசினால் எழுதி நிறைவேற்றப்படுகின்றதுமான ஓர் ஆவணத்தை எழுதி நிறைவேற்றுதல் வேண்டும்; அத்துடன்

(*இ*) பந்தி *(ஆ)*வில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஆவணத்தை பதிவாளர் தலைமையதிபதிக்கு, அத்தகைய அற்றோணித் தத்துவப் பத்திரம் எந்தத் தொகுதியிலும் இருமடித்தாளிலும் பதிவு செய்யப்பட்டதோ அந்தத் தொகுதிக்கும் இருமடித்தாளிற்குமான குறுக்கு குறிப்பீட்டுடன் இயைபான தொகுதியிலும் இரு மடித்தாளிலும் அத்தகைய ஆவணத்தைப் பதிவுசெய்வதற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) *(அ)* ஓராம் உட்பிரிவின் *(ஆ)* என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஆவணம் நிறைவேற்றப்பட்டு பதிவாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்படும் வரை, ஏதேனும் அற்றோணித் தத்துவப் பத்திரத்தை அளிப்பவர் உடனடியாகப் பயனுறும் வகையில் அவரது அற்றோணித தத்துவப் பத்திரத்தை கைமீட்பதற்கு அல்லது இல்லாதொழிப்பதற்குத் தேவைப்படுத்தியிருப்பின், அளிப்பவர் அல்லது அவரது சட்டத்தரணி IIIஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலுள்ள இணைப்பிரதியிலான அறிவிப்பு ஒன்றின் மூலம் பதிவாளர் தலைமையதிபதிக்கு கைமீட்டல் அல்லது இல்லாதொழித்தல் பற்றிய அவரது உட்கருத்தை அறிவிக்கலாம்:

ஆயினும் எவ்வாறாயினும் அத்தகைய அறிவிப்பு, அறிவிப்புத் தேதியிலிருந்து மூன்று மாதங்கள் காலப்பகுதி ஒன்றிற்கு மட்டும் செல்லுபடியான தாதல் வேண்டும்;

*(ஆ)* பந்தி *(அ)* இல் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய அறிவிப்பு ஒன்றைப் பெற்றுக் கொண்டதன் மேல், பதிவாளர் தலைமையதிபதி இயைபான தொகுதிகளிலும் இருமடித்தாள்களிலும் அத்தகைய கைமீட்பு அல்லது இல்லாதொழித்தல் பற்றிய உட்கருத்து, பற்றி புறக்குறிப்பிடுதல் ஒன்றை செய்தல் வேண்டும்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவானது "அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட என்னும் சொற்களுக்குப் பதிலாக, IIஆம் "அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை இத்தால் நீக்கப்படுகின்றது என்பதுடன் அதற்குப் பதிலாக பின்வரும் அட்டவணைகள் இடப்படுகின்றன:-

[பிரிவு 3(1)]

## அட்டவணை I

................... ஆம் இலக்க முகவரியை சேர்ந்தவரும் (......................... என்னும் இலக்கத்தைக் கொண்ட அடையாள அட்டையை வைத்திருப்பவருமான) ........................... ஆகிய நான் ...................................... ஆக இருப்பதனால் இத்தால் பின்வருமாறு நேர்மையுடனும் பயபக்தியுடனும் உண்மையாகவும் வெளிப்படுத்துகின்றேன் மற்றும் உறுதி செய்கின்றேன/சத்தியம் செய்து கூறுகின்றேன்.

(1) மேலுள்ள பெயரில் உறுதியளித்தவர்/ உறுதிப்படுத்தியவர் நானாவேன்.

(2) .................................. ஆம் இலக்க முகவரியை சேர்ந்தவரும் ................................... என்னும் இலக்கத்தைக் கொண்ட அடையாள அட்டையை வைத்திருப்பவருமான) ஆகிய ................................... இதன்கண் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திறனாக அவரது/அவளது அற்றோணியாக என்னை நியமிக்கின்ற பிரசித்த நொத்தாரிசு .................................. என்பவரால் ........................................ ஆந் தேதியிடப்பட்ட ......................... ஆம் இலக்க கொண்ட அற்றோணித் தத்துவத்தை எழுதி, நிறைவேற்றியுள்ளார் என நான் வெளிப்படுத்தி உறுதிசெய்கின்றேன்.

(3) சொல்லப்பட்ட அற்றோணித் தத்துவமானது உண்மையானதும் மற்றும் இன்னும் வலுவிலுள்ளதுமாகும் என்பதுடன் அதனை அளித்தவர் உயிருடனுள்ளார் எனவும் நான் நம்புகிறேன்.

...........................
அற்றோணி

மேற்போந்த சத்தியக்கடதாசி மேலே பெயர்குறிப்பிட்டவருக்கு வாசித்துக்காட்டபட்டு விளங்கப்படுத்தப்பட்டதுடன் அதன் உள்ளீடுகளைப் புரிந்து கொண்டு ........ ஆம் ஆண்டு ........................ ஆம் மாதம் .................... ஆம் நாளாகிய இன்று கையொப்பமிட்டு உறுதிப்படுத்தியுள்ளார்/சத்தியஞ் செய்துள்ளார்.

..........................................
எனது முன்னிலையில்

.........................................................................
சமாதான நீதிவான் / சத்திய பிரமாண ஆணையாளர்

[பிரிவு 3(3) மற்றும் 5]

## அட்டவணை II

| | |
|---|---|
| தொடர் இல. | |
| பதிவுத் தேதி | |
| அளிப்பவரின் பெயரும் முகவரியும் | |
| அற்றேணியின் பெயரும், முகவரியும் | |
| அற்றோணி தத்துவத்தின் தேதி | |
| பதிவு செய்வதற்காக எவ்வாளினால் அற்றோணித் தத்துவம் சமர்ப்பிக்கப்பட்டது. | |
| அற்றோணித் தத்துவம் பதிவு செய்யப்பட்ட தொகுதியும் இருமடித்தாளும். | |
| கைமீட்டல் அல்லது இல்லாதொழித்தல் பற்றி நொத்தாரிசு முறையில் நிறைவேற்றப்பட்ட ஆவணத்தின் திகதியும் இலக்கமும். | |
| கைமீட்டல் அல்லது இல்லாதொழித்தல் பற்றிய நொத்தாரிசு முறையில் நிறைவேற்றப்பட்ட ஆவணம் எவ்வாளினால் வழங்கப்பட்டது. | |
| கைமீட்டல் அல்லது இல்லாதொழித்தல் பற்றிய நொத்தாரிசு முறையில் எழுதி நிறைவேற்றப்பட்ட ஆவணம் பதியப்பட்டிருக்கும் தொகுதியும் இரு மடித்தாளும். | |

[பிரிவு 4(2)]

## அட்டவணை III

பதிவாளர் தலைமையதி
பதிபதிவாளர் தலைமையதிபதி திணைக்களம்
...................................

.................. ஆம் முகவரியைச் சேர்ந்த (அளிப்பவரின் பெயர்)........... ........................ ஆகிய நான் இவ்வறிவித்தலின் தேதியிலிருந்து மூன்றுமாதங்களினும் பதிவுசெய்யப்படுவதற்கு அற்றோணித் தத்துவத்தின் பதிவேட்டின் ........... ஆம் தொகுதியையும் ................. ஆம் இருமடித்தாளையும் கொண்ட ........................ ஆம் இலக்க நாளேட்டின் கீழ் .................................. இல் பதிவுசெய்யப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழிக் கின்ற சாதனத்தை உங்களிடம் சமர்ப்பிப்பதற்கு உட்கருதுகின்றேன் என அற்றோணித் தத்துவக் கட்டளைச் சட்டத்தின்கீழ் கவனித்திற் கொள்ளவும்.

.................. ஆண்டின் ..............
மாதத்தின் .................... நாளன்று
................................... இல

............................................................

அளிப்பவரினது அல்லது அளிப்பவரின்
சட்டத்தரணியினது கையொப்பம்

.................... முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

1. கையொப்பம்
   முழுப்பெயர்
   தே.அ.அ
   முகவரி

2. கையொப்பம்
   முழுப்பெயர்
   தே.அ.அ
   முகவரி

8. (1) முதன்மைச்சட்டவாக்கதிலும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளிலும் முரணாக எது எவ்வாறிருப்பினும் -

*(அ)* முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்படாததும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதற்கு முன்னா் கைமீட்கப்படாதுள்ள அல்லது இல்லாதொழிக்கப்படாதுள்ளதுமானவையும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னா் நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவம் ஒவ்வொன்றும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஆறுமாத காலப்பகுதி ஒன்றினுள் பதிவாளா் தலைமையதிபதிக்கு பதிவு செய்வதற்காக சமா்ப்பிக்கப்படுதல் வேண்டும்;

*(ஆ)* முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதற்கு முன்னா் கைமீட்கப்படாதுள்ள அல்லது இல்லாதொழிக்கப்படாதுள்ளதுமான இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னா் எழுதி நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவம் ஒவ்வொன்றும் இச்சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் கைமீட்கப்படும் அல்லது இல்லாதொழிக்கப்படும் வரை தொடர்ந்து செல்லுபடியானதாதல் வேண்டும் என்பதுடன் பயனுறுதலும் வேண்டும்;

*(இ)* இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னா் எழுதி நிறைவேற்றப்பட்டதும் பதிவாளா் தலைமையதிபதிக்கு பதிவு செய்யவதற்காக சமா்ப்பிக்கப்படவுள்ளதும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு முடிவுறாதிருக்கின்றதுமான அற்றோணித் தத்துவம் ஒவ்வொன்றும் பதிவளாா் தலைமையதிபதினால் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(2) அப்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் பதிவு செய்வதற்கு சமா்ப்பிக்கப்படாத (1)ஆம் உட்பிரிவின் *(அ)* என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அற்றோணித் தத்துவம் ஒவ்வொன்றும் அக்காலப்பகுதி முடிவுறாத தேதியிலிருந்து பயனுறும் வகையில் வெற்றும் வறிதானதுமாகக் கருதப்படுதல் வேண்டும்.

9. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2022ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டம்

[2022ஆம் ஆண்டு ஒற்றோபா் மாதம் 25ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

### மோசடிகளைத் தடுத்தல் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம் (70ஆம் அத்தியாயம்)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னா் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (70ஆம் அத்தியாயமான) மோசடிகளைத் தடுத்தல் கட்டளைச்சட்டத்தின் 2ஆம் பிரிவானது, “அது எழுத்திலிருந்தாலொழியவும்” என்பதிலிருந்து அப்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

“*(அ)* இயைபான உறுதி அல்லது சாதனம் எழுத்திலிருந்தாலொழியவும், ஒவ்வோா் உறுதிமுடிப்பவரினாலும் கையொப்பமிடப்பட்டாலொழியவும், அத்துடன் ஒரேநேரத்தில் சமுகமளிக்கும் இரு சாட்சிகளின் முன்னிலையில் பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டா லொழியவும்; அத்துடன்

*(ஆ)* அத்தகைய ஒவ்வோா் உறுதிமுடிப்பவரினதும் இடதுகை அல்லது வலதுகைப் பெருவிரலடையாளம் அல்லது அத்தகைய உறுதிமுடிப்பவரின் இரு கைப்பெருவிரல்களும் இல்லாதிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, வேறேதேனும் கைவிரலின் அல்லது கால்விரலின் அடையாளம் இயைபான உறுதியின் அல்லது சாதனத்தின் மூலப்பிரதியில், இணைப்பிரதியில் மற்றும் நொத்தாரிசுவின் பிரதியில் கையொப்பத்துக்கு மேல் அல்லது அதற்கருகில் இடப்பட்டிருந்தாலொழியவும்,

சட்டத்தில் வலுவுடையதாகவோ அல்லது பயனுடையதாகவோ இருத்தலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய எவரேனும் உறுதிமுடிப்பவரின் கையொப் பத்தை அல்லது கைப்பெருவிரல் அடையா ளத்தை ஏதேனும் காரணத்துக்காகப் பெற்றுக் கொள்ளமுடியாதிருக்கும் பட்சத்தில், பிரசித்த நொத்தாரிசு, அத்தாட்சிப்படுத்துகையில் அத்தகைய காரணத்தைக் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுதி முடிப்பவர் விடயத்துக்கேற்ப, வேறேதேனும் கைவிரலடையாளத்தை அல்லது கால்விரல் அடையாளத்தை இடுதலும் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை (1)ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(2) "இதனகத்துப்பின்னர் குறிப்பிடப்பட்ட முறையில் நிறைவேற்றப்பட்டாலொழியவும் செல்லுபடியாதலாகாது;" என்பதிலிருந்து அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1)ஆம் உட்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக, "விடயத்துக்கேற்ப, (2)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய நிறைவேற்றப்பட்டாலொழியவும் செல்லுபடியாதலாகாது." என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2) மரணசாதனக்காரர், ஒரேநேரத்தில் சமுகமாயிருக்க வேண்டிய ஒரு பிரசித்த நொத்தாரிசுவினதும் இரு சாட்சிகளினதும் முன்னிலையில், (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட மரணசாதனத்தின், இறுதி விருப்பாவணத்தின் அல்லது விருப்பாவணப் பின்னிணைப்பின் அடியில் அல்லது முடிவில் -

*(அ)* கையொப்பமிடுதல் வேண்டும்; அத்துடன்

*(ஆ)* அவரது இடதுகை அல்லது வலதுகைப் பெரு விரலடையாளத்தை இடுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் காரணத்துக்காக மரணசாதனக்காரரின் கைப்பெருவிரலடையாளத்தைப் பெற்றுக்கொள்ளமுடியாதிருக்கும் பட்சத்தில், அவர், விடயத்துக்கேற்ப, வேறு ஏதேனும் கைவிரலடையாளத்தை அல்லது கால்விரலடையாளத்தை இடுதல் வேண்டும்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவு இத்தாற் திருத்தப்படுகின்றது:-

(1) "கையொப்பம்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "கையொப்பம் மற்றும் மரணசாதனக்காரரின் அல்லது மரணசாதனக்காரியின், விடயத்துக்கேற்ப, இடதுகை அல்லது வலதுகைப் பெருவிரலடையாளம் அல்லது வேறேதேனும் கைவிரலடையாளம் அல்லது கால்விரலடையாளம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவை உடனடுத்துப் பின்வரும் காப்புவாசகத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"ஆயின், எவ்வாறாயினும், மரணசாதனக்காரரின் விடயத்துக்கேற்ப, கையொப்பத்தை அல்லது இடதுகை அல்லது வலதுகைப் பெருவிரலடையாளத்தை அல்லது வேறேதேனும் விரலடையாளத்தை ஏதேனும் காரணத்துக்காகப் பெற்றுக்கொள்ளமுடியாத பட்சத்தில், மரணசாதனக்காரர் அவரது கால்விரலடையாளத்தை இடுதல் வேண்டுமென்பதுடன் பிரசித்த நொத்தாரிசு அத்தகைய காரணத்தை அவரது அத்தாட்சிப்படுத்துகையில் குறிப்பிடுதலும் வேண்டும்.".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "இணைப்பிரதிகளில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "முப்பிரதிகளில்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"உறுதிகள் முப்பிரதிகளில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.".

6. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தம்

[2022ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம் அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இச்சட்டத்தில் "அரசியலமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் VIIஅ என்னும் அத்தியாயம் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அத்தியாயம் இடப்படுகின்றது:-

**"அத்தியாயம் VIIஅ**

**அரசியலமைப்புப் பேரவை**

41அ.(1) பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டிய (இவ்வத்தியாயத்தில் "பேரவை" எனக்குறிப்பீடு செய்யப்படும்) அரசியலமைப்புப் பேரவையொன்று இருத்தல் வேண்டும்:-

*(அ)* பிரதம அமைச்சர்;

*(ஆ)* சபாநாயகர்;

*(இ)* பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர்;

*(ஈ)* சனாதிபதியினால் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்;

*(உ)* பின்வருமாறாக பெயர்குறிக்கப்பட்டதன் மேல், சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்து ஆட்கள்: -

(i) அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையோரின் உடன்பாட்டின் மீது பெயர் குறிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினரொருவர்;

(ii) எந்த அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக் குழுவை எதிர்க்கட்சித் தலைவர் சேர்ந்துள்ளாரோ அந்த அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக் குழுவின் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையோரின் உடன்பாட்டின் மீது பெயர்குறிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினரொருவர்; மற்றும்

(iii) பிரதம அமைச்சர் மற்றும் எதிர்க்காட்சித் தலைவருடனான உடன்பாட்டின் மீது சாபநாயகரினால் பெயர்குறிக்கப்படும் மூன்று ஆட்கள்; அத்துடன்

*(ஊ)* அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் எந்த அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக் குழுவை எதிர்க்கட்சித் தலைவர் சேர்ந்துள்ளாரோ அந்த அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக் குழுவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர்ந்த, பாராளுமன்ற உறுப்பினர்களின் உடன்பாட்டின் மீது பெயர்குறிக்கப்பட்டு சனாதிபதியினால் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்.

(2) சபாநாயகர் பேரவையின் தவிசாளராதல் வேண்டும்.

(3) ஓராம் பந்தியின் உட்பந்தி *(உ)* அல்லது உட்பந்தி *(ஊ)* என்பதன் கீழான நியமனங்களுக்கான பெயர்குறித்த நியமனங்கள், அத்தகைய பெயர் குறித்த நியமனங்களுக்கான சந்தர்ப்பமொன்று எழுகின்றபொழுதெல்லாம் செய்யப்படுகின்றதென்பதனை உறுதிப்படுத்துதல் சபாநாயகரின் கடமையாதல் வேண்டும்.

(4) ஓராம் பந்தியின் *(உ)* என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஐந்து ஆட்களை பெயர்குறித்து நியமிக்கையில், விடயத்துக்கேற்ப பிரதம அமைச்சர், சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியலமைப்புப் பேரவை, உயர்தொழில் மற்றும் வேறுபட்ட சமூகங்கள் உள்ளிட்ட இலங்கை சமூகத்தினரின் பல்லின சமுதாயங்களைப் பிரதிபலிக்கின்றது என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(5) ஓராம் பந்தியின் *(உ)* என்னும் உட்பந்தியின் கீழ் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத ஆட்கள் பகிரங்க வாழ்வில் அல்லது உயர்தொழிலில் தமக்கென்று சிறந்த நிலையை ஏற்படுத்திக்கொண்ட கீர்த்தி வாய்ந்தவர்களும் நேர்மையுடையவர்களும் அத்துடன் ஏதேனும் அரசியற் கட்சியின் உறுப்பினரல்லாதவர்களுமான ஆட்களாதல் வேண்டும். இவர்களது பெயர்குறித்த நியமனம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(6) சனாதிபதி, (1)ஆம் பந்தியின் *(உ)* மற்றும் *(ஊ)* என்னும் உட்பந்திகளின் கீழ் செய்யப்பட்ட பெயர்குறித்த நியமனங்களைக் குறித்துரைக்கின்ற எழுத்திலான தகவல் கிடைக்கப்பெற்று பதினான்கு நாட்களினுள் அவசியமான நியமனங்களைச் செய்தல் வேண்டும்.

(7) *(அ)* பாராளுமன்றம் கலைக்கப்படுவதன் மீது, 64ஆம் உறுப்புரையின் (2)ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சபாநாயகர், மேற்கூறப்பட்ட உறுப்புரையின் (1)ஆம் பந்தியின் கீழ் பாராளுமன்ற உறுப்பினரொருவர் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படும்வரை, பேரவையின் உறுப்பினரொருவராகப் பதவியை தொடர்ந்து வகித்தல் வேண்டும்.

*(ஆ)* பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், பிரதம அமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவரும், அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினர்களாகவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களும் அத்தகைய கலைப்பைப் பின்பற்றிய பொதுத் தேர்தலின் பின்னராக பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், விடயத்திற்கேற்ப, பிரதம அமைச்சராக நியமிக்கப்படும் அல்லது எதிர்க் கட்சித் தலைவராக அங்கீகரிக்கப்படும் அல்லது (1)ஆம் பந்தியின் *(ஈ)*, *(உ)* மற்றும் *(ஊ)* என்னும் உட்பந்திகளின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேரவையின் உறுப்பினர்களாக நியமிக்கப்படும் அத்தகைய காலம்வரை, அத்தகைய பேரவையின் உறுப்பினர்களாகப் பதவியைத் தொடர்ந்து வகித்தல் வேண்டும்.

(8) *(அ)* ஓராம் பந்தியின் *(ஈ)* என்னும் உட்பந்தியின் கீழ் நியமிக்கப்படும் பேரவையின் உறுப்பினர், அவர் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் எழுத்தின் மூலம் முன்னதாகவே அவரது பதவியைத் துறந்தாலொழிய அல்லது சனாதிபதியினால் பதவி நீக்கப்பட்டாலொழிய, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

*(ஆ)* ஓராம் பந்தியின் *(உ)* மற்றும் *(ஊ)* என்னும் உட்பந்திகளின் கீழ் நியமிக்கப்படும் பேரவையின் ஒவ்வோர் உறுப்பினரும், சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் எழுத்தின் மூலம் முன்னதாகவே அவரது பதவியைத் துறந்தாலொழிய அல்லது உடல்ரீதியான அல்லது உளரீதியான ஆற்றலின்மை என்ற ஏதுக்கள் மீதும் அத்துடன் பதவியில் மேற்கொண்டு பணியாற்றுவதற்கு இயலாதவராக உள்ளார் எனவும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை மீது (சமூகமளிக்காதோர் உட்பட) அதற்குச் சாதகமாக வாக்களித்து நிறைவேற்றப்படும் தீர்மானத்தின் மீது சனாதிபதியினால் பதவி நீக்கப்பட்டாலொழிய அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்கு நீதிமன்றம் ஒன்றினால் அவருக்குத் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்தாலொழிய அல்லது அரசியலமைப்பின் 81ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி அவர் மீது குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டிருந்தாலொழிய அல்லது 41உ என்னும் உறுப்புரையின் (7)ஆம் பந்தியின் கீழ் அவருடைய பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்பட்டாலொழிய, அவர் அத்தகைய உறுப்பினராக நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(9) ஓராம் பந்தியின் *(ஈ)*, *(உ)* அல்லது *(ஊ)* என்னும் உட்பந்திகளின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், சனாதிபதி, அத்தகைய வெற்றிடமேற்பட்டு பதினான்கு நாட்களுக்குள்ளாகவும் அத்துடன் மேற்சொல்லப்பட்ட உட்பந்திகளின் ஏற்பாடுகளைக் கருத்திற்கெடுத்தும், அத்தகைய உறுப்பினரை அடுத்துப்பின்னுறுவதற்கென வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும்.

அவ்வாறு நியமிக்கப்படும் எவரேனுமாள், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துப் பின்னுறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுயின் போது பதவிவகித்தல் வேண்டும்.

(10) ஓராம் பந்தியின் *(ஈ), (உ)* அல்லது *(ஊ)* என்னும் உட்பந்திகளின் கீழ் நியமிக்கப்படும் உறுப்பினரொருவர், மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலாகாது.

(11) ஓராம் பந்தியின் *(ஈ), (உ)* மற்றும் *(ஊ)* என்னும் உட்பந்திகளின் கீழ் சனாதிபதியினால் செய்யப்படும் நியமனங்கள் சபாநாயகருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

41ஆ,(1) ஆளெவரும், பேரவையின் விதப்புரையொன்றில் மீதன்றி, இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுக்களுள் எவற்றினதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக சனாதிபதியினால் நியமிக்கப்படலாகாது.

(2) ஓராம் பந்தியின் ஏற்பாடுகள், அத்தகைய ஆணைக்குழு எதனதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக பதிற் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனுமாள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்படும் ஆணைக்குழுக்களின் தவிசாளர்களாக அல்லது உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்கான தகுதியான மற்றும் உகந்த ஆட்களை அத்தகைய நியமனத்துக்கான சந்தர்ப்பம் எழுகின்ற பொழுதெல்லாம், சனாதிபதிக்கு விதந்துரைத்தல் பேரவையின் கடமையாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விதப்புரைகள், பால் சமத்துவம் உட்பட இலங்கைச் சமூகத்தினரின் பல்லின சமுதாயங்களைப் பிரதிபலிக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு முயற்சித்தலும் வேண்டும். அத்தகைய ஆணைக்குழுக்களின் தவிசாளர்களின் விடயத்தில், பேரவையானது நியமனம் செய்வதற்காக மூன்று ஆட்களை விதந்துரைத்தல் வேண்டுமென்பதுடன், சனாதிபதி விதந்துரைக்கப்பட்ட ஆட்களில் ஒருவரைத் தவிசாளராக நியமித்தலும் வேண்டும்.

(4) சனாதிபதி அத்தகைய நியமனங்களுக்கான பேரவையின் விதப்புரைகளைப் பெற்றுக்கொண்ட பதின்நான்கு நாட்களினுள் இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் தவிசாளர்களையும் உறுப்பினர்களையும் நியமித்தல் வேண்டும்.

(5) ஓராம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் ஆளெவரும் அல்லது ஏதேனும் அத்தகைய ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராகப் பதிற்கடமையாற்றவென நியமிக்கப்படும் ஆளொருவர், அரசியலமைப்பில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அகற்றப்படுதல் ஆகாது என்பதுடன், அத்தகைய ஏற்பாடெதுவும் செய்யப்பட்டிராதவிடத்து, பேரவையின் முன்னங்கீகாரத்துடன் மட்டுமே அத்தகைய ஆள் சனாதிபதியினால் அகற்றப்படுதலும் வேண்டும்.

(6) இவ்வுறுப்புரையின் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லா ஆணைக்குழுக்களும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாதலும் மறுமொழி கூறற்பாலதாதலும் வேண்டும்.

**அட்டவணை**

*(அ)* தேர்தல் ஆணைக்குழு.

*(ஆ)* பகிரங்க சேவை ஆணைக்குழு.

*(இ)* தேசிய பொலிசு ஆணைக்குழு.

*(ஈ)* கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு.

*(உ)* இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

*(ஊ)* இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு.

*(எ)* நிதி ஆணைக்குழு.

*(ஏ)* எல்லை நிர்ணய ஆணைக்குழு.

*(ஐ)* தேசிய பெறுகை ஆணைக்குழு.

41இ. (1) ஆளெவரும் இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பதவிகளுள் எவற்றிற்கும், சனாதிபதியினால் பேரவைக்குச் செய்யப்படும் விதப்புரையின் மீது அத்தகைய நியமனம் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய, சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் ஆகாது.

(2) ஓராம் பந்தியின் ஏற்பாடுகள், இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பதவியில் பதின்நான்கு நாட்களை விஞ்சுமொரு காலப்பகுதிக்குப் பதிற்கடமையாற்றுவதற்கென நியமிக்கப்படும் எவரேனும் ஆள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்:

ஆயின், ஆளெவரும் சனாதிபதியின் விதப்புரை ஒன்றின் மீது அத்தகைய பதில் நியமனம் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய, பதின்நான்கு நாட்களை விஞ்சாத தொடர்ந்துவரும் காலப்பகுதிக்கு அத்தகைய ஏதேனும் பதவியில் பதிற் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்படுதல் ஆகாது.

(3) இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்படும், அல்லது அத்தகைய ஏதேனும் பதவியில் பதிற் கடமையாற்றவென நியமிக்கப்படும் ஆளொருவர், அரசியலமைப்பில் அல்லது ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அத்தகைய பதவியிலிருந்து அகற்றப்படுதல் ஆகாது.

(4) உயர் நீதிமன்ற நீதிபதிகளினதும், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரினதும், நீதிபதிகளினதும் நியமனம் தொடர்பான அதனது பணியை பிரயோகிக்கையில் பேரவையானது, பிரதம நீதியரசரினது அபிப்பிராயத்தைப் பெறுதல் வேண்டும்.

### அட்டவணை

பாகம் I

*(அ)* பிரதம நீதியரசரும் உயர் நீதிமன்ற நீதிபதிகளும்.

*(ஆ)* மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரும் நீதிபதிகளும்.

*(இ)* தவிசாளர் தவிர்ந்த நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்.

பாகம் II

*(அ)* சட்டத்துறை தலைமையதிபதி.

*(ஆ)* இலங்கை மத்திய வங்கி ஆளுநர்.

*(இ)* கணக்காய்வாளர் தலைமையதிபதி.

*(ஈ)* பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி.

*(உ)* நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஓம்புட்சுமான்).

*(ஊ)* பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

41ஈ. (1) மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கென பேரவையினால் நியமிக்கப்பட வேண்டியவரான பேரவைக்கான செயலாளர் நாயகம் ஒருவர் இருத்தல் வேண்டும். அவருடைய பதவிக்காலம் முடிவடைவதன் மேல், செயலாளர் நாயகம் மீளநியமிப்பதற்கு தகுதியுடையவராதல் வேண்டும்.

(2) பேரவையானது, அதனால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீது, அதனது பணிகளை நிறைவேற்றுவதற்காக அது அவசியமென கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களை நியமிக்கலாம்.

41உ. (1) பேரவையானது குறைந்தபட்சம் ஒவ்வொரு மாதமும் இரண்டு தடவையும், அத்துடன் இவ்வத்தியாயத்தின் அல்லது ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளினால் பேரவைக்குக் குறித்தொதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறு அடிக்கடியும் கூடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கூட்டங்கள், பேரவையின் தவிசாளரது பணிப்பின் மீது பேரவையின் செயலாளர் நாயகத்தினால் கூட்டப்படுதலும் வேண்டும்.

(2) தவிசாளர் பேரவையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டுமென்பதுடன், தவிசாளர் வருகைதராதிருப்பின், பிரதம அமைச்சரும், பிரதம அமைச்சர் வருகைதராதிருப்பின், எதிர்க்கட்சித் தலைவரும் பேரவையின் கூட்டங்களுக்கு தலைமை தாங்குதலும் வேண்டும்.

(3) பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(4) பேரவையானது, அது செய்ய தேவைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு விதப்புரையையும், அங்கீகாரத்தையும் அல்லது முடிபையும் ஏகமனதாகச் செய்வதற்கு முயற்சித்தல் வேண்டுமென்பதுடன், ஏகமனதான முடிபொன்று இல்லாதவிடத்து, பேரவையினால் செய்யப்பட்ட விதப்புரை, அங்கீகாரம் அல்லது முடிபு எதுவும் அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் பேரவை உறுப்பினர்களில் ஐந்து உறுப்பினர்களுக்குக் குறையாதோரினால் ஆதரவளிக்கப்பட்டாலொழிய, வலிதுடையதாகாது.

(5) தவிசாளர் அல்லது தலைமை தாங்கும் ஏனைய உறுப்பினர் மூலவாக்கொன்றை உடையவராதல் ஆகாது, ஆனால், பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான ஏதேனும் பிரச்சினையின் மீது வாக்குகள் சமமாக இருக்கும் பட்சத்தில், தவிசாளர் அல்லது அத்தகைய கூட்டத்திற்கு தலைமை தாங்குகின்ற வேறு உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) உறுப்புரை 41ஆ இன் அல்லது உறுப்புரை 41இ இன் கீழான ஏதேனும் நியமனத்திற்குப் பொருத்தமான ஆட்களை விதந்துரைப்பது அல்லது அங்கீகரிப்பது தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள் உட்பட, பேரவையின் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கைமுறை என்பன பேரவையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(7) பேரவையின் முன் அனுமதியின்றி, பேரவையின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு வருகை தராதிருப்பவரான உறுப்புரை 41அ வின் (1)ஆம் பந்தியின் *(ஈ)*, *(உ)* அல்லது *(ஊ)* என்னும் உட்பந்திகளின் கீழ் நியமிக்கப்படும் பேரவையின் எவரேனும் உறுப்பினர், அத்தகைய கூட்டங்களுள் மூன்றாவது கூட்டத்தின் தேதியிலிருந்து பயன்பட, பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(8) பேரவையானது, அது, முழுமையாக அமைத்துருவாக்கப்படவில்லை அல்லது அதன் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று உள்ளது என்பன எவை எப்படியிருப்பினும் செயலாற்றத் தத்துவமுடையதாகவிருத்தல் வேண்டும். உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளினால் கொண்டு நடாத்தப்பட்ட அல்லது செய்யப்பட்ட பேரவையின் செயல், நடபடி அல்லது முடிபு, எதுவும் பேரவை முழுமையாக அமைத்துருவாக்கப்படவில்லை அல்லது அதன் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று உள்ளது அல்லது உறுப்பினர் ஒருவரது நியமனத்தில் குறைபாடுள்ளது என்னும் நிகழ்வின் காரணத்தினால் வலிதற்றதாதலாகாது அல்லது வலிதற்றதாகக் கருதப்படுதலுமாகாது.

41ஊ. பேரவையின் உறுப்பினர்களின் அல்லது உறுப்புரை 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவுற்றது எது எவ்வாறிருப்பினும், பேரவையின் உறுப்பினர்கள் அல்லது அத்தகைய ஏனைய ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள், பேரவையில் அல்லது அத்தகைய வேறு ஆணைக்குழுவில் புது உறுப்பினர்கள் பதவியேற்கும் வரை பதவியில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

41எ. (1) பேரவையானது, ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கொரு தடவை, முற்போந்த மூன்று மாதகாலப்பகுதியின்போதான அதன் செயற்பாடுகள் பற்றி ஓர் அறிக்கையை சனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) பேரவையானது, அரசியலமைப்பினால் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தால் அதன் மீது சுமத்தப்படக்கூடியவாறான அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கடமைகளைப் புரிதலும் பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) பேரவையானது, அதன் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்குமான விதிகளை ஆக்குவதற்கு தத்துவமுடையதாதல் வேண்டும். அத்தகைய எல்லா விதிகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, அத்தகைய வெளியீட்டின் மூன்று மாதங்களுக்குள் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும்.

41ஏ. பேரவையினால் உறப்படும் செலவுகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

41ஒ. நூற்றி இருபத்தாறாம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைவாக, நீதிமன்றம் எதுவும், பேரவையின் ஏதேனும் முடிபை அல்லது பேரவையினால் அளிக்கப்பட்ட ஏதேனும் அங்கீகாரத்தை அல்லது செய்யப்பட்ட ஏதேனும் விதப்புரையை எத்தகையதுமான ஏதேனும் ஏதுவின் மீது அல்லது எத்தகையதுமான ஏதேனும் முறையில் ஏற்றுக்கவனிப்பதற்கான, கேட்பதற்கான அல்லது முடிபு செய்வதற்கான அல்லது கேள்விக்குட்படுத்துவதற்கான தத்துவத்தை அல்லது நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் ஆகாது என்பதுடன், அத்தகைய முடிபு, அங்கீகாரம் அல்லது விதப்புரை எல்லா நோக்கங்களுக்காகவும் முற்றும் முடிவானதாக இருத்தலும் வேண்டும்.".

3. அரசியலமைப்பின் அத்தியாயம் VIII இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அத்தியாயம் இடப்படுகின்றது:-

"அத்தியாயம் VIII

**ஆட்சித்துறை**

அமைச்சரவை

42. சனாதிபதி, அரசியலமைப்பின் கீழும், பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பான அப்போதைக்குள்ள சட்டம் உட்பட எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழும், தமது தத்துவங்களையும் கடமைகளையும் மற்றும் பணிகளையும் முறைப்படி பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் பாராளுமன்றத்துக்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

43. (1) குடியரசின் அரசாங்கத்தை நெறிப்படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொறுப்பாக்கப்பட்ட ஓர் அமைச்சரவை இருத்தல் வேண்டும்.

(2) அமைச்சரவை பாராளுமன்றத்திற்கு கூட்டாக பொறுப்பாகவிருத்தலும் வகைசொல்லற்பாதலும் வேண்டும்.

(3) சனாதிபதி, அமைச்சரவையின் ஓர் உறுப்பினராயிருத்தல் வேண்டும் என்பதுடன், அமைச்சரவையின் தலைவராகவிருத்தலும் வேண்டும்:

ஆயின், அரசியலமைப்பின் ஏற்பாடுகளின்கீழ் அமைச்சரவை கலைக்கப்படுவது எது எவ்வாறிருப்பினும், சனாதிபதி தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டும்.

(4) சனாதிபதி, அவரது அபிப்பிராயப்படி பாராளுமன்றத்தின் எந்த உறுப்பினர் பாராளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெறுவதற்கு அதிகம் சாத்தியமுள்ளவராக இருக்கின்றாரோ அந்த உறுப்பினரை பிரதம அமைச்சராக நியமித்தல் வேண்டும்.

44. (1) சனாதிபதி அத்தகைய கலந்தாலோசனை அவசியமானதென அவர் கருதுமிடத்து, பிரதம அமைச்சரின் கலந்தாலோசனையுடன், அமைச்சரவையின் அமைச்சர்களினதும், அமைச்சுக்களினதும் எண்ணிக்கையையும் அத்தகைய அமைச்சர்களுக்குக் குறித்தொதுக்கப்படவுள்ள விடயங்களையும் பணிகளையும் தீர்மானித்தல் வேண்டும்.

(2) சனாதிபதி, பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட அமைச்சுக்களுக்குப் பொறுப்பாக இருப்பதற்கென பாராளுமன்றத்தின் உறுப்பினர்களிலிருந்து அமைச்சர்களை நியமித்தல் வேண்டும்.

(3) சனாதிபதி, பாதுகாப்பு எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சராக இருத்தல் வேண்டுமென்பதுடன், இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் அல்லது உறுப்புரை 45இன் (1)ஆம் பந்தியின் கீழ் அத்தகைய எவரேனும் அமைச்சருக்கு குறித்தளிக்கப்படாத ஏதேனும் விடயம் அல்லது பணியை பதினான்கு நாட்களுக்கு மேற்படாத காலப்பகுதியினுள் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய எவரேனும் அமைச்சரவையின் அமைச்சரின் அல்லது அமைச்சரவையின் உறுப்பினரல்லாத எவரேனும் அமைச்சரின் தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளைப் பிரயோகிக்கலாம், நிறைவேற்றலாம் அத்துடன் புரியலாம் என்பதுடன், அதற்கிணங்க அத்தகைய விடயம் அல்லது பணி எவ்வமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சருக்கு அரசியலமைப்பில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்திலான ஏதேனும் குறிப்பீடு சனாதிபதிக்கான குறிப்பீடொன்றாக வாசித்து பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகள் சனாதிபதிக்கான ஏதேனும் விடயம் அல்லது பணியை பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அவருக்குக் குறித்தொதுக்குவதிலிருந்து தடைசெய்தலாகாது. அத்துடன் அதற்கிணங்க அத்தகைய விடயம் அல்லது பணி எவ்வமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்டதோ அவ்வமைச்சருக்கு அரசியலமைப்பிலுள்ள அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்திலுள்ள ஏதேனும் குறிப்பீடு சனாதிபதிக்கான குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) சனாதிபதி எந்நேரத்திலும் அமைச்சரவையின் விடயங்களினதும் பணிகளினதும் குறித்தொதுக்குதல்களையும், அமைப்பையும் மாற்றலாம். அத்தகைய மாற்றங்கள் அமைச்சரவையின் தொடர்ச்சியையும் பாராளுமன்றத்துக்கு அதற்குள்ள பொறுப்புடைமையின் தொடர்ச்சியையும் பாதித்தல் ஆகாது.

45. (1) சனாதிபதி பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து அமைச்சரவையின் உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களாக நியமிக்கலாம்.

(2) சனாதிபதி அத்தகைய கலந்தாலோசனை அவசியமானதென அவர் கருதுகின்றவிடத்து, பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், (1)ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் அத்தகைய அமைச்சர்களுக்கான விடயங்களினதும் மற்றும் பணிகளினதும் குறித்தொதுக்குதல்களையும்

அத்தகைய அமைச்சர்களின் பொறுப்பில் இருக்க வேண்டிய அமைச்சுக்கள் ஏதேனுமிருப்பின், அமைச்சுக்களையும் தீர்மானிக்கலாம்.

(3) சனாதிபதி (2)ஆம் பந்தியின் கீழ்செய்யப்பட்ட ஏதேனும் குறித்தொதுக்குதலை எந்தநேரத்திலும் மாற்றலாம்.

(4) ஓராம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் ஒவ்வொரு அமைச்சரும் அமைச்சரவைக்கும், பாராளுமன்றத்துக்கும் பொறுப்பாதலும் வகை சொல்ல வேண்டியவராதலும் வேண்டும்.

(5) அமைச்சரவையின் எவரேனும் அமைச்சர், அவருக்கு குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் விடயத்திற்குரிய அல்லது பணிக்குரிய ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் மூலம் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை, அமைச்சரவையின் உறுப்பினர் அல்லாத எவரேனும் அமைச்சருக்கு வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பு மூலம் கையளிக்கலாம் அத்துடன் அவருக்கு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை, அத்தகைய தத்துவம் அல்லது கடமை அமைச்சரவையின் அத்தகைய அமைச்சர் மீது அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட எழுத்திலான சட்டத்தில் முரணாக எதுஎவ்வாறிருப்பினும், பிரயோகித்தலும் புரிதலும் அத்தகைய வேறு அமைச்சருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

46. (1) சனாதிபதி, பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், அமைச்சரவை அமைச்சர்கள் தமது கடமைகளைப் புரிவதில் அவர்களுக்கு உதவுவதற்காகப் பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து பிரதி அமைச்சர்களை நியமிக்கலாம்.

(2) அமைச்சரவையின் எவரேனும் அமைச்சர் அவருக்கு குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் விடயம் அல்லது பணி தொடர்பிலான ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலம் அவரது பிரதியமைச்சருக்கு கையளிக்கலாம் அத்துடன் அந்தத் தத்துவம் அல்லது கடமை அத்தகைய அமைச்சருக்கு அல்லது அவர் மீது எந்த எழுத்திலான சட்டத்தினால் அளிக்கப்பட்டுள்ளதோ அல்லது சுமத்தப்பட்டுள்ளதோ அந்த எழுத்திலான சட்டத்தில் முரணாக எதுஎவ்வாறிருப்பினும், இப்பந்தியின்கீழ் அவருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை பிரயோகிப்பதும் புரிவதும் அத்தகைய பிரதியமைச்சருக்கு சட்டமுறையானதாதல் வேணடும்.

47. (1) அமைச்சரவை-

*(அ)* அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை முப்பதை விஞ்சுதலாகாது; அத்துடன்

*(ஆ)* உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும், பிரதி அமைச்சர்களினதும், கூட்டுமொத்த எண்ணிக்கை மொத்தத்தில் நாற்பதை விஞ்சுதலாகாது.

(2) பிரதம அமைச்சர்-

*(அ)* சனாதிபதியின் கைப்பட்ட கடிதத்தின் மூலம் அகற்றப்பட்டாலொழிய;

*(ஆ)* சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் தம் கைப்பட்ட கடிதத்தின் மூலம் அவரது பதவியை துறந்தாலொழிய; அல்லது

*(இ)* பாராளுமன்ற உறுப்பினரொருவராக இல்லாதொழிந்தாலொழிய,

அரசியலமைப்பின் ஏற்பாடுகளின்கீழ் அமைச்சரவை தொடர்ந்தும் பணியாற்றும் காலம் முழுவதும் அவர் தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டும்.

(3) அமைச்சரவையின் அமைச்சரொருவர் அல்லது அமைச்சரவை உறுப்பினரல்லாத அமைச்சரொருவர் அல்லது பிரதியமைச்சரொருவர்-

*(அ)* பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அவர் சனாதிபதியின் கைப்பட்ட ஒரு கடிதத்தின் மூலம் பதவியினின்றும் அகற்றப்பட்டிருந்தாலொழிய;

*(ஆ)* சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் அவருடைய கைப்பட்ட கடிதத்தின் மூலம் அவர் தமது பதவியைத் துறந்தாலொழிய; அல்லது

*(இ)* பாராளுமன்ற உறுப்பினராக அவர் இல்லாதொழிந்தாலொழிய,

அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவை தொடர்ந்து பணியாற்றும் காலம் முழுவதும் அவர் தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டும்.

(4) ஓராம் பந்தியிலுள்ளது எது எவ்வாறிருப்பினும், பாராளுமன்றத்தில் ஆகக்கூடுதலான ஆசனங்களைப் பெறும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக்குழு, தேசிய அரசாங்கமொன்றை உருவாக்குமிடத்து, அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையும், அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களின் எண்ணிக்கையும், பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கையும் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(5) பந்தி (4)இன் நோக்கத்துக்காக "தேசிய அரசாங்கம்" என்பது, பாராளுமன்றத்தில் ஆகக் கூடுதலான ஆசனங்களைப் பெறும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக் குழு அங்கீகரிக்கப்பட்ட ஏனைய அரசியற் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்களுடன் ஒன்றுசேர்ந்து உருவாக்கப்படும் ஓர் அரசாங்கம் எனப் பொருள்படும்.

48. (1) பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு நேர்முன்னர் பணியாற்றுகின்ற அமைச்சரவை, அத்தகைய கலைத்தல் எவ்வாறிருப்பினும் தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டுமென்பதுடன், பொதுத் தேர்தல் முடிவுற்றதும் பணியாற்றாதொழிதலும் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க பிரதம அமைச்சரும், அமைச்சரவையின் அமைச்சர்களும், 47ஆம் உறுப்புரையின் (2)ஆம் பந்தியில் *(அ)* என்னும் உட்பந்தியில் அல்லது (3)ஆம் பந்தியில் உட்பந்தி *(அ)* அல்லது *(ஆ)* இல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக பதவி வகிக்காதொழிந்தாலன்றி, அத்தகைய அமைச்சர்கள் தொடர்ந்தும் பணியாற்றுதல் வேண்டும். அத்துடன் அத்தேர்தல் ஆணையாளர் தலைமையதிபதியால் கொடுக்கப்படும் கட்டளைக்கற்களுடன் இணங்கியொழுகுதலும் மற்றும் பொதுத்தேர்தலின் போது முறையற்ற செல்வாக்கைப் பிரயோகிக்காது இருத்தலும் வேண்டும்.

(2) பாராளுமன்றக் கலைத்தலுக்கும் பொதுத் தேர்தல் முடிவுறுதலுக்கும் இடைப்பட்ட காலத்தின் போது பிரதம அமைச்சர் இறந்துள்ளமை, பதவியிலிருந்து அகற்றப்பட்டமை அல்லது பதவியை துறந்தமை எவ்வாறிருப்பினும், அமைச்சரவையானது, அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களை அதன் உறுப்பினர்களாகக் கொண்டு, பொதுத் தேர்தல் முடிவுறும் வரை தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டும். சனாதிபதி அத்தகைய ஒரு அமைச்சரை பிரதம அமைச்சரின் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும் புரிவதற்குமாக நியமிக்கலாம்.

(3) பாராளுமன்றக் கலைத்தலுக்கும் பொதுத் தேர்தல் முடிவுறுதலுக்கும் இடைப்பட்ட காலத்தின் போது அமைச்சரவையின் அமைச்சர் ஒருவர் இறப்பதன் மீது, பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மீது அல்லது பதவி துறப்பதன் மீது, சனாதிபதி, பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், அத்தகைய அமைச்சுக்குப் பொறுப்பாக இருப்பதற்கென அல்லது அத்தகைய அமைச்சரின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கவும் புரியவும் நிறைவேற்றவும் என வேறு எவரேனும் அமைச்சரை நியமிக்கலாம்.

49. (1) பிரதம அமைச்சர், பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கும் பொதுத் தேர்தல் முடிவுறுதலுக்கும் இடைப்பட்ட காலத்தின்போது தவிர, இறப்பதன் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அல்லது பதவி துறப்பதன் மூலம் அல்லது வேறு வகையாக பதவி வகிக்காதொழிந்ததன் மேல், சனாதிபதி 70ஆம் உறுப்புரையின் கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் பாராளுமன்றத்தைக் கலைத்திருந்தாலொழிய, அமைச்சரவை கலைக்கப்பட்டதாதல் வேண்டும் என்பதுடன், சனாதிபதி 43, 44இ 45 மற்றும் 46 என்னும் உறுப்புரைகளின் நியதிகளின்படி ஒரு பிரதம அமைச்சரையும், அமைச்சரவையின் அமைச்சர்களையும் அமைச்சரவையின் உறுப்பினர்களல்லாத அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் நியமித்தலும் வேண்டும்:

ஆயின், பிரதம அமைச்சர் அவ்வாறு பதவி வகிக்காதொழிந்ததன் பின்னர், பாராளுமன்றம் கலைக்கப்பட்டால், பொதுத் தேர்தல் முடிவடையும் வரை அமைச்சரவை, அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களை அதன் உறுப்பினர்களாகக் கொண்டு தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டும். சனாதிபதி, பிரதம அமைச்சரின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அத்தகைய அமைச்சர்களுள் ஒருவரை நியமிக்கலாம், என்பதுடன், 48ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) பாராளுமன்றம், அரசாங்கக் கொள்கைக் கூற்றை அல்லது ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை நிராகரித்தால் அல்லது அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை நிறைவேற்றினால், அமைச்சரவை கலைக்கப்பட்டதாதல் வேண்டுமென்பதுடன், சனாதிபதி 70ஆம் உறுப்புரையின் கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் பாராளுமன்றத்தைக் கலைத்திருந்தாலொழிய, 43, 44இ 45 மற்றும் 46ஆம் உறுப்புரைகளின் நியதிகளின்படி பிரதம அமைச்சர் ஒருவரையும், அமைச்சரவையின் அமைச்சர்களையும் அமைச்சரவையின் உறுப்பினர்களல்லாத அமைச்சர்களையும் பிரதியமைச்சர்களையும் நியமித்தல் வேண்டும்.

50. அமைச்சரவையின் அமைச்சரொருவர், அமைச்சரவையின் உறுப்பினரல்லாத அமைச்சரொருவர் அல்லது பிரதியமைச்சரொருவர் அவருடைய பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு எப்போதேனும் இயலாதிருக்கும்போது, அத்தகைய அமைச்சரவை அமைச்சரின், அமைச்சரவையின் உறுப்பினரொருவரல்லாத அமைச்சரின் அல்லது பிரதியமைச்சரின் இடத்தில் பதிற் கடமையாற்றுவதற்கென சனாதிபதி பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், பாராளுமன்றத்தின் உறுப்பினரெவரையும் நியமிக்கலாம்.

51. (1) *(அ)* பிரதம அமைச்சருக்குச் செயலாள ரொருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன், அவர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

*(ஆ)* பிரதம அமைச்சரின் செயலாளர் பிரதம அமைச்சரின் அலுவலகத்துக்குப் பொறுப்பாக விருத்தல் வேண்டுமென்பதுடன், பிரதம அமைச்சரின் பணிப்புகளுக்கமைய, அவரது பதவிக்குரிய கடமைகளையும் பணிகளையும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) *(அ)* அமைச்சரவைக்குச் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும் என்பதுடன், அவர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

*(ஆ)* செயலாளர், சனாதிபதியின் பணிப்புக்கு அமைய, அமைச்சரவையின் அலுவலகத்திற்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும் என்பதுடன், சனாதிபதியினால் அல்லது அமைச்சரவையினால் அவருக்குக் குறித்தளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு பணிகளையும், கடமைகளையும் அவர் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

52. (1) அமைச்சரவை அமைச்சரொருவரின் அமைச்சு ஒவ்வொன்றுக்கும் செயலாளரொருவர் இருத்தல் வேண்டும். அவர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) அமைச்சொன்றின் செயலாளர், அவரது அமைச்சரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, அவரது அமைச்சரின் பொறுப்பிலுள்ள அரசாங்கத் திணைக்களங்களின் மீது மற்றும் வேறு நிறுவனங்களின் மீது மேற்பார்வைப் பிரயோகித்தல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவையின் கலைவு எது எவ்வாறிருப்பினும், அமைச்சொன்றின் அத்தகைய அமைச்சுக்கு புதிய செயலாளர் அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நியமிக்கப்படும்வரை தொடர்ந்து பதவி வகித்தல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், அமைச்சொன்றிற்கான செயலாளர் அத்தகைய அமைச்சின் உளதாம் தன்மையை இல்லாதொழிப்பதில் முடிவடைகின்ற 44ஆம் அல்லது 45ஆம் உறுப்புரையின் கீழ் சனாதிபதியினாலான தீர்மானமொன்றின் மேல் பதவியை வகிப்பதிலிருந்து இல்லாதொழிதல் வேண்டும்.

(4) இவ்வுறுப்புரையின் நோக்கங்களுக்காக, சனாதிபதியின் செயலாளரின் அலுவலகம், அமைச்சரவை செயலாளரின் அலுவலகம், கணக்காய்வாளர் - தலைமையதிபதியின் அலுவலகம், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் (ஒம்புட்சுமான்) அலுவலகம், பாராளுமன்றசெயலாளர் நாயகத்தின் அலுவலகம், அரசியலமைப்புப் பேரவை, அத்துடன் 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆணைக்குழுக்கள் என்பன அரசாங்க திணைக்களங்கள் அல்லாதவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

53. இந்த அத்தியாயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்படும் ஆளொருவர், அத்தகைய ஆள் நான்காம் அட்டவணையிலும் ஏழாம் அட்டவணையிலும் தரப்பட்டுள்ள சத்தியங்களைச் செய்து கீழொப்பமிடும்வரை அல்லது உறுதியுரைகளை மொழிந்து கீழொப்பமிடும் வரை அவரது பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்ளுதலாகாது.".

4. அரசியலமைப்பின் 54ஆம் உறுப்புரையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:-

(1) அவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

"(1) (இவ்வத்தியாயத்தின் "ஆணைக்குழு" எனக்குறிப்பீடு செய்யப்படும்) பகிரங்கசேவை ஆணைக்குழு ஒன்றிருத்தல் வேண்டும். அது அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய உறுப்பினர்களுள் மூன்று உறுப்பினர்களுக்கு குறையாதோர் பகிரங்க அலுவலராகப் பதினைந்தாண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும். சனாதிபதி அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது உறுப்பினர் ஒருவரை அதன் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.";

(2) அவ்வுறுப்புரையின் (4)ஆம் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

"(4) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொரு வரும் அவர் (2)ஆம் பந்தியின் கீழ் ஏதேனும் தகைமையீனத்துக்கு உட்பட்டவராக வந்தாலொழிய அல்லது சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் எழுத்தின் மூலம் முன்னரே தமது பதவியை துறந்தாலொழிய அல்லது அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்கு நீதிமன்றம் ஒன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாலொழிய அல்லது 81ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி அவர் மீது குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டாலொழிய அல்லது (6)ஆம் பந்தியின் கீழ் தமது பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்பட்டாலொழிய, அவரது நியமன தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்."; அத்துடன்

(3) அவ்வுறுப்புரையில் (7)ஆம் பந்தியில் "ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக இருப்பதற்கு உறுப்புரை 41அ என்பதன் ஏற்பாடுகளுக்கமைய,"; என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராகவிருப்பதற்கு அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.".

5. அரசியலமைப்பின் 61உ என்னும் உறுப்புரையில் அவ்வுறுப்புரையில் *(ஆ)* என்னும் பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தின் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

6. அரசியலமைப்பின் உறுப்புரை 61ஊ இத்தால் நீக்கம் செய்யப்பட்டு அதற்கு பதிலாக பின்வரும் உறுப்புரை இடப்படுகின்றது:-

61ஊ. இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக, "பகிரங்க அலுவலர்" என்பது, தரைப்படை, கடற்படை அல்லது வான்படை உறுப்பினரொருவரை, தேர்தல் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் அத்தகைய ஆணைக்குழுவின் அலுவலரொருவரை, தேசிய பொலிசு ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பொலிசு அலுவலரொருவரை, நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலரொருவரை அல்லது கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் இலங்கை கணக்காய்வு சேவையிலிருக்கும் உறுப்பினரொருவரை உள்ளடக்காது.".

7. அரசியலமைப்பின் 65ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியில், "உறுப்புரை 41அ என்பதன் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தின் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (6) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(6) செயலாளர் நாயகம் அவரது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு, இயலாதவராகவுள்ள பொழுதிலெல்லாம், செயலாளர் நாயகத்தின் இடத்தில் பதிற் கடமையாற்றுவதற்கென ஆளொருவரை, அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய சனாதிபதி நியமிக்கலாம்.".

8. அரசியலமைப்பின் 91ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியில் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பந்தியின் விடயம் (iv)இல், "41அ என்னும் உறுப்புரைக்கான அட்டவணை I இல் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்ட வணையில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்;

(2) அவ்வுட்பந்தியின் (vஅ) என்பதை உடனடுத்துப் பின்னர் பின்வரும் விடயத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(vஆ) எவரேனும் பாராளுமன்ற உறுப்பினர் தவிர்ந்த 41அ ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியின் குறிப்பீடு செய்யப்படும் அரசியலமைப்புப் பேரவையின் ஓர் உறுப்பினராகவிருந்தால்"; அத்துடன்

(3) அவ்வுட்பந்தியின் விடயம் (xii) என்பதை உடனடுத்துப் பின்னர் பின்வரும் விடயத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(xiii) வேறு ஏதேனும் நாட்டின் பிரசையொருவராகவுள்ளவரான இலங்கைப் பிரசையொருவர்;".

9. அரசியலமைப்பின் 95ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியில், "இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் 41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமையவும்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "இவ்வுறுப்புரையில் (1)ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீதும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

10. அரசியலமைப்பின் 103ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (7)ஆம் பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அரசிய லமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது" என்னும் சொற்களை இடுவதன மூலமும்;

11. அரசியலமைப்பின் 104ஆ என்னும் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (5)ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"*(அ)* ஆணைக்குழுவானது, ஒரு சுதந்திர மானதும் நீதியானதுமான தேர்தலை உறுதிப்படுத்த அவசியமானதென ஆணைக்குழு கருதக்கூடியவாறு விடயத்துக்கேற்ப, ஏதேனும் ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்பு தொழிற்படுத்துநர் அல்லது ஒரு செய்தித்தாளொன்றின் எவரேனும் உரிமையாளருக்கு அல்லது வெளியீட்டாளருக்கு ஏதேனும் தேர்தலை நடாத்துதல் அல்லது ஏதேனும் மக்கள் தீர்ப்பை நடாத்துதல் தொடர்பில் ஆணைக்குழு பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய வழிகாட்டிநெறிகளைக் காலத்துக்காலம் வழங்கத்தத்துவம் கொண்டதாதல் வேண்டும்.".

12. அரசியலமைப்பின் 107ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

13. அரசியலமைப்பின் 109ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தின் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தின் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

14. அரசியலமைப்பின் 111ஈ என்னும் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியில், "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியில், "முதனிலை நீதிமன்றமொன்றின்" என்னும் சொற்கள் அப்பந்தியில் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அங்கெல்லாம், "நீதிவான் அல்லது மாவட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

15. அரசியலமைப்பின் 111உ என்னும் உறுப்புரையில், அவ்வுறுப்புரையில் (5)ஆம் பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

16. அரசியலமைப்பின் 111க என்னும் உறுப்புரையானது, அதன் *(அ)* என்னும் பந்தியில், "நீதித்துறை அலுவலர்" எனும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், "மேன்முறையீட்டு நீதிமன்ற அல்லது மேல் நீதிமன்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மேன்முறையிட்டு நீதிமன்ற" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

17. அரசியலமைப்பின் 121ஆம் உறுப்புரையில், அவ்வுறுப்புரையில் (1)ஆம் பந்தியில் "ஒரு வாரத்துக்குள்ளாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதின்நான்கு நாட்களுக்குள்ளாக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

18. அரசியலமைப்பின் 153ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (4)ஆம் பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

19. பின்வரும் உறுப்புரைகள் 153ஆம் உறுப்புரையை உடனடுத்து உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அவை அரசியலமைப்பின் உறுப்புரை 153அ, 153ஆ, 153இ, 153ஈ, 153உ, 153ஊ, 153எ மற்றும் 153ஏ எனப் பயனுறுதலும் வேண்டும்:-

153அ.(1) (இவ்வத்தியாயத்தில் "ஆணைக்குழு" எனக்குறிப்பீடு செய்யப்படும்) கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும். அது ஆணைக்குழுவின் தவிசாளரான கணக்காய்வாளர் தலைமையதிபதியையும் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

*(அ)* பிரதி கணக்காய்வாளர் தலைமையதிபதியாக அல்லது அதற்குமேற்பட்ட பதவி வகித்த கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தின் ஓய்வுபெற்ற இரண்டு அலுவலர்கள்;

*(ஆ)* உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது இலங்கை மேல் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியொருவர்; அத்துடன்

*(இ)* இலங்கை நிருவாக சேவையின் ஓய்வுபெற்ற வகுப்பு I அலுவலர்.

(2) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படும் ஆளொருவர்-

*(அ)* சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் கடிதத்தின் மூலம் அவரது பதவியை முன்னரே துறந்தாலேலொழிய஌;

*(ஆ)* இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப் பட்டவாறான பதவியிலிருந்து அகற்றப் பட்டாலொழிய; அல்லது

*(இ)* பாராளுமன்றத்தின் அல்லது மாகாண சபையொன்றின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராகவந்தாலொழிய.

மூன்று ஆண்டுகள் பதவிவகித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படும் ஆளொருவர் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது மேலதிக காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுவதற்கு தகைமையுடையவராதல் வேண்டும்.

(4) சனாதிபதி குறித்தளிக்கப்படும் காரணத்துக்காகவும் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடனும் (1)ஆம் பந்தியின் கீழ் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படும் எவரேனும் ஆளை பதவியிலிருந்து அகற்றலாம்.

(5) ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் மற்றும் உறுப்பினர்களுக்கும் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிகள் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய படிகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் தவிசாளரின் அல்லது உறுப்பினர்களின் பதவிக்காலத்தின் போது குறைக்கப்படுதலுமாகாது.

(6) ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் அத்தியாயம் IX இன் கருத்தெல்லைக்குள்ளும் நோக்கங்களுக்காகவும் பகிரங்கச் சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) ஆணைக்குழுவுக்கு செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

153ஆ.(1) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) பாராளுமன்றம் (1)ஆம் பந்திக்கு அமைவாக, ஆணைக்குழுவின் கூட்டங்கள், இலங்கை அரச கணக்காய்வு சேவை தாபிக்கப்படுதல் மற்றும் அவற்றோடு தொடர்புபட்ட அதற்கு இடைநேர்விளைவான வேறு கருமங்கள் என்பவற்றுக்காக சட்டத்தினால் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

153இ.(1) இலங்கை அரச கணக்காய்வுச் சேவையைச் சார்ந்த உறுப்பினர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக்கட்டுப்பாடு மற்றும் உறுப்பினர்களின் பதவிநீக்கம் என்னும் தத்துவங்கள் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழு பின்வரும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்:-

*(அ)* அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் கொள்கைக்கு அமைவாக, இலங்கை அரச கணக்காய்வுச் சேவையைச் சார்ந்த உறுப்பினர்களின் ஆட்சேர்ப்பு, நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் பற்றிய திட்டங்கள் தொடர்பில் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் கொள்கைக்கு அமைவாக அவை தொடர்பில் விதிகளை ஆக்குதல்;

*(ஆ)* சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் ஆண்டுக்கான மதிப்பீடுகளை தயாரித்தல்; அத்துடன்

*(இ)* சட்டத்தினால் ஏற்பாடு செய்யக்கூடியவாறான அத்தகைய வேறு தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல்.

(3) ஆணைக்குழு (2)ஆம் பந்தியின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(4) அத்தகைய ஒவ்வொரு விதியும் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய விதிகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(5) அத்தகைய ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் அத்தகைய வெளியீட்டிலிருந்து மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் விதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் இதற்குமுன் அதன் கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதாக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

153ஈ. (1) ஆணைக்குழுவின், அதன் எவரேனும் உறுப்பினரின் அல்லது இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் எவரேனும் அலுவலரின் ஏதேனும் முடிபில், அவரது கடமையின்போது தவிர, நேரடியாக அல்லது மறைமுகமாக, தானாக அல்லது எவரேனும் வேறு ஆளினூடாக, எத்தன்மைத்தான ஏதேனும் முறையில் செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றம் ஒவ்வொன்றும் (1)ஆம் பந்தியில் குறிப்பீடு செயயப்பட்ட ஏதேனும் கருமத்தை விசாரிப்பதற்கும் தீர்மானிப்பதற்கும் நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

153உ. நூற்று இருபத்தாறாம் உறுப்புரையின் கீழ் உயர்நீதிமன்றத்தின் மீது அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கத்துக்கமையவும் மற்றும் 153எ என்னும் உறுப்புரையின் கீழ் நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமையவும், இவ்வத்தியாயத்தின் கீழ் அல்லது ஏதேனும் சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவுக்கு குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் பணிகளைப் புரிவதன் பயனாக ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை விசாரணை செய்வதற்கான, வெளிப்படுத்துவதற்கான அல்லது கேள்விக்குட்படுத்துவதற்கான எத்தகையதுமான தத்துவத்தை அல்லது நியாயாதிக்கத்தை எந்த நீதிமன்றமோ நியாயசபையோ கொண்டிருத்தலாகாது.

153ஊ.ஆணைக்குழுவின் செலவுகளும் செலவினங்களும் திரட்டுநிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

153எ. இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் எவரேனும் அலுவலரின் நியமனம், பதவியுயர்வு அல்லது இடமாற்றம் தொடர்பிலான ஏதேனும் கட்டளையினால் அல்லது அத்தகைய அலுவலர் தொடர்பில் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட ஒழுக்காற்று கருமம் அல்லது பதவிநீக்கம் ஒன்றின் மீதான ஏதேனும் கட்டளையினால் இன்னலுற்ற அத்தகைய அலுவலர் 59ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன், அது ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை மாற்றுவதற்கான, வேறுபடுத்துவதற்கான, இல்லாதாக்குவதற்கான அல்லது உறுதிப்படுத்துவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

153ஏ. ஆணைக்குழு அதன் பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கிணங்க

பாராளுமன்றத்துக்குப் பொறுப்பாதலும் வகை சொல்ல வேண்டியதாலும் கூறற்பாலதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆண்டில் அதன் செயற்பாடுகளின் அறிக்கையொன்றை ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும் பாராளுமன்றத்துக்கு சமா்ப்பித்தலும் வேண்டும்.”.

20. அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரையில் அவ்வுறுப் புரையில் (1)ஆம் பந்தியில் “பாராளுமன்றப் பேரவை, 41அ என்னும் உறுப்புரைக்கான அட்டவணை Iஇல் குறிப்பீடு செய்யப்பட்ட” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக “அரசியலமைப்புப் பேரவை, 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்படும்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

21. அரசியலமைப்பின் 154ண ஆம் உறுப்புரையில் அவ்வுறுப்புரையில் (1)ஆம் பந்தியில் *(இ)* எனும் உட்பந்தியில் “41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக “அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

22. அரசியலமைப்பின் 155அ என்னும் உறுப்புரையில், அவ்வுறுப்புரையில் (1)ஆம் பந்தியில் “41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக “அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

23. அரசியலமைப்பின் 155ஆ என்னும் உறுப்புரை அவ்வுறுப்புரையின் (4)ஆம் பந்தியை உடனடுத்துப் பின்னா் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

“(5) பொலிசு பரிசோதகா் தலைமையதிபதி, அவா் தொடா்பில் கவனத்திற்கெடுக்கப்படும் ஏதேனும் விடயம் தவிா்ந்து, ஆணைக்குழுவின் கூட்டங்களில் சமுகமாயிருப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும். அத்தகைய கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரிமையை அவா் கொண்டிருத்தலாகாது.”.

24. அரசியலமைப்பின் 155இ என்னும் உறுப்புரையில், “நூற்றுயிருபத்தாறாம் உறுப்புரையின் (1)ஆம் பந்தியின்கீழ் உயா்நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கத்திற்கு அமைய”” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ““நூற்றியிருபத்தாறாம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின்கீழ் உயா்நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கத்திற்கும் மற்றும் 155ஔ என்னும் உறுப்புரையின்கீழ் நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங் களுக்கும் அமைய”” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

25. அரசியலமைப்பின் 155ஊஊஊ ஆம் உறுப்புரையை உடனடுத்துப் பின்னா் பின்வரும் உறுப்புரைகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை முறையே அரசியலமைப்பின் 155எ, 155ஏ, 155ஒ, 155ஓ மற்றும் 155ஔ ஆம் உறுப்புரைகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

155எ. (1) *(அ)* பொலிசு பரிசோதகா் தலைமையதிபதி தவிா்ந்த வேறு பொலிசு அலுவலா்களின் நியமனம், பதவியுயா்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் என்பன ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். ஆணைக்குழு பொலிசு பரிசோதகா் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் பதவியுயா்வு, இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் தொடா்பில் அதன் தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.

*(ஆ)* ஆணைக்குழுவானது இவ்வுறுப்புரையின் கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில், அரசியலமைப்பின் XVIIஅ என்னும் அத்தியாயத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மாகாண பொலிசு சேவை ஆணைக்குழுக்கள் தாபிக்கப்பட்டால் அல்லது தாபிக்கப்படும்போது, அத்தகைய ஆணைக்குழுக்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் மதிப்புக் குறைத்தல் ஆகாது.

(2) ஆணைக்குழுவானது, பொலிசு அலுவலா் ஒருவருக்கு அல்லது பொலிசு சேவைக்கு எதிராகச் செய்யப்படும் பொதுமக்களின் முறைப்பாடுகளையும் எவரேனும் இன்னலுற்ற ஆளின் முறைப்பாடுகளையும் ஏற்றுக் கவனிப்பதற்கும், புலனாய்வு செய்வதற்குமான நடவடிக்கை முறைகளைத் தாபித்தல் வேண்டுமென்பதுடன், சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறான நிவாரணத்தை ஏற்பாடுசெய்தலும் வேண்டும். ஆணைக்குழு நிவாரணத்தை வழங்கும்பட்சத்தில், ஆணைக்குழுவானது பொலிசு பரிசோதகா் தலைமையதிபதிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழு, பொலிசு அலுவலா்கள் தொடா்பில் பின்வருவன உள்ளிட்ட எல்லாக் கருமங்களையும் பொலிசு பரிசோதகா் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் ஏற்பாடு செய்தலும் தீா்மானித்தலும் வேண்டும்:-

*(அ)* ஆட்சோ்ப்பு, பதவியுயா்வு மற்றும் இடமாற்றங்கள் தொடா்பிலான அமைச்சரவையினால் தீா்மானிக்கப்பட்ட கொள்கைக்கு அமைவாக அவற்றுக்கான திட்டங்களை வகுத்தமைத்தல்;

*(ஆ)* பயிற்சியளித்தல் மற்றும் பொலிசு சேவையின் வினைத்திறனையும் மற்றும் சுதந்திரத்தையும் மேம்படுத்தல்;

*(இ)* தேசிய பிரிவினதும் மாகாண பிரிவுகளினதும் பயன்பாட்டுக்கு அவசியமான ஆயுதங்கள், வெடிமருந்துகள், மற்றும் வேறு உபகரணங்கள் ஆகியவற்றின் தன்மையும் வகையும்; அத்துடன்

*(ஈ)* நடத்தை பற்றிய கோவைகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைமுறைகள்.

(4) ஆணைக்குழு அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையில் உள்ளடக்கியுள்ள நிரல் Iஇன் பின்னிணைப்பு Iஇன் கீழ் அதற்குரித்தாக்கப்பட்டதான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தலும் அத்தகைய எல்லாக் கடமைகளையும் பணிகளையும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

155ஏ. (1) ஆணைக்குழுவானது, அதனால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வகுதிகளைச் சோ்ந்த பொலிசு அலுவலா்களின் நியமனம், பதவியுயா்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கத் தத்துவங்களை ஆணைக்குழுவினால் பெயா்குறித்து நியமிக்கப்பட வேண்டியதான (ஆணைக்குழுவின் உறுப்பினா்களைக் கொண்டிராத) ஆணைக்குழுவின் குழுவொன்றுக்கு கையளிக்கலாம்.

(2) ஆணைக்குழு ஏதேனும் அத்தகைய குழுவின் நியமனத்தை வா்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(3) ஓராம் பந்தியின் கீழ் பெயா்குறித்து நியமிக்கப்பட்ட குழுவொன்றின் கூட்டங்களுக்கான நடபடிமுறை மற்றும் கூட்ட நடப்பெண் என்பன ஆணைக்குழுவினால் ஆக்கப்படும் விதிகளுக்கிணங்க இருத்தல் வேண்டும். ஆணைக்குழு அத்தகைய விதிகளை வா்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

155ஒ. (1) ஆணைக்குழு, ஏதேனும் வகுதியைச் சேர்ந்த பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு மற்றும் பதவிநீக்கத் தத்துவங்களை ஆணைக்குழுவால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் நடைமுறைகளுக்கும் அமைய, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் எவரேனும் பொலிசு அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(2) ஆணைக்குழு ஏதேனும் அத்தகைய கையளிப்பை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

155ஓ. (1) ஆணைக்குழு, ஏதேனும் வகுதியைச் சேர்ந்த பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் தொடர்பிலான அதன் தத்துவங்களை எவரேனும் பொலிசு அலுவலருக்கு 155ஒ ஆம் உறுப்புரையின்கீழ் கையளித்துள்ளவிடத்து, பொலிசு பரிசோதகர் தலைமையதிபதி, அவருக்கு கையளிக்கப்பட்ட தத்துவங்களை பிரயோகிக்கையில் அத்தகைய பொலிசு அலுவலரால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கெதிராக ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமையை கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பொலிசு அலுவலர் ஒருவர் தொடர்பில் 155ஏ மற்றும் 155ஒ ஆம் உறுப்புரைகளில் குறிப்பீடு செய்யப்பட்ட குழுவொன்றினால் அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் அல்லது பொலிசு அலுவலரால் செய்யப்பட்ட பதவியுயர்வு, இடமாற்றம் தொடர்பான ஏதேனும் கட்டளையால் அல்லது ஒழுக்காற்று விடயம் அல்லது பதவிநீக்கம் மீதான ஏதேனும் கட்டளையால் இன்னலுற்ற பொலிசு அலுவலர் ஒருவர், ஆணைக்குழுவினால் மேன்முறையீடொன்றைச் செய்வதற்கும் கேட்கப்படுவதற்கும் நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கைமுறையையும் நேரகாலப்பகுதியையும் ஒழுங்குபடுத்தி காலத்துக்குக் காலம் ஆணைக்குழுவினால் ஆக்கப்படும் விதிகளுக்கிணங்க, அத்தகைய கட்டளைக்கெதிராக ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(3) ஆணைக்குழுவானது, (1)ஆம் பந்தியின் கீழ் அல்லது (2)ஆம் பந்தியின் கீழ் செய்யப்பட்ட மேன்முறையீட்டின் மீது அத்தகைய கட்டளையை மாற்றுவதற்கான, வேறுபடுத்துவதற்கான, இல்லாதாக்குவதற்கான அல்லது உறுதிப்படுத்துவதற்கான அல்லது அது தொடர்பில் பணிப்புக்களை வழங்குவதற்கான அல்லது அது பொருத்தமானதென அதற்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய மேலதிக அல்லது வேறு விசாரணைக்கு கட்டளையிடுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது, இவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியின் கீழ் காலத்துக்குக்காலம் அதனால் ஆக்கப்படும் விதிகளை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(5) உறுப்புரை 155ஏ மற்றும் 155ஒ என்பவற்றின் கீழ் குழுவொன்றுக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அல்லது பொலிசு அலுவலர் ஒருவருக்கு செய்யப்படும் அதன் தத்துவங்களின் ஏதேனும் கையளிப்பின் மீது, ஆணைக்குழுவானது, அதன் தத்துவங்களின் அத்தகைய கையளிப்பு வலுவில் இருக்கையில், இதனகத்துமுன்னர் ஏற்பாடு செய்யப்பட்ட மேன்முறையீட்டு உரிமைக்கமைவாக, எந்த வகுதியைச் சேர்ந்த பொலிசு அலுவலர்கள் தொடர்பில் அத்தகைய கையளிப்பு செய்யப்படுகின்றதோ அந்த வகுதியைச் சேர்ந்த பொலிசு அலுவலர்கள் தொடர்பில் அதன் தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளை பிரயோகித்தலோ நிறைவேற்றுதலோ அல்லது புரிதலோ ஆகாது.

155ஔ. எவரேனும் பொலிசு அலுவலர் தொடர்பில், உறுப்புரை 155ஓ என்னும் நியதிகளின்படி ஆணைக்குழுவால் செய்யப்பட்ட பதவியுயர்வு, இடமாற்றம் அல்லது ஒழுக்காற்று விடயம் மீதான ஏதேனும் கட்டளை அல்லது பதவிநீக்கம் என்பன தொடர்பான ஏதேனும் கட்டளையால் இன்னலுற்ற எவரேனும் பொலிசு அலுவலர் 59ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு மேன்முறையீடு செய்யலாம். நியாய சபை, அந்நிருவாக மேன்முறையீட்டு ஆணைக்குழுவால் செய்யப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை மாற்றுவதற்கு, வேறுபடுத்துவதற்கு, இல்லாதாக்குவதற்கு அல்லது உறுதிப்படுத்துவதற்கு தத்துவத்தைக் கொண்டுள்ளது.".

26. அரசியலமைப்பின் 155க என்னும் உறுப்புரையானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உறுப்புரை இடப்படுகின்றது:-

155க. ஆணைக்குழுவானது வேறு விதமாக ஏற்பாடு செய்யும்வரை, பொலிசுப்படை தொடர்பில் இவ்வுறுப்புரை நடைமுறைக்குவரும் தேதியன்று வலுவிலுள்ளவாறான எல்லா விதிகளும் ஒழுங்குவிதிகளும் மற்றும் நடவடிக்கைமுறைகளும் தொடர்ந்து செயற்பாடுடையதாதலும் வலுவிலிருத்தலும் வேண்டும்.".

27. அரசியலமைப்பின் 156ஆம் உறுப்புரையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியில் "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (5)ஆம் பந்தியில், "41அ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தக்கமைய" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

28. பின்வரும் புதிய அத்தியாயங்கள் அரசியலமைப்பில் அத்தியாயம் XIX இனை உடனடுத்துப்பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முறையே அரசியலமைப்பின் XIXஅ மற்றும் XIXஆ என்னும் அத்தியாயங்களாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"அத்தியாயம் XIXஅ

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு**

156அ. (1) பாராளுமன்றம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்காக ஆணைக்குழுவொன்றினைத் தாபிப்பதற்கு சட்டத்தினால் ஏற்பாடு செய்தல் வேண்டும். அத்தகைய சட்டம் பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்:-

*(அ)* அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியினால் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமனம் செய்வதற்கும்;

*(ஆ)* அதனது சொந்தப்பிரேரணை மீதோ அல்லது அதற்குச் செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்றின் மீதோ இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களின் ஆரம்ப விசாரணை ஒன்றை நடாத்துதல் அல்லது புலன் விசாரணை செய்தலை பணிக்கின்ற தத்துவம் மற்றும் இலஞ்ச அல்லது ஊழல் தொடர்பிலான நடைமுறையிலுள்ள சட்டத்தின் கீழ் தவறுகளுக்கான குற்றவழக்கு தொடருவதற்கான தத்துவம் உட்பட ஆணைக்குழுவின் தத்துவங்களுக்கும்; அத்துடன்

*(இ)* ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சமவாயம் மற்றும் இலங்கை திறத்தவராகவுள்ள ஊழலைத் தடுப்பது தொடர்பிலான வேறு ஏதேனும் சர்வதேச சமவாயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளிற்கும்.

(2) பாராளுமன்றம் அவ்வாறு ஏற்பாடு செய்யும்வரை 1994ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம், ஆணைக்குழு அதனது சொந்தப் பிரேரணை மீதோ அல்லது அதற்குச் செய்யப்பட்ட எழுத்திலான முறைப்பாடு ஒன்றின் மீதோ இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல் ஒன்றை விசாரிப்பதற்கு அல்லது புலனாய்வு செய்வதற்கு அச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவிற்கு அது சட்டமுறையானதாக இருத்தல் வேண்டும் என்ற திரிபுகளுக்கு அமைய ஏற்புடையதாதல் வேண்டும்.

அத்தியாயம் XIXஆ

**தேசிய பெறுகை ஆணைக்குழு**

156ஆ. (1) (இவ்வத்தியாயத்தில் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தேசிய பெறுகை ஆணைக்குழு ஒன்று இருத்தல் வேண்டும். அது பெறுகை, கணக்கியல், சட்டம் அல்லது பொது நிருவாகம் ஆகிய துறைகளில் எண்பிக்கப்பட்ட அனுபவத்தையுடைய ஆட்களிடையேயிருந்து ஆகக்குறைந்தது மூன்று உறுப்பினர்களைக் கொண்ட அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது, சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும். சனாதிபதி, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது உறுப்பினர் ஒருவரை ஆணைக்குழுவின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான கடிதத்தின் மூலம் பதவியை முன்னரே துறந்தாலன்றி அல்லது அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடன் குறித்தளிக்கப்பட்ட காரணத்துக்காக சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலன்றி அல்லது ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கும் தவறொன்றிற்கு சட்ட நீதிமன்றம் ஒன்றினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தாலன்றி அல்லது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக அல்லது மாகாணசபை ஒன்றின் அல்லது உள்ளூ ரதிகாரசபை ஒன்றின் உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலன்றி அல்லது அவர் மீது குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்று 81ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றி, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றிற்கு பதவிவகித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பாராளுமன்றத்தின் தீர்மானம் ஒன்றின் மூலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிகள் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய படிகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தவிசாளர் அல்லது உறுப்பினர் ஆகியோரின் பதவிக்காலத்தின் போது குறைக்கப்படுதலுமாகாது.

156இ. (1) எல்லா அரசாங்க நிறுவனங்களினாலும் பண்டங்கள் மற்றும் சேவைகள், வேலைகள், ஆலோசனைச் சேவைகள் மற்றும் தகவல் முறைமைகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான நியாயமான, ஒப்புரவான, வெளிப்படையான, போட்டியான மற்றும் செலவுத்திறனான நடவடிக்கை முறைகளையும் வழிகாட்டிநெறிகளையும் வகுத்தமைத்தலும், அவ்வழிகாட்டிநெறிகளை வர்த்தமானியில் வெளியிடச் செய்தலும் மற்றும் அத்தகைய வெளியீட்டிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் இடச்செய்வித்தலும் ஆணைக்குழுவின் பணியாதல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியில் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வருவனவற்றைச் செய்தல் ஆணைக்குழுவின் பணிகளாதல் வேண்டும்:-

*(அ)* அரசாங்க நிறுவனங்களினது பண்டங்கள் மற்றும் சேவைகளின், வேலைகளின், ஆலோசனை சேவைகளின் மற்றும் தகவல் முறைமைகளின் எல்லா பெறுகைகளும் முன்னரே அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்ட பெறுகை திட்டங்களின் அடிப்படையானதா என்பது பற்றி, கண்காணித்தலும் தோதான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்;

*(ஆ)* அரசாங்க நிறுவனங்களிற்கு பண்டங்கள் மற்றும் சேவைகளை, வேலைகளை, ஆலோசனைச் சேவைகளை மற்றும் தகவல் முறைமைகளை வழஙகுவதற்கான தகைமை பெற்ற விலைகூறுபவர்கள் யாவருக்கும் அப்பண்டங்கள் மற்றும் சேவைகளையும், வேலைகளையும், ஆலோசனை சேவைகளையும் மற்றும் தகவல் முறைமைகளையும் வழங்குவதற்காக விலைகூறும் செயற்பாட்டில் பங்குபற்றுவதற்கான சமமான சந்தர்ப்பம் ஒன்று அளிக்கப்படுகின்றதா என்பது பற்றி கண்காணித்தலும், தோதான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்;

*(இ)* அரசாங்க நிறுவனங்களிற்கான பண்டங்கள் மற்றும் சேவைகளை, வேலைகளை, ஆலோசனைச் சேவைகளை மற்றும் தகவல் முறைமைகளை வழங்குவதற்கான ஒப்பந்த காரர்களைத் தெரிவு செய்வதற்கும், ஒப்பந்தங்கள் வழங்குவதற்குமான நடவடிக்கை முறைகள் நியாயமானதும் வெளிப்படையானவையாகவும் இருக்கின்றனவா என்பது பற்றி கண்காணித்தலும் தோதான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்;

*(ஈ)* அரசாங்க நிறுவனங்களினால் நியமிக்கப்படும் பெறுகைகள் தொடர்பாக பெறுகைக் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் ஆகியனவற்றின் உறுப்பினர்கள், பொருத்தமான தகைமையுடையவராக இருக்கின்றார்களா என அறிக்கையிடுதலும்; அத்துடன்

*(உ)* தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கும் வழிகாட்டிநெறிகளுக்கும் புறம்பே அரசாங்க நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட பெறுகைகள் பற்றிய அறிக்கைகளைப் புலனாய்வு செய்தலும், அத்துடன் அத்தகைய பெறுகைகளிற்கு பொறுப்பான அலுவலர்களை அவசியமான நடவடிக்கைக்காக இயைபான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்.

156ஈ. (1) ஆணைக்குழு எழுத்திலான அறிவித்தல் மூலம் பின்வருவனவற்றைச் செய்ய எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம்:-

*(அ)* ஆணைக்குழுவினால் கேள்விக்குட்படுத்தப்படுவதற்காக ஆணைக்குழுவின் முன்னர் சமுகமளிப்பதற்கு;

*(ஆ)* அவ்வாளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ளதும், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டதுமான ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை ஆணைக்குழுவுக்கு காண்பிப்பதற்கு;

(2) *(அ)* ஓராம் பந்தியின் கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றினால் அவ்வாறு செய்வதற்கு தேவைப்படும்போது, ஆணைக்குழுவின் முன்னர் தோன்றுவதற்கு நியாயமான காரணமின்றித் தவறுகின்ற;

*(ஆ)* அத்தகைய அறிவித்தலுடன் இணங்கியொழுகுவதில் ஆணைக்குழுவுக்கு முன்னர் தோன்றி, ஆனால் ஆணைக்குழுவால் அவரிடம் கேட்கப்பட்ட எவையேனும் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு நியாயமான காரணமின்றி மறுக்கின்ற; அல்லது

*(இ)* ஓராம் பந்தியின் கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றில் காண்பிக்கப்படுதற்கு தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளைக் காண்பிப்பதற்கு நியாயமான காரணமின்றி தவறுகின்ற அல்லது மறுக்கின்ற;

ஒவ்வோராளும் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மீது, ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154ஒ ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம் ஒவ்வொன்றும் (2)ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் கருமத்தை விசாரிப்பதற்கும், தீர்மானிப்பதற்கும் நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

156உ.(1) ஆணைக்குழுவானது அதன் பணிகளை புரிதலுக்காக அவசியமாக இருக்கக்கூடியவாறாக அடிக்கடி கூடுதல் வேண்டும்.

(2) தவிசாளர் ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் சமுகமளிக்கத் தவறின், சமுகமாயுள்ள உறுப்பினர்கள் அவர்களுக்கிடையேயிருந்து அக்கூட்டத்துக்கான தவிசாளர் ஒருவரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண் மூன்றாதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் முடிபுகள், முடிவு எடுக்கப்படும் கூட்டத்தில் சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், வாக்குகள் சமமாக இருக்கும்பட்சத்தில், தவிசாளர் அல்லது கூட்டத்துக்குத் தலைமைதாங்கும் உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(5) இவ்வுறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைவாக, ஆணைக்குழு அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கைமுறையையும் மற்றும் அத்தகைய கூட்டங்களின் அலுவல்களின் விடயங்களையும் தீர்மானிக்கலாம்.

(6) ஆணைக்குழு, அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடமொன்றுள்ளது எது எவ்வாறிருப்பினும், செயலாற்றுவதற்கு தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவின் செயல், நடவடிக்கை அல்லது முடிபு எதுவும், அத்தகைய வெற்றிடம் காரணமாக அல்லது உறுப்பினரொருவரின் நியமனத்தில் குறைபாடு உள்ளது என்ற காரணத்தால் மட்டும் செல்லுபடியற்றதாகக் அல்லது செல்லுபடியற்ற தாக்கப்படுவதாகக் கருதப்படுதலாகாது.

156ஊ.(1) ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீது, அதன் பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கு அவசியமானதென கருதப்படக்கூடியவாறாக, செயலாளர்நாயகம் மற்றும் அத்தகைய வேறு அலுவலர்களையும் ஆணைக்குழு நியமித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும் அலுவலர்களும் (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் கீழ் ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர் அல்லது அலுவலர் கடமைகளை நிறைவேற்றுவதில் அல்லது அவருடைய பணிகளைப்புரிவதில் அவரால் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாக கருதப்பட்ட ஏதேனும் செயல் அல்லது காரியத்துக்காக ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கு எதிராக வழக்குதுடர்ச்சியெதுவும், வழக்கெதுவும் அல்லது வேறு நடவடிக்கைமுறையெதுவும் தொடுக்கப்படுதல் ஆகாது.

156எ. (1) ஆணைக்குழுவின் செலவுகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

156ஏ. இவ்வத்தியாத்தில் “அரசாங்க நிறுவனம்” என்பது சனாதிபதிக்கான செயலாளர் அலுவலகம், பிரதம அமைச்சரின் செயலாளர் அலுவலகம், அமைச்சரவைச் செயலாளரின் அலுவலகம், 44ஆம் அல்லது 45ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சர்களின் அலுவலகங்கள், நீதித்துறைச் சேவை ஆணைக்குழு, அரசியலமைப்புப் பேரவை, 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆணைக்குழுக்கள், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர், பாராளுமன்ற செயலாளர் நாயகம், அமைச்சுகள், அரசாங்க திணைக்களங்கள், மாகாண சபை, உள்ளூரதிகார சபை, பகிரங்க கூட்டுத்தாபனங்கள், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்ட தொழில் அல்லது வேறு தொழில்முயற்சி மற்றும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்டதாகக் கருதப்பட்ட எந்தக் கம்பெனியில் அரசாங்கம், ஒரு பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூரதிகாரசபை ஐம்பது சதவீதத்திற்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருக்கின்றதோ அந்தக் கம்பெனி ஒன்று என்பனவற்றை உள்ளடக்குகின்றது.”.

29. அரசியலமைப்பின் 170ஆம் உறுப்புரையில், “பகிரங்க அலுவலர்” என்னும் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

“பகிரங்க அலுவலர்” என்பது நீதித்துறை அலுவலர் தவிர்ந்த, ஆனால் பின்வருவோரை உள்ளடக்காத, குடியரசின் கீழ் சம்பளத்துக்காக ஏதேனும் பதவி வகிக்கின்ற ஆளொருவர் என்று பொருள்படும்-

*(அ)* சனாதிபதி;

*(ஆ)* பிரதம அமைச்சர்;

*(இ)* சபாநாயகர்;

*(ஈ)* உறுப்புரை 44 அல்லது 45இன் கீழ் நியமிக்கப்பட்ட ஓர் அமைச்சர்;

*(உ)* உறுப்புரை 46இன் கீழ் நியமிக்கப்பட்ட பிரதி அமைச்சர்;

*(ஊ)* பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்;

*(எ)* அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினர் ஒருவர்;

*(ஏ)* நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர்;

*(ஐ)* உறுப்புரை 41ஆ வில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது உறுப்பினர் ஒருவர்;

*(ஒ)* பாராளுமன்ற செயலாளர் நாயகம்;

*(ஓ)* பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்தொகுதியின் உறுப்பினர் ஒருவர்;

*(ஔ)* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் உறுப்பினர் ஒருவர்;

*(க)* அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர்;

*(ங)* கணக்காய்வாளர் தலைமையதிபதி; அத்துடன்

*(ச)* இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்.”.

30. (1) *(அ)* இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முற்போந்த நாளன்று நிலையாகவுள்ள ஒன்பதாவது பாராளுமன்றம் முன்னரே கலைக்கப்பட்டலொழிய, 2025ஆம் ஆண்டு ஒகத்து 19ஆம் தேதிவரை தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் கலைக்கப்படுதலும் வேண்டும்.

*(ஆ)* இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முற்போந்த நாளன்று சனாதிபதியாகவும் பிரதம அமைச்சராகவும் முறையே பதவி வகிக்கின்ற ஆட்கள் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய தேதிக்குப் பின்னர் பதவியைத் தொடர்ந்தும் வகித்தல் வேண்டும்.

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முற்போந்த நாளன்று பதவிவகிக்கின்ற பின்வரும் ஒவ்வோராளும் அத்தகைய பதவிகளைத் தொடர்ந்தும் வகித்தல் வேண்டும் என்பதுடன் 41இ ஆம் உறுப்புரையின் (3)ஆம் பந்திக்கமைய அதே நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் அப்பதவியின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்:-

*(அ)* பிரதம நீதியரசர்;

*(ஆ)* உயர் நீதிமன்ற நீதிபதிகள்;

*(இ)* நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்;

*(ஈ)* மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர்;

*(உ)* மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள்;

*(ஊ)* சட்டத்துறைத் தலைமையதிபதி;

*(எ)* இலங்கை மத்திய வங்கி ஆளுநர்;

*(ஏ)* கணக்காய்வாளர் தலைமையதிபதி;

*(ஐ)* பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி;

*(ஒ)* நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஓம்புட்சுமான்);

*(ஓ)* பாராளுமன்றச் செயலாளர் நாயகம்;

*(ஔ)* மேல் நீதிமன்ற நீதிபதிகள்; அல்லது

*(க)* நீதிமுறை அலுவலர்கள், அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்கள், பகிரங்க அலுவலர்கள் அல்லது பொலிசு அலுவலர்கள்,

(3) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முற்போந்த நாளன்று பாராளுமன்ற பேரவையின் உறுப்பினர் ஒருவராக பதவிவகிக்கின்ற ஒவ்வொரு ஆளும், இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்து பயன்பட பாராளுமன்ற பேரவையின் உறுப்பினர் ஒருவராக பதவியை வகிக்காதொழித்தல் வேண்டும்.

(4) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முற்போந்த நாளன்று பின்வருவனவற்றின் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக பதவிவகிக்கின்ற ஒவ்வோராளும் இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்து பயன்பட அத்தகைய பதவியை வகிக்காதொழித்தல் வேண்டும்,-

*(அ)* தேர்தல் ஆணைக்குழு;

*(ஆ)* பகிரங்க சேவை ஆணைக்குழு;

*(இ)* தேசிய பொலிசு ஆணைக்குழு;

*(ஈ)* இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு;

*(உ)* இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பிலான சார்த்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு;

*(ஊ)* நிதி ஆணைக் குழு; அத்துடன்

*(எ)* எல்லை நிர்ணய ஆணைக்குழு:

ஆயின் எவ்வாறாயினும், இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முற்போந்த தேதியன்று, மேல்குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது ஓர் உறுப்பினராக பதவிவகிக்கின்ற ஆளொருவர், அரசியலமைப்பின் VIIஅ என்னும் அத்தியாயத்துக்கிணங்க முறையேயான ஆணைக்குழுக்கள் அமைத்துருவாக்கப்படும் அத்தகைய தேதிவரை முறையேயான அவர்களது பதவிகளுக்கான தத்துவங்களையும் பணிகளையும் தொடர்ந்து பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும்.

(5) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முந்தைய நாளன்று பகிரங்க சேவை ஆணைக்குழுவின் முன்னர் முடிவுறாதுள்ள

*(அ)* பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் தொடர்பிலான எல்லாக் கருமங்களும்; அத்துடன்

*(ஆ)* பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு பொலிசு அலுவலர்களினால் செய்யப்பட்ட எல்லா மேன்முறையீடுகள் தொடர்பிலான எல்லாக் கருமங்களும்,

அத்தேதியிலிருந்து பயன்பட, 155அ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவுக்கு மாற்றப்படுதல் வேண்டுமென்பதுடன், அவை அதற்கிணங்க தேசிய பொலிசு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

(6) இலங்கை அரச கணக்காய்வு சேவையின் உறுப்பினர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் தொடர்பிலானதும் மற்றும் இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முற்போந்த நாளன்று பகிரங்க சேவை ஆணைக்குழுவின் முன்னர் முடிவுறாதுள்ளதுமான எல்லாக் கருமங்களும் 153அ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட கணக்காய்வு சேவை ஆணைக்குழுவுக்கு அத்தேதியிலிருந்து பயன்பட மாற்றப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க கணக்காய்வு சேவை ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

31. ஐயத்தைத் தவிர்ப்பதற்காக,-

*(அ)* இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முற்போந்த நாளன்று பாராளுமன்றப் பேரவையின் விதப்புரையை அல்லது அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் தேவைப்பாடொன்று உள்ளவிடத்து, பாராளுமன்றப் பேரவைக்கான குறிப்பீடு, இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பயனுறுவதாக அரசியலமைப்புப் பேரவைக்கான குறிப்பீடொன்றாக வாசித்துப்பொருள் கொள்ளப்படுதல் வேண்டுமெனவும்; அத்துடன்

*(ஆ)* அரசியலமைப்பின் 91ஆம் உறுப்புரையின் (1)ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியின் (xiii)ஆம் விடயத்தில் குறித்துரைக்கப்படும் தமைமையீனத்திற்கு அமைந்தவராக உள்ளவரான இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முற்போந்த நாளன்று உளதாம் ஒன்பதாம் பாராளுமன்றத்தின் எவரேனும் உறுப்பினர் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து பயனுறுவதாக பாராளுமன்றத்தில் அமர்வதற்கும் வாக்களிப்பதற்கும் தகைமையற்றவராதல் வேண்டும் எனவும், இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

32. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2022ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க, நொத்தாரிசு (திருத்தச்) சட்டம்

[2022ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

### நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம் (107ஆம் அத்தியாயம்)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க, நொத்தாரிசு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (107ஆம் அத்தியாயமான) நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்தின் 3ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"3. (1) சட்டத்தரணியாக அனுமதிக்கப்பட்டதற்குப் பின்னர் சட்டக்கல்விப் பேரவையால் நடாத்தப்படும் உறுதிவரைதல் பரீட்சையில் சித்தியடைந்துள்ள வரும், குறைந்த பட்சம் பத்து வருடங்கள் தொடர்ச்சியான காலப்பகுதி ஒன்றிற்கு நொத்தாரிசு ஒருவராக முனைப்பான தொழிலைப் புரிந்துள்ள சட்டத்தரணியிடமிருந்து, அத்தகைய சட்டத்தரணி, ஒரு வருட காலப்பகுதியொன்றுக்கு நொத்தாரிசு தொழிலைக் கற்றுள்ளார் எனவும், இக்கட்டளைச் சட்டத்தில் அல்லது அதன் கீழ் குறித்துரைக்கப்பட்ட உறுதிவரைதல் செயல்முறைகள், விதிகள் மற்றும் வழிகாட்டு நெறிகளுடன் முழுமையாகப் பரீட்சயமுள்ளவர் என்றும் பொருள்படுவதான இதற்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்ட படிவம் ஆ1 இலுள்ள சான்றிதழ் ஒன்றை பெற்றுள்ளவருமான அத்தகைய சட்டத்தரணி ஒவ்வொருவரும், அவருக்கு அதிகாரமளிக்கின்ற எழுத்தாணை ஒன்றிற்கான விண்ணப்பத்தின் மீது தான் வசிக்கும் நீதிநிருவாக வலயத்தினுள் அவர் உறுதிவரைதல் பரீட்சையில் சித்தியடைந்த மொழியில் நொத்தாரிசாக தொழில்புரிவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் எழுத்தாணையொன்று வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு நொத்தாரிசும், ஒரு நொத்தாரிசாகத் தொழில்புரிவதற்குத் தொடங்கு முன்னர், இயைபான காணிப் பதிவகத்தின் பதிவாளருக்குத் தொழில் தொடங்குகின்றமை பற்றிய கடிதமொன்றைக் கையளித்தல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1)ஆம் உட்பிரிவில், (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(ஆ) நொத்தாரிசு ஒருவராக அவரது கடமைகளை உரியமுறையிலும் விசுவாசமாகவும் நிறைவேற்றுவதற்காக திரட்டு நிதியத்துக்கு வரவு வைக்கப்பட வேண்டியதும் பத்தாயிரம் ரூபாவான பணத்தொகையொன்றை வைப்பிலிடுவதன் மூலம் மேல் நீதிமன்றத்தின் முன்னர் முறியொன்றை நிறைவேற்றுதல் வேண்டும்; அத்துடன்";

(2) அதன் (2)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு முறியும் நொத்தாரிசின் எழுத்தாணையில் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பின்மீது நியாயாதிக்கங்கொண்டுள்ள மேல் நீதிமன்ற நீதிபதியின் முன்னிலையில் கையொப்பமிடப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(3) அதன் (3)ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலமும்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது "அத்தகைய முறியையும் பிணைப்பொறுப்பையும் கொடுத்திராமலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய முறியைக் கொடுத்திராமலும்" என்னும் சொற்களையும், "பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாதவொரு குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருபத்தை யாயிரம் ரூபாவுக்குக் குறையாதவொரு குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவில் "பிணைப் பொறுப்பை" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "முறியை" என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1) நொத்தாரிசு ஒருவருக்கு மேல் நீதிமன்றமொன்றின் முன்னர் குற்றப்பகர்வு அளிக்கப்பட்டுள்ளவிடத்து, அமைச்சர், சட்டத்துறைத் தலைமையதிபதியின் விண்ணப்பத்தின் மீது, அவரது விளக்கம் முடிவுறும் வரை அவரை நொத்தாரிசுப் பதவியிலிருந்து இடைநிறுத்தலாம்.".

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவானது "அமைச்சரின் அபிப்பிராயப்படி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இக்கட்டளைச் சட்டத்தின் கீழ்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அதன் (1) உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், "திறமையின்மை, வயது, என்னும் சொற்களுக்குப் பதிலாக, "திறமையின்மை" என்னும் சொல்லையிடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அதன் (4)ஆம் உட்பிரிவில், "இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவிற்கு குறையாதவொரு குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பத்தாயிரம் ரூபாவிற்கு குறையாதவொரு குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆம் பிரிவானது, "பத்தாயிரம் ரூபாவிற்கு குறையாததும் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமானவொரு குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு இலட்சம் ரூபாவிற்குக் குறையாததும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாததுமொரு குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (2)ஆம் உட்பிரிவில், "பிணைப்பொறுப்பு" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "முறி" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

(2) அதன் (3)ஆம் உட்பிரிவில், "பிணைப்பொறுப்பை" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "முறியை" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27ஆம் பிரிவு, அதன் (2)ஆம் உட்பிரிவில், "மாச்சு" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "ஏப்பிறல்" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28ஆம் பிரிவானது அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1அ)ஒவ்வொரு நொத்தாரிசும் முன்னைய ஆண்டில் அவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உறுதிகள் அல்லது சாதனங்கள் யாவற்றினதும் இணைப்பிரதிகள் காணிப்பதிவாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன எனப் பயன்படும் சத்தியக் கடதாசி ஒன்றை, அத்தகைய நொத்தாரிசு அத்தகைய விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.".

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (3)ஆம் விதிக்குப்பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

(3) அவர் முன்னிலையில் நிறைவேற்றப்பட்ட அல்லது நிறைவேற்றப்படவுள்ள ஏதேனும் உறுதிக்கு அல்லது சாதனத்துக்கு, எவரேனும் உறுதி முடிப்பவரை அல்லது சாட்சியை, விடயத்திற்கேற்ப, அத்தகைய உறுதியில் அல்லது சாதனத்தில் அல்லது ஏதேனும் இணைப் பிரதியில் அல்லது நொத்தாரிசின் பிரதியில் அத்தகைய உறுதிமுடிப்பவரின் கையொப்பத்தை இடுவதற்கு அல்லது அத்தகைய உறுதிமுடிப்பவரின் அல்லது சாட்சியின் அடையாமொன்றை இடுவதற்கு அல்லது அத்தகைய உறுதிமுடிப்பவரின் இடது அல்லது வலதுகைப் பெருவிரலடையாளத்தை அல்லது வேறு ஏதேனும் விரலடையாளத்தை அல்லது கால் பெருவிரலடையாளத்தை இடுவதற்கு அவர் தேவைப்படுத்துதலோ அனுமதித்தலோ அல்லது அனுமதியளித்தலோ ஆகாது அல்லது அத்தகைய ஏதேனும் நோக்கத்துக்காகப் பின்னர் பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்பட்ட ஏதேனும் தாள் அல்லது வேறு பொருள் மீது அத்தகைய உறுதிமுடிப்பவரை அல்லது சாட்சியை, அத்தகைய உறுதியின் அல்லது சாதனத்தின் முழுமையும் அதன் மீது எழுதப்படும்வரை அல்லது பொளிக்கப்படும்வரை அவரது கையொப்பத்தை இடுவதற்கு அல்லது அத்தகைய உறுதிமுடிப்பவரின் அல்லது சாட்சியின் அடையாளத்தை இடுவதற்கு அத்துடன் அத்தகைய உறுதிமுடிப்பவர், விடயத்துக்கேற்ப, இடது அல்லது வலது பெருவிரலடையாளத்தை அல்லது வேறேதேனும் விரலடையாளத்தை அல்லது கால் பெருவிரலடையாளத்தை இடுவதற்குத்

தேவைப்படுத்துதலாகாது என்பதுடன், எப்பட்சத்திலும் அத்தகைய உறுதிமுடிப்பவரின் கையொப்பமெதுவும் அல்லது இடது அல்லது வலதுகைப் பெருவிரலடையாளம் அல்லது வேறேதேனும் விரலடையாளம் எதுவும் ஒரு வெற்றுத்தாளில் அல்லது ஏதேனும் பூர்த்திசெய்யப்படாத படிவத்தில் ஏதேனும் உறுதிக்காக அல்லது சாசனத்துக்காகப் பெற்றுக்கொள்ளப்படுதலாகாது.";

(2) அதன் (4)ஆம் விதிக்குப்பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

(4) ஏதேனும் உறுதி அல்லது சாதனம் நிலைத்திருக்கக்கூடிய காகிதத்தோல் (பார்ச்மன்ட்) தாள் மீது அல்லது நீலத்தாள் மீது எழுதப்பட்டு, தட்டச்சுச் செய்யப்பட்டு அல்லது அச்சிடப்பட்டு இருந்தாலொழிய அவர் அதனை மெய்யென்று சான்றுப்படுத்துதலோ அல்லது அத்தாட்சிப்படுத் துதலோ ஆகாது.";

(3) அதன் (5) ஆம் விதிக்கு பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

(5)(அ)அவர் முழுமையான பிரிக்கப்படாத காகிதத்தோல் (பார்ச்மன்ட) தாள் அல்லது நீலத்தாள் ஒன்றின் மீது எழுதப்பட்டிருக்கின்ற ஏதேனும் உறுதி அல்லது சாதனத்தை அவர் மெய்யென்று சான்றுப்படுத்துதல் அல்லது அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும்; அல்லது

(ஆ)அவர், இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தனிவேறான தாள்களைப் பயன்படுத்துகின்றவிடத்து அவர்-

(i) ஒவ்வொரு பக்கத்திலும் இலக்மிடுதல் வேண்டும்;

(ii) அத்தகைய ஒவ்வொரு தாள் மீதும் அவரது கையொப்பத்தை இடுதல் வேண்டும்; அத்துடன்

(iii) விடயத்திற்கேற்ப ஒவ்வொரு உறுதிமுடிப்பவரையும், (இதனகத்துப்பின்னர் "அற்றோணி" என்று குறிப்பீடு செய்யப்படும்) அற்றோணித் தத்துவத்தை வைத்திருப்பவரையும் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் அதிகாரமளிக்கப்பட்ட ஆளையும், அத்தகைய ஒவ்வொரு தாளிற்கும் தமது கையொப்பத்தையும் இடது அல்லது வலதுகைப் பெருவிரல் அடையாளத்தை அல்லது ஏதேனும் கைவிரல் அடையாளத்தையும் அல்லது கால்விரல் அடையாளத்தை இடுவதற்கு செய்வித்தல் வேண்டும்.".

(4) அதன் (6)ஆம் விதிக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

(6) தேவைப்பட்ட முத்திரைத் தீர்வை வழங்கப்படுகின்றதென்பதற்கானவோர் உறுதிப்பாடு அவருக்கிருந்தாலொழிய, அவர் ஏதேனும் உறுதியை அல்லது சாதனத்தை மெய்யென்று உறுதிப்படுத்துதலோ அல்லது அத்தாட்சிப்படுத்துதலோ ஆகாது.".

(5) அதன் (7)ஆம் விதியை உடனடுத்துப் பின்வரும் புதிய விதியினை உட்புகுத்துவதன் மூலமும்:-

(7அ) (அ) இக்கட்டளைச் சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் எழுதி நிறைவேற்றப்பட்ட எந்தக் கைமாற்றம், நன்கொடை பரிமாற்றம் அல்லது தொடர்பான எந்த எல்லா உறுதிகளுக்கு அல்லது சாசனங்களுக்கு எந்த முத்திரைத் தீர்வை செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்த முத்திரைத் தீர்வை நொத்தாரிசினால் செலுத்தப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய கொடுப்பனவுக்கான எண்பிப்பாக, இயைபான அரச வங்கியிலிருந்து நொத்தாரிசினால் பெறப்பட்ட மூலப்பற்றுச்சீட்டு உறுதியின் அல்லது சாதனத்தில் இணைப்பிரதிக்கு ஒட்டப்படுதல் வேண்டும்;

(இ) அத்தகைய பற்றுச்சீட்டின் பிரதிகள் அத்தகைய உறுதி அல்லது சாதனத்தின் மூல மற்றும் நொத்தாரிசுப் பிரதியில் ஒட்டப்படுதல் வேண்டும்.";

(6) அதன் (9)ஆம் விதியில், "ஏதேனும் உறுதி அல்லது சாதனத்தை நிறைவேற்றுகின்ற ஆள், அவரை அறிந்திருந்தாலொழிய அல்லது அதற்கான அத்தாட்சிப்படுத்தும் சாட்சிகளில் இருவரை அறிந்திருந்தாலொழிய ஏதேனும் உறுதியை அல்லது சாதனத்தை அவர் மெய்யென்று சான்றுப்படுத்துதலோ அல்லது அத்தாட்சிப்படுத்துதலோ ஆகாது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உறுதி அல்லது சாதனத்திற்கான உறுதிமுடிப்பவர் ஒருவரையும் அல்லது இரண்டு அத்தாட்சிப்படுத்தும் சாட்சிகளையும் நொத்தாரிசு அறிந்திருந்தாலொழிய அல்லது உறுதி அல்லது சாதனத்திற்கான உறுதிமுடிப்பவர்களின் ஆள் அடையாளம், அத்தகைய உறுதிமுடிப்பவரின் தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டின் சுயவிபரப்பக்கம் அல்லது சாரதி உரிமம் என்பவற்றை சோதிப்பதன் மூலம் அத்தகைய நொத்தாரிசினால் அடையாளம் காணப்பட்டிருந்தாலொழிய ஏதேனும் உறுதியை அல்லது சாதனத்தை அவர் மெய் என்று சான்றுப்படுத்துதலோ அல்லது அத்தாட்சிப்படுத்துதலோ ஆகாது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.".

(7) அதன் (14)ஆம் விதிக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

(14) அவர் எவரேனும் உறுதிமுடிப்பவர் அல்லது சாட்சி கையொப்பமிடு முன்னர் அல்லது ஓர் அடையாளத்தை இடு முன்னர் அத்துடன் எவரேனும் உறுதிமுடிப்பவர் தனது இடது அல்லது வலதுகைப் பெருவிரலடையாளத்தை அல்லது வேறேதேனும் விரலடையாளத்தை அல்லது கால் பெருவிரலடையாளத்தை இடுமுன்னர், அத்தகைய உறுதிக்கான அல்லது சாதனத்துக்கான உறுதிமுடிப்பவரினதும் சாட்சிகளதும் முழுப்பெயர்களையும் நிச்சயித்தல் வேண்டுமென்பதுடன், ஏதேனும் உறுதிக்கான அல்லது சாதனத்துக்கான உறுதிமுடிப்பவரொருவர் ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருப்பின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை இடப்படுவதனைச் செய்வித்தலும் வேண்டும்; அத்துடன் அவர், பணிப்பாளர் சபையின் அல்லது அத்தகைய உறுதியை அல்லது சாதனத்தைக் கையொப்பமிடுவதற்குத் தீர்மானத்தின் மூலம் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளின் கையொப்பத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுதிமுடிப்பவரின் அல்லது சாட்சியின் பெயர், அத்தகைய உறுதி முடிப்பவரின் அல்லது சாட்சியின் அடையாளங்காண் ஆவணங்களில் கொடுக்கப்பட்ட பெயரிலிருந்து வித்தியாசப்படின், அவர், அத்தகைய உறுதியின் அல்லது சாதனத்தின் அவரது அத்தாட்சிப்படுத்துகையில், அத்தகைய உறுதிமுடிப்பவரை அல்லது சாட்சியை அத்தகைய பெயரினாலும் அத்துடன் கையொப்பத்தில் எழுதப்பட்டுள்ளள பெயரினாலும் விவரித்தலும் வேண்டும். உறுதிமுடிப்பவர் ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருப்பின், அத்தகைய உறுதியை அல்லது சாதனத்தைக் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கின்ற சபைத் தீர்மானத்தின் பிரதியொன்றை அவர் அத்தகைய உறுதியின் அல்லது சாதனத்தின் நொத்தாரிசுப் பிரதிக்கு இணைத்தலும் வேண்டும்.".

(8) அதன் 15ஆம் விதியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய விதியை உட்புகுத்துவதன் மூலமும்:-

(15அ)(1)(அ) அசைவற்ற ஆதனமொன்று தொடர்பில் ஓர் உறுதியை அல்லது சாதனத்தை, எழுதி நிறைவேற்றுகின்ற-

(i) உறுதி முடிப்பவர் ஒவ்வொருவரும்;

(ii) அற்றோணி ஒவ்வொருவரும்; அல்லது

(iii) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் சபையின் பணிப்பாளர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒவ்வொருவரும்,

(15)ஆம் விதியின் ஏற்பாடுகளுடன் சேர்த்து மேலதிகமாக, அத்தகைய உறுதியின் அல்லது சாதனத்தின் மூலப்பிரதியிலும், இணைப்பிரதியிலும் நொத்தாரிசுப் பிரதியிலும் அவரது கையொப்பத்துக்குமேல் அல்லது அதற்கருகில் அவரது ஏதேனும் கையின் பெருவிரலடையாளத்தை இடுதல் வேண்டும்;

(ஆ) ஓர் உறுதிமுடிப்பவரின், ஓர் அற்றோணியின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் சபையின் பணிப்பாளர்களின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் அத்தகைய கைப் பெருவிரலடையாளத்தைப் பெற்றுக் கொள்ளமுடியாதவிடத்து, அத்தகையவோர் உறுதிமுடிப்பவர், ஓர் அற்றோணி அல்லது ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் ஆள் அத்தகைய உறுதியின் அல்லது சாதனத்தின் மூலப்பிரதியில், இணைப்பிரதியில் மற்றும் நொத்தாரிசுவின் பிரதியில், அவரது கையொப்பத்துக்கு மேல் அல்லது அதற்கருகில் அவரது ஏதேனும் கை விரலடையாளத்தை அல்லது கால் விரலடையாளத்தை இடுதல் வேண்டும்;

(இ) ஓர் உறுதி அல்லது சாதனம் ஓர் அற்றோணியினால் கையொப்பமிடப்படுமிடத்து, அத்தகைய அற்றோணியானவர், அற்றோணித் தத்துவம் உண்மையானதென்றும் வலுவிலுள்ளதென்றும் அத்தகைய உறுதியை அல்லது சாதனத்தை நிறைவேற்றும்போது அளிப்பவர் உயிரோடிருக்கின்றாரென்றும், உறுதிப்படுத்துகின்ற சத்தியக் கடதாசியொன்றை நொத்தாரிசுவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்;

(ஈ) கைமாற்றம்பெறுநர் பராயமடையாத ஒருவராகவிருக்குமிடத்து, சட்டப் பாதுகாவலர் அல்லது பாதுகாவலர் இப்பிரிவின் நோக்கத்துக்காகக் கைமாற்றம்பெறுநரின் சார்பில் செயலாற்றுவதற்கத் தகுதிவாய்ந்த ஆளொருவராகவிருத்தல் வேண்டும்.".

(9) 16ஆம் விதியில்-

(அ) அதன் (அ) என்னும் பந்தியில், "அது அமைந்தி ருக்கும் மதிப்பீட்டு இலக்கம் தெருவின் பெயர், எதுவும் இருப்பின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"அது அமைந்திருக்கும் இடத்தின் மதிப்பீட்டு இலக்கம் தெருவின் பெயர் எதுவும், இருப்பின், அத்துடன் கூட்டாட்சி ஆதனம் ஒன்றின் விடயத்தில் கூட்டாட்சி சிறுகூறு அடையாளம் காணப்படமுடியுமாகவுள்ளவிடத்து அத்தகைய கூட்டாட்சி சிறுகூறு மற்றும் வேறு ஆக்கக்கூறு பற்றியதுமான விபரணமொன்றையும், அத்துடன் கூட்டாட்சி சிறுகூறொன்று அடையாளங் காணப்படமுடியாதுள்ளவிடத்து, முழுக்காணி அல்லது காணிச் சிறுகூறு பற்றியதுமான விபரணமொன்றையும்."; அத்துடன்

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியில், "குறிப்பிடுதல் வேண்டும்." என்னும் சொற்கள் தொடக்கம் அப்பந்தியின் முடிபுவரையிலான சொற்களுக்குப் பதிலாக, "குறிப்பிடுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(10) (அ) அதன் (17)ஆம் விதியின் (ஆ) என்னும் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(ஆ) (i) அவர் காணியின் அல்லது அசையாத ஆதனம் தொடர்பான சொத்தாண்மை மற்றும் பதிவுசெய்யப்பட்ட வில்லங்கங்களைக் கொண்டுள்ள அத்தகைய காணி அல்லது அசையாத ஆதனம் தொடர்பான இறுதிப் பதிவைக் கொண்டுள்ள பக்கத்தின் சான்றுப்படுத்தப்பட்ட இருமடித் தாளை இயைபான காணிப் பதிவகத்தின் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்;

(ii) அவர், ஏதேனும் முன்னைய உறுதி பதிவு செய்யப்பட்டு இருந்திருப்பின், எந்தப் பதிவேட்டில் முன்னைய உறுதி பதிவு செய்யப்பட்டிருந்ததோ அந்தப்பதிவேட்டின் தொகுதியினதும், இருமடித்தாளினதும் இலக்கங்களை உறுதியின் முன்பக்கத்தில் மையினால் எழுதுதல் அல்லது அச்சிடல் வேண்டும்; அத்துடன்

(iii) கைமாற்றல் உறுதியின் அல்லது நன்கொடை உறுதியின் அல்லது பரிமாற்றல் உறுதியின் அல்லது விருப்பாவணத்தின் விடயத்தில் அவர், உறுதியினது அல்லது சாதனத்தினது, மூலப்பிரதிக்கு உறுதிமுடிப்பவரின் கடவுச்சீட்டு அளவினதான சான்றுப்படுத்தப்பட்ட புகைப்படங்களை ஒட்டுதலும் வேண்டுமென்பதுடன், நொத்தாரிசு அதற்கு தனது இலச்சினையை பொறித்தலும் வேண்டும். அத்துடன் அத்தகைய தேசிய அடையாள அட்டையின் அல்லது கடவுச்சீட்டின் அல்லது சாரதி உரிமத்தின் பிரதிகளை நொத்தாரிசின் பிரதியுடன் இணைத்து வைத்திருத்தலும் வேண்டும்;

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

(இ) அவர், உறுதியின் முன்பக்கத்தில் அவரது முழுப்பெயரையும், நொத்தாரிசுக்குக் குறித்தொதுக்கப்பட்ட இலக்கத்தையும், அவரது அலுவலக முகவரியையும், தொலைபேசி இலக்கத்தையும் எழுதுதல் வேண்டும் அவர் ஏதேனும் ஒழுங்கமைப்பில், உருவகத்தில் அல்லது கம்பெனியில் சட்ட அலுவலர் ஒருவராக தொழில் புரிந்தால் அவர் அத்தகைய ஒழுங்கமைப்பின், உருவகத்தின் அல்லது கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட முகவரியைக் குறித்துரைத்தல் வேண்டும்;

(ஈ) ஏதேனும் உறுதிக்கான அல்லது சாதனத்துக்கான திறத்தவர் ஒருவர், கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருப்பின், அவர், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட உருவகத்தினைத் தாபிக்கின்ற கூட்டிணைப்பு சான்றிதழின் அல்லது அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட உருவகத்தை தாபிக்கும் வேறு சாதனத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றையும் பணிப்பாளர் சபையின் விபரங்களையும் வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன்

(உ) அவர், நம்பிக்கைப்பொறுப்பு தொடர்பான உறுதியின் விடயத்தில் நம்பிக்கைபொறுப்பு ஒன்றின் கீழ் செயற்படும்

நம்பிக்கைப்பொறுப்பாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கங்களையும் மற்றும் எந்த ஏற்பாட்டின் கீழ் அவர்கள் உறுதிமுடிப்பதற்கு அவர்கள் அதிகாரமளிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் அத்தாட்சிப்படிவத்தில் குறிப்பிட்டு அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் ஒரு பிரதியை வைத்திருத்தலும் வேண்டும்.".

(11) அதன் (20)ஆம் விதியில்

(அ) அதன் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(ஆ) சொல்லப்பட்ட உறுதியின் அல்லது சாதனத்தின் உறுதி முடிப்பவர்களை அவர் அறிந்துள்ளாரா என்பதையும் அல்லது அவர் தேசிய அடையாள அட்டையை, கடவுச்சீட்டின் சுயவிபரப்பக்கத்தை அல்லது சாரதி உரிமத்தை சோதிப்பதன் மூலம் அடையாளம் கண்டுள்ளாரா என்பதையும் அல்லது அதற்கான சாட்சிகளை அறிந்துள்ளாரா என்பதையும் குறிப்பிடுதல் வேண்டும். அத்துடன் பின்னைய விடயத்தில், அவர், எந்த உறுதிமுடிப்பவரை அல்லது ஏற்றுக் கொள்ளும் எந்த ஆளை சொல்லப்பட்ட சாட்சிகள் அறிந்துள்ளார்கள் என்பதையும் குறித்துரைத்தல் வேண்டும்;";

(ஆ) அதன் (உ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(உ) உறுதியின் அல்லது சாதனத்தின் பிரதிபயனாக அல்லது பிரதிபயனின் பாகமாக அவரது முன்னிலையில் ஏதேனும் பணம் செலுத்தப்பட்டதா அல்லது இல்லையா என்பதனையும், அத்துடன் செலுத்தப்பட்டிருப்பின், அத்தகைய கொடுப்பனவின் உள்ளூர் நாணயத்தில் உண்மைத் தொகையையும் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன், கொடுப்பனவானது காசோலை மூலம், பணம் செலுத்துவதற்கான கட்டளை மூலம், வங்கி வரைவு மூலம் அல்லது வங்கியாளரின் காசோலை மூலம் செய்யப்பட்டிருப்பின் அத்தகைய சாதனத்தின் விபரங்கள் அத்தகைய கொடுப்பனவின் எண்பிப்பாக அத்தாட்சிப்படுத்துதலில் எடுத்துக்கூறப்படுதல் வேண்டும்." அத்துடன்

(இ) அதன் (எ) என்னும் பந்தியில், "குறிப்பிடுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குறிப்பிடுதல் வேண்டும்; அத்துடன்"; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஈ) அதன் (எ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை சேர்ப்பதன் மூலமும்:-

"(ஏ) விருப்பாவணம் ஒன்றின் விடயத்தில் -

(i) மரணசாதனகாரர் விருப்பாவணத்தை எழுதி நிறைவேற்றுவதற்குச் சிறந்த மற்றும் சித்த சுவாதீனமான மனநிலையில் இருந்துள்ளார் என்பதை விருப்பாவணத்தின் அத்தாட்சிப்படுத்துதலில் எடுத்துக்கூறுதல் வேண்டும்; அத்துடன்

(ii) அவரால் பேணப்படும் உறுதிப் பதிவுப்புத்தகத்தில் அத்தகைய விருப்பாவணத்துக்கு குறித்தளிக்கப்பட்ட இலக்கம், திகதி மற்றும் மரணசாதனகாரரின் பெயர் என்பவற்றைப் பதிவுசெய்தல் வேண்டும்.

(12) அதன் (27)ஆம் விதியினை நீக்குவதன் மூலமும்;

(13) அதன் (30) ஆம் விதியில், "பேணிக்காத்தல் வேண்டும்" என்னும் சொற்களில் இருந்து அவ்விதியின் முடிவுவரைக்குமான சொற்களுக்குப் பதிலாக, "அவர் மூலப்பிரதிக்கு பதிவாளர் தலைமையதிபதியிடமிருந்து பெறப்பட்ட அற்றோணித்தத்வத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றையும் அத்துடன் இணைப்பிரதிக்கும் அதன் நொத்தாரிசுப்பிரதிக்கும் அதன் உண்மைப் பிரதிகளையும் இணைத்தல் வேண்டும்."; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(14) அதன் (30)ஆம் விதியினை உடனடுத்துப் பின்வரும் புதிய விதியினை உட்புகுத்துவதன் மூலம்:-

(30அ) ஒவ்வொரு நொத்தாரிசினாலும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒவ்வொரு உறுதியை அல்லது சாதனத்தைப் பதிவுசெய்வதற்காக அதன் அத்தாட்சிப்படுத்தல் தேதியில் இருந்து முப்பதுநாட்கள் காலவதியாவதற்கு முன்னர் பதிவாளருக்குச் சமர்ப்பித்தல் அவரின் கடமையாதல் வேண்டும்:

ஆயினும் அத்தகைய உறுதி அல்லது சாதனம், அவர் தொழில் புரியும் நியாயதிக்கத்துக்கு வெளியே பதிவுசெய்யப்படுவதற்கு தேவைப்படுகின்றவிடத்து அவர், அத்தாட்சிப்படுத்தும் தேதியில் இருந்து அறுபதுநாட்கள் காலவதியாகு முன்னர் பதிவுசெய்வதற்காக அத்தகைய உறுதியை அல்லது சாதனத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

17. முதன்மைச் சட்டவாக்கதத்தின் 34ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்படுகின்றது என்பதுடன் அதற்குப்பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

34. (1) (அ) 31ஆம் பிரிவில் தரப்பட்ட (1)ஆம், (31)ஆம் அல்லது (32)ஆம் விதிகளை மீறி அல்லது புறக்கணித்து அல்லது பின்பற்றுவதை அலட்சியம் செய்து செயலாற்றுகின்ற ஒவ்வொரு நொத்தாரிசும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், அவருக்கு அதனால் உறக்கூடிய ஏதேனும் குடியியல் பொறுப்புடன் சேர்த்து ஐந்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்;

(ஆ) முப்பத்தோராம் பிரிவில் தரப்பட்ட (2), (3), (6), (7), (11), (18, (21), (23), (24) அல்லது (30அ) என்னும் விதிகளை மீறி அல்லது புறக்கணித்து அல்லது பின்பற்றுவதை அலட்சியம் செய்து செயலாற்றுகின்ற ஒவ்வொரு நொத்தாரிசும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், அவருக்கு அதனால் உறக்கூடிய ஏதேனும் குடியியல் பொறுப்புடைமையுடன் சேர்த்து இருபதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்; அல்லது

(இ) முப்பத்தோராம் பிரிவின் தரப்பட்ட வேறு ஏதேனும் விதியை மீறி அல்லது புறக்கணித்து அல்லது பின்பற்றுவதை அலட்சியம் செய்து செயலாற்றுகின்ற ஒவ்வொரு நொத்தாரிசும். தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் அவருக்கு அதனால் உறக்கூடிய ஏதேனும் குடியியல் பொறுப்புடைமையுடன் சேர்த்து ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

(2) நொத்தாரிசு ஒருவர் 31ஆம் பிரிவில் தரப்பட்ட (26)ஆம் விதியின் ஏற்பாடுகளை மீறி அல்லது புறக்கணித்து அல்லது பின்பற்றுவதை அலட்சியம் செய்து செயலாற்றுகின்றவிடத்து, பதிவாளர் தலைமையதிபதி, எழுத்திலான அறிவிதித்தல் ஒன்றின் மூலம் தனிப்பட்ட ரீதியில் அவரிடம் சேர்ப்பிக்கப்பட்ட அல்லது பதிவுத்தபால் மூலம் அவரிடம் சேர்ப்பிக்கப்பட்ட எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய நோக்கத்திற்கான அத்தகைய அறிவித்தலில் அவர் குறித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய மேலதிக காலப்பகுதியினுள் சொல்லப்பட்ட விதியில் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு அத்தகைய நொத்தாரிசினைக் கோரலாம். அத்தகைய அறிவித்தலின் நியதிகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற அத்தகைய நொத்தாரிசின் விடயத்தில், அமைச்சர் பதிவாளர் தலைமையதிபதியினால் அவர் சார்பில் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது அமைச்சர் தகுதியானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நொத்தாரிசு என்ற அவருடைய பதவியிலிருந்து நொத்தாரிசு இடைநிறுத்தப்படலாம்.

(3) நொத்தாரிசாக அவரது பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள நொத்தாரிசு ஒருவர் அத்தகைய இடைநிறுத்தல் பற்றிய அறிவித்தலை பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து ஏதேனும் உறுதி அல்லது சாதனத்தை அத்தாட்சிப்படுத்தலாகாது.

(4) பதிவாளர் தலைமையதிபதி, இயைபான காணிப்பதிவகத்தில் அல்லது நீதிமன்றங்களின் வளவுகளில் அத்தகைய இடைநிறுத்தல் அறிவித்தலின் பிரதியொன்றை வெளிக்காட்டிவைப்பதற்கு பதிவாளர்களை தேவைப்படுத்தி அத்தகைய காணிப் பதிவாளர்களுக்கு மற்றும் மேல் நீதிமன்றங்களின், மாவட்ட நீதிமன்றங்களின் நீதவான் நீதிமன்றங்களின் பதிவாளர்களுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(5) இடைநிறுத்தல் அறிவித்தலில் குறித்ததுரைக்கப்பட்ட காலத்தினுள் இணைப்பிரதிகளைச் சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற நொத்தாரிசு ஒருவர் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டுமென்பதுடன், அமைச்சர், பதிவாளர், தலைமையதிபதியினால் அதன் சார்பில் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது, அத்தகைய நொத்தாரி சின் உரிமத்தை இல்லாதாக்கலாம்.".

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38ஆம் பிரிவானது, அதன் (2)ஆம் உட்பிரிவில், "இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (இ) என்னும் பந்தியில், "கையொப்பம் அல்லது அடையாளம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விடயத்துக்கேற்ப கையொப்பம் இடது கை அல்லது வலது கை பெரு விரலடையாளம் அல்லது வேறு ஏதேனும் கை விரலடையாளம் அல்லது கால் பெருவிரலடையாளம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) "ஐந்து வருடங்களை விஞ்சாத ஏதேனும் காலப்பகுதி ஒன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பத்து வருடங்களை விஞ்சாத ஏதேனும் காலப்பகுதி ஒன்றுக்கு அல்லது அத்துடன் ஒரு இலட்சம் ரூபா குற்றப்பணம் அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற் தண்டனை ஆகிய இரண்டிற்கும் அத்துடன் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான (அ) தொடக்கம் (எ) வரையான பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட நொத்தாரிசின் அத்தகைய செயலின் விளைவாக ஏதேனும் சேதத்தை அல்லது நட்டத்தை அனுபவித்துள்ள ஆளுக்கான அத்தகைய நட்டவீட்டை செலுத்துவதற்கும் ஆளாதலும் வேண்டும்.".

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 41ஆம் பிரிவானது அதன் (1)ஆம் உட்பிரிவில், "பன்னிரெண்டு பஞ்சாங்க மாதங்களை" என்னும் சொற்களிலிருந்து அப்பிரிவின் முடிவு வரையுள்ள சொற்களுக்குப் பதிலாக, "ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43ஆம் பிரிவானது, "மேல் நீதிமன்ற நீதிபதி" என்னும் சொல்லமைப்பின் வரைவிளக்கத்தின் உடன்முன்னராகப் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"சட்டக்கல்விப் பேரவை" என்பது, (276ஆம் அத்தியாயமான) சட்டக் கல்விப்பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவினால் அதற்கு குறித்தளிக்கப்பட்டவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"உறுதி முடிப்பவர்" என்பது,-

*(அ)* ஒரு கைமாற்றல் உறுதி தொடர்பாக, கைமாற்றுநரும் கைமாற்றம்பெறுநரும்; அத்துடன்

*(ஆ)* வேறு உறுதிகள் அல்லது சாதனங்கள் தொடர்பாக, அத்தகைய உறுதிக்கான அல்லது சாதனத்துக்கான திறத்தவர்கள், என்று பொருளாகும்.

22. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் படிவம் ஆ வினை உடனடுத்து பின்வரும் புதிய படிவம் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் படிவம் ஆ 1 ஆக பயனுறுதலும் வேண்டும்:-

"படிவம் ஆ1 [பிரிவு 3]

...........................நீதி நிருவாக வலயத்தின் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரியும் ஆன ...........................ஆகிய நான் .........................ஆந் தேதியன்று நொத்தாரிசு ஒருவராக தொழிலை ஆரம்பித்துள்ளேன் எனவும் தொடர்ச்சியான பத்துவருட காலப்பகுதி ஒன்றுக்கு முனைப்பான தொழிலைப் புரிந்துள்ளேன் எனவும் சட்டத்தரணி திரு/ திருமதி/ செல்வி ......................... தேதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதி ஒன்றுக்கு நொத்தாரிசுத் தொழிலுக்காக எனக்கு கீழ் தனது கற்கைகளை தொடர்ந்துள்ளார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

திகதி..........................

.................................

(கையொப்பம்)
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்
(இலச்சினை பதித்தல்)

(2) அவ்வட்டவணையின் உ என்னும் படிவத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் படிவத்தினை இடுவதன் மூலமும்:-

"படிவம் உ "[பிரிவு 31(21)]

அத்தாட்சிப்படுத்தும் படிவம்

.........................நீதி நிருவாக வலயத்தில் ......................... (பிரசித்த நொத்தாரிசின் முகவரி) சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு .............. ..............................ஆகிய நான், தேசிய அடையாள அட்டை இல./கடவுச்சீட்டு இல. சாரதி உரிமத்தை) வைத்திருப் பவர்களும் (விடயத்திற்கேற்ப வாசிக்க முடியாத வகையில்/ ............................................................................ என) கையொப்பமிட்டுள்ளவர்களான சாட்சிகளின் "(சாட்சிகளின் பெயர்களையும் முகவரிகளையும் முழுமையாக உட்புகுத்துக) முன்னிலையில் தமது கையொப்பத்தை வாசிக்க முடியாத/அல்லது ஜூவானிஸ் என்று இட்டு அவர்களின் (இடது/வலது கையின் பெருவிரல் அடையாளத்தை அல்லது வேறு கைவிரல் அடையாளத்தை அல்லது கால் விரலடையாளத்தை இட்டுள்ளவர்களுமான சொல்லப்பட்ட உறுதிமுடிப்போருக்கு) (பெயர்கள்) சொல்லப்பட்ட நொத்தாரிசு ஆகிய என்னால் மேற்போந்த சாதனம் வாசிக்கப்பட்டு உள்ளதென (அல்லது வாசிக்கப்பட்டு விளங்கப்படுத்தப்பட்டு உள்ளது எனவும்) சொல்லப்பட்ட நொத்தாரிசு ஆகிய என்னாலும் அச்சாதனத்தில் - கையொப்பமிடப்பட்டது எனவும் ................ ஆம் நாளன்று............. ஆம் தேதியில் அதேநேரத்தில் அனைவரும் சமூகமாயிருந்து எனது சமூகத்தில் ஒவ்வொருவரினதும் சமூகத்திலும் கையொப்பமிடப்பட்டது எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

அத்துடன்................. ஆகிய உறுதிமுடிப்பவரை நான் அறிந்துள்ளேன்/ சாட்சிகளை நான் அறிந்துள்ளேன்/ அவர்களின் தேசிய அடையாள அட்டை இல./கடவுச்சீட்டு இல. சாரதி உரிமம்) என்பவற்றை பரிசோதனை செய்ததன் மூலம் அவர்களின் ஆள் அடையாளத்தை நான் சரிபார்த்துள்ளேன்) என்றும் மேற்போந்த சாதனத்தை நிறைவேற்றுவதற்கு முன்னர், நான் உறுதிமுடிப்போரின்/ உறுதிமுடிப்போர்களின் தேசிய அடையாள அட்டை இல./கடவுச்சீட்டு இல. சாரதி உரிமத்தை பரிசோதனை செய்துள்ளேன் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

அத்துடன் நான் உறுதியின் அல்லது சாதனத்தின் மூலப்பிரதிக்கு உறுதிமுடிப்பவர்களின் அண்மைக்கால புகைப்படங்களை ஒட்டியுள்ளேன் எனவும் அத்துடன் (கைமாற்றம் அல்லது நன்கொடையின் விடயத்தில்) ................... ரூபா பெறுமதிக்கான (ரூபா எண்களில்) முத்திரைத் தீர்வையானது................... அரச வங்கியில் ................... மாகாண சபையின் வரவிற்கு செலுத்தப்பட்டிருக்கிறது எனவும் அதற்கு எண்பிப்பாக ............ தேதியிடப்பட்ட ................. ஆம் இலக்கப் பற்றுச்சீட்டின் பணஞ்செலுத்தியமைக்கான அத்தகைய முத்திரைத் தீர்வையின் மூலப்பிரதி இச்சாதனத்தின் இணைப்பிரதியில் ஒட்டப்பட்டுள்ளது எனவும், பிரதிகள் மூலப்பிரதிக்கும் நொத்தாரிசுவின் பிரதிக்கும் ஒட்டப்பட்டிருக்கின்றன எனவும் (வேறு எல்லா விடயங்களிலும்) இச்சாதனத்தின் மூலப்பிரதி ரூபா ......................... பெறுமதியான முத்திரைகளையும் இணைப்பிரதி ரூபா ....................... பெறுமதியான முத்திரைகளையும் கொண்டிருக்கின்றது எனவும் நான் சான்றுப்படுத்துகின்றேன்.

அத்துடன் இதில் குறிப்பிடப்பட்ட பிரதிப்பயன், கொள்வனவுக்காரரினால் விற்பனையாளருக்கு/ குத்தகைப்பெறுநரினால் குத்தகை வழங்குநருக்கும் எனது முன்னிலையில் செலுத்தப்பட்டது) அல்லது எனது முன்னிலையில் செலுத்தப்படவில்லை எனவும் எவ்வாறாயினும் விற்பனையாளர்/ குத்தகைவழங்குநர் இதன் நிறைவேற்றத்துக்கு முன்னர் கொள்வனவுகாரரிடமிருந்து/ குத்தகைப்பெறுநரிடமிருந்து சொல்லப்பட்ட பிரதிப்பயனை பெற்றிருப்பதாக ஒப்புக்கொள்ளுகிறார்கள் எனவும் மேலும் சான்றுப்படுத்தி அத்தாட்சிப்படுத்துகின்றேன். விருப்பாவணம் ஒன்றின் விடயத்தில் நான் மரணசாதனகாரர் விருப்பாவணத்தை நிறைவேற்றுவதற்கு சிறந்த மற்றும் சித்தசுவாதீனமான நிலையில் இருந்துள்ளார் எனவும் அத்துடன் மேலும் சான்றுப்படுத்தி அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

அத்துடன் நான் ............... ஆம் பக்கத்தில் .............ஆம் வரிசையிலுள்ள சொல்/ எழுத்து அழிக்கப்பட்டிருக்கின்றது என்பதுடன் இதன் நிறைவேற்றத்துக்கு முன்னர் மையினால் எழுதப்பட்டிருந்தது/ இல்லாதாக்கப்பட்டிருக்கின்றது எனவும் சான்றப்படுத்தி அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

அத்துடன் பதிவுசெய்யப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை இவ்வுறுதியின் மூலப்பிரதிக்கும் மற்றும் மெய்யென்று சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைப்பிரதிக்கும் மற்றும் நொத்தாரிசின் பிரதிக்கும் நான் இணைத்துள்ளேன் (அற்றோணித்தத்துவத்தின் விடயத்தில்).

அத்துடன் நான் மேலும் இவ்வாண்டுக்கான எனது உரிமத்தைப் புதுப்பித்துள்ளேன் எனவும்/ நடைமுறை ஆண்டுக்கான உரிமத்தை புதுப்பிப்பதற்காக நான் விண்ணப்பித்துள்ளேன் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

திகதி ......................

.........................
(கையொப்பம்)
பிரசித்த நொத்தாரிசு
(இலச்சினை பதித்தல்)

23. ஐயத்தை தவிர்ப்பதற்காக இச்சட்டத்தின் ஏற்பாடுகள்:-

*(அ)* இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் சட்டமுறையாக நிறைவேற்றப்பட்ட ஏதேனும் உறுதியை அல்லது சாதனத்தை மற்றும் (117ஆம் அத்தயாயமான) ஆவணங்களை பதிவுசெய்தல் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க முடிவுறாதிருக்கின்ற பதிவை பாதித்தல் ஆகாது எனவும்;

*(ஆ)* இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சாதனம் அல்லது உறுதியின் மீதான ஏதேனும் முத்திரைத் தீர்வையை விதிப்பதற்கு அல்லது அறவிடுவதற்கு ஏதேனும் மாகாண சபையின் தத்துவங்களில் இருந்து வலுக்குன்றச் செய்தல் ஆகாது எனவும்;

*(இ)* இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் சட்ட நீதிமன்றமுன்னர் முடிவுறாதிருக்கின்ற ஏதேனும் வழக்கை அல்லது துடர்ச்சியை அல்லது வழங்கப்பட்ட சட்ட நீதிமன்றத்தின் ஏதேனும் முடிபை பாதித்தலாகாது எனவும்;

*(ஈ)* இச்சட்டம் தொடங்கும் தேதிக்குமுன்னர் அவரது தொழிலைத் தொடங்கியுள்ள நொத்தாரிசு ஒருவரை முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவின் நியதிகளின்படி முறியொன்றை எழுதி நிறைவேற்றுவதற்கு ஆளாக்குதலாகாது எனவும்,

இத்தால் வெளிப்படுத்துப்படுகின்றது.

24. இச்சட்டத்தின் சிங்கள், தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2022ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க, ஆவணங்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டம்

[2022ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

### ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம் (117ஆம் அத்தியாயம்)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2022ஆம் ஆண்டின்32 ஆம் இலக்க, ஆவணங்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (117ஆம் அத்தியாயமான) ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச்சட்டத்தின் 32ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(1) *(அ)* (இதனகத்துப்பின்னர் இப்பிரிவில் "காணி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஒரு காணிக்கான, ஒரு பிரிக்கப்படாத காணிக்கான, ஒரு காணிச் சிறுகூறுக்கான அல்லது ஒரு கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்கான

(i) உரிமையொன்றை, உரித்தொன்றை அல்லது அக்கறையொன்றைக் கொண்டுள்ளவரும்; அல்லது

(ii) உரிமையொன்றை, உரித்தொன்றை அல்லது அக்கறையொன்றைக் கொண்டுள்ளாரென உரிமைகோருகின்றவரும், (இதனகத்துப்பின்னர் "தடை எச்சரிக்கையாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றவருமான) ஆளொருவர், அத்தகைய காணி சம்பந்தமான ஏதேனும் சாதனத்தின் பதிவுக்கான தடை எச்சரிக்கை பற்றிய அறிவித்தலொன்று அவருக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்துகின்றதும், பொருளளவில் இதற்கான இரண்டாம் அட்டவணையின் படிவம் VIII இலுள்ளது மான தடை எச்சரிக்கையொன்றைப் பதிவுக்காக முன்வைக்கலாம்

*(ஆ)* பதிவுக்காக முன்வைக்கப்பட்ட ஒவ்வொரு தடை எச்சரிக்கையும்-

(i) இருபிரதிகளில் இருத்தலும், காணியிலான உரிமை, உரித்து அல்லது அக்கறையை அல்லது தடை எச்சரிக்கையாளரின் காணியிலான ஓர் உரிமைக்கான, உரித்துக்கான அல்லது அக்கறைக்கான உரிமைக்கோரிக்கைகளை நிலைநாட்டி ஒரு சட்டத்தரணியினால் வழங்கப்பட்டவொரு சான்றிதழுடனும் தடை எச்சரிக்கையாளரின் சத்தியக்கடுதாசி யொன்றுடனும் சேர்த்தனுப்பப் படுதலும் வேண்டும்;

(ii) தடை எச்சரிக்கையாளர் சொந்தக் காரராக இராதவிடத்து, அத்தகைய காணி பதிவுசெய்யப்பட்டுள்ள இயைபான தொகுதியிலும் இருமடித்தாளிலும் எந்தக் காணிச் சொந்தக்காரர்களின் பெயர்களும் முகவரிகளும் கொடுக்கப்படுகின்றனவோ, அந்தக் காணிச் சொந்தக் காரர்களுக்குச் சேர்ப்பிக்கப்படு வதற்கு, முத்திரையிடப்பட்ட கடிதவுறைகளுடனும், இதற்கான இரண்டாம் அட்டவணையின் படிவம் X இலுள்ள அறிவித்தலின் அத்தகைய எண்ணிக்கையின வான பிரதிகளுடனும் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்;

(iii) தடை எச்சரிக்கையாளர் (இதனகத்துப்பின்னர் இப்பிரிவில் "அற்றோணி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அற்றோணித் தத்துவமொன்றை வைத்திருப்பவராக இருக்குமிடத்து, (இதனகத்துப்பின்னர் இப்பிரிவில், "பதிவாளர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பதிவாளர் தலைமையதிபதியுடன் அல்லது இயைபான காணிப்பதிவகத்தின் பதிவாளருடன் அல்லது உரித்துப் பதிவாளருடன் முறையாகப் பதிவுசெய்யப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் மூலப்பிரதியின் சான்றுப்படுத்தப் பட்ட பிரதியொன்றை தடை எச்சரிக்கையாளர் சமர்ப்பித்தல் வேண்டும்; அத்துடன்

(iv) தடை எச்சரிக்கையாளரின் பெயரையும், கையொப்பத்தையும், தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் அல்லது கடவுச்சீட்டு இலக்கத்தையும் அல்லது சாரதி உரிம இலக்கத்தையும் மற்றும் தடை எச்சரிக்கை தொடர்பான அறிவித்தல்கள் சேர்ப்பிக்கப்படவேண்டிய தடை எச்சரிக்கையாளரின் இலங்கையிலுள்ள முகவரியையும், தடை எச்சரிக்கையின் தேதியையும், தடை எச்சரிக்கையாளர் சொந்தக்காரராகவிராதவிடத்து தடை எச்சரிக்கை பற்றிய அறிவித்தல் எந்த ஆட்களுக்கு அனுப்பப்படவேண்டுமோ அந்த ஆட்களின் பெயர்களையும் முகவரிகளையும், தடை எச்சரிக்கை யாளரினால் உரிமை கோரப்பட்ட காணியிலுள்ள உரிமையையும், உரித்தையும் அல்லது அக்கறையையும், உரிமைக்கோரிக்கைக்கு ஆதரவான ஏதுக்களையும் மற்றும் அத்தகைய காணி பதிவுசெய்யப்பட்டுள்ள சரியான தொகுதியையும் இருமடித்தாளையும் சுட்டிக்காட்டி, எல்லைகளுட்பட, காணியின் விவரணத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

*(இ)* இப்பிரிவின் நோக்கத்துக்காக-

(i) "தடை எச்சரிக்கையாளர்" என்பது, ஓர் ஆட்கள் குழுவையும், ஒரு காணி சம்பந்தமான ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்பின் கீழான ஒரு பயன்பெறுநரையும், பராயமடையாத ஒருவரின் அல்லது சித்தசுவாதீனமற்ற ஆளொருவரின் அல்லது உளக்குறைபாடுள்ள ஆளின் சட்டமுறையான பாதுகாவலரையும் அல்லது உதவு நண்பனையும், ஆளொருவரின் அற்றோணி ஒருவரையும், ஒரு தீர்ப்புக்கடன் கொடுநரையும், மரணமடைந்த ஒருவரின் மரணச்சொத்தொன்றின் நிறைவேற்றுநர் ஒருவரையும் அல்லது நிருவாகி ஒருவரையும், அல்லது சட்டப்படியான மரபுரிமையாளரொருவரையும் அல்லது ஒரு காணிச்

சொந்தக்காரருடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ளவரான கொள்வனையாளராகவரவுள்ள ஒருவரையும் அல்லது ஒரு காணியின் அபிவிருத்தியாளர் ஒருவரையும் உள்ளடக்கும்;

(ii) “கூட்டாட்சியாதனச் சிறுகூறு” என்பது, 1973ஆம் ஆண்டின 11ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் 10ஆம் பிரிவின் நியதிகளின்படி 1998ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டவொரு கூட்டாட்சி யாதனச் சிறுகூறு என்று பொருளாகும்; அத்துடன்

(iii) “அக்கறை” என்பது, உடனடியாகப் பதிவுசெய்யப்பட முடியாததாகவுள்ள ஒரு காணி தொடர்பாகப் பதிவுசெய்யப்படாதவோர் உறுதி அல்லது சாதனத்திலிருந்து, ஒரு நம்பிக்கைப் பொறுப்பிலிருந்து, ஒன்றில் மரணசாதனத்துடனான அல்லது மரணசாதனமில்லா வழியுரிமையின் மூலமான ஒரு மரபுரிமையிலிருந்து, ஈடொன்றிலிருந்து அல்லது விற்பனை செய்வதற்கான உடன்படிக்கையொன்று தொடர்பான சாதனங்களிலிருந்து, கூட்டுச் சொத்தாண்மையிலிருந்து, ஒரு கூட்டாட்சியாதனச் சிறுகூறிலிருந்து அல்லது ஒரு பராயமடையாதவரின் அல்லது சித்தசுவாதீனமற்ற ஆளொருவரின் அல்லது உளக்குறைபாடுள்ள ஆளொருவரின் மரணச்சொத்திலிருந்து எழுகின்ற சொத்தாண்மையொன்றிலிருந்து எழுகின்ற அக்கறையை உள்ளடக்கும்.”.

(2) அதன் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலமும்:-

“(1அ) பதிவாளர், (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தேவைப்படுகின்ற எல்லா ஆவணங்களும் தகவல்களும் தடை எச்சரிக்கையாளரினால் வழங்கப்பட்டுள்ளனவெனத் திருப்திப்படுவதன் மீது, அத்தகைய தடை எச்சரிக்கை பெறப்பட்டமையை ஒப்புக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், 27ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட விதித்துரைக்கப்பட்ட விபரங்களைப்பதிதலும் வேண்டும்.

(1ஆ) தடை எச்சரிக்கை பெறப்பட்டதன் மேல், பதிவாளர், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ஐ)ஆம் உட்பந்தியின்கீழ் தடை எச்சரிக்கையாளரினால், எந்த ஆட்களின் பெயர்களும் முகவரிகளும் கொடுத்துதவப்பட்டுள்ளனவோ அந்த ஆட்களுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii)ஆம் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தல்களின் தேதியையும் அவை எந்த ஆட்களுக்கு அனுப்பப்பட்டனவோ அந்த ஆட்களின் பெயர்களையும் மற்றும் அவை எந்த முகவரிகளுக்கு அனுப்பப்பட்டனவோ அந்த முகவரிகளையும் உட்புகுத்துவதன் மூலம் குறிப்பு நிரலில் புறக்குறிப்பொன்றை இடுதலும் வேண்டும்.”;

(3) அதன் (3)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

“(3) தடை எச்சரிக்கையொன்று இரண்டாண்டுகளைக் கொண்ட அதிகபட்சக் காலப்பகுதியொன்றுக்கு வலுவிலிருத்தல் வேண்டும்.”;

(4) அதன் (4)ஆம் உட்பிரிவில், “தடை எச்சரிக்கையாளருக்குக் கொடுக்கப்படவேண்டிய அறிவித்தலானது விதித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “தடை எச்சரிக்கையில் விவரிக்கப்பட்ட அதே காணி சம்பந்தமான சாதனமொன்று பதிவுக்காக அடுத்துப் பின்னர் முன்வைக்கப்பட்டுள்ளவிடத்து, இரண்டாம் அட்டவணையின் படிவம் XI நிலான அறிவித்தலொன்று தடை எச்சரிக்கையாளருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(5) அதன் (5)ஆம் உட்பிரிவில், “முப்பது நாட்களினுள் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றில்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “அறுபது நாட்களினுள் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றில்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1)ஆம் உட்பிரிவில், “கைப்பற்றுகை முன்னுரிமை அறிவித்தலின், தடை எச்சரிக்கையின் அல்லது முடிவுறா வழக்கின்” என்னும் சொற்களுக்குப் பதிலாகக் “கைப்பற்றுகை முன்னுரிமை அறிவித்தலின் அல்லது முடிவுறா வழக்கின்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

“(1அ) (அ) தடை எச்சரிக்கையொன்று பின்வருவோரினால் செய்யப்படும் எழுத்திலான கோரிக்கையின் பேரில், விடயத்துக்கேற்ப, மீளப்பெறப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்:-

(i) தடை எச்சரிக்கையாளரினால்;

(ii) ஓர் அற்றோணியினால்;

(iii) ஒரு தடை எச்சரிக்கையாளர் இறப்பதன்மேல், ஒரு நிறைவேற்றுநரினால், நிருவாகியினால், அல்லது ஒரு சட்டப்படியான மரபுரிமையாளரினால்;

(iv) எந்தப் பராயமடையாதவரின் அல்லது சித்தசுவாதீனமற்ற ஆளொருவரின் அல்லது உளக் குறைபாடுள்ள ஆளின் நலன்கருதி தடை எச்சரிக்கை செய்யப்பட்டதோ, அந்தப் பராயமடையாதவரின் அல்லது சித்தசுவாதீனமற்ற ஆளொருவரின் அல்லது உளக் குறைபாடுள்ள ஆளின் பாதுகாவலரினால் அல்லது உதவு நண்பனினால், பாதுகாவலர் இறப்பதன் மீது அல்லது அகற்றப்படுவதன் மீது வழியுரிமையாளரினால் அல்லது பராயமடையாதவர் பராயமடையும் வயதை எய்துவதன்மேல் பராயமடையாதவரினால்;

(v) கூட்டு தடை எச்சரிக்கையாளர்கள் இருக்குமிடத்தும், அவர்களுள் ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்டோர் இறப்பதன் மேலும், உயிரோடிருக்கும் தடை எச்சரிக்கையாளரினால் அல்லது தடை எச்சரிக்கையாளர்களினால்;

(vi) தடை எச்சரிக்கையாளர் வங்கி முறிந்தவர் ஒருவராகத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அலுவலக முறையான சாட்டுதல்பெறுநரினால்;

(vii) தடை எச்சரிக்கையாளர் ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவும் மற்றும் ஒழித்துக்கட்டுதலின் கீழும் இருக்குமிடத்து, அத்துடன் தடை எச்சரிக்கையாளரினால் உரிமை கோரப்பட்ட மரணச்சொத்து அல்லது அக்கறை, நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட ஒழிப்போனுக்கு உரித்தாக வந்துள்ளவிடத்து, ஒழிப்போனினால் அல்லது அலுவலக முறையான பெறுநரினால்; அல்லது

(viii) ஒரு தடை எச்சரிக்கையின் விடயமாகவுள்ள ஒரு மரணச் சொத்தின் மீது தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் கட்டளை ஒன்று வழங்கப்பட்டுள்ளவிடத்து, ஒரு பிசுக்கால் அலுவலரினால் அல்லது அத்தகைய கட்டளையின் கீழான உரிமைகளைப் பெறுகின்ற வேறெவரேனுமாளினால்.

(ஆ) இதன் (அ) என்னும் பந்தியின்கீழ் மீளப்பெறு கைக்கான சாதனத்தைப் பெற்றதன் மீது, பதிவாளர்:-

(i) மேற்கூறப்பட்ட முறையிலும் தடை எச்சரிக்கையின் தேதியை எடுத்துக் கூறியும் இடாப்பிலுள்ள அதன் பதிவீட்டை இல்லாதொழித்தல் வேண்டும்; அத்துடன்

(ii) எந்த ஆளின் அல்லது ஆட்கள் குழுவின் ஒரு சாதனத்தினது பதிவுக்கான உரிமை, உரித்து அல்லது அக்கறை அத்தகைய தடை எச்சரிக்கையினால் பாதிக்கப்பட்டதோ அந்த ஆளுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு அறிவித்தல் வேண்டும்.".

(3) அதன் (2)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(2அ) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஒரு தடை எச்சரிக்கையின் மீது (2)ஆம் உட்பிரிவின் கீழான ஏதேனும் வழக்குநடவடிக்கை தொடர்பான ஏதேனும் அழைப்புக்கட்டளை, அறிவித்தல், பின்முற்றாகுந்தீர்வை அல்லது கட்டளை, 32ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (iv)ஆம் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தடை எச்சரிக்கையாளரின் இலங்கையிலுள்ள முகவரிக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.".

(4) அதன் (3)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(4) எந்தக் காணி தொடர்பில் (3)ஆம் உட்பிரிவின்கீழ் தடை எச்சரிக்கையின் பதிவு இல்லாதொழிக்கப்பட்டதோ, அதே காணி தொடர்பில் அல்லது காணியிலான அதே அக்கறை தொடர்பில் அதே தடை எச்சரிக்கையாளரின் தடை எச்சரிக்கையொன்றைப் பதிவாளர் பதிவுசெய்தலாகாது.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 50ஆம் பிரிவு, "பயன்படுத்தப்படுதல் வேண்டும், ஆனால் அத்தகைய அட்டவணை ஒழுங்குவிதி மூலம் திருத்தப்படலாம் அல்லது அதற்கெதுவும் சேர்க்கப்படலாம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பயன்படுத்தப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் படிவம் VIII நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய படிவங்களை இடுவதன்மூலமும்:-

"படிவம் VIII

[பிரிவு 32(ஆ)]

தடை எச்சரிக்கையின் படிவம்

..... ஆம் இலக்க (தே.அ.அட்டையை/கடவுச்சீட்டை/சாரதி உரிமத்தைக் கொண்டவரான ........................................... ஆகிய நான் (தடை எச்சரிக்கையாளரின் முழுப்பெயரும் முகவரியும்), இதற்கான அட்டவணையிற் குறிப்பீடுசெய்யப்பட்ட (என்னால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட/ ஏனையோரினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட உரிமையை/ உரித்தை/ அல்லது அக்கறையைக் குறித்துரைக்கவும்) ..................... ....................... காணி சம்பந்தமான ஏதேனும் சாதனத்தின் பதிவுக்கான தடை எச்சரிக்கை பற்றிய அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுவதற்குத் தேவையுடையவராகவுள்ளேன் என்பதைக் கவனிக்கவும்.

அத்துடன் இந்தத் தடை எச்சரிக்கையை எனது சார்பில்/................................. என்பவரின் சார்பில் (தடை எச்சரிக்கையாளர் சொந்தக்காரராகவிராதவிடத்து) பின்வரும் ஏதுவின்மீது/ஏதுக்களின் மீது முன்வைக்கின்றேன் என மேலும் வெளிப்படுத்துகின்றேன்.

...........ஆம் இலக்க உறுதியின் கீழான உரித்து ..................... என்பவரின் இறுதிவிருப்பாவணத்தின் கீழ் ஏனையவை (குறித்துரைக்க வும்)..............................

அத்துடன் இதுதொடர்பான அறிவித்தல்கள் எந்த இடத்துக்கு அனுப்பப்படவேண்டுமோ அந்த இடமாக ................................. என்னுமிடத்தை (இலங்கையிலுள்ள முகவரி) நியமிக்கின்றேன்.

...........................................

(தடை எச்சரிக்கையாளரின்/அவரது சட்டத்தரணியின்
அல்லது நொத்தாரிசுவின்/அற்றோணியின்/கையொப்பம்)

தேதி ........................

....................... என்போரின் முன்னிலையில் (இருசாட்சிகளினதும் முழுப்பெயரும் முகவரியும்) மேலே பெயர்குறிப்பிடப்பட்ட ...................................... என்பவரினால் கையொப்பமிடப்பட்டது.

1. முதலாவது சாட்சியின் கையொப்பம்

2. இரண்டாவது சாட்சியின் கையொப்பம்

அட்டவணை

(அறியப்பட்டிருப்பின், 13 ஆம் பிரிவிலும் முன்னைய பதிவிலும் உள்ளவாறு காணியை விவரிக்கவும்)"; அத்துடன்

(2) அவ்வட்டவணையின் படிவம் IX உடனடுத்துப் பின்வரும் புதிய படிவங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

"படிவம் X

[பிரிவு 32(1)(ஆ)(ii)]

எந்த ஆதனம் தொடர்பில் தடை எச்சரிக்கையொன்று செய்யப்பட்டுள்ளதோ அந்த ஆதனத்தின் சொந்தக்காரரொருவருக்கான அறிவித்தல்

.................. ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும் இக்காணிப்பதிவகத்தில் ......................... ஆம் தொகுதியிலும் ......................... ஆம் இருமடித்தாளிலும் பதிவுசெய்யப்பட்டதும் ..................... எனப் பெயரிடப்பட்டதுமான ஆதனம் தொடர்பில் ..................... என்னுமிடத்தைச் சேர்ந்த ................ என்பவரினால் தடை எச்சரிக்கையொன்று செய்யப்பட்டுள்ளதென்பதைக் கவனிக்கவும்.

(கையொப்பம்)

.......................................

............................. இன்

காணிப்பதிவாளர்

தேதி.........................

படிவம் XI

[பிரிவு 32(4)]

பதிவு முடிவுறாதுள்ள சாதனமொன்று பற்றி தடை எச்சரிப்பாளருக்கான அறிவித்தல்

உம்மால் சமா்ப்பிக்கப்பட்ட ................ ஆந் தேதிய ................ ஆம் இலக்க தடை எச்சரிக்கைக்கெதிராகவுள்ளவாறு, இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சாதனம் இக்காணிப் பதிவகத்தில் .................. இன்......... ஆம் தொகுதியிலும் ..... ஆம் இருமடித்தாளிலும் பதிவு முடிவுறாதுள்ளதாகவிருக்கின்றதென உமக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

(கையொப்பம்)

.......................................

............................. இன்

காணிப்பதிவாளர்

தேதி .........................

| உறுதி இல. | உறுதியின்/ சாதனத்தின் தன்மை | உறுதியை/ சாதனத்தை அத்தாட்சிப்படுத்திய நொத்தாரிசுவின் பெயர் | காணியின் விவரணம் (அட்டவணையின்படி) | திறந்தவர்கள் |
|---|---|---|---|---|
| | | | | |

6. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2022ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம்

[2022ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

### 1978ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. (1) இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வா்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சா் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியில் அல்லது தேதிகளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் வெவ்வேறு ஏற்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காக வெவ்வேறு தேதிகள் நியமிக்கப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னா் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1978ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 2ஆம்

பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

2. இலங்கைக் குடியரசில் நீதியை நிருவகிப்பதற்கான முதனிலை நீதிமன்றங்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

*(அ)* இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றம்;

*(ஆ)* அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணங்களுக்கான மேல் நீதிமன்றங்கள்;

*(இ)* மாவட்ட நீதிமன்றங்கள்;

*(ஈ)* குடும்ப நீதிமன்றங்கள்;

*(உ)* சிறுகோரிக்கை நீதிமன்றங்கள்;

*(ஊ)* நீதிவான் நீதிமன்றங்கள்; அத்துடன்

*(எ)* ஆரம்ப நீதிமன்றங்கள்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

5. (1) இலங்கையின் ஒவ்வொரு நீதிமுறை மாவட்டத்திலும் ஒரு "மாவட்ட நீதிமன்றம்" இருத்தல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் கீழ் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் ஒரு குடும்ப நீதிமன்றத்துக்கு உரித்தாக்கப்பட்ட நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும்போது இது "குடும்ப நீதிமன்றமாகக்" கருதப்படுதலும், இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் ஒரு சிறுகோரிக்கை நீதிமன்றத்துக்கு உரித்தாக்கப்பட்ட நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும்போது இது "சிறுகோரிக்கை நீதிமன்றமாகக்" கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் ஒவ்வொரு நீதிமுறைப் பிரிவிலும் ஒரு "நீதிவான் நீதிமன்றமும்" ஓர் "ஆரம்ப நீதிமன்றமும்" இருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒவ்வொரு நீதிமன்றமும் முறையே "மாவட்ட நீதிபதி", "குடும்ப நீதிமன்ற நீதிபதி" மற்றும் "சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதி", "நீதிவான்" அத்துடன் "ஆரம்ப நீதிமன்ற நீதிபதி" எனவழைக்கப்படவேண்டிய ஆளொருவரினாலும் அவர் முன்னரும் நடாத்தப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு நீதிமன்றமும், அமைச்சர் ஒழுங்குவிதி மூலம் காலத்துக்குக்காலம் நியமிக்க வேண்டியவாறாக, விடயத்துக்கேற்ப, அத்தகைய நீதிமுறை மாவட்டத்தினுள்ளான அல்லது பிரிவினுள்ளான அத்தகைய வசதியான இடத்தில் அல்லது இடங்களில் நடாத்தப்படலாம்:

ஆயின், இப்பிரிவிலுள்ளதெதுவும், நீதிபதி ஒவ்வொருவரும் அவரது ஆள்புல நியாயாதிக்கத்தினுள் ஏதேனும் வசதியான இடத்தில் நீதிமன்றத்தை நடாத்துவதற்குக் கொண்டுள்ள தத்துவத்தை மட்டுப்படுத்துவதாக அல்லது குறைப்பதாகப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலாகாது.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

5ஆ. (1) நீதிச்சேவை ஆணைக்குழுவானது, குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கின்ற ஒரு முதனிலை நீதிமன்றத்துக்கு அல்லது அதற்கு மேற்பட்ட முதனிலை நீதிமன்றங்களுக்கு, முன்விளக்க நீதிபதி எனவழைக்கப்படவேண்டிய மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதிவான்கள் என்போரிடையேயிருந்து ஒரு நீதிமுறை அலுவலரின் நியமனம் தேவையாகவுள்ளதென நீதிச்சேவை ஆணைக்குழு அபிப்பிராயப்படுமிடத்து, அத்தகைய நியமனத்தைச் செய்தல் வேண்டும்.

(2) முன்விளக்க நீதிபதி, (101ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளில் குறித்துரைக்கப்பட்டவாறு முன்விளக்க மாநாடுகளையும் மற்றும் அவர் எந்த நீதிமன்றத்துக்கு நியமிக்கப்படுகின்றாரோ அந்த நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட ஒரு குடியியல் வழக்கு நடவடிக்கையின் போது எழுந்துள்ளவையும் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் குறித்தளிக்கப்பட்டவையுமான விளக்கத்துக்குப் பின்னரான கருமங்களைக் கவனித்தலும் கையாளுதலும் வேண்டும்.".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(1) எல்லா மாவட்ட நீதிபதிகளும், குடும்ப நீதிமன்ற நீதிபதிகளும், சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதிகளும், நீதிவான்களும், ஆரம்ப நீதிமன்ற நீதிபதிகளும், அத்தகைய நீதிமன்றங்களின் அத்தகைய எல்லா மேலதிக நீதிபதிகளும் மேலதிக நீதிவான்களும் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் அவர்களின் பதவிகளுக்கு நியமிக்கப்படுதல் வேண்டும்.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவு, அதன் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(1) நீதிச்சேவை ஆணைக்குழுவானது, சந்தர்ப்பம் தேவைப்படுத்தக்கூடியவாறாக அவ்வெண்ணிக்கையினரான மேலதிக மாவட்ட நீதிபதிகளை, மேலதிகக் குடும்ப நீதிமன்ற நீதிபதிகளை, மேலதிகச் சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதிகளை, மேலதிக நீதிவான்களை அல்லது மேலதிக ஆரம்ப நீதிமன்ற நீதிபதிகளை முறையே அதே மாவட்ட நீதிமன்றத்துக்கு, குடும்ப நீதிமன்றத்துக்கு, சிறுகோரிக்கை நீதிமன்றத்துக்கு, நீதிவான் நீதிமன்றத்துக்கு மற்றும் ஆரம்ப நீதிமன்றத்துக்கு நியமிக்கலாம்.

(2) அத்தகைய ஏதேனும் நீதிமன்றத்துக்கு நியமிக்கப்படும் ஒவ்வொரு மேலதிக மாவட்ட நீதிபதியும், மேலதிகக் குடும்ப நீதிமன்ற நீதிபதியும், மேலதிகச் சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதியும், மேலதிக நீதிவானும் அல்லது மேலதிக ஆரம்ப நீதிமன்ற நீதிபதியும் தனிவேறாக அமர்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய மேலதிக மாவட்ட நீதிபதி, மேலதிகக் குடும்ப நீதிமன்ற நீதிபதி, மேலதிகச் சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதி, மேலதிக நீதிவான் அல்லது மேலதிக ஆரம்ப நீதிமன்ற நீதிபதி, விடயத்துக்கேற்ப, அம்மாவட்டத்தின் அல்லது பிரிவின் எந்த மாவட்ட நீதிமன்றத்துக்கு, குடும்ப நீதிமன்றத்துக்கு, சிறுகோரிக்கை நீதிமன்றத்துக்கு, நீதிவான் நீதிமன்றத்துக்கு மற்றும் ஆரம்ப நீதிமன்றத்துக்கு அவ்வாறு நியமிக்கப்படுகின்றாரோ, முறையே அந்த மாவட்ட நீதிமன்றத்துக்கு, குடும்ப நீதிமன்றத்துக்கு, சிறுகோரிக்கை

நீதிமன்றத்துக்கு, நீதிவான் நீதிமன்றத்துக்கு மற்றும் ஆரம்ப நீதிமன்றத்துக்கு உரித்தாக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும் நியாயாதிக் கத்தையும் பிரயோகித்தலும் வேண்டும்.".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவு, "மேல் நீதிமன்றத்தால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தால் அல்லது அரசியலமைப்பின் 154ஓ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தால்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (அ) என்னும் பந்தியில், "மேல் நீதிமன்றத்தால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தால் அல்லது அரசியலமைப்பின் 154ஓ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தால்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் (ஆ) என்னும் பந்தியில், "மேல் நீதிமன்றத்தின் வேறு ஏதேனும் கட்டளை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தின் அல்லது அரசியலமைப்பின் 154ஓ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தின் வேறு ஏதேனும் கட்டளை" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவு அதன் (1)ஆம் உட்பிரிவில், "மேல் நீதிமன்றத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தின் அல்லது அரசியலமைப்பின் 154ஓ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவது இடப்படுகின்றது:-

19. ஒவ்வொரு மாவட்ட நீதிமன்றமும் ஒரு பதிவேட்டு நீதிமன்றமாக இருத்தல் வேண்டுமென்பதுடன் எல்லாக் குடியியல், அரசிறை, நம்பிக்கைப் பொறுப்பு, கடனிறு வகையறவு மற்றும் மரணசாதனக் கருமங்களிலும் இச்சட்டத்தின் அத்தியாயம் Vஅ என்பதனால் அல்லது அதன் கீழ் அல்லது வேறேதேனும் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளினது பயனைக்கொண்டு, வேறேதேனும் நீதிமன்றத்துக்கு மூல நியாயாதிக்கம் என்றவகையாகப் புறநீங்கலாகக் குறித்தளிக்கப்படுகின்றவாறான அல்லது வேறேதேனும் அதிகாரசபைக்கு உரித்தாக்கப்படுகின்றவாறான மேற்கூறப்பட்ட கருமங்களுள் அத்தகையவை தவிர, அதன் மாவட்டத்தினுள் வரையறையற்ற மூல நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தலும் அத்தகைய நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் குற்றப்பணங்களையும், தண்டங்களையும், இழப்பீடுகளையும் விதித்தலும் வேண்டும்; அத்துடன் அதேமுறையில் சித்தசுவாதீனமற்றவர்களாக மற்றும் இளங்கணர்களாக உள்ள ஆட்களின் மீதும் அவர்களின் மரணச்சொத்தின் மீதும், நம்பிக்கைப் பொறுப்பின் கீழான பயனுகரிகளின் மரணச் சொத்துக்களின் மீதும் மற்றும் பாதுகாவலர்கள் அத்துடன் நம்பிக்கைப்பொறுப்பாளர்களின் மீதும், மற்றும் எந்த வேறு கருமத்தில் மாவட்ட நீதிமன்றத்துக்குச் சட்டத்தினால் நியாயாதிக்கம் அளிக்கப்படுகின்றதோ அந்த வேறேதேனும் கருமத்திலும் நியாயாதிக்கம் கொண்டிருத்தலும் வேண்டும்.".

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1)ஆம் உட்பிரிவில் "மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அரசியலமைப்பின் 154ஓ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் (2)ஆம் உட்பிரிவில், முறையே, "மேன்முறையீட்டு நீதிமன்றத்திடமிருந்து" மற்றும் "மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே "அரசியலமைப்பின் 154ஓ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்திடமிருந்து" மற்றும் "அரசியலமைப்பின் 154ஓ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் V இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவது இடப்படுகின்றது:-

"அத்தியாயம் V

குடும்ப நீதிமன்றங்கள்

24. (1) ஒவ்வொரு குடும்ப நீதிமன்றமும் ஒரு பதிவேட்டு நீதிமன்றமாக இருத்தல் வேண்டுமென்பதுடன் திருமணஞ்சார் பிணக்குகள், மணநீக்கத்துக்கான வழக்குகள், திருமணத்தை வறிதாக்குதலும் பிரிவினையும், சோரம்போதலுக்கான சேதவீடுகள், பிரிமனைப் பணத்துக்கான உரிமைக் கோரிக்கைகள், திருமணஞ்சார் ஆதனம் தொடர்பில் வாழ்க்கைத்துணைகளுக்கும், பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் இடையேயான பிணக்குகள், பராயமடையாத பிள்ளைகளின் கட்டுக்காப்பு, தங்கிவாழுநர்களின் உரிமைக் கோரிக்கைகள், பாதுகாப்பாண்மை மற்றும் காப்பாண்மைக் கருமங்கள், சட்டமுறையாந்தன்மையை வெளிப்படுத்துதல் தொடர்பான உரிமைக் கோரிக்கைகள் மற்றும் சட்டமுறையற்றதன்மையும் திருமணமும், மகவேற்பு அத்துடன் பிறப்புப் பதிவுப் பதிவீடுகளைத் திருத்துவதற்கான விண்ணப்பங்கள், நிறையழிப்புக்கான மற்றும் திருமண வாக்குறுதி மீறலுக்கான உரிமைக்கோரிக்கைகள் அத்துடன் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அத்தகைய வேறு கருமங்கள் என்பன தொடர்பில் தனியான மூல நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்:

ஆயின், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ளதெதுவும், (113ஆம் அத்தியாயமான) கண்டியத் திருமண மற்றும் மணநீக்கச் சட்டத்தின் ஏற்பாடுகளையும் (115ஆம் அத்தியாயமான) முஸ்லிம் திருமண மற்றும் மணநீக்கச் சட்டத்தின் ஏற்பாடுகளையும் பாதித்தலாகாது.

(2) குடும்ப நீதிமன்றம் (1)ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் தனியானதும் புறநீங்கலானதுமான

நியாயாதிக்கத்தையும் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், இதற்கான மூன்றாம் அட்டவணையிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சட்டவாக்கங்களுள் எவற்றிலும் அத்தகைய கருமங்கள் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்துக்கான குறிப்பீடு செய்யப்படுமிடத்து, அது ஒரு குடும்ப நீதிமன்றத்துக்கான குறிப்பீடொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்:

ஆயின், அத்தகைய ஏதேனும் சட்டவாக்கத்தின் எவையேனும் ஏற்பாடுகளை மீறிப் புரியப்பட்டுள்ளனவெனச் சார்த்தப்பட்ட எவையேனும் தவறுகளுக்கு இவ்வுட்பிரிவு ஏற்புடைமை எதனையும் கொண்டிருத்தலாகாது.

(3) ஒரு பராயமடையாத பிள்ளையின் அல்லது ஏதேனும் திருமணத்தினது வாழ்க்கைத்துணையின் எவரேனும் பெற்றோரினால் அல்லது மற்றைய வாழ்க்கைத்துணையினால் அல்லது பாதுகாவலரினால் அல்லது உறவினரினால் பிழையான அல்லது சட்டவிரோதமான கட்டுக்காப்பில் வைத்திருக்கப்பட்டவராகச் சார்த்தப்பட்ட அத்தகைய பராயமடையாத பிள்ளையின் அல்லது வாழ்க்கைத்துணையின் கட்டுக்காப்புக்கான விண்ணப்பமொன்று குடும்ப நீதிமன்றத்தினால் கேட்கப்பட்டு தீர்மானிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய நீதிமன்றம் அதனைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கும் விடயத்தின் நீதி தேவைப்படுத்த வேண்டியவாறாக அத்தகைய இடைக்கால மற்றும் இறுதிக் கட்டளைகளை ஆக்குவதற்கும் முழுத்தத்துவமும் நியாயாதிக்கமும் கொண்டிருத்தல் வேண்டும்.

25. சித்தசுவாதீனமற்ற ஆட்களினதும் உளக் குறைபாடுள்ள ஆட்களினதும் கவனிப்பும் கட்டுக்காப்பும் அவர்களின் ஆதனத்திற்கான பொறுப்பும் தொடர்பாக 20ஆம் பிரிவின் கீழ் மாவட்ட நீதிமன்றங்களின் நியாயாதிக்கமும் தத்துவங்களும், அதேமுறையிலும் அதே தத்துவங்களுடனும் பராயமடையாதவர்களாகவும் இளங்கணர்களாகவும் உள்ள ஆட்களைக் கவனித்தலும் அவர்களின் ஆதனத்திற்கான பொறுப்பும் தொடர்பாக ஒரு குடும்ப நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் இலங்கையில் வதிபவர்களாக விராத பராயமடையாதவர்களினதும் இளங்கணர்களினதும் இலங்கையிலுள்ள ஆதனத்திற்கான பொறுப்புக்கு நீடித்தலும் வேண்டும்.

26. (1) ஒவ்வொரு நீதிமுறை மாவட்டத்துக்கும் “குடும்ப ஆலோசகர்” எனவழைக்கப்படவேண்டிய அலுவலரொருவர் இருத்தல் வேண்டும்.

(2) ஒரு குடும்ப நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள்ளான ஏதேனும் கருமம் தொடர்பில் ஏதேனும் வழக்கிலான பிணக்கொன்று அல்லது பராமரிப்புக்கான ஏதேனும் விண்ணப்பம், விடயத்துக்கேற்ப, ஒரு மாவட்ட நீதிபதி, குடும்ப நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் முன்னர் விசாரணைக்காக அல்லது விளக்கத்துக்காக வருமிடத்து, அத்தகைய மாவட்ட நீதிபதி, குடும்ப நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான், வழக்குக்கான எவரேனும் திறத்தவர் முரணான விருப்பமொன்றை எழுத்தில் வெளிப்படுத்தினாலொழிய, அத்தகைய பிணக்கை ஒரு குடும்ப ஆலோசகருக்கு ஆற்றுப் படுத்துதல் வேண்டுமென்பதுடன், அவர்-

*(அ)* அத்தகைய பிணக்கைத் திறத்தவர்கள் தீர்த்துவைப்பதனைத் தூண்டுவதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்தலும் வேண்டும்; அத்துடன்

*(ஆ)* மாவட்ட நீதிபதியினால், குடும்ப நீதிமன்ற நீதிபதியினால் அல்லது நீதிவானினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலத்தினுள், விடயத்துக்கேற்ப, அத்தகைய மாவட்ட நீதிபதிக்கு, குடும்ப நீதிமன்ற நீதிபதிக்கு அல்லது நீதிவானுக்கு அதன் மீதான அவரது அறிக்கையைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(3) ஏதேனும் பிணக்குத் தீர்த்துவைக்கப்படுமிடத்து, தீர்த்துவைத்தல் நியதிகள் பதியப்படுதலும், பிணக்குக்கான ஒவ்வொரு திறத்தவரினாலும் குடும்ப ஆலோசகரினாலும் கையொப்பமிடப்படுதலும், விடயத்துக்கேற்ப, மாவட்ட நீதிபதிக்கு, குடும்ப நீதிமன்ற நீதிபதிக்கு அல்லது நீதிவானுக்கு அனுப்பிவைக்கப்படுதலும் வேண்டும்; அவர் அத்தகைய தீர்த்துவைத்தல் நியதிகளை அத்தகைய நீதிமன்றத்தின் தீர்வையொன்றென்றாற்போன்று பதிதல் வேண்டும்.

(4) குடும்ப ஆலோசகரொருவர் (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பிணக்கைத் தீர்த்துவைக்க இயலாதவராகவிருக்குமிடத்து, அவர் அத்தகைய பிணக்கை, விசாரணைக்கு அல்லது விளக்கத்துக்குப் பின் ரான தீர்மானத்துக்காக மாவட்ட நீதிபதிக்கு, குடும்ப நீதிமன்ற நீதிபதிக்கு அல்லது நீதிவானுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(5) மாவட்ட நீதிபதி, ஒரு குடும்ப நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் எவரும், ஏதேனும் பிணக்குத் தொடர்பிலான ஏதேனும் விசாரணை அல்லது விளக்கம் (4)ஆம் உட்பிரிவின் கீழ் குடும்ப ஆலோசகரினால் அவருக்கு ஆற்றுப்படுத்தப்படும் வரை, அத்தகைய பிணக்குத் தொடர்பிலான ஏதேனும் விசாரணையை அல்லது விளக்கத்தை நடாத்துதலாகாது.

27. விசாரணையின் அல்லது விளக்கத்தின் பின்னர் குடும்ப நீதிமன்றத்தினால் எடுத்து மொழியப்பட்ட தீர்ப்பு, தீர்வை அல்லது கட்டளையுடன் திருப்தியுறாத ஆளொருவர், மாவட்ட நீதிமன்றத்திலிருந்தான மேன்முறையீடுகளுக்கான முறையையும் நடவடிக்கைமுறையையும் ஆளுகின்ற ஏதேனும் சட்டம், ஒழுங்குவிதி அல்லது விதிக்கிணங்க, சட்டத்திலான அல்லது நிகழ்விலான ஏதேனும் வழுவுக்காக அரசியலமைப்பின் 154ஓ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கு அதற்கெதிராக மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

28. (1) ஒன்றுக்கு மேற்பட்ட குடும்ப நீதிமன்றங்களின் அதே அல்லது பொருளளவில் அதே குடும்பப் பிணக்குத் தொடர்பில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிவேறான வழக்கு நடவடிக்கைகள் அல்லது வழக்குகள் தொடுக்கப்படும் பட்சத்தில், அத்தகைய வழக்குநடவடிக்கைகளுக்கான அல்லது வழக்குகளுக்கான எவரேனும் திறத்தவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம் அல்லது சொல்லப்பட்ட வழக்கு நடவடிக்கைகள் அல்லது வழக்குகள் எந்தக் குடும்ப நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்தனவோ அத்தகைய குடும்ப நீதிமன்றத்தின் எவரேனும் நீதிபதி அக்கருமத்தை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்தலாம் என்பதுடன் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அது தகுதியானதெனக் கருதக்கூடியவாறாக, அத்தகைய எல்லாப் பிணக்குகளும் ஒரு குடும்ப நீதிமன்றத்தில் வசதியானமுறையில் அல்லது துரிதமானமுறையில் கேட்டுத் தீர்மானிக்கப்படக்கூடிய வகையில், சொல்லப்பட்ட திறத்தவர்களினால் எந்தக் குடும்ப நீதிமன்றங்களில் வழக்குநடவடிக்கைகள் அல்லது வழக்குகள் ஏலவே தொடுக்கப்பட்டுள்ளனவோ அந்தக் குடும்ப நீதிமன்றங்களுள் ஒன்றுக்கு அத்தகைய வழக்குநடவடிக்கைகளுள் அல்லது வழக்குகளுள் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றை இடமாற்றுதலும் வேண்டும்.

(2) அதே திறத்தவர்களுக்கிடையேயுள்ளவாறாக அல்லது பொருளளவில் அதே கருமம் தொடர்பாக அதே குடும்ப நீதிமன்றத்தில் இரண்டு

அல்லது அதற்குமேற்பட்ட வழக்கு நடவடிக்கைகள் அல்லது வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ள அல்லது முடிவுறாதுள்ள பட்சத்தில், சொல்லப்பட்ட நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தில் அத்தகைய வழக்கு நடவடிக்கைகளை அல்லது வழக்குகளைத் தனியொரு வழக்கு நடவடிக்கையாக ஒன்றுதிரட்டுதல் வசதியாகவிருப்பின் அல்லது நீதிநலன்கருதியும் பிணக்கிலுள்ள அத்தகைய கருமங்களின் துரிதமான கையாளுகைக்கும் அவ்வாறு அவசியமாகவிருப்பின், அவ்வாறு செய்யுமாறு பணித்தல் சொல்லப்பட்ட நீதிமன்றத்துக்குத் தகுதிவாய்ந்ததாதல் வேண்டும். நீதிமன்றமானது, அத்தகையவொரு பட்சத்தில், விடயத்தின் அவசர நிலைமைகளும் நீதியும் தேவைப்படுத்தக்கூடியவாறாகக் காலத்துக்குக் காலம் அத்தகைய கட்டளையை ஆக்கலாம் அல்லது அத்தகைய தீர்ப்பைக் கூறலாம் அல்லது அத்தகைய தீர்வையைப் பதியலாம்.

29. (1) ஒரு குடும்ப நீதிமன்றத்திலான எல்லா வழக்கு நடவடிக்கைகளும் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கிணங்க இயன்றளவு துரிதமானமுறையில் தொடுக்கப்படுதலும் நடாத்தப்படுதலும் வேண்டும்:

ஆயின், அத்தகைய ஒழுங்குவிதிகள் அவ்வாறு விதித்துரைக்கப்பட்டுள்ளவரை, குடும்ப நீதிமன்றமானது, செயல்முறைக்குகந்தவரை, (101ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையிலுள்ள சுருக்க நடவடிக்கைமுறை தொடர்பான ஏற்பாடுகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

(2) (61ஆம் அத்தியாயமான) மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின் கீழான வழக்கு நடவடிக்கை களைத் தொடுத்தலையும் நடாத்துதலையும் ஆளுகின்ற சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், குடும்ப நீதிமன்றத்தில் தொடுக்கப்படக்கூடிய அத்தகைய வழக்கு நடவடிக்கைகளுக்கு ஏற்புடையனவாகின்றனவெனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) பராயமடையாத பிள்ளைகளின் கவனிப்புக்கும் கட்டுக்காப்புக்குமான எல்லா விண்ணப்பங்களும் ஒவ்வொரு குடும்ப நீதிமன்றத்திலும் மற்றெல்லாக் கருமங்களைப்பார்க்கிலும் முந்துரிமை பெறுதல் வேண்டுமென்பதுடன் விதிவிலக்கான சூழ்நிலைகள் அவ்வாறு அனுமதித்தாலொழிய, அவற்றின் துரிதமான கையாளுகையை உறுதிப்படுத்துவதற்கு நாளாந்தம் கேட்கப்படுதலும் வேண்டும்.".

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் V யை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் இது அச்சட்டவாக்கத்தின் அத்தியாயம் Vஅ எனப் பயனுறுதலும் வேண்டும்:-

"அத்தியாயம் Vஅ

சிறுகோரிக்கை நீதிமன்றங்கள்

29அ. (1) ஒவ்வொரு சிறுகோரிக்கை நீதிமன்றமும் ஒரு பதிவேட்டு நீதிமன்றமாக இருத்தல் வேண்டுமென்பதுடன் புறநீங்கலான மூலக்குடியியல் நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தலும் இதற்கான ஏழாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட எல்லா வழக்குகளையும் கவனத்துட் கொள்வதற்கும் கேட்டுத் தீர்மானிப்பதற்குமான முழுத்தத்துவத்தையும் கொண்டிருத்தலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், சிறுகோரிக்கை நீதிமன்றமொன்று, (101ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் அத்தியாயம் LIII இன் ஏற்பாடுகளின் கீழ் கோப்பிடப்பட்ட ஏதேனும் வழக்கை அல்லது பண அறவீட்டுக்கான எந்த வழக்குக்கு வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் விசேட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றனவோ அந்த வழக்கைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கு நியாயாதிக்கம் அல்லது தத்துவம் எதனையும் கொண்டிருத்தலாகாது.

(2) ஏழாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட எல்லா வழக்குகளும் வட்டி நீங்கலாக ஒரு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாப் பணத்தொகையை அல்லது வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையொன்றின் மூலம் அமைச்சரினால் காலத்துக்குக் காலம் நிர்ணயிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தொகையை விஞ்சுதலாகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று, அது பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படும்வரை பயனுறுதலாகாது.

29ஆ. ஏதேனும் சிறுகோரிக்கை நீதிமன்றத் தின்முன்னரான வழக்குநடவடிக்கைகள், 2022ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க, சிறுகோரிக்கை நீதிமன்றங் களின் நடவடிக்கைமுறைச் சட்டத்திலும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்திலும் ஏற்பாடுசெய்யப் பட்டவாறாகச் சிறுகோரிக்கை நீதிமன்றங்களுக்கான விசேட நடவடிக்கை முறையின்மூலம் எடுக்கப்படலாம்.

29இ. ஒவ்வொரு சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதியும், ஏதேனும் விடயத்தில் அவரது கட்டளையை அல்லது தீர்ப்பை எடுத்துமொழிவதில் நீதியானதும் நியாயமானதுமென அவருக்குத் தோன்றவேண்டியவாறாகச் செலவுத் தொகைகளினதும் செலவுகளினதும் கொடுப்பனவுத் தொடர்பில் அத்தகைய கட்டளையை ஆக்குதல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

29ஈ. (1) எந்த வழக்குக்கு, வழக்குநடவடிக்கைக்கு அல்லது கருமத்துக்கு எவரேனுமாள் திறத்தவரொருவராக உள்ளாரோ அந்த ஏதேனும் வழக்கில், வழக்குநடவடிக்கையில் அல்லது கருமத்தில் ஏதேனும் சிறுகோரிக்கை நீதிமன்றத்தினால் எடுத்துமொழியப்பட்ட ஏதேனும் தீர்ப்புடன் திருப்தியுறாத அந்த எவரேனுமாள், அத்தகைய உரிமைக்கு வெளிப்படையாக அனுமதி மறுக்கப்படுமிடத்துத்தவிர, சட்டத்திலான அல்லது நிகழ்விலான ஏதேனும் வழுவுக்காக அத்தகைய சிறுகோரிக்கை நீதிமன்றம் எந்த மாகாணத்தில் அமைந்துள்ளதோ அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின் மூலம் தாபிக்கப்பட்ட அந்த மாகாணத்திற்கான மேல் நீதிமன்றத்துக்கு அதற்கெதிரான மேன்முறை யீடொன்றைச் செய்யலாம்.

(2) எந்த வழக்குக்கு, வழக்கு நடவடிக்கைக்கு அல்லது கருமத்துக்கு எவரேனுமாள் திறத்தவரொருவராக உள்ளாரோ அல்லது இருப்பதற்கு நாடுகின்றாரோ அந்த ஏதேனும் வழக்கின் போது, வழக்குநடவடிக்கையின் போது அல்லது கருமத்தின்போது ஏதேனும் சிறுகோரிக்கை நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையுடன் திருப்தியுறாத அந்த எவரேனுமாள், அத்தகைய சிறுகோரிக்கை நீதிமன்றம் எந்த மாகாணத்தில் அமைந்துள்ளதோ அரசியலமைப் பின் 154ஞ என்னும் உறுப்புரையின்மூலம் தாபிக்கப்பட்ட அந்த மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கு, முதலில் கேட்டுப் பெறப்பட்ட அத்தகைய மேல் நீதிமன்றத்தின் அனுமதியுடன், சட்டத்திலான அல்லது நிகழ்விலான ஏதேனும் வழுவைத் திருத்துவதற்காக அத்தகைய கட்டளைக்கெதிராக மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

(3) எந்த வழக்குக்கு, வழக்கு நடவடிக்கைக்கு அல்லது கருமத்துக்கு எவரேனுமாள் திறத்தவரொருவராக உள்ளாரோ அல்லது திறத்தவரொருவராக இருப்பதற்கு நாடுகின்றாரோ அந்த ஏதேனும் வழக்கின் போது, வழக்குநடவடிக்கையின் போது அல்லது கருமத்தின் போது தவறுகையின்மேல் பதியப்பட்ட தீர்ப்பைத் தள்ளிவைக்கின்றதும் அல்லது தள்ளிவைக்க மறுக்கின்றதும் ஏதேனும் சிறுகோரிக்கை நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்டதுமான ஏதேனும் கட்டளையுடன் திருப்தியுறாத எவரேனுமாள், அத்தகைய சிறுகோரிக்கை நீதிமன்றம் எந்த மாகாணத்தில் அமைந்துள்ளதோ அரசியலமைப்பின் 154ஔ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட அந்த மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கு, முதலில் கேட்டுப் பெறப்பட்ட அத்தகைய மேல் நீதிமன்றத்தின் அனுமதியுடன், சட்டத்திலான அல்லது நிகழ்விலான ஏதேனும் வழுவைத் திருத்துவதற்காக மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

(4) மேன்முறையீடு மற்றும் மேன்முறையீடு முடிவுறாதிருக்கும்வரை நிறைவேற்றுகையை நிறுத்திவைத்தல் தொடர்பாக (101ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் அத்தியாயங்கள் LVIII, LIX, LX மற்றும் LXI என்பவற்றின் ஏற்பாடுகள், அவை இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) ஒவ்வொரு சிறுகோரிக்கை நீதிமன்றத்தினதும் நீதிபதி, ஏதேனும் மேன்முறையீட்டில் ஆக்கப்பட்டு எடுத்துமொழியப்படவேண்டியவாறான உயர்நீதி மன்றத்தின், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அல்லது அரசியலமைப்பின் 154ஔ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்தின் அத்தகைய எல்லாத் தீர்ப்புகளுக்கும், கட்டளைகளுக்கும், தீர்வைகளுக்கும், சொல்லப்பட்ட நீதிபதியினால் எடுத்துமொழியப்பட்ட ஏதேனும் மூலத் தீர்ப்பு அல்லது கட்டளை நிறைவேற்றப்படக் கூடியவாறான அல்லது நிறைவேற்றப்பட்டிருக்கக் கூடியவாறான அதே முறையில் இசைந்தொழுகுதலும் அவற்றை நிறைவேற்றுதலும் வேண்டும்.

29உ. தோதானவிடத்து, பிணக்கிற்கான தீர்வொன்றுக்கு வரும்படி விளக்கத்தின்முன்னர் அல்லது விளக்கத்தின் போது சட்டமுறையான எல்லா வழிவகைகள் மூலமும் திறத்தவர்களைத் தூண்டுவதற்கு ஒவ்வொரு முயற்சியையும் செய்வது சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதியின் கடமையாதல் வேண்டுமென்பதுடன் திறத்தவர்கள் தீர்வொன்றுக்கு உடன்படின், தீர்வு திறத்தவர்களினால் பதியப்பட்டு கையெழுத்திடப்படுவதுடன் தீர்க்கப்பட்டவாறாக நியதிகளுக்கிணங்க தீர்ப்பொன்று ஆக்குதல் வேண்டும்.".

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆம் பிரிவு, "மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அரசியலமைப்பின் 154ஔ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் VI என்பதை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் இது அச்சட்டவாக்கத்தின் அத்தியாயம் VII எனப் பயனுறுதலும் வேண்டும்:-

"அத்தியாயம் VII

ஆரம்ப நீதிமன்றங்கள்

32. (1) ஒவ்வோர் ஆரம்ப நீதிமன்றமும், வேறே தேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, தனிசு, சேதவீடு, கோரிக்கை அல்லது உரிமைக்கோரிக்கை ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவிடத்து, மூலக் குடியியல் நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் உள்ளூர் அதிகாரசபைகளின் துணைவிதிகளை வலுவுறுத்துதல் மற்றும் அத்தகைய உள்ளூர் அதிகாரசபைகளின் அரசிறையை அறவிடுதல் தொடர்பான கருமங்கள் தொடர்பிலான நியாயாதிக்கத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஆரம்ப நீதிமன்றங்கள், இதற்கான நான்காம் அட்டவணையிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பிணக்குகள் தொடர்பில், அத்தகைய உரிமைக்கோரிக்கையின் பெறுமதியைப் பொருட்படுத்தாது, நியாயாதிக்கம் எதனையும் கொண்டிருத்தலாகாது.

33. (1) ஒவ்வோர் ஆரம்ப நீதிமன்றமும், அமைச்சரினால் ஒழுங்குவிதி மூலம் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய தவறுகள் தொடர்பில் புறநீங்கலான மூலக் குற்றவியல் நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அமைச்சர், அவ்வொழுங்குவிதியில், ஒவ்வொரு தவறின் விடயத்திலும் அத்தகைய ஒவ்வொரு தவறு தொடர்பிலுமான வரையறைகள், மட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளைக் குறித்துரைக்கலாம்.

(2) ஆரம்ப நீதிமன்றங்கள், ஏதேனும் சட்டவாக்கத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் துணைநிலைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளை மீறிப் புரியப்பட்டுள்ளனவெனச் சார்த்தப்பட்டவையும், அவை தொடர்பில் அத்தகைய நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் உரித்தாக்கப்படுகின்றவையுமான எல்லாத் தவறுகள் தொடர்பிலும் தனியான மற்றும் புறநீங்கலான நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவிலுள்ளதெதுவும், (1)ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறு விளங்கப்பட்ட பின்னர் குற்றவாளியாகக் காணப்பட்ட எவரேனுமாளுக்கு நீதிவானொருவர் குற்றத்தீர்ப்பளிப்பதனை மற்றும் அவருக்குத் தண்டனைத் தீர்ப்பளிப்பதனைத் தடைசெய்தலாகாது.

34. (1) ஏதேனும் குடியியல் வழக்கு நடவடிக்கை அல்லது கருமம் ஓர் ஆரம்ப நீதிமன்றத்தில் தொடுக்கப்படுமிடத்து, திறத்தவர்களைத் தன்முன்னர் தோன்றும்படி கட்டளைவிட்டழைப்பதும் தோதானவிடத்தெல்லாம் விசாரணையை அல்லது விளக்கத்தை மேற்கொள்ளு முன்னர் ஒரு தீர்வுக்கு வரும்படி அத்தகைய திறத்தவர்களைத் தூண்டுவதற்கு எல்லா முயற்சிகளையும் எடுப்பதும் அவ் ஆரம்ப நீதிமன்ற நீதிபதியின் கடமையாதல் வேண்டும். அத்தகைய திறத்தவர்கள் ஒரு தீர்வுக்கு உடன்படுமிடத்து, அத்தகைய தீர்வு அதற்கான திறத்தவர்களினால் பதியப்பட்டுக் கையொப்பமிடப்படுதல் வேண்டுமென்பதுடன், சொல்லப்பட்ட ஆரம்ப நீதிமன்றத்தின் தீர்வையொன்றாகப் பதியப்படுதலும் அதன் தீர்வையொன்றாக வலுவுறுத்தப்படற்பாலதாதலும் வேண்டும்.

(2) ஏதேனும் குற்றவியல் வழக்குநடவடிக்கை அல்லது கருமம் ஓர் ஆரம்ப நீதிமன்றத்தில் தொடுக்கப்படுமிடத்து, சம்பந்தப்பட்ட திறத்தவர் களைத் தன்முன்னர் தோன்றும்படி கட்டளைவிட்டழைத்தலும் தோதானவிடத்தெல்லாம் ஒரு தீர்வுக்கு வரும்படி அத்தகைய திறத்தவர்களை ஊக்குவித்தலும் அந்நீதிமன்ற நீதிபதியின் கடமையாதல் வேண்டும். அத்தகைய திறத்தவர்கள் ஒரு தீர்வுக்கு உடன்படுமிடத்து, அத்தகைய தீர்வு சம்பந்தப்பட்ட திறத்தவர்களினால் பதியப்பட்டுக் கையொப்பமிடப்படுதல் வேண்டுமென்பதுடன் வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அவ்வழக்கு நடவடிக்கை அல்லது கருமம் எத்தவறு தொடர்பானதோ அத்தவறு இணக்கப்படுதலும் வேண்டும்.

35. (1) ஓர் ஆரம்ப நீதிமன்றத்தினாலான விசாரணை அல்லது விளக்கத்துக்குப் பின்னர் பதியப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் தீர்ப்பு, கட்டளை, தீர்வை, குற்றத்தீர்ப்பு அல்லது தண்டனையினால் இன்னலுற்ற எவரேனும் திறத்தவர் ஏதேனும் சட்டத்துக்கமையவும் அவ்வாறு மேன்முறையீடு செய்வதற்கான நடவடிக்கை முறையையும் முறையையும் ஆளுகின்ற ஏதேனும் சட்டம், ஒழுங்குவிதி அல்லது விதிக்கிணங்கவும், சட்டத்திலான அல்லது நிகழ்விலான ஏதேனும் வழுவுக்காக அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக் கான மேல் நீதிமன்றத்துக்கு அதற்கெதிராக மேன் முறையீடு செய்யலாம்:

ஆயின், அவ்வாறு மேன்முறையீடு செய்வதற்கான நடவடிக்கைமுறையையும் முறையையும் ஆளுகின்ற அத்தகைய சட்டம், ஒழுங்குவிதி அல்லது விதி எதுவும் இல்லாதவிடத்து, ஒரு நீதிவான் நீதிமன்றத்திலிருந்தான மேன்முறையீடுகள் தொடர்பான ஏற்பாடுகள், ஒரு குற்றவியல் கருமத்திலான அல்லது வழக்கு நடவடிக்கையிலான மேன்முறையீடொன்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன் ஒரு மாவட்ட நீதிமன்றத்திலிருந்தான மேன்முறையீடுகள் தொடர்பான ஏற்பாடுகள், ஒரு குடியியல் கருமத்திலான அல்லது வழக்கு நடவடிக்கையிலான மேன்முறையீடொன்றுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளின் கீழ் செய்யப்பட்ட திறத்தவர்களுக்கிடையேயான பிணக்கின் தீர்த்துவைத்தல் காரணமாகப் பதியப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் தீர்ப்பு, கட்டளை, தீர்வை, குற்றத்தீர்ப்பு அல்லது தண்டனைத் தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடெதுவும் செய்யப்படுதலாகாது.

36. ஓர் ஆரம்ப நீதிமன்றத்திலான எல்லா வழக்கு நடவடிக்கைகளும் அவற்றுக்கு ஏற்புடையற்பாலதாக இருக்கக்கூடியவாறான அத்தகைய சட்டத்துக்கிணங்கவும் அத்தகைய சட்டமெதுவும் இராதிருப்பின், ஒரு குடியியல் கருமம் அல்லது வழக்குநடவடிக்கை தொடர்பில் (101ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையிலான சுருக்க நடவடிக்கைமுறை தொடர்பான ஏற்பாடுகளுக்கிணங்கவும் ஒரு குற்றவியல் கருமம் அல்லது வழக்குநடவடிக்கை தொடர்பில் ஒரு நீதிவான் நீதிமன்றத்திலான சுருக்கமுறை விளக்கங்கள் தொடர்பான ஏற்பாடுகளுக்கிணங்கவும் இயன்றளவு துரிதமான முறையில் தொடுக்கப்படுதலும் நடாத்தப்படுதலும் வேண்டும்.".

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

37. அரசியலமைப்பினதும் வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கிணங்க-

*(அ)* இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தி லிருந்தான அல்லது அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்திலிருந்தான ஏதேனும் மேன்முறையீட்டில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஏதேனும் தீர்ப்பு அல்லது கட்டளைக்கெதிராக; அல்லது

*(ஆ)* மாவட்ட நீதிமன்றங்கள், குடும்ப நீதிமன்றங்கள், சிறுகோரிக்கை நீதிமன்றங்கள், நீதிவான் நீதிமன்றங்கள் அல்லது ஆரம்ப நீதிமன்றங்களிலிருந்தான ஏதேனும் மேன்முறையீட்டில் அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தின் ஏதேனும் தீர்ப்பு அல்லது கட்டளைக்கெதிராக, உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமையொன்று இருத்தல் வேண்டும்.".

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை அதன் (1)ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்; அத்துடன்

(2) மீள இலக்கமிடப்பட்ட அதன் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2) அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றம் தவிர்ந்த முதனிலை நீதிமன்றம் ஒவ்வொன்றும், அத்தகைய முதனிலை நீதிமன்றத்திலிருந்து அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கான எல்லா மேன்முறையீட்டு விடயங்களிலும், அத்தகைய மேன்முறையீட்டில் ஆக்கப்பட்டு எடுத்துமொழியக்கப்பட வேண்டியவாறு, அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தின் அத்தகைய எல்லாத் தீர்ப்புகளுக்கும் கட்டளைகளுக்கும் தீர்வைகளுக்கும், அத்தகைய தீர்ப்பு, கட்டளை அல்லது தீர்வை அத்தகைய முதனிலை நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்டு எடுத்து மொழியப்பட்டது என்றாற்போன்று அதேமுறையில் இசைந்தொழுகுதலும் அவற்றை நிறைவேற்றுதலும் வேண்டும்.".

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 45ஆம் பிரிவு, அதன் (4)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(4) இரண்டாம் மற்றும் (3)ஆம் உட்பிரிவுகளின் கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு சமாதான நீதிவானும் ஒவ்வோர் அலுவலகமுறையற்ற நீதிவானும், ஒரு மேல் நீதிமன்ற நீதிபதி, மாவட்ட நீதிபதி, குடும்ப நீதிமன்ற நீதிபதி, சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதி, நீதிவான் அல்லது ஆரம்ப நீதிமன்ற நீதிபதி முன்னர், அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் பதவிக்கான ஒரு சத்தியத்தை அல்லது உறுதியுரையைச் செய்து கீழொப்பமிடுதல் வேண்டும் அல்லது மொழிந்து கீழொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒவ்வொரு நீதிபதியும், அதற்கான விண்ணப்பத்தின் மேல், அதனை எடுத்தோதுவதற்கும் சொல்லப்பட்ட சத்தியம் அல்லது உறுதியுரை அவரினால் முறையாக எடுத்தோதப்பட்டுப் பெறப்பட்டதென அவரது நீதிமன்றப் பதிவேடுகளில் பதிவதற்கும் அத்தகைய பதிவீட்டின் பிரதியொன்றை உயர் நீதிமன்றத்தின் பதிவேடுகளில் பதியப்படுவதற்கு உயர் நீதிமன்றப் பதிவாளருக்கு உடனடியாக அனுப்புவதற்கும் தத்துவமளிக்கப்பட்டுத் தேவைப்படுத்தப்படுகின்றார்.".

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49ஆம் பிரிவு, அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"ஆயின், வேறு ஒவ்வொரு விடயத்திலும் அருகாமையிலுள்ள ஏதேனும் வலயத்தின், மாவட்டத்தின் அல்லது பிரிவின், விடயத்துக்கேற்ப, இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தின், அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல்

நீதிமன்றத்தின், மாவட்ட நீதிமன்றத்தின், குடும்ப நீதிமன்றத்தின், சிறுகோரிக்கை நீதிமன்றத்தின் வேறெவரேனும் நீதிபதி, நீதிவான் நீதிமன்றத்தின் நீதிவான் மற்றும் ஆரம்ப நீதிமன்றத்தின் நீதிபதி, அத்தகைய வழக்கை, குற்றவழக்கை, வழக்கு நடவடிக்கையை அல்லது கருமத்தைக் கேட்டு, விளங்கித் தீர்மானிப்பதற்கான நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 52ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1)ஆம் உட்பிரிவில் "இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப் பட்ட மேல் நீதிமன்றத்துக்கும் மாவட்ட நீதிமன்றங்கள், சிறுகோரிக்கை நீதிமன்றங்கள் மற்றும் நீதிவான் நீதிமன்றங்கள் ஆகிய ஒவ்வொன்றுக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்துக்கும், அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கும் மற்றும் மாவட்ட நீதிமன்றங்கள், குடும்ப நீதிமன்றங்கள், சிறுகோரிக்கை நீதிமன்றங்கள், நீதிவான் நீதிமன்றங்கள் அத்துடன் ஆரம்ப நீதிமன்றங்கள் ஆகிய ஒவ்வொன்றுக்கும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் (2)ஆம் உட்பிரிவில், மேல் நீதிமன்றப் பதிவாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றப் பதிவாளர் மற்றும் அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றப் பதிவாளர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவில் "மேல் நீதிமன்றத்தில், மாவட்ட நீதிமன்றத்தில் அல்லது சிறுகோரிக்கை நீதிமன்றம் ஒன்றில் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கில்-" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தில், அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தில், மாவட்ட நீதிமன்றத்தில், குடும்ப நீதிமன்றத்தில் அல்லது சிறுகோரிக்கை நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கில்-" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 55ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

55. (1) ஒவ்வொரு மாவட்ட நீதிமன்றமும், குடும்ப நீதிமன்றமும், சிறுகோரிக்கை நீதிமன்றமும், நீதிவான் நீதிமன்றமும் மற்றும் ஆரம்ப நீதிமன்றமும், அதன் முறையான அதிகாரத்தையும் வினைத்திறனையும் பேணும் நோக்கத்துக்காக, நீதிமன்றத்தின் சமுகத்திலேயே புரியப்பட்ட ஒவ்வொரு நீதிமன்ற அவமதிப்புத் தவறையும் மற்றும் சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் முறையே ஏதேனும் செயலின் போது அல்லது வழக்கு நடவடிக்கையின்போது புரியப்படுகின்றவையும் நீதிமன்ற அவமதிப்பாகத் தண்டிக்கப்படற்பாலதாக விருப்பனவென அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தினால் வெளிப்படுத்தப்படுகின்றவையுமான எல்லாத் தவறுகளையும் கவனத்துட் கொள்வதற்கும் இதனகத்துப் பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக அதன்சார்பிலான தண்டங்களுடன் தண்டிப்பதற்கும் விசேட நியாயாதிக்கமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) விடயத்துக்கேற்ப, குற்றப் பணங்கள் அல்லது மறியற்றண்டனை என்ற பின்வரும் தண்டனைத் தீர்ப்புகள், அவமதிப்புக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது முறையே பின்வரும் நீதிமன்றங்களினால் விதிக்கப்படலாம்; அதாவது-

*(அ)* ஒரு மாவட்ட நீதிமன்றத்தினால் மற்றும் குடும்ப நீதிமன்றத்தினால் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணம் அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு, ஒன்றில் சாதாரண அல்லது கடூழிய மறியற்றண்டனை;

*(ஆ)* ஒரு சிறுகோரிக்கை நீதிமன்றத்தினால் மற்றும் நீதிவான் நீதிமன்றத்தினால், ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணம் அல்லது பதினெட்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு, ஒன்றில் சாதாரண அல்லது கடூழிய மறியற்றண்டனை; அத்துடன்

*(இ)* ஓர் ஆரம்ப நீதிமன்றத்தினால், ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணம் அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு, ஒன்றில் சாதாரண அல்லது கடூழிய மறியற்றண்டனை.".

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 56ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 57ஆம் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

57. இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் நீதிமுறைப் பிரிவின் ஆரம்ப நீதிமன்ற நீதிபதியொருவர் நியமிக்கப்பட்டிராதவிடத்து, அத்தகைய பிரிவின் நீதிவான் அத்தகைய ஆரம்ப நீதிமன்ற நீதிபதியொருவர் நியமிக்கப்படும்வரை எல்லா நோக்கங்களுக்காகவும், அத்தகைய பிரிவின் ஆரம்ப நீதிமன்ற நீதிபதியாக இருக்கின்றவராகக் கருதப்படுதலும் ஆரம்ப நீதிமன்ற நீதிபதியின் எல்லா நியாயாதிக்கங்களையும் பிரயோகித்தலும் வேண்டும்:

ஆயின், அத்தகைய பிரிவின் ஆரம்ப நீதிமன்றமொன்றின் நீதிபதியொருவர் நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய பிரிவின் நீதிவான், எந்தக் குற்றவழக்குகளில், வழக்குகளில், வழக்கு நடவடிக்கைகளில் அல்லது கருமங்களில் அத்தகைய நீதிவான் ஏதேனும் சான்றைப் பதிவதற்குத் தொடங்கியுள்ளாரோ அந்த எல்லாக் குற்றவழக்குகளையும், வழக்குகளையும், வழக்கு நடவடிக்கைகளையும் அல்லது கருமங்களையும் கேட்டுத் தீர்மானித்தல் வேண்டும்.".

25. முதன்மைச் சட்டவாக்கமானது, அதன் இரண்டாம் அட்டவணையை உடனடுத்துப் பின்வரும் புதிய அட்டவணைகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

மூன்றாம் அட்டவணை

[பிரிவு 24(2)]

சட்டவாக்கங்கள்

(1) (61ஆம் அத்தியாயமான) மகவேற்புக் கட்டளைச் சட்டம்

(2) (110ஆம் அத்தியாயமான) பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவுச் சட்டம்

(3) (101ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை

(4) (58ஆம் அத்தியாயமான) யாழ்ப்பாணத் திருமணஞ்சார் உரிமைகள் மற்றும் மரபுரிமைக் கட்டளைச் சட்டம்

(5) 1970ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, சட்டமுறையாந்தன்மைச் சட்டம்

(6) (112ஆம் அத்தியாயமான) திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டம்

(7) (56ஆம் அத்தியாயமான) திருமணமான பெண்களின் ஆதனக் கட்டளைச் சட்டம்

(8) (57ஆம் அத்தியாயமான) திருமணஞ்சார் உரிமைகள் மற்றும் மரபுரிமைக் கட்டளைச் சட்டம்

## நான்காம் அட்டவணை

[பிரிவு 32(2)]

### ஆரம்ப நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திலிருந்து தவிர்க்கப்பட்ட வழக்குகள்

(1) அரசினால் செய்யப்பட்டதாக அல்லது ஆக்கப்பட்டதாகக் கொள்ளப்படுகின்ற ஒரு செயல் அல்லது கட்டளை சம்பந்தமான அல்லது அரசின் கட்டளையினால் எவரேனும் ஆளினால் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுகின்ற செயலொன்று சம்மந்தமான ஏதேனும் வழக்கு.

(2) ஒரு நீதிமன்றத்தின் அல்லது ஒரு நீதிமுறை அலுவலர் அவரது பதவியை நிறைவேற்றிச் செயலாற்றுகையில் அவரின் தீர்ப்பு அல்லது கட்டளை ஒன்றைப் பின்பற்றி எவரேனுமாளினால் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுகின்ற ஒரு செயல் சம்பந்தமான ஏதேனும் வழக்கு.

(3) அரசின் எவரேனும் அலுவலரினால் அவரது அலுவலகமுறையான தன்மையில் செய்யப்பட்டதாக அல்லது ஆக்கப்பட்டதாகக் கொள்ளப்படுகின்ற ஏதேனும் செயல் அல்லது கட்டளை சம்பந்தமான ஏதேனும் வழக்கு.

(4) அப்போதைக்கு வலுவிலுள்ள பிரிவிடுதல் தொடர்பான சட்டத்தின் கீழ் அசைவற்ற ஆதனத்தின் பிரிவிடுதலுக்கான அல்லது விற்பனைக்கான ஏதேனும் வழக்கு.

(5) ஈட்டை வலுவுறுத்துவதற்காக அல்லது ஆதனத்தை விற்பனை செய்வதற்காக அசைவற்ற ஆதனத்தின் ஈடுபெறுநர் ஒருவரினாலான அல்லது ஈட்டை மீட்பதற்காக அசைவற்ற ஆதனத்தின் ஈடுவைப்பவர் ஒருவரினாலான ஏதேனும் வழக்கு.

(6) கழிவைக் கட்டுப்படுத்துவதற்கான ஏதேனும் வழக்கு.

(7) (460ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதற் சட்டத்தின் கீழ் அல்லது தேசிய அரசுப் பேரவையின் 1972ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் எந்த ஆளுக்கு நட்டஈடு செலுத்தப்பட்டுள்ளதோ அந்த ஆளிடமிருந்து நட்டஈட்டின் முழுமையையும் அல்லது ஏதேனும் பாகத்தை அறவிடுவதற்கான ஏதேனும் வழக்கு.

(8) ஓர் ஒப்பந்தத்தின் குறித்த செயல்நிறைவேற்றத்துக்கான அல்லது ஒழிப்புக்கான அல்லது ஒப்பந்த மீறுகைக்கான சேதவீடுகளுக்கான ஏதேனும் வழக்கு.

(9) ஒரு தடையுத்தரவை நிவர்த்திசெய்வதற்கான அல்லது இல்லாதாக்குவதற்கான ஏதேனும் வழக்கு.

(10) ஒரு தடையுத்தரவைப் பெற்றுக்கொள்வதற்கான ஏதேனும் வழக்கு.

(11) ஒரு நம்பிக்கைப்பொறுப்பு மீறுகையொன்றினால் ஏற்படுத்தப்பட்ட இழப்பை இறந்துபோன ஒரு நம்பிக்கைப்பொறுப்பாளரின் பொதுவான மரணச்சொத்திலிருந்து ஈடுசெய்வதற்கான வழக்கொன்றுட்பட ஒரு நம்பிக்கைப்பொறுப்புத் தொடர்பான ஏதேனும் வழக்கு மற்றும் பங்களிப்புக்கான உரிமைக் கோரிக்கையொன்றை ஓர் இறந்துபோன நம்பிக்கைப்பொறுப்பாளரின் மரணச்சொத்துக்கெதிராக வலுவுறுத்துவதற்கு ஒரு கூட்டு நம்பிக்கைப்பொறுப்பாளரினாலான ஏதேனும் வழக்கு.

(12) காணிக்கான உரித்தை வெளிப்படுத்துவதற்கான ஒரு தீர்வையுட்பட ஒரு வெளிப்படுத்துகை ரீதியிலான தீர்வையொன்றுக்கான ஏதேனும் வழக்கு.

(13) வழக்காளி பித்துப்பிடித்தவராக அல்லது வேறு இயலாமையின் கீழுள்ளவராக இருக்கையில் அவர் மாற்றளித்த ஓர் ஆதனத்துக்கான ஏதேனும் வழக்கு.

(14) ஒரு நடுத்தீர்ப்பாளரினால் செய்யப்பட்ட ஓர் அளிப்பை எதிர்ப்பதற்கான ஏதேனும் வழக்கு.

(15) (101ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு ஒரு வெளிநாட்டுத் தீர்ப்பின் மேலான அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தீர்ப்பின் மேலான ஒரு வழக்கு.

(16) நிறைவேற்றுநர் அல்லது நிருவாகியொருவர் எந்த ஆளுக்கு ஒரு விருப்புறுதிக்கொடையைச் செலுத்தியுள்ளாரோ அல்லது சொத்துக்களைப் பகிர்ந்தளித்துள்ளாரோ அந்த ஆளொருவரினால் மீளளிப்பொன்று செய்யப்படுவதனைக் கட்டாயப்படுத்துவதற்கான ஏதேனும் வழக்கு.

(17) ஒரு விருப்புறுதிக்கொடைக்கான அல்லது மரணசாதனம் எழுதியவரினால் மரணசாதனக்கொடையாக அளிக்கப்பட்ட எச்சத்தின் முழுமைக்கான அல்லது அதன் ஒரு பங்குக்கான அல்லது மரணசாதனமில்லா ஆதனத்தின் முழுமைக்கான அல்லது அதன் ஒரு பங்குக்கான ஏதேனும் வழக்கு.

(18) *(அ)* ஒரு பங்காண்மையைக் கலைப்பதற்கான அல்லது அது கலைக்கப்பட்ட பின்னர் பங்காண்மையொன்றின் தொழிலை ஒடுக்குவதற்கான;

*(ஆ)* பங்காண்மைக் கொடுக்கல்வாங்கல்களின் கணக்கொன்றுக்கான; அல்லது

*(இ)* பங்காண்மைக் கணக்கின் மீதிக்கான,

ஏதேனும் வழக்கு.

(19) ஏதேனும் நீதிமன்றத் தீர்வையின் கீழ் அல்லது கட்டளையின் கீழ் நிருவகிக்கப்பட்ட ஆதனத்தின் ஒரு கணக்குக்கான ஏதேனும் வழக்கு.

(20) ஈடுபெறுநரினால் பெறப்பட்ட மேன்மிகையான சேகரிப்பை அறவிடுவதற்கு, ஈடு திருப்திசெய்யப்பட்ட பின்னர், ஓர் ஈடுவைப்பவரினாலான வழக்குட்பட, ஒரு கணக்குக்கான வேறேதேனும் வழக்கு, மற்றும் எதிர்வாதியினால் பிழையாகப் பெறப்பட்டுள்ளவையும் வழக்காளிக்குச் சொந்தமான அசைவற்ற ஆதனத்தின் மீதானவையுமான இலாபங்களுக்கான ஏதேனும் வழக்கு.

(21) ஒரு பொதுச் சராசரி இழப்புக்கான அல்லது கடல் இடர்காப்புக் கட்டணத்துக்கான ஏதேனும் வழக்கு.

(22) கப்பல்களுக்கிடையேயான மோதல் தொடர்பில் நட்டஈட்டுக்கான ஏதேனும் வழக்கு.

(23) ஒரு காப்புறுதிப்பத்திரத்தின் மீதான அல்லது அத்தகைய ஏதேனும் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் செலுத்தப்பட்ட ஏதேனும் கட்டுப்பணத்தை அறவிடுவதற்கான ஏதேனும் வழக்கு.

(24) பின்வருவனவற்றுக்காக நட்டஈட்டுக்கான அல்லது சேதவீடுகளுக்கான ஏதேனும் வழக்கு:-

*(அ)* வழக்குத்தொடுக்கத்தக்க பிழையினால் ஏற்படுத்தப்பட்ட ஓராளின் இறப்பிலிருந்து விளைகின்ற இழப்புக்காக;

*(ஆ)* பிழையானமுறையில் கைதுசெய்தலுக்காக;

*(இ)* வன்மமான குற்றவழக்குக்காக;

*(ஈ)* பிழையானமுறையில் தடைப்படுத்தலுக்காக அல்லது மறித்து வைத்தலுக்காக;

*(உ)* அவதூறுக்காக;

*(ஊ)* சோரம்போதலுக்காக அல்லது நிறைவழிப்புக்காக;

*(எ)* மணவுறுதி ஒப்பந்தத்தின் அல்லது திருமண வாக்குறுதியின் மீறுகைக்காக;

*(ஏ)* வழக்காளியுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமொன்றை மீறுவதற்கு ஆளொருவரைத் தூண்டுவதற்காக;

*(ஐ)* ஏதேனும் சேவகத்தைத் துய்த்தலுக்கு அல்லது ஆதனத்தின் மீதான ஏதேனும் உரிமையைப் பிரயோகித்தலுக்கு முட்டுக்கட்டையிடுதலுக்காக அல்லது அதனுடன் தலையிடுதலுக்காக.

(25) மகரை அறவிடுவதற்காக ஒரு முஸ்லிமினாலான ஏதேனும் வழக்கு.

(26) பராயமடையாத ஒருவரின் கட்டுக்காப்புக்கான ஏதேனும் வழக்கு.

(27) மணநீக்கமொன்றுக்கான அல்லது நீதிமுறைப் பிரிவினைக்கான ஏதேனும் வழக்கு.

(28) பராமரிப்பு, தந்தைமையை நிர்ணயித்தல் அல்லது மகவேற்புத் தொடர்பான ஏதேனும் வழக்கு.

(29) கூட்டாதனத்திலான பங்காளரொருவரினால் ஒரு கூட்டுப்பங்காளரிடமிருந்து வருமதியான பணம் கொடுப்பனவு செய்யப்பட்டமை தொடர்பில் அவரினால் பங்களிப்புக்கான ஏதேனும் வழக்கு.

(30) அசைவற்ற ஆதனத்தின் பல்வேறு கூட்டு ஈடுவைப்போருள் ஒருவரினால் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தை மீட்பதற்காகச் செலுத்தப்பட்ட பணம் தொடர்பில் அவரினால் பங்களிப்புக்கான ஏதேனும் வழக்கு.

(31) ஏதேனும் வரி அல்லது வீதவரி அல்லது வேறு அறவீடு என்பவற்றின் கணக்கால் செய்யப்பட்ட ஓர் உரிமைக்கோரிக்கையைத் திருப்தி செய்வதில் மறுப்பின் கீழ் செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு அரசுக்கெதிரான அல்லது ஓர் உள்ளூர் அதிகாரசபைக்கெதிரான ஏதேனும் வழக்கு.

(32) காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறாக 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழான ஏதேனும் வழக்கு.

(33) 2003ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழான வியாபாரச் சின்னங்கள், ஆக்கவுரிமைகள் அல்லது பதிப்புரிமைகள் தொடர்பான ஏதேனும் வழக்கு.

(34) தொல்லை மீதான அடிப்படையிலான ஏதேனும் வழக்கு.

(35) 1972ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, வாடகைச் சட்டத்தின் கீழ் வாடகை மற்றும் வெளியேற்றுகைக்கான ஏதேனும் வழக்கு அத்துடன் அதன் கீழான வழக்கு நடவடிக்கைகள்.

(36) அப்போதைக்கு வலுவிலுள்ள (இச்சட்டம் தவிர்ந்த) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் ஆரம்ப நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திலிருந்து வெளிப்படையாக அல்லது உட்கிடை மூலம் தவிர்க்கப்பட்ட எவையேனும் வழக்குகள்.".

26. முதன்மைச் சட்டவாக்கமானது, அதன் ஆறாம் அட்டவணையை உடனடுத்துப் பின்வரும் புதிய அட்டவணையைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"ஏழாம் அட்டவணை

[பிரிவு 29அ(2)]

வழக்குகள்

1. (விபத்து அல்லது ஆள்சார் ஊறுபாட்டின் மீது அல்லது வேறேதேனும் ஒத்த வகுதியில் சேதவீடுகளை அறவிடுவதற்கான ஒரு வழக்கு உட்பட ஒன்றில் ஒரு தனிசாக அல்லது கட்டணமாக அல்லது கொடுப்பனவாக அல்லது சேதவீடாக அல்லது கோரிக்கையொன்றாக) பணத்தை அறவிடுவதற்கான ஏதேனும் வழக்கு;
2. அசைவுள்ள ஆதனத்தை அறவிடுவதற்கான ஏதேனும் வழக்கு;
3. விடயங்கள் 1 மற்றும் 2 இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வழக்குக் காரணம் தொடர்பில் ஓர் எதிர்கோருரிமைக்கான ஏதேனும் வழக்கு;
4. வேறேதேனும் சட்டத்தினால் அதற்களிக்கப்படுகின்றவாறான வேறேதேனும் நியாயாதிக்கம்.".

27. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2022ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்

[2022ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

### 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இச்சட்டத்தில் இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (v)ஆம் உட்பந்தியின் (v)ஆம் விடயத்தில், "என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (v)ஆம் உட்பந்தியின் (vi)ஆம் விடயத்தில், "2020, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2020, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஆனால் 2022, மே 31ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கும் எட்டு சதவீதப்படி (இதில் வரிப்பின்னம் 2/27 ஆகும்);" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (v)ஆம் உட்பந்தியின் (vi)ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(vii) 2022, யூன் 1ஆந் தேதியன்று தொடங்கி 2022, யூன் 30ஆந் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்காகவும் 2022, யூலை 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஆனால் 2022, ஓகத்து 31ஆந் தேதியன்று முடிவடைகின்ற ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காகவும் பன்னிரெண்டு சதவீதப்படி (இதில் வரிப்பின்னம் 3/28 ஆகும்); அத்துடன்

(viii) 2022, செத்தெம்பர் 1ஆந் தேதியன்று தொடங்கி 2022, செத்தெம்பர் 30ஆந் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்காகவும் 2022, ஒற்றோபர் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காகவும் பதினைந்து சதவீதப்படி (இதில் வரிப்பின்னம் 3/23 ஆகும்).".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) பந்தி (vi) இல், "2020, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2020, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனால் 2022, செத்தெம்பர் 30ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) பந்தி (vi) ஐ உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்து வதன் மூலமும்:-

"(vii) 2022, ஒற்றோபர் 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் இலங்கையில் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற ஆள் ஒவ்வொருவரும்-

*(அ)* விடயத்துக்கேற்ப, ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவில், விடயத்துக்கேற்ப, ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட அந்த வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் அல்லது சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலனவான வழங்குகைகளின் மொத்தப்பெறுமதி இருபது மில்லியன் ரூபாவாக அல்லது அதற்கு மேலாகவிருப்பின்; அல்லது

*(ஆ)* அப்போது முடிவடைகின்ற பன்னிரெண்டுமாத காலப்பகுதியில், இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலனவான வழங்குகைகளின் மொத்தப்பெறுமதி எண்பது மில்லியன் ரூபாவை விஞ்சியிருப்பின்; அல்லது

*(இ)* விடயத்துக்கேற்ப, அடுத்துவரும் ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில், இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலனவான வழங்குகைகளின் மொத்தப் பெறுமதி இருபது மில்லியன் ரூபாவை விஞ்சக்கூடுமென அல்லது அடுத்துவரும் பன்னிரெண்டு மாத காலப்பகுதியில் எண்பது மில்லியன் ரூபாவை விஞ்சக்கூடுமென நம்புவதற்கு எந்நேரத்திலும் நியாயமான ஏதுக்கள் இருப்பின், இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.".

(3) ஓராம் உட்பிரிவுக்கான இரண்டாம் காப்புவாசகத்தில், "2016, மே 2ஆம் தேதியிலிருந்து எழுகின்றதாதல் வேண்டும்.". என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"மே 2ஆம் தேதியிலிருந்து எழுகின்றதாதல் வேண்டும்:

ஆயின், மேலும், (vii)ஆம் பந்தியின் நோக்கங்களுக்காக, பதிவுக்கான தேவைப்பாடு, இந்தத் (திருத்தச்) சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்து எழுகின்றதாதல் வேண்டும்.".

4. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை, அதன் பாகம் IIஇல் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பாகத்தின் (ஆ) என்னும் பந்தியின் (xi)ஆம் விடயத்தின் (ஈ) என்னும் உபவிடயத்தில், "எவரேனுமாளினால், 2019, திசெம்பர் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய வழங்குகை இடம்பெற்றிருப்பின்."; என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "எவரேனுமாளினால், 2019, திசெம்பர் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2022, திசெம்பர் 31ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் அத்தகைய வழங்குகை இடம்பெற்றிருப்பின்,"; அத்துடன்

(2) பந்தி (ஆ) வின் (xi)ஆம் விடயத்தின் (ஈ) என்னும் உப விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(உ) வதிவிட வசதியின் ஏதேனும் குத்தகை அல்லது வாடகை தவிர அல்லது ஏதேனும் கூட்டாட்சியாதன வதிவிட வசதியின் வழங்குகை தவிர, எவரேனுமாளினால், 2023, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய வழங்குகை இடம்பெற்றிருப்பின்.".

5. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2022ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

[2022ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

### 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. (1) இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், (பட்டியல் "அ", பட்டியல் "ஆ", மற்றும் பட்டியல் "இ" இல் குறிப்பீடுசெய்யப்பட்ட பிரிவுகளின் ஏற்பாடுகள் தவிர்த்து) சபாநாயகரின் சான்றிதழ் அதன் மீது புறக்குறிப்பிடும் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) பட்டியல் "அ" வில் குறிப்பீடுசெய்யப்பட்ட பிரிவுகளின் ஏற்பாடுகள் 2022ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) பட்டியல் "ஆ" வில் குறிப்பீடுசெய்யப்பட்ட பிரிவுகளின் ஏற்பாடுகள் 2022ஆம் ஆண்டு ஒற்றோபர் 1 ஆந்தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) பட்டியல் "இ" வில் குறிப்பீடுசெய்யப்பட்ட பிரிவுகளின் ஏற்பாடுகள் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட அந்தந்தத் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 5ஆம் பிரிவானது இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில்-

*(அ)* அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "வழங்குகின்ற கொடுப்பனவுகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வழங்குகின்ற கொடுப்பனவுகள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

*(ஆ)* அவ்வுட்பிரிவின் *(ஊ)* என்னும் பந்தியில், "பெறப்பட்ட இளைப்பாற்றுக் கொடுப்பனவுகளும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பெறப்பட்ட இளைப்பாற்றுக் கொடுப்பனவுகளும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

*(இ)* அவ்வுட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியில், "வேறு கொடுப்பனவுகள்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வேறு கொடுப்பனவுகள்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில்-

*(அ)* அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், "விருப்பத்தெரிவின் பெறுமதி; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விருப்பத்தெரிவின் பெறுமதி;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

*(ஆ)* அவ்வுட்பிரிவின் *(ஊ)* என்னும் பந்தியில், "கணக்குக்குத் தொழில்தருநரினால் அளிக்கப்பட்ட உதவுதொகைகள்:" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கணக்குக்குத் தொழில்தருநரினால் அளிக்கப்பட்ட உதவுதொகைகள்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

*(இ)* அவ்வுட்பிரிவின் *(ஊ)* என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை சேர்ப்பதன் மூலமும்:-

"*(எ)* அந்தந்த ஓய்வூதிய உதவுதொகைகள் வருமானவரி நோக்கங்களுக்காக ஏலவே கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளன என்பதுடன், ஊழியர் முன்னைய வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய உதவுதொகைகள் மீது வரி செலுத்தியுள்ளார் என்னும் நிபந்தனைக்கமைய தொழிலிலிருந்து ஓய்வூதிய காலத்தில் பெறப்பட்ட எவையேனும் ஓய்வூதிய காலத்தில் பெறப்பட்ட எவையேனும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவானது அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (iv)ஆம் உட்பந்தியில், "செலவினம்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "செலவினம் அல்லது வேறு ஏதேனும் கழிப்பனவு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (x)ஆம் உட்பந்தியில், "வேறு அறவீடுகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வேறு அறவீடுகள் மற்றும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி ஒரு ஆளினது வருமானத்தைக் கணிப்பீடு செய்வதில் கழிப்பனவு செய்வதற்கு அனுமதிக்கப்படாத ஏதேனும் வரி அல்லது அறவீடு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவானது, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "அக்கடன் கடப்பாடு, பணம் கடன்பெறுவதில் உறப்பட்டவிடத்து, அப்பணம் வருமானம் தோற்றுவதில் ஆண்டின் போது பயன்படுத்தப்படுமிடத்து அல்லது ஆண்டின் போது பயன்படுத்தப்படும் சொத்தொன்றைக் கொள்வதில் பயன்படுத்தப்படுமிடத்து;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய கடப்பாட்டின் கீழ் கடனாகப் பெறப்பட்ட பணம் வருமானத்தைத் தோற்றுவிப்பதில் ஆண்டின்போது பயன்படுத்தப்படுகின்றதான சொத்தொன்றைக் கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்டவிடத்து" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவினை அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(4) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட குறைந்துசெல்லும் பெறுமதி தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்தொன்றுக்கு பூச்சியமாக இருக்கும் பட்சத்தில், (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட சீராக்கத்திற்கான கழிப்பனவு எந்த வரிமதிப்பீட்டாண்டில் செலவு உறப்பட்டதோ அந்த வரிமதிப்பீட்டாண்டில் இருந்து தொடங்குகின்றதும்:-

*(அ)* வகுப்பு 4 ஐச் சேர்ந்த தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்துக்கு பன்னிரெண்டு வரிமதிப்பீட்டாண்டுகளின் போது;

(ஆ) வேறு வகுப்புக்களைச் சேர்ந்த தேய்மானத் துக்குட்படத்தக்க சொத்துக்கு மூன்று வரிமதிப்பீட்டாண்டுகளின் போது,

பிரித்தொதுக்கப்பட்ட சமமான தொகைகளில் கழிக்கப்படுதல் வேண்டும்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உட்பிரிவுகள் (3) மற்றும் (3அ) விற்கு அமைய, இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவினை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(3அ) தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்தொன்று தொடர்பில் இச்சட்டத்திற்கான நான்காவது அட்டவணையின் கீழ் வழங்கப்பட்ட மற்றும் கணிப்பீடு செய்யப்பட்ட மூலதன அனுமதிப்புகளின் மொத்தம், எவையேனும் சூழ்நிலைகளில் அத்தகைய தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்தின் செலவுத் தொகையை விஞ்சுதலாகாது.".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் உட்பிரிவு (1) மற்றும் உட்பிரிவு (2) என்பவற்றை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும்:-

"(1) *(அ)* 2021, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக தொழில் அல்லது முதலீடு ஒன்றை நடாத்துவதிலிருந்து (நிதி நிறுவனம் ஒன்று தவிர) வேறு உருவகத்தினது வருமானத்தை கணக்கிடுவதில் கழிக்கப்பட்ட நிதிச் செலவுகளின் தொகை (2)ஆம் உட்பிரிவின் *(அ)* என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட வரையறையினுள் நிதிசார் சாதனங்களுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான நிதிச் செலவுகளின் தொகையை விஞ்சுதலாகாது;

(ஆ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டிருக்கின்றதும் அத்துடன் 2021, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக தொழில் அல்லது முதலீடு ஒன்றை நடாத்துவதிலிருந்து எந்தத் தேதியன்று வரிமதிப்பீட்டாண்டு முடிவடைகின்றதோ அந்தத் தேதியிலுள்ளவாறான வழங்கப்பட்ட பங்குமூலத்தைக் கொண்டுள்ளதுமான (நிதி நிறுவனம் தவிர வேறு) கம்பெனி ஒன்றில் வருமானத்தைக் கணக்கிடுவதில் கழிக்கப்பட்ட நிதிச்செலவுகளின் தொகை (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வரையறையை விஞ்சுதலாகாது.

(2) வரையறையானது பின்வரும் சூத்திரத்திற்கு இணங்க கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்:-

(அ) $A \times B$

இங்கு:

'A' என்பது உருவகத்தின் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தினதும் ஒதுக்கங்களினதும் மொத்தமாக இருக்குமிடத்து; அத்துடன்

'B' என்பது,

(i) உற்பத்தி செய்கின்ற உருவகம்மொன்றின் விடயத்தில், 3 என்னும் இலக்கமாகவுள்ளவிடத்து; அத்துடன்

(ii) உற்பத்தி செய்கின்ற உருவகமொன்று தவிர்ந்த உருவகமொன்றின் விடயத்தில், 4 என்றும் இலக்கமாகவுள்ளவிடத்து

(ஆ) $\frac{A}{B}$ x C

இங்கு:

'A' = ஆண்டின் நிதிச்செலவு;

'B' = ஆண்டின் போது உறப்பட்ட நிதிச்செலவின் மீதான நிதி சாதனங்களின் பெறுமதி; அத்துடன்

'C' = 4 X ஆண்டு முடிவிலுள்ளவாறான கம்பெனியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் ஒதுக்கங்களின் மொத்தம்; அத்துடன்

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் "கொள்ளப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும்:-

"கொள்ளப்படுதல் வேண்டும்:

ஆயினும் ஆண்டின்போது நிதிச்செலவு உறப்படாத பட்சத்தில், மேற்சொல்லப்பட்ட நோக்கத்துக்காக, பயன்படுத்தப்படாத வரையறையை கணக்கிடுவதில் (2)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வரையறை உடன் முற்போந்த ஆண்டின் அதே தொகைகளை பயன்படுத்துவதன் மூலமும் அவ்வாறாகவும் கணக்கிடப்படுதல் வேண்டும்."".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில், "கழிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும்:-

"கழிக்கப்படுதல் வேண்டும்:

ஆயினும் எவ்வாறாயினும், தொழில் ஒன்று தொடர்பில் ஆளொருவருக்கு நட்டம் ஒன்று ஏற்படுமிடத்தும் அந்நட்டம் இலாபமொன்றாக விருப்பின் சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வீதம் ஒன்றில் வரி விதிக்கப்படற்பாலதாக இருக்குமிடத்தும் அத்தகைய வீதம் அடுத்துப் பின்னர் அதிகரிக்கப்படுமிடத்தும் அத்துடன் அத்தகைய நட்டம் குறைக்கப்பட்ட வீதம் ஒன்றில் வரி விதிக்கப்படற்பாலதாக இருக்கின்றதாக கவனத்திற் கொள்ளப்படுதலாகாது.

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "நட்டங்கள் கழிக்கப்படுவதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நட்டங்கள் கழிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதல் மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை சேர்ப்பதன் மூலமும்:

"(இ) முதலீட்டிருந்தான கழிக்கப்படாத நட்டங்கள், அத்தகைய நட்டங்கள் எந்த வரிமதிப்பீட்டாண்டில் உறப்பட்டதோ அந்த வரிமதிப்பீட்டாண்டினை உடன் அடுத்துறும் வரி மதிப்பீட்டாண்டின் முதலாவது தேதியன்று தொடங்கும் ஆறு வரி மதிப்பீட்டாண்டுகளினுள் மட்டுமே கழிக்கப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(3) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவில், "வேறொரு முதலீட்டுச் சொத்தின் கையுதிர்ப்பின் மீதான ஏதேனும் நட்டத்தின் மூலம் குறைக்கப்படுதலாகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் நட்டத்தின் மூலம் குறைக்கப்படுதலாகாது." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46ஆம் பிரிவு, அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(இ) கைமாற்றப்பட்ட நேரத்தில்-

(i) 2021, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர்,

(*i*அ) அவ்வாளும் இணையாளரும் வதிவுள்ளவர்களாக இருக்கின்றமை; அத்துடன்

(*i*ஆ) இணையாளர் அல்லது இணைப் பங்குடைமையொன்றின் விடயத்தில் அதன் பங்காளர்களுள் எவரும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களாக விராதிருக்கின்றமை; அத்துடன்

(ii) 2021, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர்,

(*ii*அ) அவ்வாளும் இணையாளரும் வதிவுள்ளவர்களாக இருக்கின்றமை;

(*ii*ஆ) இணைப் பங்குடைமையொன்றின் விடயத்தில், அதன் பங்காளர்களுள் எவரும், அல்லது இணையாளர், வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களாக விராதிருக்கின்றமைளூ; அத்துடன்

(*ii*இ) நான்காம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சொத்தொன்றின் தேறிப்பெறுகையிலிருந்து ஆளின் ஈட்டுகையின் மீது ஏற்புடையற்பாலதான வரி வீதம், அத்தகைய சொத்தின் தேறிப்பெறுகையிலிருந்து இணையாளின் ஈட்டுகையின் மீது ஏற்புடையற்பாலதான வரி வீதத்திற்குச் சமமான அல்லது அதைவிட குறைவாகவிருக்கின்றமை; அத்துடன்".

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உடப்பிரிவில், “அவ்வரிமதிப்பீட்டாண்டுக்காகப் பங்குடைமையின் வியாபாரத்திலிருந்தான அல்லது முதலீட்டிலிருந்தான அதன் வருமானமாகவிருத்தல் வேண்டும் (பிரிவுகள் 6 மற்றும் 7).” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “அவ்வரி மதிப்பீட்டாண்டுக்காகப் பங்குடைமையின் வியாபாரத்திலிருந்தான, முதலீட்டிலிருந்தான அல்லது வேறு வருமானத்திலிருந்தான அதன் வருமானமாகவிருத்தல் வேண்டும்.” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 66ஆம் பிரிவு, அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், “1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் 76ஓ என்னும் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழான அல்லது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழான அல்லது 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழான அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்கள் தொடர்பில் குறிப்பான ஏற்பாடுகளைச் செய்வதற்கென இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டதும்,” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் 46ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவினால், 46அ என்னும் பிரிவினால் மற்றும் 76ஓ என்னும் பிரிவின் (1)ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் கடன்வசதிகளை வகுப்பாக்கஞ்செய்வதற்காகவும், ஏற்றங்கீகரிப்பதற்காகவும், அளவீடுசெய்வதற்காகவும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டதும்,” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 69ஆம் பிரிவு, அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், “இலங்கையிலுள்ளதாக; அல்லது” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “இலங்கையிலுள்ளதாக; அல்லது” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 72ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், “(3)ஆம் உட்பிரிவின்” என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, “(2)ஆம் உட்பிரிவின்” என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 73ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பந்தியின் (i)ஆம் உட்பந்தியில், “ஆளொருவரினால்; அல்லது” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஆளொருவரினால்” என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

(2) அப்பந்தியின் (ii)ஆம் உட்பந்தியில், “ஆளொருவரினால்” என்னும் சொல்லுக்குப் பதிலாக, “ஆளொருவரினால் அல்லது;” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பந்தியின் (ii)ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

“(iii) இலங்கை அரசாங்கத்தின் சார்பில் ஏதேனும் நிறுவனத்தினால் செய்யப்பட்ட அத்தகைய கொடுப்பனவுகள் உட்பட, இலங்கை அரசாங்கத்தினால்;”.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 83அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், “2020, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “2020, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து, ஆனால் 2023, சனவரி 1ஆந் தேதிக்கு முன்னர்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(1அ) தொழில்தருநர் ஒருவர், அவரது ஊழியருக்குச் செய்யப்பட்டதும் 5ஆம் பிரிவின் கீழ் அடங்குகின்றதுமான ஏதேனும் கொடுப்பனவின் மீது 2023, சனவரி 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக முற்கூட்டிய தனிப்பட்ட வருமான வரியை, ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்டவாறாகக் கழித்தல் வேண்டும்.”; அத்துடன்

(3) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், “ஓராம் உட்பிரிவின் கீழ்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஓராம் உட்பிரிவின் கீழ் அல்லது உட்பிரிவு (1அ)இன் கீழ்” என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 84அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், “2020, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து பயனுறும் வகையிலான” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “2020, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து, ஆனால் 2023, சனவரி 1ஆந் தேதிக்கு முன்னர் பயனுறுவதாக” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும்:-

“(1அ) பிரிவு 83அ மற்றும் 84ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவுக்கமைய, 2023, சனவரி 1ஆந் தேதியிலிருந்து ஆளொருவர், இலங்கையில் ஒரு மூலத்தைக் கொண்ட பங்கிலாபம், வட்டி, கழிப்பனவு, விதிப்பனவு, இயற்கை வளக் கொடுப்பனவு, வாடகை, அரசுரிமைப்பணம் அல்லது கட்டுப்பணம் என்பவற்றின் கொடுப்பனவிலிருந்து, இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் 10ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 85ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில், “ஆளொருவர்” என்னும் சொல்லுக்குப் பதிலாக, “ஆளொருவர் 2023, சனவரி 1ஆந் தேதிக்கு முன்னர்” என்னும் சொற்களையும் எண்களையும் உட்புகுத்துவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(1ஆ) உட்பிரிவுகள் (2) மற்றும் (3) வுக்கமைய, 2023, சனவரி 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக, ஆளொருவர், அத்தகைய ஆள் வதிவற்ற ஆளொருவருக்கு இலங்கையில் ஒரு மூலத்தைக் கொண்ட ஒரு சேவைக் கட்டணத்தை அல்லது ஒரு காப்புறுதிக் கட்டுப்பணத்தைச் செலுத்துகின்றவிடத்து, கொடுப்பனவின் 14 சதவீதத்தில் வரியைப் பிடித்துவைத்தல் வேண்டும்.

(1இ) மூன்றாம் உட்பிரிவுக்கமைய, 2023, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக, ஆளொருவர், பின்வருவனவற்றுக்காகச் செலுத்துநரின் ஊழியரொருவராகவிராத வதிவுள்ள தனியாள் ஒருவருக்கு இலங்கையில் ஒரு மூலத்தைக் கொண்ட சேவைக் கட்டணமொன்றை அத்தகைய

ஆள் செலுத்துமிடத்து, அக்கொடுப்பனவின் 5சதவீதத்தில் வரியைப் பிடித்துவைத்தல் வேண்டும்:-

(அ) கற்பிப்பதற்காக, விரிவுரையாற்றுவதற்காக, பரீட்சிப்பதற்காக, ஒரு பரீட்சையைக் கண்காணிப்பதற்காக அல்லது மேற்பார்வை செய்வதற்காக;

(ஆ) வதிவுள்ள காப்புறுதி, விற்பனைகள் அல்லது பிரசார முகவரொருவருக்கு ஒரு தரகாக அல்லது தரகுக்கூலியாக; அல்லது

(இ) மருத்துவர், பொறியியலாளர், கணக்காளர், சட்டத்தரணி, மென்பொருள் உருவாக்குநர், ஆராய்ச்சியாளர், கல்விமான் போன்ற சுயாதீன சேவை வழங்குநர் என்ற தன்மையில் அத்தகைய தனியாளினால் அல்லது ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக எவரேனும் தனிப்பட்ட சேவைவழங்குநரினால் வழங்கப்பட்ட சேவைகளுக்காக:

ஆயின், எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவானது, மாதமொன்றுக்கு 100,000 ரூபாவை விஞ்சாதிருக் கும் ஒரு சேவைக் கொடுப்பனவுக்கு ஏற்புடைய தாதலாகாது."; அத்துடன்

(3) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "பிரிவு 83 இன்கீழான" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "பிரிவு 83இன் கீழான அல்லது பிரிவு 83அ வின் கீழான" அல்லது பிரிவு 84அ வின் கீழான" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 87ஆம் பிரிவு, அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில், "பிரிவு 83இன் கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "பிரிவு 83இன் கீழ் அல்லது பிரிவு 83அ வின் கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 88ஆம் பிரிவு, அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(அஅ) 2023, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் வதிவுள்ள கம்பெனியொன்றினாற் செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள்;".

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 90ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "பிரிவு 83இன் கீழ் வரியைப் பிடித்துவைப்பதற்கு தொழில்தருநர் தேவைப்படுத்தப்படாதவிடத்து, ஊழியம் ஒன்றிலிருந்து" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"பிரிவு 83இன் கீழ் அல்லது பிரிவு 83அ வின் கீழ் வரியைப் பிடித்துவைப்பதற்குத் தொழில்தருநர் தேவைப்படுத்தப்படாதவிடத்து, ஊழியம் ஒன்றிலிருந்து: ஆயின், எவ்வாறாயினும், ஒரு வரிமதிப்பீட்டாண்டின் போது, ஒரு முதலீட்டுச் சொத்தின் தேறிப்பெறுகையிலிருந்து பெறப்பட்ட அல்லது பெறப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஈட்டுகைகள் காலாண்டுத் தவணைப்பணங்களின் நோக்கத்துக்காகக் கவனத்துட்கொள்ளப்படுதலாகாது.".

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 94ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "வதிவற்ற ஆளொருவர்." என்னும் சொற்களுக் குப் பதிலாக, "வதிவற்ற ஆளொருவர்; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(இ) இரண்டாம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் எந்தத் தனியாளின் வரிமதிப்பீட்டாண்டுக்காகச் செலுத்தப்படற்பாலதான வரியானது, தொழில்தருநர் 83அ என்னும் பிரிவின் கீழ் முற்கூட்டிய தனிப்பட்ட வருமான வரியைக் கழித்து 82ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியின் கீழ் வரியெதுவும் செலுத்தப்படற்பாலதாக விராதுள்ளவிடத்து தொழிலிலிருந்தான வருமானத்துடன் புறநீங்கலாகத் தொழிற்படுகின்றதோ அந்தத் தனியாளொருவர்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில், "இல்லாதொழித்துள்ளவிடத்து" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "இல்லாதொழித்துள்ளவிடத்து அல்லது அத்தகைய ஆளின் தொழில்தருநர் 83அ என்னும் பிரிவின் கீழ் அவரது தொழில் வருமானத்தின் மீது முற்கூட்டிய தனிப்பட்ட வருமான வரியைக் கழித்துள்ளவிடத்து" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 120ஆம் பிரிவு, அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில், "தயாரித்து பேணுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"தயாரித்து பேணுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆள் எல்லாத் தொழில் அல்லது முதலீட்டுச் செயற்பாடுகளின் மீதும் செலவுகளைப் பொதுவாக உற்றிருக்கும் அல்லது எவையேனும் சொத்துக்களைப் பொதுவாகப் பயன்படுத்தியிருக்கும் மற்றும் ஏதேனும் செலவை அல்லது கழிப்பனவை இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காகத் தனிவேறாக இனங் காணமுடியாதிருக்கும் விடயத்தில் அத்தகைய நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் விகிதாசார அடிப்படையொன்றின் மீது (மொத்த விற்பனைவரவின் விகிதாசாரத்துக்கு இணங்க அல்லது சொத்துப்பாவனையின் விகிதாசாரத்துக்கு இணங்க) அத்தகைய செலவுகளை அல்லது கழிப்பனவுகளைப் பிரித்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்.".

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 123ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "எழுத்தில் நியாயமான அறிவித்தலைக் கொடுப்பதன் மூலம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள் மூலம் நியாயமான அறிவித்தலைக் கொடுப்பதன் மூலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(6) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதி, அறிவித்தல் மூலம், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆட்களின் பெயர்களையும், முகவரிகளையும் அல்லது தேசிய அடையாள

அட்டை இலக்கங்களையும் வழங்கும்படி தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதியைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன், தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதி ஆணையாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய விபரங்களை வழங்குதல், அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட வரி அலுவலரொருவருக்கு, அவரது கட்டுக்காப்பின் கீழுள்ள பதிவேடுகளுக்கான அணுக்கத்தை வழங்குதல் அவரது கடமையாதலும் வேண்டும்.

(7) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதியுடன் பதிவுசெய்யப்பட்ட கம்பெனிகளின் பணிப்பாளர்கள் தொடர்பான எவையேனும் மாற்றங்கள் அல்லது புதிய நியமனங்கள் பற்றி, அத்தகைய பணிப்பாளர்களின் பெயர்களும் முகவரிகளுமுட்பட, ஆறுமாதங்களுக்கொரு தடவை ஆணையாளர் தலைமையதிபதிக்குத் தகவல்களை வழங்குதல் வேண்டும்.".

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 133ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், "எழுத்திலான அறிவித்தல் மூலம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எழுத்திலான அல்லது இலத்திரனியல் வழிவகைகள் மூலமான அறிவித்தல்மூலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 134ஆம் பிரிவு, அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில், "எழுத்திலான அறிவித்தல் ஒன்றை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எழுத்திலான அல்லது இலத்திரனியல் வழிவகைகள் மூலமான அறிவித்தல் ஒன்றை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 135ஆம் பிரிவு, அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவில், "எழுத்திலான அறிவித்தலை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எழுத்திலான அல்லது இலத்திரனியல் வழிவகைகள் மூலமான அறிவித்தலை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 136ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "நூற்றிமுப்பத்தைந் தாம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i)ஆம் உட்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "நூற்றிமுப்பத்தைந்தாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i)ஆம் உட்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காகவும் சுய வரிமதிப்பீட்டு விபரத்திரட்டு கோப்பிடப்பட்ட தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதகாலப்பகுதியினுள்ளும் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காகவும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 151ஆம் பிரிவு, அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில், "எழுத்தில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள் மூலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 163ஆம் பிரிவு, அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(5) மூன்றாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சான்றிதழின் தேதியன்றுள்ளவாறு வருமதியாகவுள்ள வரித்தொகையும், ஏதேனும் தண்டமும் மற்றும் வட்டியும் அத்தகைய சான்றிதழின் தேதியிலிருந்து தீர்ப்புவரையிலான தேதிவரை சான்றிதழிற் குறிப்பிடப்பட்ட தொகை மீதான ஏதேனும் சட்டப்படியான வட்டியும் ஆணையாளர் தலைமையதிபதிக்கு வருமதியாகவும் செலுத்தப்படற்பாலதாகவும் உள்ள வரியாக இருத்தல் வேண்டும்.

(6) இப்பிரிவின் கீழ் 2023, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகள், (3)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சான்றிதழ் காண்பிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது மாதங்களினுள் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும்.".

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 176ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(2) ஒரு வரியை மதிப்பீடுசெய்தல், செலுத்துதல், சேகரித்தல் மற்றும் பிணக்கிடுதலுக்கான நடவடிக்கை முறைகள் என்பன வரியொன்று தொடர்பான தண்டங்களுக்குச் சமமாக ஏற்புடையனவாதல் வேண்டும்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (6)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(6அ) ஆறாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதில் இவ்வத்தியாயத்தின் கீழ் விதிக்கப்பட்ட தண்டத்தையும் செலுத்தப்படற்பாலதான வரியையும் வட்டியையும் குறிப்பிட்டு தனியொரு வரிமதிப்பீட்டு அறிவித்தலை வழங்குவது சட்டமுறையானதாதல் வேண்டும்.".

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் 182ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2023, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(1அ) இரண்டாயிரத்து இருபத்துமூன்று ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக, இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு முறையான கணக்குகளை, பதிவேடுகளை அல்லது ஆவணங்களைப் பேணத்தவறுகின்ற ஆளொருவர் (2)ஆம் உட்பிரிவில்ஏற்பாடு செய்யப்பட்டவாறாகக் கணக்கிடப்பட்ட ஒரு தண்டத்துக்கு ஆளாதல் வேண்டும்.".

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் 195ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவில், "ஏற்றுமதி" என்னும் செல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் "பொறுப்பு முயற்சியையும்" எனும் சொல்லுக்குப் பதிலாக, "2022, ஏப்பிறல் 1 இற்கு முன்னர், பொறுப்பு முயற்சியையும்" எனும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவில், "சிறிய நடுத்தர பொறுப்பு முயற்சி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், அவ்வரை விலக்கணத்தின் (ஈ) என்னும், பந்தியில்" அவ்வாளின் அல்லது அவரது இணையாளரது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அவ்வாளினதும் அவரது இணையாளரினதும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவில், "குறித்துரைக்கப்பட்ட பொறுப்புமுயற்சி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், அவ்வரைவிலக்கணத்தின் பந்தி (ஏ) இல், "வழங்குகை யாவிருத்தல் வேண்டும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"வழங்குகையாகவிருத்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், மத்திய வங்கியின் ஏதேனும் பணிப்புரை காரணமாக இப்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சேவைகளுக்காக வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுகளைச் செய்வதிலிருந்து ஏற்றுமதியாளர் தடுக்கப்பட்டவிடத்து, ஏற்றுமதியாளர் அவரது வெளிநாட்டு நாணயப் பெறுகைகள் பற்றிய உறுதிப்படுத்துகையை வழங்குதல் வேண்டும்;".

33. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் 1ஆம் பந்தியில் -

(அ) அப்பந்தியின் (1அ) என்னும் உட்பந்தியில், "2020, சனவரி 1ஆந் தேதியிலிருந்து தொடங்கும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2020, சனவரி 1ஆந் தேதியிருந்து, ஆனால் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (1அ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1ஆ) இரண்டாம் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டுக்காக ஒரு வதிவுள்ள அல்லது வதிவற்ற தனியாளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்துக்குப் பின்வரும் வீதங்களில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலாவது ஒன்பது மாத காலப்பகுதிக்கான வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம்:-

| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் | செலுத்தப்படற்பாலதான வரி |
|---|---|
| 2,250,000 ரூபாவை விஞ்சாத | ரூபா 0 க்கு விஞ்சுதலான தொகையின் 6% |
| 2,250,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 4,500,000 ரூபாவை விஞ்சாத | 135,000 ரூபாவும் 2,250,000 ரூபாவுக்கு விஞ்சுதலான தொகையின் 12% உம் |
| 4,500,000 ரூபாவை விஞ்சிய | 405,000 ரூபாவும 4,500,000 ரூபாவுக்கு விஞ்சுதலான தொகையின் 18% உம்"; |

(ஆ) 2022, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் இரண்டாவது மூன்றுமாத காலப்பகுதிக்கு வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம்:-

| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் | செலுத்தப்படற் பாலதான வரி |
|---|---|
| 125,000 ரூபாவை விஞ்சாத | ரூபா 0 க்கு விஞ்சுதலான தொகையின் 6% |
| 125,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 250,000 ரூபாவை விஞ்சாத | 7,500 ரூபாவும் 125,000 ரூபாவுக்கு விஞ்சுதலான தொகையின் 12% உம்; |
| 250,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 375,000 ரூபாவை விஞ்சாத | 22,500 ரூபாவும் 250,000 ரூபாவுக்கு விஞ்சுதலான தொகையின் 18% உம்; |
| 375,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 500,000 ரூபாவை விஞ்சாத | 45,000 ரூபாவும் 375,000 ரூபாவுக்கு விஞ்சுதலான தொகையின் 24% உம்; |
| 500,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 625,000 ரூபாவை விஞ்சாத | 75,000 ரூபாவும் 500,000 ரூபாவுக்கு விஞ்சுதலான தொகையின் 30% உம்; |
| 625,000 ரூபாவை விஞ்சிய | 112,500 ரூபாவும் 625,000 ரூபாவுக்கு விஞ்சுதலான தொகையின் 36% உம்; |

(1இ) இரண்டாம் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, 2023, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றவொரு வரிமதிப்பீட்டாண்டுக்காக ஒரு வதிவுள்ள அல்லது வதிவற்ற தனியாளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்துக்குப் பின்வரும் வீதங்களில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:-

| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் | செலுத்தப்படற் பாலதான வரி |
|---|---|
| 500,000 ரூபாவை விஞ்சாத | ரூபா 0 க்கு விஞ்சுதலான தொகையின் 6% |
| 500,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 1000,000 ரூபாவை விஞ்சாத | 30,000 ரூபாவும் 500,000 ரூபாவை விஞ்சுதலான தொகையின் 12% உம் |

| | |
|---|---|
| 1,000,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 1,500,000 ரூபாவை விஞ்சாத | 90,000 ரூபாவும் 1,000,000 ரூபாவை விஞ்சுதலான தொகையின் 18% உம்; |
| 1,500,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 2,000,000 ரூபாவை விஞ்சாத | 180,000 ரூபாவும் 1,500,000 ரூபாவை விஞ்சுதலான தொகையின் 24% உம்; |
| 2,000,000 ரூபாவை விஞ்சிய ஆனால 2,500,000 ரூபாவை விஞ்சாத | 300,000 ரூபாவும் 2,000,000 ரூபாவை விஞ்சுதலான தொகையின் 30% உம்; |
| 2,500,000 ரூபாவை விஞ்சிய | 450,000 ரூபாவும் 2,500,000 ரூபாவை விஞ்சுதலான தொகையின் 36% உம்; |

(இ) அப்பந்தியின் (5)ஆம் உட்பந்தியில், “2021, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “2021, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து ஆனால் 2023, சனவரி 1ஆந் தேதிக்குமுன்னர்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அவ்வட்டவணையின் 3ஆம் பந்தியில், அப்பந்தியின் (1)ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:-

“(1) இரண்டாம் உட்பந்தியின் ஏற்பாடுகளுக் கமைய, 57ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவு எந்த நம்பிக்கைப்பொறுப்புக்கு ஏற்புடையதாகின்றதோ வரிமதிப்பீட்டாண்டொன்றுக்காக அந்த நம்பிக்கைப்பொறுப்பின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்துக்குப் பின்வரும் வீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:-

*(அ)* 2020, சனவரி 1ஆந் தேதிக்குமுன்னர் 24%;

*(ஆ)* 2020, சனவரி 1ஆந் தேதியிலிருந்து ஆனால் 2022, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்குமுன்னர் 18%;

*(இ)* 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலாவது ஆறுமாதங்களுக்காக 18% மற்றும் அதே வரிமதிப்பீட்டாண்டின் இரண்டாவது ஆறு மாதங்களுக்காக 30%; அத்துடன்

*(ஈ)* 2023, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக 30%.”;

(3) அவ்வட்டவணையின் (4)ஆம் பந்தியில் -

(அ) அப்பந்தியின் (1)ஆம் உட்பந்தியில் -

(i) அவ்வுட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

“(ஆ) 2020, சனவரி 1ஆந் தேதியிலிருந்து ஆனால் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதிக்குமுன்னர் பயனுறுவதாக, 24 சதவீத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்;”;

(ii) அவ்வுட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங் களைச் சேர்ப்பதன் மூலமும்:-

“(இ) 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலாவது ஆறுமாதங்களுக்காக 24 சதவீத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அதே வரிமதிப்பீட்டாண்டின் இரண்டாவது ஆறுமாதங்களுக்காக 30 சதவீதத்தில் வரிவிதிக்கப்படுதலும் வேண்டும்.”; அத்துடன்

(ஈ) 2023, ஏப்பிறல் 1 ஆந்தேதியிலிருந்து பயனுறுவதாக 30 சதவீத்தில் வரி விதிக்கப்படுதல் வேண்டும்.”.

(ஆ) அப்பந்தியின் (2அ) என்னும் உட்பந்தியில், “2020, சனவரி 1 இலிருந்து” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “2020, சனவரி 1 இலிருந்து ஆனால் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் மற்றும் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலாவது ஆறுமாதங்களுக்காக” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(இ) அப்பந்தியின் (2அ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

“(2ஆ) 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டில் 2022, ஒற்றோபர் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற ஆறுமாத காலப்பகுதிக்காக ஒரு கம்பெனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தை உள்ளடக்குகின்ற அதன் பின்வரும் ஈட்டுகைகளினதும் இலாபங்களினதும் அத்தகைய பாகம் மற்றும் 2023, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக ஒரு கம்பெனியின் ஈட்டுகைகளுக்கும் இலாபங்களுக்கும் பின்வரும் வீதங்களில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) பந்தயம் பிடித்தலும் சூதாட்டமும் நடாத்துவதிலிருந்தான ஈட்டுகைகளும் இலாபங்களும்; 40%; அத்துடன்

(ஆ) ஏதேனும் மதுபான அல்லது புகையிலைத் தயாரிப்பின் உற்பத்தியிலிருந்தும் விற்பனையிலிருந்தும் அல்லது இறக்குமதியிலிருந்தும் விற்பனையிலிருந்துமான ஈட்டுகைகளும் இலாபங்களும் 40%.”;

(ஈ) அப்பந்தியின் (4)ஆம் உட்பந்தியின் (அ) என்னும் விடயத்தில், “10 சதவீதத்தில் கம்பெனிக்கு வரிவிதிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “2022, ஒற்றோபர் 1ஆந் தேதிக்கு முன்னர் 10 சதவீதத்திலும் 2022, ஒற்றோபர் 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக 30 சதவீதத்திலும் கம்பெனிக்கு வரிவிதிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்”;

(உ) அப்பந்தியின் (5) ஆம் உட்பந்தியில் -

“(i) (1), (2அ)” என்னும் சொல்லுக்கும் எண்களுக்கும் பதிலாக, “(1), (2அ), (2ஆ),” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ii) அவ்வுட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில், “அவ்வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துறும் இரண்டு வரிமதிப்பீட்டாண்டுகளுக்கு” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “2022, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலாவது ஆறு மாதங்களுக்காக” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(iii) அவ்வுட்பந்தியின் (ஆ) என்னும் உப உட்பந்தியின் விடயம் (ii)இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தினை இடுக:-

“(ii) முதல் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுடன் ஒப்பிடும்போது, 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதல் ஆறு மாதங்களில் ஐம்பது சதவீதத்தினால் (குறித்துரைக்கப்பட்ட பொறுப்புமுயற்சிகள் தவிர்ந்த) ஏற்றுமதி அதிகரிப்பு.”.

(4) அவ்வட்டவணையின் 5ஆம் பந்தியின் (1)ஆம் உட்பந்தியில், “2020, சனவரி 1 இற்குமுன்னர் 28 சதவீதத்திலும், 2020 சனவரி 1 இலிருந்து பயனுறும்வகையில் 24 சதவீதத்திலும் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:-” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக பின்வருவதனை இடுக:-

“பின்வரும் வீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) 2020, சனவரி 1ஆந் தேதிக்குமுன்னர் 28%;

(ஆ) 2020, சனவரி 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக ஆனால் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் 24%;

(இ) 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலாவது ஆறு மாதங்களுக்காக 24% மற்றும் அதே வரிமதிப்பீட்டாண்டின் இரண்டாவது ஆறு மாதங்களுக்காக 30 சதவீதத்தில்; அத்துடன்

(ஈ) 2023, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக 30%;”.

(5) அவ்வட்டவணையின் 7ஆம் பந்தியில் -

(அ) அப்பந்தியின் (1)ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலம்:-

“(1) இரண்டாம் பந்திக்கமைய, வரிமதிப்பீட்டாண்டொன்றுக்காக அரசசார்பற்ற ஒழுங்கமைப்பொன்றின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்துக்குப் பின்வரும் வீதங்களில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) 2020, சனவரி 1ஆந் தேதிக்குமுன்னர் 28%;

(ஆ) 2020, சனவரி 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக ஆனால் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதிக்குமுன்னர் 24%;

(இ) 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலாவது ஆறு மாதங்களுக்காக 24% மற்றும் அதே வரிமதிப்பீட்டாண்டின் இரண்டாவது ஆறுமாதங்களுக்காக 30 சதவீதத்தில்; அத்துடன்

(ஈ) 2023, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக 30%”;

(ஆ) அப்பந்தியின் (3)ஆம் உட்பந்தியியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

“(3) அறுபத்தெட்டாம் பிரிவின் கீழ் மானியக்கொடை, நன்கொடை அல்லது உதவுதொகை என்ற வகையாக அல்லது வேறேதேனும் முறையிலும் ஒரு வரிமதிப்பீட்டாண்டில் பெறப்பட்ட தொகைகளின் மீது அரசசார்பற்ற ஒழுங்கமைப்பொன்றினால் செலுத்தப்படற்பாலதான வரிவீதம் பின்வருமாறாதல் வேண்டும்:-

(அ) 2020, சனவரி 1ஆந் தேதிக்கு முன்னர் 28%;

(ஆ) 2020, சனவரி 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக ஆனால் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதிக்குமுன்னர் 24%;

(இ) 2022, ஏப்பிறல் 1ஆந்தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலாவது ஆறு மாதங்களுக்காக 24% மற்றும் அதே வரிமதிப்பீட்டாண்டின் இரண்டாவது ஆறுமாதங்களுக்காக 30 சதவீதத்தில்; அத்துடன்

(ஈ) 2023, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக 30%”;

(6) அவ்வட்டவணையின் 10ஆம் பந்தியின் (1)ஆம் உட்பந்தி யில் -

(அ) அவ்வுட்பந்தியின் (அ) என்னும் விடயத்தில், “பிரிவு 83 ஏற்புடையதாகும்” என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, “பிரிவு 83 அல்லது பிரிவு 83அ ஏற்புடையதாகும்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில், “பிரிவு 84(1)(அ)(i)ஏற்புடையனதாகும்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “பிரிவு 84(1) (அ) ஏற்புடையனதாகும்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அவ்வுட்பந்தியின் (இ) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

“(ஈ) பிரிவு 84அ (1அ) ஏற்புடையதாகும் கொடுப்பனவுகளுக்காக -

(i) கூட்டுமொத்தக் கொடுப்பனவு மாத மொன்றுக்கு 100,000 ரூபாவை விஞ்சாதவிடத்து வதிவுள்ள ஆளொருவருக்குச் செய்யப்பட்ட வாடகைக் கொடுப்பனவுகள் - 0%;

(ii) செலுத்தப்பட்ட வட்டி அல்லது கழிப்பனவு - 5%;

(iii) கூட்டுமொத்தக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு 100,000 ரூபாவை விஞ்சுகின்றவிடத்து அல்லது சமமாக உள்ளவிடத்து வதிவுள்ள

ஆளொருவருக்குச் செய்யப்பட்ட வாடகைக் கொடுப்பனவுகள் முழுத்தொகையின் மீதும் - 10%;

(iv) பங்கிலாபம் தவிர மற்றெல்லாக் கொடுப்பனவுகளும் - 14%; அத்துடன்

(v) செலுத்தப்பட்ட பங்கிலாபம் - 15%;" அத்துடன்

(7) அவ்வட்டவணையின் பந்தி 11இல், "ஐந்து வரிமதிப்பீட்டாண்டுக்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டு வரிமதிப்பீட்டாண்டுக்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

34. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணை, அவ்வட்டவணையின் 1ஆம் பந்தியில், அப்பந்தியின் (6)ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(6அ) தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்தொன்றின் மீது முதலாவது முதலீட்டுத் தேதியிலிருந்து தொடங்கி மூன்று ஆண்டுகளைக் கொண்ட கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதி, இப்பந்தியின் உட்பந்தியொன்றின் கீழ் ஆளொருவரது உட்கருதப்பட்ட மொத்த முதலீட்டினைச் செய்திராத அவ்வாளுக்கு வழங்கப்படுதல் வேண்டும். உட்பந்தி (6)இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இப்பந்தியின் உட்பந்தியொன்றின் கீழ் எழுகின்ற மூலதன அனுமதிப்பு, அவர் எந்த வரிமதிப்பீட்டாண்டில் உட்கருதப்பட்ட மொத்த முதலீட்டைப் பூர்த்திசெய்துள்ளாரோ அவ்வரிதிப்பீட்டாண்டில் ஆனால் அத்தகைய கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப் குதி முடிவுறு முன்னர் கழிக்கப்படுதல் வேண்டும்.".

35. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் (எ) என்னும் பந்தியை உடனடுத் துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(*எஎ*) தொழிலினது மூலதனச் சொத்தின் அல்லது பொறுப்பின் தேறிப் பெறுகைகையிலிருந்து அல்லது ஒரு முதலீட்டுச் சொத்தின் தேறிப் பெறுகையிலிருந்து ஓர் ஈட்டுகையாக, அத்தகைய ஈட்டுகை இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியாவசியமாக இருப்பதாக இலங்கை அரசாங்கத்தினாலான ஏதேனும் முடிபுகாரணமாகவும் அமைச்சரின் எழுத்திலான முன்னங்கீகாரத்துக்கமையவும் செய்யப்பட்டிருப்பின், இலங்கை அரசாங்கத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட ஓர் உருவகத்தினால் செய்யப்பட்ட ஓர் ஈட்டுகை;";

(2) அவ்வட்டவணையின் பந்தி (*ஏஏ*) இல், "2021, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2021, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று ஆனால் 2022, ஒற்றோபர் 1ஆம் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(3) அவ்வட்டவணையின் (*சச*) என்னும் பந்தியில், "2020, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர்-" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2020, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2022, ஒற்றோபர் 1ஆந் தேதிக்கு முன்னர்-" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;;

(4) அவ்வட்டவணையின் (*சச*) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(*சசச*) 2022, ஒற்றோபர் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் -

(i) 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் IV இன் ஏற்பாடு களுக்கிணங்கப் பின்வரும் தொழில்களுள் ஏதேனுமொன்றில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றில் ஈடுபட்டுள்ளதும், 1978 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச்சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையுடன் பின்வருவனவற்றுக்கான உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ளதுமான ஒரு வதிவுள்ள கம்பெனியினால் செலுத்தப்பட்ட பங்கிலாபமொன்று:-

(i*அ*) இறக்குமதி, சிறிய பதனிடுகை மற்றும் மீள் ஏற்றுமதி என்பவற்றை உட்படுத்துகின்ற துறைமுகக் களஞ்சியத்தொழில்;

(i*ஆ*) பண்டங்களை இலங்கைக்குக் கொண்டுவராமல் அவற்றை ஒரு நாட்டிலிருந்து பெறமுடியுமான அல்லது ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு வேறொரு நாட்டுக்குக் கப்பலேற்றமுடியுமான கரைகடந்த தொழில்;

(i*இ*) வெளிநாட்டிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு முகப்பு முனைச் சேவைகளை வழங்குதல்;

(i*ஈ*) நிதிசார் வழங்குகைச் சங்கிலி மற்றும் சிட்டையிடுதல் தொழிற்பாடுகளையும் முகாமைசெய்வதற்காகத் தலைமைதாங்குநர்களின் தலைமையலுவலக தொழிற்பாடுகள்;

(i*உ*) இலங்கையில் சுங்கத்தீர்ப்புப் பண்டசாலை அல்லது பல்நாட்டுத் திரட்டுகை உட்பட, ஏற்பாட்டியல் சேவைகள்;

(ii) அத்தகைய பங்கிலாபக் கொடுப்பனவு, பிரிவு 84அ வின் (1அ) என்னும் உட்பிரிவின் கீழ் முற்கூட்டிய வருமான வரிக்கு அமைந்ததாகவிருக்கும் அந்த வதிவுள்ள கம்பெனியினால் அல்லது வேறொரு வதிவுள்ள கம்பெனியினால் பெறப்பட்ட வேறொரு வதிவுள்ள கம்பெனியினால் பெறப்பட்ட வேறொரு பங்கிலாபத்துக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதாக, அல்லது அதிலிருந்து பெறப்பட்டதாக இருக்கும் அளவுக்கு உறுப்பினரொருவருக்கு ஒரு வதிவுள்ள கம்பெனியினால் செலுத்தப்பட்ட பங்கிலாப மொன்று;";

(5) அவ்வட்டவணையின் பந்தி (ணண) வில், "மீதான பங்கிலாபங்கள் மற்றும் ஈட்டுகைகள்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மீது 2022, ஒற்றோபர் 1ஆந் தேதிக்கு முன்னரான பங்கிலாபங்கள் மற்றும் ஈட்டுகைகள்;" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(6) அவ்வட்டவணையின் (ப) என்னும் பந்தியில் -

(*அ*) அப்பந்தியின் உட்பந்தி (ii) இல், "2020, சனவரி 1ஆந் தேதியன்று" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2020, சனவரி 1ஆந் தேதியன்று, ஆனால் 2023, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(*ஆ*) அப்பந்தியின் (எ)ஆம் உட்பந்தியில் -

(i) "அத்தொழிற்கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்:" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2023, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னரான அத்தொழிற்கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்:" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ii) (ஆ) என்னும் விடயத்தில், "ஐந்தாண்டு" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "இரண்டாண்டு" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

(iii) அவ்வுட்பந்தியின் காப்புவாசகத்தில், "அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அடுத்தாண்டுக்கு" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அப்பந்தியின் (vi)ஆம் உட்பந்தியில், "ஏதேனும் ஏற்றுமதி வியாபாரம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2023, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் ஏற்றுமதி வியாபாரம்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்�ளு அத்துடன்

(7) அவ்வட்டவணையின் (ய) என்னும் பந்தியில், "2021, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2021, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2023, ஏப்பிறல்1ஆந் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

36. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஐந்தாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் 1ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியில், "ஏதேனும் வேறு நிதி நிறுவனத்தின் கொள்ளலின் அல்லது ஒன்றிணைவின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட வேறேதேனும் வங்கியின், 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பெனியின் அல்லது 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க, நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 3ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியின் நியதிகளின்படி பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக் கம்பெனியின் கொள்ளலின், பகுதியளவான கொள்ளலின் தொழிலை உள்வாங்கலின் அல்லது ஒன்றிணைவின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வட்டவணையின் 2ஆம் பந்தியில் -

(அ) அப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:-

"(அ) ஒரு நம்பிக்கைப்பொறுப்பாளர், பெறுநர், நிறைவேற்றுநர் அல்லது ஒழிப்போன் என்பவராக உள்ள தனியாள் ஒருவர், அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பளராக, பெறுநராக, நிறைவேற்றுநராக அல்லது ஒழிப்போனாக இந்தத் தனிப்பட்ட நிவாரணத்தைக் கழிப்பதற்கு உரித்துடையவராதலாகாதென்பதுடன், அந்நிவாரணமானது முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகைகளுக்கெதிராகக் கழிக்கப்படுதலுமாகாது என்பது தவிர,

(i) 2020, சனவரி 1ஆந் தேதிக்கு முன்னரான ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டுக்காகவும் 500,000 ரூபா;

(ii) 2020, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு வரிமதிப் பீட்டாண்டுக்காகவும் 3,000,000 ரூபா;

(iii) 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலா வது ஒன்பது மாதங்களுக்காக 2,250,000 ரூபா மற்றும் அதன் இரண்டாவது மூன்று மாதங்களுக்காக 300,000 ரூபா; அத்துடன்

(iv) 2023, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டுக்காகவும் 1,200,000 ரூபா"; அத்துடன்

(ஆ) அப்பந்தியின் (ஊ) என்னும் உட்பந்தியில், "2020, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர்" எனும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2020, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் மற்றும் 2022, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலாவது ஒன்பது மாதங்களுக்காக உறப்பட்ட 900,000 ரூபா பணத்தொகை." எனும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

37. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஆறாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் 1ஆம் பந்தியின் (4)ஆம் உட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில், "வியாபாரத் தொழிற்பாடுகளை அல்லது உற்பத்திதிறனை சீராக்குவதற்கு பயன்படுத்தப்படுகின்றதும்" என்னும் சொற்க ளுக்கும் எண்களுக்கும் பதிலாக, "வியாபார வளாகங்களுடன் பொருத்தப்பட்டதுமான" எனும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வட்டவணையின் 3,4,5,6,7,8, 9 மற்றும் 11 ஆகிய பந்திகளை முறையே அவ்வட்டவணையின் 2,3,4,5,6,7,8 மற்றும் 9 ஆகிய பந்திகளாக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(3) அவ்வட்டவணையின் மீள இலக்கமிடப்பட்ட 8 ஆம் பந்தியில், "பூச்சியம் சதவீதமாகவிருத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய கொடுப் பனவு 2022, ஒற்றோபர் 1ஆந் தேதிக்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்பட்டிருப்பின், பூச்சியம் சதவீதமாகவிருத்தல் வேண்டும்." என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அவ்வட்டவணையின் 10ஆம் பந்தியின் (1)ஆம் உட்பந்தியில், "மூன்று வரிமதிப்பீட்டாண்டுகளின் போது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டு வரிமதிப்பீட்டாண்டுகளின்போது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

38. (1) இரண்டாயிரத்து இருபத்திரண்டாம் ஆண்டு ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டுக்காக ஆளொருவரினால் செலுத்தப்படற்பாலதான வருமானவரி, தனியாட்களினால் முதலாவது ஒன்பது மாதங்களுக்காகவும் இரண்டாவது மூன்று மாதங்களுக்காகவும் மற்றும் தனியாட்கள் தவிர்ந்த வேறு ஆட்களினால் முதலாவது ஆறு மாதங்களுக்காகவும் இரண்டாவது ஆறு மாதங்களுக்காகவும் வரிமதிப்பீட்டாண்டின் இரு காலப்பகுதிகளுக்குமாக தனிவேறாக கணக்கிடப்படுதல் வேண்டும். தொழில் வருமானத்தின் அத்தகைய கணக்கிடுகையின் நோக்கத்துக்காக அத்தகைய இரு காலப்பகுதிகளுக்காகவும் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்தைக் கண்டறிவதற்கு அவ்வாள் (தனியாட்களினால் முதலாவது ஒன்பது மாதங்களுக்கு 75% மும் இரண்டாவது மூன்று மாதங்களுக்கு மீதி 25% மும் மற்றும் தனியாட்கள் தவிர்ந்த வேறு ஆட்களினால் முதலாவது ஆறு மாதங்களுக்கு 50% மும் இரண்டாவது ஆறுமாதங்களுக்கு மீதி 50% மும் என்றவாறாக) வீதப்படியான அடிப்படையைப் பயன்படுத்தலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, தவணைப்பணங்களின் மூலம் செலுத்தப்படற்பாலதான வரியின் நோக்கத்துக்காக ஆளொருவர் மீளாய்வு செய்யப்பட்டவொரு மதிப்பீட்டைச் சமர்ப்பிக்கலாம்.

39. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பட்டியல் 'அ'

(பிரிவு 1)

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *இச்சட்டத்தின் பிரிவு* | *முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு* |
| 2 | 5 |
| 4 | 12 |
| 5 | 14 |
| 6 | 16 |
| 11 | 66 |
| 18 | 87 |
| 21 | 92அ |
| 22 | 94 |
| 23 | 120 |
| 25 | 133 |
| 26 | 134 |
| 27 | 135 |
| 28 | 136 |
| 35 (1) மற்றும் (3) | 195 |
| 36(1), (2), (3), (4) மற்றும் (5) | முதலாம் அட்டவணையின் பந்தி I இன் உட்பந்தி (1அ) மற்றும் (1ஆ), 3, 4, 5 மற்றும் 7ஆம் பந்திகள் |
| 37 | இரண்டாம் அட்டவணையின் பந்தி I இன் உட்பந்தி (6அ) |
| 38(1) | மூன்றாம் அட்டவணையின் (*எஎ*) ஆம் பந்தி |
| 40(1) மற்றும் (2) அட்டவணை | ஆறாம் அட்டவணையின் பந்தி I இன் (4)ஆம் உட்பந்தியின்விடயம் (ஆ) மற்றும் 2, 3, 4, 5, 6, 7, 8 மற்றும் 9ஆம் பந்திகள் |
| 41 | புதிய பிரிவு |

பட்டியல் 'ஆ'

(பிரிவு 1)

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *இச்சட்டத்தின் பிரிவு* | *முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு* |
| 36(1) | முதலாம் அட்டவணையின் பந்தி I இன் (5)ஆம் உட்பந்தி |
| 38(2), (3), (4) மற்றும் (5) | மூன்றாம் அட்டவணையின் (*ஏஏ*), (*சச*), (*சசச*) மற்றும் (*ணண*) |
| 39(2) | ஐந்தாம் அட்டவணையின் (2)ஆம் பந்தி |
| 40(3) மற்றும் (4) | ஆறாம் அட்டவணையின் (8)ஆம் பந்தி மற்றும் (10)ஆம் பந்தி |

பட்டியல் 'இ'

(பிரிவு 1)

| நிரல் *I* | நிரல் *II* | நிரல் *III* |
|---|---|---|
| இச்சட்டத்தின் பிரிவு | முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு | நடைமுறைக்கு வரும் தேதி |
| 3 | 10 | 01.04.2021 |
| 7 | 18 | 01.04.2021 |
| 8 | 19 | 01.04.2018 |
| 9 | 46 | 01.04.2021 |
| 10 | 54 | 01.04.2018 |

| | | |
|---|---|---|
| 12 | 69 | 01.04.2018 |
| 13 | 72 | 01.04.2018 |
| 14 | 73 | 01.04.2018 |
| 15 | 83அ | 01.01.2023 |
| 16 | 84அ | 01.01.2023 |
| 17 | 85 | 01.01.2023 |
| 19 | 88 | 01.01.2023 |
| 20 | 90 | 01.04.2021 |
| 29 | 139 | 01.04.2023 |
| 35(2) | 195 | 01.04.2020 |
| 36(1) மற்றும் (7) | முதலாம் அட்டவணையின் பந்தி I இன் (1இ)ஆம் உட்பந்தி மற்றும் பந்தி 11 | 01.04.2023 |
| 38(6) மற்றும் (7) | மூன்றாம் அட்டவணையின் பந்தி (*ப*) மற்றும் பந்தி (*ய*) | 31.03.2023 |
| 39(1) | ஐந்தாம் அட்டவணையின் (1) ஆம் பந்தியின் பந்தி (உ) | 01.04.2021 |